வெற்றியின் முகவரி
SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

TNPSC MAINS

# TNPSC GROUP - II ASPIRANTS

# AUGUST -2022 CURRENT ISSUES

- SOCIO ECONOMIC ISSUES
- TAMILNADU ADMINISTRATION
- SCIENCE & TECHNOLOGY
- STATE CURRENT ISSUES
- NATIONAL CURRENT ISSUES

சுரேஷ் பாடசாலை


தூத்துக்குடி
162-A, எட்டையபுரம் ரோடு
0461 - 4000970
99445 11344

திருநெல்வேலி
8A/1, இலந்தைகுளம் ரோடு, பாளையங்கோட்டை
0462-2560123
98942 41422

இராமநாதபுரம்
82, புளிகாரத்தெரு, கண்ணன் கோவில் அருகில்
75503 52916
75503 52917

மதுரை
மாஸ்டர் மஹால் பின்புறம் முடக்குச்சாலை, காளவாசல்
0452 - 2383777
98431 10566

விரைவில் சென்னை

# பொருளடக்கம்

## தேசிய நிகழ்வுகள்

தேசியக்கொடி உருவான வரலாறு ........ 07
வாக்காளர் பட்டியல் – ஆதார் எண் இணைப்பு ........ 08
குழந்தை நடிகர்களுக்கான விதிமுறைகள் ........ 08
கிரிப்டோகரன்சி தடை ........ 08
மக்கள்தொகை அடிப்படையில் எம்.பி.க்கள் ........ 09
மைக்ரோசாட்–2ஏ ........ 09
வீழ்ச்சியிலிருந்து மீள்வது எப்போது? ........ 10
நடுவானில் இன்ஜின் திடீர் மக்கர் ........ 12
பால ஆதார் ........ 13
மியான்மரின் அபாயக்குரல் ........ 13
பொறுப்பற்ற காட்சி ஊடகங்கள் ........ 13
இலவசங்கள் – உயர்த்தவா? உயர்த்திக் கொள்ளவா? ........ 14
சொத்து வரி ........ 15
நீர் மேலாண்மை ........ 15
இந்தியா–மாலத்தீவுகள் ........ 16
மாலி நட்புறவுப் பாலம் ........ 16
பணச் சலவைத் தடுப்புச் சட்டம் ........ 17
ஆசாதிசாட் செயற்கைக்கோள் ........ 18
உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை பரிந்துரை ........ 18
சுங்கச்சாவடிகளுக்கு மாற்றாக விரைவில் புதிய நடைமுறை ........ 19
சுற்றுச்சூழல் கொள்கை ........ 19
ஊழல் கண்காணிப்பு ஆணையர் ........ 19
இலவச வாக்குறுதி கட்டுப்பாடு ........ 19
கார்பன் இல்லா உலகம் ........ 20
தனியார்மயமாக்கப்படும் வங்கிகள் ........ 20
சீன ஆய்வு கப்பல் யுவான் வாங் ........ 21
குற்றவியல் நடைமுறைச் சட்டம் ........ 21
வடக்கின் ஒளிவெள்ளம் ........ 22
ராம்சர் அங்கீகாரம் ........ 23
சீனா போர் ........ 23
கைத்தறிக்கு கைகொடுப்போம் ........ 23
குடியரசு துணைத்தலைவர் தேர்தல் ........ 24
மாற்று கருவறை தாய் மூலம் குழந்தை பெறும் அரசு பெண் பணியாளர்களுக்கு 270 நாட்கள் விடுமுறை ........ 25
ஜிபிஎஸ் மூலம் கட்டணம் ........ 25
கால்நடைகள் உயிரிழப்பு ........ 25
சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை பருவநிலை மாநாட்டில் இந்தியாவின் கருப்பொருள் ........ 25
தலாய் லாமாவுக்கு லடாக்கின் உயரிய விருது ........ 26
ஜெகதீப் தன்கர் ........ 26
பெண்களுக்கான சட்டங்கள் ........ 27
சுதந்திர இந்தியாவில் பெண்கள் ........ 28
சதுப்பு நிலங்கள் ........ 28
கூட்டாட்சி முறை ........ 31

SURESH'

எஸ்எஸ்எல்விடி-1 ராக்கெட் ........ 31
விடுதலைக்குப் பின் கல்வி ........ 32
குறுங்காடுகள் ........ 33
டெல்லியில் பெண்களுக்கு எதிரான குற்றம் 17% அதிகரிப்பு ........ 34
நம்பி நாராயணன் ........ 34
மின்சார சட்டத்திருத்த மசோதா ........ 35
பாலின விகிதம் – ஆய்வு ........ 36
பணவீக்கத்தால் வட்டி இறுக்கம் ........ 37
விளையாட்டை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு ........ 37
ஜேடியு – பாஜக கூட்டணி ........ 37
4 தங்கம் வென்றது இந்தியா ........ 38
விஸ்வநாதன் ஆனந்த் ........ 38
மக்கள் தொகையை கட்டுப்படுத்த சட்டம் ........ 38
தாய்மொழியில் உயர்கல்வி ........ 38
உழவர்களின் சேவை ........ 39
கல்வித் திட்டங்கள் ........ 40
தமிழகம் கிராண்ட்மாஸ்டர்களின் மாஸ்டர் ........ 42
ஒரே பாலின ஜோடி தத்தெடுப்பது ........ 42
வானிலை நிலவரம் ........ 43
விடைவெறும் வேளையில்....? ........ 43
இந்தியாவில் பாலின இடைவெளி ........ 43
தண்டோரா தேவையில்லை ........ 44
இந்தியா மருத்துவ வளர்ச்சி ........ 45
ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டம் ........ 46
5 ஜி ........ 46
பீஹாரில் பாஜக – ஜேடியு கூட்டணி முறிந்தது ........ 46
முதல் பிரதமர் ........ 47
44–வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் ........ 47
தனிநபர் பிரிவில் டி.குகேஷ் நிஹால் சரினுக்கு தங்கம் ........ 47
சர்வதேச அமைதி ஆணையம் ........ 47
தலைமை நீதிபதியாக யு.யு.லலித் ........ 47
பானிப்பட்டில் 2ஜி எத்தனால் ஆலை ........ 47
மோர்கன் ஸ்டான்லி ........ 48
மின்சார திருத்த மசோதா ........ 48
சாண் ஏறினால் முழம் சறுக்கும் ........ 49
ஒடிஸா மாடல் ........ 50
இலவசம் வேறு; நலத்திட்டம் வேறு ........ 51
புளூ பிளேக் அந்தஸ்து ........ 51
குடியரசு துணைத்தலைவரின் பணிகள் ........ 51
செவாலியே விருது ........ 53
இந்திய பொருளாதாரம் ........ 53
கர்நாடகா ஊழல் தடுப்பு பிரிவு கலைத்தல் ........ 53
க்யூட் தேர்வு ........ 53
நீட் ஜேஇஇ தேர்வுகளை கியூட் தேர்வுடன் இணைக்க திட்டம் ........ 53
அறிவியல் : வளர்ச்சியும்... குறைந்துவரும் கவனமும் ........ 54
மரம் வளர்ப்போம் சூழல் காப்போம் ........ 55

உரிமை கோராத வங்கி இருப்புத்தொகை ........ 55
120 இன்ஜின்களில் மட்டுமே கழிப்பறை வசதி ........ 55
சுகாதாரத்துறை பெற்ற ஏற்றங்கள் ........ 56
சூப்பர் கம்ப்யூட்டர் ........ 58
உலகின் உயரமான ரயில்வே பாலம் ........ 58
நமது தேசிய கீதத்துக்கு வயது 104 ........ 58
பெண்கள் மருத்துவத்தில் முன்னேற்றம் ........ 58
இந்தியா - 75 ........ 59
இந்தியா எனும் பெருங்கனவு ........ 59
இந்தியாவின் எதிர்காலம் என்பது என்ன? ........ 60
விண்வெளி வளர்ச்சி ........ 60
இந்தியாவின் 75 ஆண்டு பொருளாதாரப் பயணம் ........ 61
சுதந்திர தின அமுதப் பெருவிழா ........ 65
நீதி வழங்குவதில் சமபங்கு ........ 65
மகாத்மா காந்தி ........ 66
தேர்தல் தொடங்கி போராட்டங்கள் ........ 66
பிகாஜி பறக்கவிட்ட கொடி! ........ 67
சுதந்திர இந்தியாவில் உயர்கல்வி ........ 67
பிரபல ஃபோர்ப்ஸ் பட்டியலில் இந்தியாவுக்கு 4-வது இடம் ........ 68
தலாக்-இ-ஹசன் நடைமுறையும், முத்தலாக்கும் ஒன்றல்ல ........ 69
சிவமெக்கா மோதல் விவகாரம் ........ 69
பில்கிஸ் பானு பாலியல் வழக்கு ........ 69
விசாகா நெறிமுறை ........ 70
நகர்மயமும் உள்கட்டமைப்பும் ........ 71
தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா ........ 72
இந்திய கால்பந்து சங்கத்தக்கு தடை விதித்தது பிஃபா ........ 73
சிறைகளில் ஆங்கிலேயர் கால விதிமுறைகளுக்கு முடிவு கைதிகளுக்கு புதிய வசதிகள் அளிக்க உ.பி.முதல்வர் யோகி ஒப்புதல் ........ 73
தலாக் இ ஹசன் முறை முறையற்றதல்ல ........ 74
காற்று மாசு ........ 74
இலவச வாக்குறுதிகளை தடுக்க இயலாது ........ 75
குறுகிய கால விவசாயக் கடன்களுக்கு 1.5% வட்டி மானியம் ........ 75
உணவுப் பாதுகாப்பு ........ 76
காஷ்மீரில் வெளிமாநில மக்களும் வாக்காளர் ........ 76
கல்லூரிகளில் தத்தளிக்கும் விளிம்புநிலை விரிவுரையாளர்கள் ........ 77
உன்னத் பாரத் அபியான் ........ 78
அனுபவக் கருவூலம் காப்போம் ........ 78
ஜல்ஜீவன் திட்டம் ........ 79
சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் சுதந்திர இந்தியாவில் உருவான முன்னெடுப்புகள் ........ 79
முதன்மை சுற்றுச்சூழல் போராட்டங்கள் ........ 81
கல்விக்கு ஜிடிபியில் ஆறு சதவீதம் ........ 82
அமலான நில உச்சவரம்புச் சட்டம் ........ 82
பில்கிஸ் வழக்கு ........ 82
சாதனைகளுக்கு சொந்தக்காரர் ராஜீவ்காந்தி ........ 83
சோமாலியா ஓட்டலில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் ........ 83
ஹைட்ரஜன் பேருந்து ........ 83
தொல்லியல் ........ 84
புதிய மசோதாவால் ஏற்படும் பிரச்சனைகள் ........ 86
பங்குச்சந்தை நாயகன் ........ 86
வெளிநாட்டு பல்கலையில் தமிழ் இருக்கை ........ 87
ஆகம விதிகளின்படியே அர்ச்சகர் நியமனம் ........ 87

இந்தியாவுக்கு இணையத்தை சாத்திப்படுத்திய முன்னோடிகள் ........ 88
ஐ.எஸ்.தீவிரவாதி ........ 88
உயர்கல்வியில் அதிகரிக்கும் மாணவியர் சேர்க்கை ........ 88
உத்தரகண்டில் முதல் விண்வெளி கண்காணிப்பு மையம் ........ 89
2 லட்சம் வேலைவாய்ப்பு ........ 89
எங்கே போகின்றன நமது ஊடகங்கள்? ........ 90
மின்சாரச் சட்டத்திருத்த மசோதா 2022 ........ 91
தொடர்ந்து குறையும் மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு ........ 93
2 டிரில்லியன் டாலர் ஏற்றுமதி இலக்கு ........ 94
இலவசங்களும் நலத்திட்ட உதவிகளும் ........ 94
சாகித்திய அகாதெமி : புரஸ்கார், பால சாகித்திய விருதுகள் ........ 96
விண்ணப்பதாரர் ஒருமுறை பதிவு நடைமுறை : யுபிஎஸ்சி ........ 97
உலகின் முதல் ஹைட்ரஜன் ரயில் சேவை : ஜெர்மனியில் தொடக்கம் ........ 97
போலியோவை ஒழித்த திட்டம் ........ 97
திருநங்கைகளுக்கு சுகாதார காப்பீட்டு அட்டை ........ 98
சட்டசபையில் நிறைவேற்றிய மசோதாக்கள் ........ 98
திட்டமிட்ட தொழில் வளர்ச்சி தொடர்கிறதா? ........ 98
புரத உணவை மறுக்கும் தனியார் பள்ளிகள் ........ 100
டி.ஆர்.டி.ஓ., தலைவராக சமீர் வி காமத் நியமனம் ........ 101
கே. ராமச்சந்திரனுக்கு தேசிய நல்லாசிரியர் விருது ........ 101
ஐஎம்எஃப் செயல் இயக்குநராக கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் ........ 101
பெகாசஸ் உளவு மென்பொருள் ........ 101
மகாத்மா அய்யன்காளி ........ 101
வாடகை டாக்ஸி ........ 102
முதல் முயற்சியில் வென்ற மங்கள்யான் ........ 102
ரஷ்யாவுக்கு எதிராக முதல்முறை இந்தியா வாக்களிப்பு ........ 103
தத்தளிக்கும் காட்டுயிர்கள் ........ 103
ஜி 23 தலைவர்கள் யார்? ........ 104
கடற்படையில் இணைய ஆயத்தமாகும் விக்ராந்த் ........ 104
நவீன தொழில்நுட்ப அறிமுகம் அவசியம் ........ 104
கோத்தாரி ஆணையம் ........ 105
விண் முட்டும் வளர்ச்சி ........ 105
உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ........ 105
ஒரே நாடு ஒரே உரம் திட்டம் ........ 106
கல்விக்கொள்கை அடிப்படையில் தர ஆய்வு ........ 106
நாடு முழுவதும் ஒரே மாதிரியான சர்வதேச ஓட்டுநர் உரிமம் ........ 107
ஓய்வுபெறும் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு கூடுதல் சலுகைகள் ........ 107
சுதந்திரத்தை வலுப்படுத்திய நீதித்துறை ........ 108
14 சதுப்பு நிலங்களுக்கு ராம்சர் அங்கீகாரம் ........ 110
10% இட ஒதுக்கீடு விவகாரம் ........ 111
கல்வித் திட்டங்கள் ........ 111
பெண் கல்வியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் ........ 111
பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 15.3 சதவீதம் உயர்வு ........ 112
இந்தியத் தலைமை நீதிபதி ........ 112
அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்குமா? ........ 113
தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை ........ 114

SURESH'

## மாநில நிகழ்வுகள்

காவல்துறை ........ 116
கற்றல் இடைநிலை நிற்றல் ........ 116
சட்டத்துறையிலும் சமூக நீதி ........ 116
கருவேலமரங்கள் ........ 117
புதிய விமான நிலையம் ........ 117
பரந்தூர் விமான நிலையம் ........ 117
திராவிட மாடல் ஆட்சி ........ 118
சிறப்பு பேரிடர் மேலாண்மை திட்டம் ........ 118
சீரான மின் விநியோகம் ........ 118
தமிழக உயர்கல்வி நிறுவனங்கள் ........ 119
விமான பயிற்சி மையம் ........ 119
தகைசால் தமிழர் விருது ........ 120
தமிழக பெண் விஞ்ஞானி கலைச்செல்வி ........ 120
மின்சார சட்ட திருத்த மசோதா – தமிழகத்திற்கு பாதிப்பு ........ 120
மூவலூர் ராமாமிர்தம் உயர்கல்வி உறுதி திட்டம் ........ 121
ஆதிச்சநல்லூரில் தங்க நெற்றிப்பட்டயம் ........ 122
48-வது ஜிஎஸ்டி கூட்டம் ........ 122
மாயத்தேவர் ........ 122
அரசு ஊழியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ........ 123
44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் ........ 123
தனிநபர் பிரிவில் டி.குகேஷ் நிஹால் சரினுக்கு தங்கம் ........ 124
மதுவிலக்கு அமலாக்க பிரிவோடு போதைப்பொருள் பிரிவு இணைப்பு ........ 124
அசாமில் ரூ.5,500 கோடியில் மின்திட்டம் ........ 125
உதவி பெறும் கல்லூரிகள் ........ 125
தமிழக வீராங்கனை பவானிதேவிக்கு தங்கம் ........ 125
சர்வதேச பட்டம் விடும் விழா ........ 125
போதைப் பொருள் ........ 125
சிட்கோ தொழிற்பேட்டை ........ 126
தடுக்க முடியாது; தவிர்க்க முடியும் ........ 126
32-ஆவது யானைகள் காப்பகம் ........ 126
பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேச சமூகம் ........ 126
வந்தே பாரத் ரயில்கள் ........ 127
ஆர்ட்ரலி முறை ........ 127
அணைகட்டும் முயற்சி கைவிடல் – தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் ........ 127
உள்ளாட்சிகளின் பெருமைமிகு பங்களிப்பு ........ 127
அடித்தளமிட்ட ஊராட்சிகள் ........ 127
தவிர்க்க முடியாது ........ 128
ஸ்மார்ட் சிட்டி ........ 129
ஏற்றம் காணும் பெண் கல்வி ........ 129
ஒண்டிவீரன் ........ 130
உதய் திட்டம் என்றால் என்ன? ........ 131
வளரும் நாட்டின் குழந்தைகள் ........ 131
மாற்றுத் திறனாளிகளுக்கு வயது வரம்பு அதிகரிப்பு ........ 132
கிளாம்பாக்கம் ........ 132
தமிழக உயர்கல்வி ........ 132
பயிர்காப்பீடு ........ 132
நெய்தல் உப்பு ........ 133
ரூ.97.56 கோடியில் மின்மாற்றிகள் ........ 133

# 01 தேசிய நிகழ்வுகள்

## தேசியக்கொடி உருவான வரலாறு

- ஜனாதிபதியின் கவுரவக்கொடி என்பது, இந்தியாவில், 5,000 ஆண்டுகளுக்கு முன்பு மன்னராட்சி காலத்தில், மன்னரின் படை அணிவகுப்பில் இடம் பெற்ற கொடியாக இருந்தது.
- போரின்போது, இந்த கொடியை எதிரிகள் பறித்து விட்டால், அது மிகவும் அவமானகரமானதாக கருதப்பட்டது.
- மன்னராட்சிக்கு பின், ஆங்கிலேயர் ஆட்சியின்போது, இந்த கொடியானது, ராணுவ அணிவகுப்பில் இடம் பெற்றது.
- நாடு சுதந்திரம் அடைந்தபின், 1950ல் இந்தியாவில் இருந்த, 33 குறுநில மன்னர்களின் வண்ணகொடிகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு, இந்திய ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன.
- ராணுவம் மற்றும் பாதுகாப்பு படைகளில் சிறந்து விளங்கும் அமைப்பை கவுரவப்படுத்தும் விதமாக, ஜனாதிபதியின் கவுரவக் கொடி வழங்கும் வழக்கம், 1951-ல் அறிமுகமானது.
- ஜனாதிபதியாக டாக்டர் ராஜேந்திரபிரசாத் இருந்த போது, 1951, மே 27-ல், முதல் முறையாக இந்திய கடற்படைக்கு, ஜனாதிபதியின் கவுரவக்கொடி வழங்கப்பட்டது.
- தற்போது, உத்தரபிரதேசம், டில்லி, மஹாராஷ்டிரா ஜம்மு-காஷ்மீர், திரிபுரா, குஜராத், இமாச்சல், ஹரியானா, அசாம் ஆகிய ஒன்பது மாநில போலீஸ் படைகளுக்கு ஜனாதிபதியின் கொடி கிடைத்துள்ளது.
- தென்மாநிலங்களில் முதல்முறையாக, தமிழகத்துக்கு கிடைத்துள்ளது.
- தமிழகத்துக்கான கொடியானது, அடர்நீல நிறத்தில் மஞ்சள் நிற நட்சத்திரங்கள் இணைக்கப்பட்டு, மத்தியில் தமிழக அரசின் கோபுர முத்திரை சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.
- ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டம், பட்ல பெனுமர்ரா கிராமத்தில் கடந்த 1876-ம் ஆண்டு ஆகஸ்ட் 2-ம் தேதி பிங்கலி வெங்கய்யா பிறந்தார்.
- 1906-ம் ஆண்டு இந்தியாவுக்காக தனி தேசியக்கொடியை உருவாக்கினார். கடந்த 1921-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி ஆந்திராவின் விஜயவாடாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் மகாத்மா காந்தி பங்கேற்றார்.
- அவரை நேரில் சந்தித்து, தான் தயாரித்த கொடி குறித்து பிங்கலி விளக்கினார்.
- காந்தியிடம் கொடியை காட்டும் போது இந்து, முஸ்லிம்களின் ஒற்றுமையை குறிக்கும் வகையில் சிவப்பு, பச்சை நிறம் மட்டுமே இருந்தது.
- அப்போது பஞ்சாபை சேர்ந்த கல்வியாளர் லாலா ஹான்ஸ்ராஜின் ஆலோசனையின் பேரில் கொடியின் நடுவில் ராட்டினம் சின்னம் இடம்பெற்றது.
- அதன் பின்னர் அகிம்சை, அமைதியை விவரிக்கும் வகையில் கொடியின் நடுவில் வெள்ளை நிறம் சேர்க்கப்பட்டது.
- 1931-ம் ஆண்டு சிவப்பு நிறம் நீக்கப்பட்டு, அதற்கு பதில் காவிநிறம் சேர்க்கப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் கொடியின் நடுவே இருந்த ராட்டினம் நீக்கப்பட்டு, அசோக சக்கரம் நீல நிறத்தில் சேர்க்கப்பட்டது.

**தேசியக்கொடி ஏற்றும்போது நாம் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்**

- தேசியக்கொடியை ஏற்றும்போது தலைகீழான நிலையில் அதாவது காவி நிறப்பகுதி அடியில் இருக்கும் வண்ணமாக ஏற்றக்கூடாது.
- கிழிந்த அல்லது கசங்கிய தேசியக்கொடியை ஏற்றவோ, காட்சிப்படுத்தவோ கூடாது.
- தேசியக்கொடி தரையில் விழும்படியாகவோ அல்லது தண்ணீரில் மிதக்கும்படியாகவோ விடக்கூடாது.
- தேசியக்கொடிக்கு அருகில் அதைவிட உயரமாக அல்லது இணையாக வேறெந்த கொடியோ அல்லது கொடி போன்ற பொருளோ இடம்பெறக்கூடாது.
- தேசியக்கொடியை ஏற்றும்போது தலைகீழான நிலையில், அதாவது காவி நிறப்பகுதி அடியில் இருக்கும் வண்ணமாக ஏற்றக்கூடாது.

- தேசியக்கொடி பறக்கும் கம்பத்தின் உச்சியில் ஒரே சமயத்தில் வேறு கொடிகள் எதையும் பறக்கவிடப்படக்கூடாது.
- தேசியக்கொடி பறக்கும் கொடிக்கம்பத்தின் மேலே பூக்கள் அல்லது மாலைகள் அல்லது வேறு அடையாள சின்னங்கள் உள்ளிட்ட எந்தப் பொருளும் பொருத்தப்படக்கூடாது.
- தேசியக்கொடியை மாலையாக, பூங்கொத்தாக, அழகுப்பொருளாக அல்லது வேறு வகையான அலங்காரத்திற்காகவோ பயன்படுத்தக்கூடாது.
- தேசியக்கொடியை மேசையின் மீது விரிப்பாகவோ அல்லது மேடை மீது போர்த்தியோ பயன்படுத்தக்கூடாது.
- ஆடை அலங்காரத்தின் ஒரு பகுதியாகவோ, சீருடையாகவோ, எந்தவொரு நபரும் இடுப்புக்கு கீழாக அணியும் துணியாகவோ தேசியக்கொடியைப் பயன்படுத்தக்கூடாது.
- கைக்குட்டை, மெத்தை, நாப்கின், உள்ளாடை அல்லது வேறெந்த ஆடைகளிலும் அச்சிட்டோ அல்லது பின்னலிட்டோ (embroid) தேசியக்கொடி வடிவத்தைப் பயன்படுத்தக்கூடாது.
- தேசியக்கொடி எந்த விதத்திலும் கிழிந்த நிலையில் காட்சிப்படுத்தப்படக்கூடாது.

## வாக்காளர் பட்டியல் - ஆதார் எண் இணைப்பு

- ஆதார் எண்ணை இணைப்பதன் மூலமாக, போலி வாக்காளர்கள் முற்றிலும் களையப்படுவர்.
- மாநிலத்தில் ஒரு வாக்காளரின் பெயர் ஒரு இடத்தில் மட்டுமே இடம்பெற்றிருக்கும்.
- தேர்தல் தொடர்பான விவரங்களை வாக்காளர்களுக்கு கைப்பேசி வழியாக கொண்டு சேர்க்கவும்.

## குழந்தை நடிகர்களுக்கான விதிமுறைகள்

- குழந்தை நடிகர்களுக்கான வரைவு விதிமுறைகளை தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கியுள்ளது.
- அந்த விதிகளின்படி எந்தக் குழந்தையும் 27 தினங்களுக்கு மேல் பணிபுரிய அனுமதிக்கப்படக் கூடாது.
- ஒரு நாளைக்கு 6 மணி நேரத்துக்கு மேல் வேலைவாங்கப்படக் கூடாது.
- குழந்தையின் வருமானத்தில் 20 சதவீதத்தை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்புத் தொகையாக சேமிக்க வேண்டும்.
- திரைப்படங்கள், தொலைக்காட்சி, சமூக வலைத்தளங்கள், ஓடிடி தளம் ஆகியவற்றில் பணியாற்றும் குழந்தைகளை உடல் மற்றும் மனரீதியிலான அழுத்தத்தில் இருந்து காப்பாற்றுவதும் அவர்களுக்கு நல்ல பணிச்சூழலை உருவாக்கித் தருவதுமே இந்த விதிமுறைகளின் நோக்கமாகும்.
- கஸ்தூரி என்ற படத்துக்காக சிறந்த குழந்தைகள் படத்துக்கான தேசிய விருது பெற்ற திரைப்பட இயக்குநர் வினோத் காம்ப்ளே வரவேற்றுள்ளார்.

## கிரிப்டோகரன்சி தடை

- கிரிப்டோகரன்சி தடை செய்யப்பட வேண்டும் என்று ரிசர்வ் வங்கி கருதுகிறது. கிரிப்டோகரன்சிகள் வரையறையின்படி எல்லையற்றவை. அவற்றை ஒழுங்குபடுத்த சர்வதேச ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.
- ஒழுங்குமுறைப்படுத்த அல்லது தடை செய்வதற்கான எந்தவொரு சட்டத்தையும், பொதுவான வகை பிரித்தலையும் தரநிலைகளின் அபாயங்களையும் நன்மைகளையும் கருத்தில் கொண்டு குறிப்பிடத்தக்க சர்வதேச ஒத்துழைப்புக்குப் பிறகு நடைமுறைப்படுத்துவதுதான் பயனுள்ளதாக இருக்கும்.
- அல்ஜீரியா நாடு, 2018-ஆம் ஆண்டு கிரிப்டோகரன்சி பயன்படுத்துவதை தடை செய்துள்ளது.
- 2014-முதல் பொலிவியாவில் பிட்காயின் பயன்பாட்டிற்கு முழுமையான தடை.
- ‘பீப்பிள்ஸ் பேங்க் ஆஃப் சைனா’ அந்நாட்டில் கிரிப்டோகரன்சி பரிவர்த்தனைகளை முற்றிலும் தடை செய்தது.
- உலக அளவில் கிரிப்டோகிரன்சிகள் வீழ்ச்சி அடைந்த போது அது குறித்து கருத்து தெரிவித்த ரிசர்வ் வங்கி ஆளுநர் கிரிப்டோகரன்சிக்கு அடிப்படை (மதிப்பு) ஒன்றும் இல்லை.
- அதை ஒழுங்குபடுத்துவது என்பதில் நிறைய கேள்விகள் உள்ளன. எங்கள் நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது.
- இது இந்தியாவின் பணவியல், நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மையை ஆகியவற்றைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று கூறினார்.
- நமது நாட்டில் சுமார் 200 லட்சம் மக்கள் கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்துள்ளனர். இதன் மதிப்பு சுமார் 530 கோடி டாலர் ஆகும்.

- கிரிப்டோ சொத்துகளின் ஒட்டுமொத்த சந்தை மூலதனம், அதன் நவம்பர் 2021 உச்சமான டாலர் 3 டிரில்லியனில் இருந்து டாலர் ஒரு டிரில்லியனுக்கும் கீழே இறங்கியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்குப்பிறகு சொத்து பகுப்பு டாலர் ஒரு டிரில்லியனுக்கும் குறைவாக மதிப்பு இருந்தது அதுவே முதல் முறையாகும்.
- 2018-இல் ரிசர்வ் வங்கி கிரிப்டோ கரன்சியை தடை செய்ய முடிவெடுத்து ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. இதனால் பாதிப்படைந்த 'இன்டர்நெட் அண்ட் மொபைல் அசோஸியேஷன் ஆஃப் இந்தியா' நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.
- வழக்கை விசாரித்த நீதிமன்றம், ரிசர்வ் வங்கியின் நிலைப்பாடு என்னவென்றால், அது மெய்நிகர் நாணயங்களை தடைசெய்யவில்லை.
- மேலும் இரண்டு வரைவு மசோதாக்கள் உட்பட பல திட்டங்களுடன் பல குழுக்கள் வந்தாலும், இந்திய அரசால் இது குறித்து முடிவு எடுக்க முடியவில்லை.
- இரண்டு வரைவு மசோதாக்களும் எதிர்நிலைகளை ஆதரித்தன. ஆதலால் எடுக்கப்பட்ட நடவடிக்கை விகிதாசாரமானது (ப்ரொபஷனேட்) என்று எங்களால் கொள்ளமுடியாது என்று கூறியது.
- நீதிமன்றத் தீர்ப்பை உற்று நோக்கினால் அரசும், ரிசர்வ் வங்கியும் சரியான கொள்கை முடிவு எடுக்காதது தெரிய வரும். எனவே அரசும் ரிசர்வ் வங்கியும் உடனடியாக செய்ய வேண்டியது கிரிப்டோ கரன்சியை தடை செய்வதே.
- கிரிப்டோகரன்சிகளை அனுமதிப்பது நாட்டின் இறையாண்மைக்கே பெரிய சவாலாகும். எனவே அரசு கிரிப்டோ கரன்சிகளை முழுவதுமாக தடை செய்வதே நல்லது.

## மக்கள்தொகை அடிப்படையில் எம்.பி.க்கள்

- குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய தென்மாநிலங்கள், மக்களவையிலும் மாநிலங்களவையிலும் மக்கள்தொகை அடிப்படையில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றியமைக்கும் யோசனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடும்.
- மாநிலங்களவையுடன் அமெரிக்காவின் செனட் சபை அடிக்கடி ஒப்பிடப்படுகிறது. ஆனால் செனட் சபையின் மக்கள் தொகை அடிப்படையிலான பிரதிநிதித்துவம் இல்லாமல் அனைத்து மாகாணங்களும் இரு பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதால், இரண்டுக்கும், இடையே மிகப்பெரிய அளவில் வித்தியாசம் உள்ளது.
- ஜெர்மனியை தவிர வேறு எந்த நாட்டிலும் மக்கள் தொகை அடிப்படையில் மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை.
- மாநிலங்களவைக்கு மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிப்பது என அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்தவர்கள்முடிவு செய்தது மிகப்பெரிய புத்தாக்க நடவடிக்கை.
- கேரளம், தமிழகம், கர்நாடகம், தெலுங்கானா, ஆந்திரம் ஆகிய தென் மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு, மக்கள் தொகை கட்டுக்குள் உள்ளது.
- அதே வேளையில், உத்தரப்பிரதேசம், பீகார், மத்தியப்பிரதேசம், ஜார்க்கண்ட், ஒடிஸா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மக்கள்தொகை அதிகரித்து வருகிறது.
- 2026 வரை மக்களவை மாநிலங்களவை இடங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படாது என ஏற்கனவே வாஜ்பாய் அரசில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.
- அந்த வகையில் 2031-இல் மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பின்னர் எம்.பி.க்களின் எண்ணிக்கையில் மாற்றம் வரலாம்.
- இதற்கு மக்கள்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்கள், மேற்கு மாநிலங்கள், ஹிமாச்சல் பிரதேசம் போன்ற சில வடக்கு மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவிக்கலாம்.

## மைக்ரோசாட்-2ஏ

- இந்தியாவுக்குத் தேவையான பல்வேறு செயற்கைக் கோள்களை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) ராக்கெட் மூலம் விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது.
- பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 1,750 கிலோ வரையும், ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 4,000 கிலோ வரையும் எடை கொண்ட செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த முடியும்.
- சர்வதேச விண்வெளி சந்தையில், சிறிய செயற்கைக் கோள்களை ஏவுவதற்கான தேவை அதிகரித்துள்ளது.

- எடை குறைவான செயற்கைக் கோள்களை புவியின் தாழ் சுற்றுப்பாதைக்கு கொண்டு செல்ல, சிறிய ரக எஸ்எஸ்எல்வி ராக்கெட்டுகளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.
- இதன் எடை சுமார் 110 டன்னாகும். இதற்கான செலவும் ரூ.30 கோடிக்குள் அடங்கிவிடும்.
- இந்த ராக்கெட் மூலம் மைக்ரோசாட்-2ஏ (இஓஎஸ்-02) செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட உள்ளது.
- மொத்தம் 142 கிலோ எடை கொண்ட மைக்ரோசாட், கடலோர நிலப் பயன்பாடு மற்றும் ஒழுங்குமுறை, நகர்ப்புற, கிராமப்புற மேலாண்மை, பயன்பாடற்ற நிலங்களுக்கான எல்லை வரைபடம் தயாரிப்பு உள்ளிட்ட பணிகளுக்கு உதவியாக இருக்கும்.
- இதில் உள்ள 2 நவீன கேமராக்கள் மூலம் 6 மீட்டர் அளவுக்கு துல்லியமாகப் படம் பிடிக்க முடியும்.
- இதனுடன் ஸ்பேஸ் கிட்ஸ் அமைப்பின் மூலம் 'ஆசாதிசாட்' எனும் கல்விசார் செயற்கைக் கோளும் விண்ணில் செலுத்தப்படுகிறது.

## வீழ்ச்சியிலிருந்து மீள்வது எப்போது?

**டாலர் சூழ் உலகு**

- 1944 ஜுலை மாதம் அமெரிக்காவில் பிரெட்டன் வூட்ஸ் பகுதியில் உள்ள மவுண்ட் வாஷிங்டன் விடுதியில் புதிய பரிவர்த்தனை மதிப்பை உருவாக்குவது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மாநாடு நடந்தது.
- அந்த சமயத்தில் உலகின் தங்க இருப்பில் நான்கில் மூன்று பங்கு அமெரிக்காவிடம் இருந்தது.
- அப்போது ஏனைய நாடுகளின் நாணயங்களுடன் ஒப்பிட அமெரிக்க டாலர் வலுவான நாணயமாக இருந்தது. இதன் காரணமாக அமெரிக்க டாலர் பொது பரிவர்த்தனை நாணயமாக முன்வைக்கப்பட்டு 1 அவுன்ஸ் தங்கத்தின் விலைக்கு நிகரான அமெரிக்க டாலர் மதிப்பு 35 டாலர் என்று நிர்ணயிக்கப்பட்டது.
- இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம் என்னவென்றால், ஒரு நாடு தனக்குத் தேவையான தங்கத்தை இனி டாலர் அடிப்படையில்தான் வாங்க வேண்டும்.
- பிரெட்டன் வூட்ஸ் ஒப்பந்தம் 25 ஆண்டுகாலம் தொடர்ந்தது.
- ஒரு கட்டத்தில் டாலரின் புழக்கத்துக்கு ஏற்ற அளவில் அமெரிக்காவில் தங்க இருப்பு இல்லை. தவிர வியட்நாம் மீதான போரினால் அமெரிக்காவின் பொருளாதாரம் கடும் சரிவுக்கு உள்ளாகி இருந்தது.
- இந்தச் சூழலில் 1971-ல் அமெரிக்க அதிபராக இருந்த ரிச்சர்ட் நிக்சன், தங்கத்துக்கும் டாலருக்கும் இடையிலான பரிமாற்ற ஒப்பந்தத்தை ரத்து செய்தார். அதாவது, இனி டாலரின் மதிப்பு தனித்தது. அதை தங்கத்துடன் ஒப்பிடக்கூடாது என்றார்.
- இந்த அறிவிப்புக்குப் பிறகு உலகநாடுகள் தங்கத்தை இருப்பாக வைத்துக்கொள்வதை விடவும் அமெரிக்க டாலரை இருப்பாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தத் தொடங்கின.
- அப்படித்தான் உலக அளவில் அமெரிக்க டாலர் அந்நியசெலாவணி இருப்பாக ஆனது. இன்று உலக வர்த்தகத்தில் 80% டாலரில் நிகழ்கிறது.

**தற்போதைய வீழ்ச்சிக்கு காரணம்**

- ரஷ்யா-உக்ரைன் போர்
- அமெரிக்க பெடரல் ரிசர்வின் வட்டி விகித உயர்வு
- வர்த்தகப் பற்றாக்குறை
- பிப்ரவரி 24-ம் தேதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தாக்குதலைத் தொடங்கியது.
- உலக அளவில் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் ரஷ்யா முதன்மை நாடுகளில் ஒன்றாக உள்ளது. கோதுமை, சோளம், சூரியகாந்தி எண்ணெய், உரம், இரும்பு ஏற்றுமதியில் உக்ரைன் முக்கிய இடத்தில் உள்ளது.
- போரினால் இந்த ஏற்றுமதிகள் தடைபட்டதால் உலக அளவில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது.
- தவிர, இந்தப் போர் உலக அளவில் விநியோகக் கட்டமைப்பில் நெருக்கடியை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக பணவீக்கம் உச்சத்தைத் தொட்டது.
- அமெரிக்காவில் பணவீக்கம் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உச்சம் அடைந்ததையடுத்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்க பெடரல் ரிசர்வ், வட்டி விகிதத்தை உயர்த்தத் தொடங்கியது.
- ஒரு நாடு வட்டி விகிதத்தை உயர்த்தும்போது அந்நாட்டில் கடன் பத்திரங்களின் மீதான வட்டி வருவாய் அதிகரிக்கும். இதனால் பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் கடன் பத்திரங்களில் அதிகம் முதலீடு செய்யத் தொடங்குவர்.

- அமெரிக்கா அதன் வட்டி விகிதத்தை உயர்த்தியதால் அந்நிய முதலீட்டாளர்கள், இந்திய பங்குச் சந்தையில் மேற்கொண்டிருந்த முதலீட்டைத் திரும்பப் பெற்று, அமெரிக்க பங்குகளில் முதலீடு செய்யத் தொடங்கினர். இதனால், இந்தியாவில் டாலரின் இருப்பு குறையத் தொடங்கியது.
- இந்தியாவைப் பொறுத்தவரையில் அமெரிக்க பெடரல் ரிசர்வ் வட்டி விகிதத்தை உயர்த்துவதற்கு முன்பிருந்தே அந்நிய முதலீட்டாளர்கள், இந்தியாவின் பொருளாதார நிலையின்மை காரணமாக இந்திய பங்குச் சந்தையில் உள்ள தங்கள் பங்குகளை விற்று வெளியேறி வருகின்றனர்.
- இவ்வாண்டு தொடக்கம் முதல் இதுவரையில் 30 பில்லியன் டாலருக்கு மேல் பங்குச் சந்தை தொடர்பான அந்நிய முதலீடு இந்தியாவிலிருந்து வெளியேறி இருக்கிறது.
- விளைவாக, இந்தியா ஐந்து மாதங்களுக்கு முன்பாக ஒரு டாலரை 74 ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டிருந்தது. தற்போது அதே ஒரு டாலரை 80 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் உள்ளது.
- ரஷ்ய-உக்ரைன் போர், பெடரல் ரிசர்வின் வட்டி விகித உயர்வு இவற்றையெல்லாம் தாண்டி, தற்போது இந்தியா எதிர்கொண்டிருக்கும் ரூபாய் மதிப்பு வீழ்ச்சிக்கு மிக அடிப்படையான காரணம், இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறைதான்.

**வர்த்தகப் பற்றாக்குறை**

- சென்ற நிதி ஆண்டில் இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி 420 பில்லியன் டாலரைத் (ரூ.33.60 லட்சம் கோடி) தொட்டது.
- சென்ற நிதி ஆண்டில் இந்தியா 612 பில்லியன் டாலருக்கு (ரூ.48.96 லட்சம் கோடி) இறக்குமதி செய்துள்ளது.
- இதனால் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை 192 பில்லியன் டாலராக (ரூ.15.36 லட்சம் கோடி) உயர்ந்தது.
- இது மிக உச்சமான வர்த்தகப் பற்றாக்குறை ஆகும்.
- ஒரு நாட்டின் ஏற்றுமதி அதிகரித்தால் மட்டும் போதாது. ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் இடையிலான இடைவெளி குறைய வேண்டும். ஆனால், இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் அந்த இடைவெளி அதிகரித்தபடி செல்கிறது.
- நடப்பு நிதி ஆண்டு முதல் காலாண்டில் வர்த்தகப் பற்றாக்குறை 70.8 பில்லியன் டாலராக (ரூ.5.6 லட்சம் கோடி) உள்ளது.
- சென்ற நிதி ஆண்டு முதல் காலாண்டில் அது 31.4 பில்லியன் டாலராக (ரூ.2.5 லட்சம் கோடி) இருந்தது. வர்த்தகப் பற்றாக்குறை இரு மடங்குக்கு மேலாக அதிகரித்துள்ளது.
- இந்தியா அடிப்படையில் இறக்குமதி சார்புடைய நாடு. இந்தியா அதன் கச்சா எண்ணெய் தேவையில் 80 சதவீதத்துக்கு மேல் இறக்குமதி செய்கிறது.
- இந்திய வாகனத் தயாரிப்பில் 20 சதவீத உதிரி பாகங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.
- மின்னணு சாதனத் தயாரிப்பில் 60 சதவீத உதிரி பாகங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.
- பொதுவாக ஒரு நாடு அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் போது அந்நாட்டுக்குள் டாலர் வரவு அதிகரிக்கும். அதுவே ஒரு நாடு அதிக அளவில் இறக்குமதி அதிகரிக்க அதிகரிக்க ஒரு நாட்டின் பண மதிப்பு வீழ்ச்சி அடைந்து கொண்டே செல்லும்.
- இந்தியாவின் வர்த்தக பற்றாக்குறை குறையாக வரையில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ந்து கொண்டேதான் இருக்கும்.

**ஆர்பிஐ-யின் முயற்சி பலன் தருமா?**

- ரிசர்வ் வங்கி இந்திய ரூபாயைக் கொண்டே ஏற்றுமதி-இறக்குமதி தொடர்பான பரிவர்த்தனையை மேற்கொள்வதற்கான புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளது.

**எப்படி செயல்படும்?**

- ரஷ்யாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடுகிறது என்றால், முதலில் இந்திய வங்கிகள் ரஷ்யாவில் உள்ள வங்கிகளில் சிறப்புக் கணக்கைத் தொடங்க வேண்டும்.
- அந்தக் கணக்கில் ரஷ்ய நாணயமாக ரூபிளில் ஒரு குறிப்பிட்டத் தொகையை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். அதேபோல் ரஷ்ய வங்கிகள் இந்திய வங்கிகளில் ரூபாயில் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பாகக் கொள்ள வேண்டும்.
- இந்திய இறக்குமதியாளர் ரஷ்யாவிடமிருந்து சரக்குகளை இறக்குமதி செய்யும்போது அதற்கான தொகையை அவர் தன்னுடைய இந்திய வங்கியில் ரூபாயில் செலுத்துவார்.
- இந்தத் தகவல் ரஷ்யாவில் உள்ள வங்கிக்கு தெரிவிக்கப்படும். உடனே, ரஷ்யாவில் உள்ள வங்கியில் இந்திய வங்கி வரவு வைத்துள்ள ரூபிள் கணக்கிலிருந்து ரஷ்ய ஏற்றுமதியாளருக்கான தொகை வழங்கப்பட்டுவிடும்.
- அதேபோல் இந்திய ஏற்றுமதியாளர் ரஷ்யாவுக்கு சரக்குகளை ஏற்றுமதி செய்யும்போது அந்தச் சரக்குகளைப் பெறும் ரஷ்யாவில் உள்ள இறக்குமதியாளர் அவற்றுக்கான தொகையை ரஷ்ய வங்கியில் செலுத்தி விடுவார்.

- உடனே அந்த ரஷ்ய வங்கி இந்திய வங்கிக்கு அறிவிப்புக் கொடுக்கும். அதையடுத்து இந்திய வங்கியில் ரஷ்ய வங்கிக் கொண்டிருக்கும் ரூபாய் வைப்பிலிருந்து அந்த ஏற்றுமதிக்கான தொகை உரியவருக்குக் கொடுக்கப்பட்டுவிடும்.

**மக்களுக்கு பாதிப்பு**

- வெளிநாட்டுப் பயணச் செலவு அதிகமாகும். வெளிநாடுகளில் இந்திய மாணவர்களின் கல்விச் செலவு கணிசமாக உயரும்.
- பொருள்களின் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும்.
- கச்சா எண்ணெய் விலை உயர்ந்தால், சரக்கு லாரிகளின் கட்டணம் உயரும்.
- காய்கறி உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும். மின்னணு மற்றும் வாகன உதிரி பாகங்களின் விலை உயர்வால் மொபைல்போன், லேப்டாப் உட்பட மின்னணு சாதனங்கள் மற்றும் வாகனங்களின் விலை உயரும்.
- முடிவின்றி வீழும் ரூபாய் மதிப்பு, மக்கள் உழைப்பு ஈட்டும் வருமானத்தை அர்த்தமிழக்கச் செய்யும்.

## நடுவானில் இன்ஜின் திடீர் மக்கர்

- நடுவானில் இன்ஜின் செயலிழத்தல், விமானியின் ஜன்னல் கண்ணாடியில் விரிசல் ஏற்படுதல், விமான விசிறிகள் செயல்படாமல் போதல், விமானத்தில் புகை ஏற்படுதல், தரை இறங்கும்போது இன்ஜின் தீப்பிடித்தல், விமான நிலையத்தில் நாய் குறுக்கே வருதல், விமானி அறையில் உயிருடன் புறா தங்கியிருத்தல் என 20க்கும் மேற்பட்ட அசம்பாவித சம்பவங்கள் நடந்து விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

**உண்மையில் என்ன பிரச்சனை?**

- விமான பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு, விமான போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்படும் விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு ஆணையத்துக்கே (டிஜிசிஏ) உள்ளது.
- இந்த ஆணையம்தான், விமான நிறுவனங்களை அடிக்கடி ஆய்வு செய்து பயணிகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து கோளாறுகளுக்கும் விமான நிறுவனங்களின் பாதுகாப்பு கவனக்குறைவும், போதுமான பராமரிப்பின்மையும்தான் காரணம் என டிஜிசிஏ கண்டித்துள்ளது.

**இப்படி செய்யாதது தவறு**

- பொதுவாக, ஒரு விமானம் பறக்க தகுதி வாய்ந்ததாக என 3 கட்டமாக இன்ஜினியர்கள் ஆய்வு செய்து அனுமதி தர வேண்டும்.
- அதன் பிறகே விமானம் தனது பயணத்தை தொடங்க வேண்டும்.
- அந்த வகையில், பி1 லைசென்ஸ் பெற்ற இன்ஜினியர்கள் விமானத்தின் இயந்திரங்களையும் பி2 லைசென்ஸ் பெற்ற இன்ஜினியர்கள் விமானத்தில் உள்ள மின்சாதன உபகரணங்களையும் பரிசோதிப்பார்கள்.
- இறுதியாக, ஏ லைசென்ஸ் பெற்ற இன்ஜினியர்கள் நடுவானில் விமானம் பறக்கும் போது கோளாறு ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்து, விமானம் பறக்க அனுமதி தருகின்றனர்.
- இதில், தற்போது பெரும்பாலான விமான நிறுவனங்கள் பி1, ப2 இன்ஜினியர்களை வைத்தே ஆய்வுகளை செய்து விமானத்தை இயக்குகின்றன. அவர்களே விமானம் பறக்க தகுதியானவை என அனுமதிக்கின்றனர்.
- அதிக சம்பளத்தை காரணம் காட்டி ஏ லைசென்ஸ் இன்ஜினியர்கள் நியமிக்கப்படாததால், பெரும்பாலான கோளாறுகள் ஏற்படுகின்றன என்கின்றனர் விமான போக்குவரத்து அமைச்சக அதிகாரிகள்
- சிக்கன நடவடிக்கைக்காக விமான பயணிகளின் பாதுகாப்பில் சமரசம் செய்வதை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

**3வது இடத்தில் இந்தியா**

- விமான போக்குவரத்தை பொறுத்தவரையில் உலகின் 3வது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- இந்தியாவில் 15 விமான நிறுவனங்கள் உள்ளன.
- ஆண்டுதோறும் 15 கோடி பேர் விமான பயணம் மேற்கொள்கின்றனர்.
- ஒவ்வொரு ஆண்டும் 10 லட்சம் விமானங்கள் பறக்கின்றன.
- 137 விமான நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன.
- அடுத்த 20 ஆண்டில் இந்த எண்ணிக்கைகள் 5 மடங்காகும் என விமான நிறுவனங்கள் கணித்துள்ளன.

**எரிபொருள் எவ்வளவு?**

- விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் எரிபொருளான ஏடிஎப் விலை ஒவ்வொரு மாதமும் 1-ம் தேதியும் 16-ம் தேதியும் மாற்றி அமைக்கப்படுகிறது.
- உக்ரைன் மீதான போரால் எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டிருப்பதன் காரணமாக, சர்வதேச அளவில் எரிபொருள்கள் விலை உயர்ந்து வருகிறது.
- விமான எரிபொருளையும் ஜிஎஸ்டியில் சேர்க்க வேண்டுமென விமான நிறுவனங்கள் வலியுறுத்துகின்றன.

**அடிப்படை பிரச்சனைகள்**

- உலகிலேயே மிகக் குறைவான விமான டிக்கெட் கட்டணம்
- உலகிலேயே மிக அதிகமான எரிபொருள் விலை
- ஊழியர்களுக்கு குறைந்த சம்பளம்
- விமானிகள் பற்றாக்குறை
- அனுபவமிக்க இன்ஜினியர்கள் பற்றாக்குறை

## பால ஆதார்

- மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள், பலன்கள், சலுகைகள், மானியங்களைப் பெற ஆதார் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு, பால ஆதார் வழங்கும் முன்னோடி திட்டம், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- நீல நிற அட்டையில் குழந்தைகளின் விபரங்கள் அச்சடிக்கப்படும். வழக்கமான ஆதாரில், பதிவு செய்வோரின் விரல் ரேகை, கண்விழி உள்ளிட்டவை பதிவு செய்யப்படும்.
- ஆனால், பால ஆதாரில் இவை பதிவு செய்யப்படாது. குழந்தையின் பெற்றோரின் ஆதாரின் அடிப்படையில் இவை வினியோகிக்கப்படுகின்றன.
- ஐந்து வயது வரையுள்ள குழந்தைகளுக்கான அரசின் திட்டங்கள் சரியான முறையில் சென்றடையும் வகையில், பால ஆதார் வழங்கப்படுகிறது.
- ஐந்து வயதுக்குப்பின், அவர்களுக்கு வழக்கமான ஆதார் அடையாள அட்டை வழங்கப்படும்.

## மியான்மரின் அபாயக்குரல்

- ஜனநாயகப் போராளிகள் நான்கு பேர் மியான்மர் ராணுவ ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்டிருப்பது உலகின் மனசாட்சியையே உலுக்கியுள்ளது.
- ஆங்சான் சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோசேயா சாவ், ராணுவ ஆட்சியின் கடுமையான விமர்சகர் கோ ஜிம்மி இருவரும் தூக்கிலிடப்பட்டிருக்கும் நால்வரில் இருவர்.
- சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டுக்கோ, வழக்குரைஞர்கள் உதவிக்கோ வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று ஐ.நா.வின் மனித உரிமை ஆணையம் தெரிவித்திருக்கிறது.
- கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மியான்மரில் ராணுவ ஆட்சி நிறுவப்பட்டது முதல் இதுவரை குறைந்தது 140 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.
- 1962-ல் மியான்மரில் கொண்டுவரப்பட்ட ராணுவ ஆட்சி 2010 வரை தொடர்ந்தது.
- நமது அண்டை நாடான மியான்மரில் ஏற்படும் எந்தவொரு பிரச்சனையும் இந்தியாவை நேரடியாக பாதிக்கும். நமது வடகிழக்கு மாநிலங்களும், மியான்மரும் 1,642 கி.மீ எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- இந்தோ-பர்மா எல்லை என்றுதான் நூற்றாண்டுகளாக அது குறிப்பிடப்படுகிறது. மணிப்பூருக்கும் மியான்மருக்கும் இடையில் மக்கள் சர்வ சாதாரணமாக சென்று வருகிறார்கள்.

## பொறுப்பற்ற காட்சி ஊடகங்கள்

- ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சொல்லப்படும் ஊடகங்கள்
- அண்மையில் ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் நடந்த நிகழ்ச்சியில் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமனா இப்போது டிவி விவாத நிகழ்ச்சிகள், சமூக ஊடக அலசல்கள் எல்லாம் கட்டப் பஞ்சாயத்து போல் நடக்கின்றன. இவை நாட்டைப் பின்னோக்கி இழுத்துச் செல்கின்றன.

- சமூக ஊடகங்களில் சில நேரங்களில் நீதிபதிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் கட்டமைக்கப்படுகின்றன. நீதிபதிகள் ஒரு சம்பவம் குறித்து உடனடியாக எதிர்வினையாற்றாமல் இருக்கலாம்.
- அவ்வாறு எதிர்வினையாற்றாமல் இருப்பதால், அவர்கள் பலமில்லாதவர்கள் என்று அர்த்தமில்லை.
- நவீன ஊடகங்களின் வீச்சு அதிகம். ஆனால் அவற்றுக்கு எது சரி, எது தவறு எனத் தெரியவில்லை. உண்மையானது எது போலியானது எது என பகுப்பாய்வு செய்ய தெரியவில்லை.
- ஊடகங்களில் எது வைரலாகப் பரவுகிறதோ அதை வைத்து ஒரு வழக்கின் போக்கை தீர்மானிக்க முடியாது.
- பல ஊடகங்கள் தாமாகவே கட்டப் பஞ்சாயத்து நடத்திக் கொண்டிருக்கின்றன.
- ஒரு சார்புடன் நடத்தப்படும் விவாதங்கள் ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய கேடு. ஊடகங்களில் வெளியாகும் சார்புச் செய்திகள் ஜனநாயகத்தை பலவீனமாக்குகின்றன.
- காட்சி ஊடகங்களில் நடக்கும் விவாதங்கள் பலவும் ஒரு பக்க சார்புடையதாகவும் அரைகுறை தகவல்களுடன் உள்நோக்கம் கொண்டவையாகவும் இருக்கின்றன.
- காட்சி ஊடகங்களுக்கு பொறுப்பே இல்லை; சமூக ஊடகங்கள் இன்னும் மோசம். காட்சி ஊடகங்கள் பொறுப்பை உணராமல் செயல்பட்டு ஜனநாயகத்தை பின்னோக்கி இழுத்து செல்கின்றன.
- காட்சி ஊடகங்களும் சமூக ஊடகங்களும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.
- சமூக ஊடகங்களும் சிலரை தேவைக்கு அதிகமாகப் புகழ்வது, தெரிந்தே தவறான கருத்துகளைப் பரப்புவது என்று செயல்படுகின்றன. இது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.

## இலவசங்கள் - உயர்த்தவா? உயர்த்திக் கொள்ளவா?

- அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் இலவசங்கள் குறித்த அறிவிப்புகள் இடம் பெறலாமா?
- இதன் மீதான தனது நிலைப்பாட்டை மத்திய அரசு தெரிவிக்குமாறு உச்சநீதிமன்றம் கோரியுள்ளது.
- இது தொடர்பாக, நிதிக்குழுவின் ஆலோசனைகளையும் பெறுமாறு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.
- இலவசங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட, 'சுப்ரமணியம் பாலாஜி எதிர் தமிழக அரசு' வழக்கில் நீதி அரசர்கள் பி.சதாசிவம் மற்றும் ரஞ்சன் கோகாய் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு 2013, ஜுலை 5-ல் விரிவான ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது.
- அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் 14, 41, 162, 266(3), 282, மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்பிரிவு 123 உள்ளிட்டவை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**உச்சநீதிமன்றம் கூறியதாவது :**

1. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தல் தவறான வழக்கம் ஆகாது.
2. இலவசத் திட்டங்கள், அரசமைப்புச் சட்டத்தின் பாகம் IV அரசின் கொள்கை வழிகாட்டு குறிப்புகள் கீழ் வருவதால் அவை பொதுநோக்கு கொண்டவை ஆகும்.
3. எந்த ஒரு திட்டத்தின் செயல்பாடும் ஆய்வுக்கு உட்பட்டது. இதன் மீது நீதிமன்றத்தின் அதிகார வரம்பு அதிகமில்லை.
4. அரசின் செயல்பாடு, அரசமைப்புச் சட்டத்துக்கு புறம்பாக இருந்தால் (மட்டுமே) நீதிமன்றம் தலையிடலாம்; மற்றபடி, அறிவார்ந்ததாக இல்லை, மக்கள் நலனுக்காக செலவு செய்யப்படவில்லை எனில் அது குறித்து சட்டமன்றங்களில் விவாதிக்கப்பட வேண்டுமே தவிர, நீதிமன்றங்களில் அல்ல.

- சாசனப்பிரிவு 324-ன்படி, சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடத்துவது ஆணையத்தின் பணியாகும். இலவச அறிவிப்புகள் நியாயமான தேர்தலை பாதிக்கும் என்றால் தேர்தல் ஆணையம், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசித்து, தக்க நடத்தை விதிமுறைகள் கொண்டு வரலாம்.
- இலவச திட்டங்களை கணக்குத் தணிக்கையாளர் தடுக்க முடியாது. அவரது பணி, அரசாங்கம் செலவு செய்த பிறகே தொடங்குகிறது; அதற்கு முன்பாக அல்ல.
- சமுதாயத்தின் சமச்சீர் வளர்ச்சியில் இலவசங்களின் பங்கு; அரசுகளுக்கு இலவசங்களால் ஏற்படும் பொருளாதாரச் சுமை; அடித்தட்டு மக்களுக்கு இலவசங்கள் மூலம் கிடைக்கும் நிவாரணம்; இலவசங்களுக்கு எதிராகப் பொருளாதார அறிஞர்கள் முன்வைக்கும் வாதங்கள்... முக்கிய கவனம் பெறுகின்றன.
- நிபுணர்களின் பார்வையில் இலவசங்கள் மிக நிச்சயமாய் ஆரோக்கியமான செலவினம் அல்ல.
- உற்பத்தி சாரா செலவினங்களை இவர்கள் ஊக்குவிப்பது இல்லை. அதே சமயம் இவர்கள் அடித்தட்டு மக்களின் நல்வாழ்வுக்கு எதிரானவர்களும் இல்லை.
- "உள்ளிருந்தே கொல்லும் நோயாக இலவசங்கள் ஏற்படுத்தும் நிதிச்சுமை, ஒரு நாட்டின் அல்லது ஒரு மாநிலத்தின் பொருளாதாரத்தை சீரழித்து விடலாம். எனவே இலவசங்கள் கூடாது" என்கின்றனர்.

- ஆனால் அரசமைப்புச் சட்டம் வலியுறுத்தும் 'மக்கள் நல அரசு' (Welfare State) இயல்பாகவே மக்கள் நலத் திட்டங்களில் கவனம் செலுத்ததான் வேண்டும். இல்லாதவர்கள் கணிசமான எண்ணிக்கையில் இருக்கும்வரை, இலவசங்களுக்கான தேவையும் இருக்கத்தான் செய்யும்.
- சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் சமமின்மை காரணமாக சமுதாயப் பதற்றம் ஏற்படாமல் தடுப்பதிலும் இலவசங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- ஏராளமானோர் வாழ்வின் விளிம்பில் தத்தளிக்கும்போது, அவர்களுக்கான அரசின் உதவிக் கரத்தை, உலக சுகங்களில் திளைக்கிற ஒரு சிலர் மறிக்க முயல்வது, மன்னிக்கவும், வக்கிரம்; ஒரு வகையில் வன்முறை.
- இலவசங்களை அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்துவதை விடுத்து, சரியானப் பயனாளிகளை சரியான வழியில் சென்றடைகிற வகையில் இலவச திட்டங்கள் இருப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.
- அரசுப் பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயணத் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்துகிறது. தெளிவற்ற இலக்கற்ற இலவசத்துக்கு இது ஒரு நல்ல (?) உதாரணம்.
- வறியவர்களில் ஆண்–பெண் பேதமில்லை. வசதியான குடும்த்தில் ஆண், பெண் இருபாலருமே வசதி படைத்தவர்கள்தான். ஏழைக் குடும்பத்தில் ஆண், பெண் இருவருமே ஏழைகள்தான்.
- தற்போதுள்ள திட்டத்தின்படி, உயர்ந்த பதவியில் நல்ல வருமானம் பெறுகிற ஒரு பெண் இலவசமாகப் பயணிக்கலாம். அதே பேருந்தில், வயிற்றுப் பிழைப்புக்குச் செல்லும் ஆண் தொழிலாளி, கட்டணம் செலுத்தியாக வேண்டும்! இந்த முரண், இலவசங்களில் கூடவே கூடாது.
- குறைந்த வருவாய் பிரிவினரின் குடும்ப அட்டை அடிப்படையில், மாதாந்திர இலவச பயணச்சீட்டுகள் வழங்கியிருக்கலாம். நேரடியாக மிகுந்த பலன் அளித்திருக்கும்.
- தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பள்ளிச் சிறாருக்கு இலவச சிற்றுண்டு – அருமையான திட்டம். பாராட்டலாம்.
- ஆனாலும் ஒரு கேள்வி – எல்லா வகையிலும் வளர்ச்சி பெற்ற ஒரு மாநிலம் மென்மேலும் இலவசங்கள் தருவது ஏன்?
- உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு, மத்திய நிதிக்குழு அளிக்கவிருக்கும் விளக்க அறிக்கை, இலவசங்கள் தொடர்பான தெளிவான வழிகாட்டு நெறிமுறைகளை முன்வைத்தால் சிறப்பாக இருக்கும்.
- இலவசங்கள், மோசமானவை அல்ல. தேவையும் கூட. ஆனால் அவை அரசுப்பணத்தில் அரசியல் ஆதாயம் தேடுகிற முயற்சியாக இருத்தல் கூடாது.

## சொத்து வரி

- சொத்துவரியே, உள்ளாட்சி அமைப்புகளின் முதன்மை வருவாய்.
- அதிலிருந்து பெறப்படும் வருவாயே உள்ளாட்சியின் அடிப்படைப் பணிகளை மேற்கொள்தற்கு உறுதுணையாக இருக்கிறது. அதே நேரத்தில், குடியிருக்கும் வீடுகளுக்கான சொத்து வரியை வசூலிக்கையில், கடுமை காட்டாமல் வசூலிப்பதற்குத் திட்டமிட வேண்டும்.
- கடந்த சில ஆண்டுகளாக சொத்து வரி உயர்த்தப்படவில்லை என்பதால், தற்போது திருத்தியமைக்கப்பட்ட வரி விகிதங்களை ஏற்றுக்கொள்வதில் மக்களிடையே தயக்கம் நிலவுகிறது.
- உரிய கால இடைவெளியில், வரி விகிதங்களைத் திருத்தியமைக்காமல் இப்போது திடுதிடுப்பென்று வரி விதிப்பை உயர்த்தியிருப்பதுதான்.
- மக்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயங்கும் சூழலை உருவாக்கியிருக்கிறது.பெருந்தொற்றுக்குப் பிறகான பொருளாதாரப் பாதிப்புகளிலிருந்து இன்னும் அவர்கள் முழுதாக விடுபடவில்லை என்பதையும் கருணையோடு அணுக வேண்டும்.
- சொத்து வரி செலுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே மக்களின் அதிருப்தியைக் களைவதற்கான வாய்ப்பு.
- அதை விடுத்து, அச்சுறுத்தி வரி வசூலிப்பது 'வேலொடு நின்றான் இடுவென்றது போலும்' என்று வள்ளுவர் காட்டிய உதாரணம்போல் பழிச்சொல்லுக்கு வாய்ப்பாகிவிடக்கூடும்.

## நீர் மேலாண்மை

- இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் தண்ணீர் தன்னிறைவு பெற்று விளங்குகின்றனவா என்று கேட்டால், இல்லை.
- ஆண்டுதோறும் பருவமழைக் காலத்தில் மழை நன்றாகப் பெய்தாலும்கூட, நம்மால் அந்தத் தண்ணீரை எல்லாம் முழுமையாகச் சேகரிக்க முடிகிறதா என்றால் அதுவும் இல்லை.
- பல மாநிலங்களுக்குள்ளேயேகூட நீர்மிகை மாவட்டங்களும், வறட்சியில் தவிக்கும் மாவட்டங்களும் இருக்கின்றன.

- மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள விதர்பா பகுதியில் வறட்சியும், ஏனைய பகுதிகளில் வெள்ளச் சேதமும் ஆண்டுதோறும் வாடிக்கை. இத்தனைக்கும் கோதாவரி, கிருஷ்ணா, தபதி நதிகள் பாயும் மாநிலம் அது.
- கர்நாடகத்தில் அசுத்தமான குடிநீரால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சமீபத்திய அறிக்கையின்படி, அந்த மாநிலத்தில் உள்ள பல்லாரி மாவட்டத்தில் உள்ள கோனால் என்ற கிராமத்தில் ஒரு இளம்பெண் இறந்துள்ளார். மேலும் 20-க்கும் மேற்பட்டோர் நோய்வாய்ப்பட்டு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.
- இந்தியாவில் அசுத்தமான தண்ணீரை உட்கொள்வதால் ஆண்டுக்கு கிட்டத்தட்ட இரண்டு லட்சம் இறப்புகள் ஏற்படுவதாக நிதி ஆயோக் அளித்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
- ஜல் சக்தி என்ற முழு அளவிலான அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் 'ஜல் ஜீவன் மிஷன்' திட்டம். ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிதி ஆயோக்கின் மதிப்பீட்டின்படி, இந்தியாவின் நிலத்தடி, மேற்பரப்பு நன்னீர் கிட்டத்தட்ட 70% அசுத்தமானதாக உள்ளது.
- ஆழ்குழாய் கிணறுகள் தோண்டப்படுவதாலும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் தண்ணீரில் கலப்பதாலும் நீர்நிலைகள் மாசு அடைகின்றன.
- அதிக மக்கள்தொகை கொண்ட பகுதிகளிலும், தொழில்துறை பகுதிகளிலும் நிலத்தடி நீரைத் தக்கவைத்துக் கொள்வது குறைகிறது அல்லது பாதிக்கப்படுகிறது.
- இந்தியாவின் ஆண்டு தண்ணீர் தேவை 3,000 பில்லியன் கனலிட்டர்கள் ஆகும். விவசாயத்திற்கு மட்டும் 80% தண்ணீர் தேவையாக உள்ளது.
- ஆனால், இந்தியாவில் ஆண்டுக்கு 4,000 கன லிட்டர் மழை மட்டுமே பெய்கிறது.
- நீர் நெருக்கடியைத் தவிர்க்க, மழைநீர் சேகரிப்பு, முறையான நீர் சுத்திகரிப்பு முறைகள், மழைநீர் சேகரிப்பு, முறையான நீர் சுத்திகரிப்பு முறைகள், சிறந்த நீர்ப்பாசன நடைமுறைகள், கடுமையான நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்றவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

## இந்தியா-மாலத்தீவுகள்

**ஒப்பந்தங்கள் கையொப்பம்**

- இந்தியா-மாலத்தீவுகள் இடையே நல்லுறவை வலுப்படுத்தும் வகையில் 6 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.
- திறன் மேம்பாடு, இணையவழி குற்றத் தடுப்பு, வீட்டு வசதி, பேரிடர் மேலாண்மை, கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு ஆகிய துறைகள் சார்ந்த ஒப்பந்தங்கள் பிரதமர் மோடி அதிபர் சோலி இடையேயான சந்திப்பின் போது கையொப்பமாகின.

**கிரேட்டர் மாலி திட்டம்**

- கிரேட்டர்மாலி போக்குவரத்துத் திட்டத்துக்கான பணிகளைத் தலைவர் இருவரும் காணொலி வாயிலாகத் தொடக்கி வைத்தார்.
- அத்திட்டத்தின் கீழ் தலைநகர் மாலி அமைந்துள்ள தீவையும், அருகில் உள்ள விலிங்லி, குல்ஹி ஃபல்கு, தைலஃபுஷி ஆகிய தீவுகளையும் இணைக்கும் வகையில் 6.74 கி.மீ. நீள பாலம் அமைக்கப்படவுள்ளது.

## மாலி நட்புறவுப் பாலம்

- இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் மாலத்தீவு அதிபர் இப்ராஹிம் முகமது சோலிக்கும் இடையேயான சந்திப்பும், பேச்சுவார்த்தையும் இருநாடுகளும் கையொப்பமிட்ட உறுதிப்படுத்தியிருக்கும் ஆறு ஒப்பந்தங்களும் இந்திய – மாலத்தீவு நட்புறவை வலுப்படுத்தியிருக்கின்றன.
- இந்தியாவின் நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்ட இருக்கும் கிரேட்டர் மாலி போக்குவரத்துத் திட்டத்திற்கான பணிகளை, பிரதமரும் அதிபரும் தொடங்கி வைத்தனர்.
- இதன் மூலம் தலைநகர் மாலி அமைந்துள்ள தீவையும், அருகில் உள்ள விலிங்கி, குல்ஹி ஃபல்கு, தைலஃபுஷி ஆகிய தீவுகளையும் இணைக்கும் வகையில் 6.74 கி.மீ நீள பாலம் அமைக்கப்படவுள்ளது.
- மாலத்தீவின் 61 தீவுகளில் காவல் கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகளையும் இந்தியா மேற்கொள்ள உள்ளது.
- வளர்ச்சிப்பணிகளுக்காக ரூ.750 கோடி கடனுதவியும், வீட்டுவசதியை மேம்படுத்த ரூ.941 கோடி கடனுதவியும் வழங்கப்படுகிறது.
- இந்திய – மாலத்தீவு உறவு என்பது பாதுகாப்பு ரீதியாக மிகவும் முக்கியமானது. சிறுசிறு தீவுகளின் கூட்டமாக இருந்தாலும்கூட, இந்தியாவை நோக்கி வரும் கடல்வழிப் பாதையில் அமைந்த மாலத்தீவு, இந்துமாக் கடலில் புவியியல் முக்கியத்துவம் பெற்ற நாடு.

SURESH'

- லட்சத்தீவின் மினிக்காய் தீவிலுள்ள இந்திய கடற்படைத்தளம், மாலத்தீவின் வடக்கு எல்லையில் உள்ள சுராகுன்னு தீவிலிருந்து 100 கி.மீ தொலைவில்தான் அமைந்திருக்கிறது.
- இலங்கையைப் போலவே தென்னிந்தியாவின் பாதுகாப்புக்கு மாலத்தீவின் நட்புறவும் மிகமிக அவசியம்.

## பணச் சலவைத் தடுப்புச் சட்டம்

**பணச்சலவை**

- தீவிரவாதம், போதைப் பொருள் கடத்தல், கொலை, கொள்ளை, லஞ்சம், வரி ஏய்ப்பு உள்ளிட்ட குற்றச் செயல்கள் மூலம், சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட பணத்தை முறையான வழிகளில் ஈட்டப்பட்ட பணமாக மாற்றுவதே பணச்சலவை (Money Laundering) எனப்படுகிறது.
- இது பண மோசடி / நிதி மோசடி என்றும் குறிப்பிடுவது உண்டு.
- முறையற்ற வழியில் ஈட்டப்பட்ட பணம் என்னும் கறையை நீக்கும் முயற்சி என்பதால், சலவை (laundering) என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது.

**பொதுவான வழிமுறைகள்**

- சட்டவிரோதச் செயல்களின் மூலம் ஈட்டப்பட்ட பணத்தைச் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வங்கிக் கணக்கு உள்ளிட்ட நிதி அமைப்புக்குள் செலுத்துதல்.
- பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி செலுத்தப்பட்ட பணத்துக்கான ஆதாரத்தை (source) மறைப்பது. இதன் மூலம் அந்தப் பணத்தின் மீதான 'கறை' நீக்கப்படுகிறது.
- இப்படிக் கறை நீக்கப்பட்ட பணத்தைச் சொந்தப் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்வது, புழக்கத்தில் விடுவது.
- சட்டவிரோத வழியில் ஈட்டப்பட்ட பணத்தையும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் தொழிலிருந்து ஈட்டிய வருவாயைக் கணக்குக் காண்பிப்பது ஒரு வழிமுறை
- கணக்கில் காண்பிக்க முடியாத பணத்தைச் சிறு தொகைகளாகப் பிரித்து பிறரிடம் கொடுத்துத் தன் வங்கிக் கணக்கில் செலுத்த வைத்து, அதன் மூலம் அந்தப் பணத்தை முறைப்படியான வருவாயாகக் கணக்குக் காண்பிப்பது இன்னொரு வழிமுறை.
- ரியல் எஸ்டேட், தங்கம் ஆகியவற்றில் முதலீடு செய்வது, டிஜிட்டல் பணப் பரிமாற்றம், கிரிப்டோ நாணயங்கள், இணையவழி விளையாட்டுகள், சூதாட்டம் ஆகியவற்றின் வழியாகவும் பணச் சலவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**உலகளாவிய தடுப்பு நடவடிக்கைகள்**

- தீவிரவாதம், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்கள் உலகத்தையே பாதிக்கும் பெரிய பிரச்சினைகள், பணச்சலவை வழிமுறைகள் காரணமாக இதுபோன்ற குற்றச் செயல்களின் மூலம் பணம் ஈட்டுவது குறித்த அச்சம் குறைக்கப்படுகிறது.
- பணத்துக்காகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கவும் காரணமாகிறது.
- குற்றச் செயல்களின் மூலம் ஈட்டப்பட்டு, சலவை செய்யப்பட்ட பணம் மீண்டும் அந்தக் குற்றச் செயல்களுக்கே பயன்படுத்தப்படுகிறது.
- இதனால் நாடுகளின் பொருளாதாரம் சீரழிகிறது. குற்றங்கள் அதிகரிக்கின்றன.
- 1980-களில் மத்தியில் பணச்சலவையைத் தடுப்பதற்கான உலகளாவிய நடவடிக்கைகளின் தேவை உணரப்பட்டது.
- 1988இல் வியன்னாவில் நடைபெற்ற 'போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்கான' ஐ.நா. மாநாட்டில் போதைப்பொருள் வணிகத்திலிருந்து ஈட்டப்பட்ட பணத்தைச் சலவை செய்வதற்கான வழிமுறைகளைத் தடைசெய்வதற்கு உலக நாடுகளிடம் வலியுறுத்தப்பட்டது.
- 1989-இல் பாரீஸில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் பணச் சலவையைத் தடுப்பதற்காக 'ஃபினான்ஷியல் ஆக்ஷன் டாஸ்க் ஃபோர்ஸ்' என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 2000ல் நாடுகளைக் கடந்த அமைப்பாக்கப்பட்ட குற்றங்களுக்கு (Transnational Organized Crimes) எதிரான ஐ.நா. மாநாடு பணச் சலவையைக் குற்றமாக்கும் சட்டங்கள் தேவை என்பதை வலியுறுத்தியது.

**சட்டமும் திருத்தங்களும்**

- பணச் சலவைத் தடுப்புச் சட்டம் (Prevention of Money Laundering Act) இந்தியாவில் 2002-இல் நிறைவேற்றப்பட்டது. இதற்கான விதிகள் பிறப்பிக்கப்பட்டு 2005-இல் நடைமுறைக்கு வந்தது.



SURESH'

- இந்தச் சட்டத்தின் கீழான குற்றங்களை விசாரிப்பதற்கான அதிகாரம் அமலாக்க இயக்குநரகத்துக்கு (Enforcement Directorate) வழங்கப்பட்டுள்ளது.
- பணச் சலவையைத் தடுப்பதற்கும், பணச் சலவையில் ஈடுபடுவோருக்குத் தண்டனை பெற்றுத் தருவதற்கும் இந்தச் சட்டத்தில் போதுமான அதிகாரங்கள் இல்லை என்று உணரப்பட்டது.
- எனவே, சட்டத்துக்கு வலுவூட்டும் வகையிலான சட்டத் திருத்தங்கள் பலமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**எதிர்ப்பும் தீர்ப்பும்**

- பணச்சலவைத் தடுப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தங்களின் மூலம் அமலாக்க இயக்குநரகத்துக்கு அளிக்கப்பட்டுள்ள சில அதிகாரங்கள் அரசமைப்புக்கு எதிரானவை என்று குற்றம் சாட்டப்படுகிறது.
- பணச்சலவை குற்றம் சாட்டப்பட்டவர்களின் வளாகங்களில் எப்போது வேண்டுமானாலும் தேடுதல் நடத்துவதற்கும் ஆவணங்களைப் பறிமுதல் செய்வதற்கும் சொத்துகளை முடக்குவதற்கும் தனிநபர்களைக் கைது செய்வதற்கும் அமலாக்க இயக்குநரகத்துக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- விசாரணையின் போது யாரை வேண்டுமானாலும் அழைத்து வாக்குமூலம் பெறுவதற்கான சிவில் நீதிமன்றத்துக்குரிய அதிகாரம், அமலாக்க இயக்குநரகத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- பொய்யாக வாக்குமூலம் அளித்தது தெரியவந்தால், சட்டப்படி தண்டிக்கவும் வழிசெய்யப்பட்டுள்ளது.
- தனிநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுப்பதற்கான உரிமையை இது மீறுவதாக விமர்சகர்கள் கருதுகிறார்கள். மேலும், பணச் சலவைக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படுவதற்கு எதிரான முன்ஜாமீன் நிபந்தனைகளும் கைது செய்யப்படுவதற்கு பிணை வழங்குவதற்கான நிபந்தனைகளும் மேலும் கடினமாக்கப்பட்டுள்ளன.
- அரசியல் ரீதியான பழிவாங்கல் உள்ளிட்ட காரணங்களுக்காகக் குற்றம் செய்யாதவர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டால் குற்ற விசாரணையே தண்டனையைப் போல் ஆகிவிட இந்தச் சட்டத் திருத்தங்கள் வழிவகுத்துள்ளதாகக் கருதப்படுகிறது.
- தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், அமலாக்க இயக்குநரகத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பலவும் அரசமைப்பின்படி செல்லும் என்று தீர்ப்பளித்துள்ளது.
- எதிர்ப்பாளர்களால் அஞ்சப்படும் விளைவுகளைத் தடுப்பதற்குச் சட்டத்திலேயே உரிய ஏற்பாடுகள் இருப்பதாகவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- அதோடு பணச்சலவை என்பது தீவிரவாதத்துக்கு இணையான கொடிய குற்றம் என்றும் அதைத் தடுப்பதற்கு வலுவான அதிகாரங்கள் கொண்ட சட்டங்களும் அமைப்புகளும் தேவை என்றும் உச்சநீதிமன்றம் தனது தீரப்பில் கூறியுள்ளது.

## ஆசாதிசாட் செயற்கைக்கோள்

- சிறிய வகை செயற்கைகோள்களின் வணிக ரீதியில் விண்ணில் ஏவுவதற்காக புதிய வகையில் எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்து உள்ளது.
- இந்த ராக்கெட் மூலம் மலிவான மற்றும் விரைவாக சிறிய செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ முடியும்.
- குறிப்பாக பி.எஸ்.எல்.பி.ரக ராக்கெட்டுகளை விண்ணில் ஏவுவதற்கு ஆகும் செலவில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே எஸ்.எஸ்.எல்.வி.ரக ராக்கெட்டுக்கு செலவாகும்.
- இந்தியாவின் புவி கண்காணிப்பு செயற்கை கோள்களில் ஒன்றான இ.ஓ.எஸ்.-2யை எடுத்துச் செல்கிறது. இது பல்வேறு புவியியல் தகவல் அமைப்புக்கான பயன்பாட்டு வரைபடங்களை வழங்கும் பணியை மேற்கொள்ளும்.
- இதற்காக 6 மீட்டர் பரப்பளவிலான பகுதியை தெளிவாக படம் எடுக்கும் நவீன அகச்சிவப்பு கேமரா, ஆகியவற்றைக் கொண்டு செல்லும் 142 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் 10 மாத கால ஆயுளைக் கொண்டது.
- ஸ்போஸ் கிட்ஸ் இந்தியாவால் ஒருங்கிணைக்கப்பட்ட நாடு முழுவதும் உள்ள 750 கிராமப்புற மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'ஆசாதிசாட்' என்ற செயற்கைக்கோளும் விண்ணுக்கு கொண்டு செல்கிறது.

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை பரிந்துரை

- பொதுவாக அடுத்த தலைமை நீதிபதியின் பெயரை ஓய்வுபெறும் தலைமை நீதிபதியே பரிந்துரை செய்வது வழக்கம்.
- என்.வி.ரமணாவுக்கு அடுத்தபடியாக யு.யு.லலித் மூத்த நீதிபதி என்ற அந்தஸ்தில் உள்ளார்.
- அவர் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டால், 3 மாதத்துக்கும் குறைவாகவே அந்தப் பதவியில் நீடிப்பார்.

## சுங்கச்சாவடிகளுக்கு மாற்றாக விரைவில் புதிய நடைமுறை

- செயற்கைக்கோள் அடிப்படையிலான தொழில்நுட்ப நடைமுறை. இந்த நடைமுறையின்படி, வாகனத்தில் இடம்பெற்றிருக்கும் ஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலமாக உரிமையாளரின் வங்கிக் கணக்கிலிருந்து கட்டணம் எடுக்கப்பட்டு விடும்.
- மற்றொரு நடைமுறை வாகனத்தின் பதிவு எண் அடிப்படையிலான தொழில்நுட்பம்.
- இந்த பசுமை விரைவுச் சாலைகள் அமைக்கப்பட்ட பிறகு, தில்லியிலிருந்து டேராடூனுக்கும், ஹரித்துவாரிலிருந்து ஜெய்ப்பூருக்கும் 2 மணி நேரத்தில் பயணித்து விட முடியும்.
- தில்லியிலிருந்து சண்டீகருக்கு இரண்டரை மணி நேரத்திலும், தில்லியிலிருந்து அமிருதசரஸுக்கு 4 மணி நேரத்திலும், தில்லியிலிருந்து கட்ராவுக்கு 6 மணி நேரத்திலும், தில்லியிலிருந்து ஸ்ரீநகருக்கு 8 மணி நேரத்திலும், தில்லியிலிருந்து மும்பைக்கு 12 மணி நேரத்திலும், சென்னையிலிருந்து பெங்களூருக்கு 2 மணி நேரத்திலும் பயணித்துவிட முடியும் என்றார்.

## சுற்றுச்சூழல் கொள்கை

- 2030-ம் ஆண்டுக்குள் தட்பவெப்பநிலையை, 1.5 டிகிரி செல்சியஸ் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, அதிகளவில் கரியமில வாயு வெளியேறுவதை தடுப்பது, மாசு ஏற்படுத்தாத மின்சக்திக்கு மாறுவது போன்ற நடவடிக்கைகளை உலக நாடுகள் எடுக்க வேண்டும்.
- ஐரோப்பிய நாடான ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் கடந்தாண்டு இறுதியில் நடந்த சர்வதேச மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அப்போது, 'பஞ்சமிர்தம்' எனப்படும் 5 முக்கிய திட்டங்களை அவர் அறிவித்தார்.
- அதன்படி, 2030ம் ஆண்டுக்குள், நாட்டின் மொத்த மின்தேவையில், 50 சதவீதம் மாசு ஏற்படுத்தாத முறையில் தயாரிப்பது போன்ற திட்டங்களை அவர் முன்வைத்தார்.

## ஊழல் கண்காணிப்பு ஆணையர்

- சிவிசி.யாக சுரேஷ் என்.படேல் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்துக்கு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் (சிவிசி) தலைமை வகிக்கிறார்.
- இவர் தவிர மேலும் இருவர் ஊழல் கண்காணிப்பு ஆணையர்களாக பதவி வகிக்க முடியும்.

## இலவச வாக்குறுதி கட்டுப்பாடு

- தேர்தல் நேரத்தில் வாக்காளர்களை கவர, அரசியல் கட்சிகள் அறிவிக்கும் இலவச பொருட்கள், வாக்குறுதிகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.
- தேர்தல் பிரச்சாரத்தில், அரசு நிதியில் இருந்து இலவச திட்டங்களை வழங்குவோம் என வாக்குறுதி அளிப்பது லஞ்சம் கொடுப்பதற்கு இணையானது. இதை தடுக்க வேண்டும் என கூறப்பட்டது.
- தேர்தல் பிரச்சாரத்தில் அரசியல் கட்சிகள் இஷ்டத்துக்கு இலவச அறிவிப்புகளை வெளியிடுவது பொருளாதார சீரழிவுக்கு வழிவகுக்கும்.
- நீதிபதிகள் கூறியதாவது : தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் அறிவிக்கும் இலவச திட்டங்களை கண்காணிக்க நிபுணர் குழு தேவை.
- இந்த குழுவில் நிதி ஆயோக், நிதி ஆணையம், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ரிசர்வ் வங்கி மற்றும் இதர தரப்பினர் இடம்பெற வேண்டும்.
- ஆலோசனைகளை மத்திய அரசு, தேர்தல் ஆணையம் மற்றும் உச்சநீதிமன்றத்துக்கு வழங்க வேண்டும்.
- இலவசங்கள் மீதான நீதிமன்றத்தின் தீர்ப்பு காரணமாகத்தான் தேர்தல் ஆணையத்தின் கைகள் கட்டப்பட்டன.
- இலவச அறிவிப்புகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தி சட்டம் நிறைவேற்றலாம்.
- இலவச அறிவிப்புகள் வெளியிடுவதை எந்த அரசியல் கட்சியும் எதிர்க்காது. வரி செலுத்துவோர் மற்றும் நாட்டின் பொருளாதாரம் பற்றி நாம்தான் சிந்திக்க வேண்டும்.

## கார்பன் இல்லா உலகம்

- உலக மக்கள் தொகையில் 81 கோடிபேர் தேவையான உணவின்றி சிரமப்படுகின்றனர் என்று உலக உணவுத்திட்ட (FAO) விவரங்கள் தெரிவிக்கின்றன.
- புவி வெப்பமடைவதால் வழக்கத்தைவிட 2 டிகிரி செல்சியஸ் கூடுதலாக சராசரி வெப்பநிலை உயரலாம் எனக் கணிக்கப்பட்டுள்து.
- பசுங்குடில் வாயுக்களை மிகக் குறைந்த அளவே வெளியேற்றும் மக்களே, புவி வெப்பமடைவதால் அதிகம் பாதிக்கப்படப் போகின்றனர்.
- உலகில் உணவுப் பாதுகாப்பின்றி வாழும் முதல் 10 நாடுகள் வெளியிடும் கார்பன் அளவு வெறும் 0.08 சதவீதம் தான்.

**கார்பனைக் குறைப்பதும் உணவு வழங்குவதும்**

- ‘2030இல் கார்பன் குறைப்பு – அனைவருக்கும் ஆரோக்கியமான உணவு’ என்ற கொள்கையை இந்திய அரசு இந்தப் பின்னணியில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- வைட்டமின் பி-12, போலிக் அமிலம், இரும்புச்சத்து போன்றவை இந்தியக் குழந்தைகளிடமும் பெண்களிடமும் மிகவும் குறைவாக இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

**கார்பன் சமநிலை**

- பூமியிலிருந்து வெளியேற்றப்படும் கார்பனின் அளவும், உறிஞ்சப்படும் கார்பனின் அளவும் சமநிலையில் இருப்பதே கார்பன் சமநிலை (கார்பன் நியூட்ரல்) எனப்படுகிறது.
- கேரளத்தின் வியநாடு மாவட்டத்தில் மீனங்காடி பஞ்சாயத்து கார்பன் சமநிலை அடைந்து வெற்றி பெற்றிருப்பது முக்கியமானது.
- மீனங்காடி பஞ்சாயத்தில் Tree Banking திட்டத்தின்படி பெருமளவில் மரங்கள் நடப்படும். ஒவ்வொரு மரத்தின் மீதும் கிராமப் பஞ்சாயத்துக்கு உரிமை உண்டு.
- தனி மனிதர்களுக்குச் சொந்தமான நிலத்திலும் மரங்கள் வளர்க்கப் பஞ்சாயத்து உதவும். அத்துடன் இயற்கை வேளாண்மை, பிளாஸ்டிக் இல்லாமல் வாழ விழிப்புணர்வு, அறிவியல் ரீதியாகக் கழிவு மேலாண்மை, புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் உற்பத்தி, நீர்நிலைப் பாதுகாப்பு, உயிரினப் பன்மைப் பதிவேட்டைப் புதுப்பித்தல், வாயுவினால் எரியூட்டும் மயானம் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- கேரள அரசு கார்பன் சமநிலைத் திட்டத்துக்காக 2016இல் ரூ.10 கோடி நிதி ஒதுக்கியது.
- கார்பன் இல்லா மீனங்காடி பஞ்சாயத்தின் செயல்பாடுகளை இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்த ஆலோசித்து வருகிறது.
- வறுமைக்கோட்டுக்கு கீழே வாழும் மக்கள் கேரளத்தில் ஒரு சதவீதத்துக்கும் கீழேதான் உணவுப் பாதுகாப்பிலும் கேரள அரசே வழிகாட்டுகிறது.

## தனியார்மயமாக்கப்படும் வங்கிகள்

- அனைத்து பொதுத்துறை வங்கிகளையும் தனியார் மயமாக்கப் பரிந்துரை செய்து கொள்கை அறிக்கை ஒன்றை பனகாரியாவும் வெளியிட்டுள்ளனர்.
- பாரத ஸ்டேட் வங்கி தவிர, மற்ற அனைத்து பொதுத்துறை வங்கிகளையும், தனியார்மயமாக்க வேண்டும் என்றும், பாரத ஸ்டேட் வங்கி மட்டுமே அதன் சிறந்த செயல்பாட்டின் காரணமாக, அரசு உரிமையின் கீழ் இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளனர்.

**வரலாறு என்ன சொல்கிறது?**

- 1969-ல் பதினான்கு வங்கிகளை அரசு கையகப்படுத்திய பிறகு, வங்கிகளின் சேவை பட்டிதொட்டிகளுக்கெல்லாம் விரிந்தது. சாதாரண மக்களை உள்ளடக்கிய வங்கி சேவை, அரசாங்க வங்கிகள் மூலம் மட்டுமே சாத்தியமாகியுள்ளது.
- விவசாயம், சிறு தொழில்களுக்கு உதவும் வகையில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் அரசு வங்கிகள் மட்டுமே முன்னணியில் இருந்தன.
- சமீபத்திய அரசின் முயற்சியான பிரதம மந்திரி ஜன்தன யோஜனா கணக்கைத் திறப்பதில் அரசுடைமை வங்கிகளின் மகத்தான பங்களிப்பின் விளைவாக 42 கோடி சாதாரண மக்கள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கியுள்ளனர்.
- குறிப்பிட்ட வசதியுள்ள மக்களுக்கு மட்டுமே சேவை செய்து வந்த வங்கிகளை, எல்லா சாமானிய மக்களும் பயன்பெறும் வகையில் மாற்றியது. வங்கிகள் அரசுடமை ஆக்கப்பட்ட பிறகே நடந்தது.

- மீண்டும் வங்கிகளை தனியார்மயமாக்கினால் சாமானிய மக்களுக்கு வங்கி சேவையைப் பயன்படுத்த முடியாமல் போகும்.

**நஷ்டமடைந்த வங்கிகள்**

- 1935இல் இந்திய ரிசர்வ் வங்கி உருவான பிறகு, நாடு சுதந்திரம் பெறும் காலம் வரை (1947) நம் நாட்டில் 900 வங்கிகள் திவாலாகியுள்ளன.
- 1947 முதல் 1969 வரை 665 வங்கிகள் தோல்வியடைந்தன. இந்த அனைத்து வங்கிகளிலும் டெபாசிட் செய்தவர்கள், டெபாசிட் செய்த பணத்தை இழந்துள்ளனர்.
- 1969இல் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு, 36 வங்கிகள் தோல்வியடைந்தன. ஆனால், இவை மற்ற அரசு வங்கிகளுடன் இணைப்பதன் மூலம் மீட்கப்பட்டன.
- அரசுடைமை என்பது வங்கி டெபாசிட்டர்களுக்கு அளப்பரிய நம்பிக்கையை அளிக்கிறது. அத்துடன் அரசுடைமையின் காரணமாக அவர்கள் வங்கி வைப்புத்தொகையை மிகவும் குறைந்த வட்டி விகிதத்தில் இருந்தாலும் தேர்வு செய்கின்றனர்.
- பெரும்பாலும் அவர்களின் வட்டி பணவீக்க விகிதத்தைவிடக் குறைவு. இந்தக் கட்டமைப்பைச் சீர்குலைப்பது வங்கிக் கட்டமைப்பைச் சிதைக்கும்.

## சீன ஆய்வு கப்பல் யுவான் வாங்

- சீனாவின் ஆய்வு கப்பல் யுவான் வாங் 5-ல் பல நவீன ரேடார்கள், ஆய்வுக் கருவிகள் உள்ளன. இது ராணுவத் தளங்கள், அணு மின்சக்தி நிலையங்கள் போன்றவற்றை கண்காணிக்கும் திறன் படைத்தது. இந்த கப்பல் இலங்கையில் சீனாவால் இயக்கப்படும் அம்பன்தோட்டா துறைமுகத்துக்கு வந்து கொண்டிருக்கிறது.
- அணுசக்தி போர்க் கப்பலுக்குத் தான் நாங்கள் அனுமதி மறுக்க முடியும். இது அணு சக்தி கப்பல் அல்ல. இந்தியப் பெருங்கடலில் கண்காணிப்பு மற்றும் நேவிகேஷன் பணிக்காக இந்த கப்பலை அனுப்புவதாக இலங்கையிடம் சீனா தெரிவித்துள்ளது.

## குற்றவியல் நடைமுறைச் சட்டம்

- கைது செய்யப்படுவோர் மற்றும் தடுப்புக் காவலில் வைக்கப்படுவோர் தங்களின் விரல் ரேகை, விழித்திரை மறறும் கருவிழி ஸ்கேன், கையெழுத்து, உயிரியல் மாதிரிகள் மற்றும் அவற்றின் பகுப்பாயவு போன்ற தரவுகளை பகிர்ந்து கொள்வது கட்டாயம் ஆகிறது.
- சேகரிக்கப்பட்ட தரவுகள் தேசி குற்ற ஆவண காப்பகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, 75 ஆண்டுகள் மின்னணு வடிவில் பாதுகாக்க இந்த சட்டம் வகை செய்கிறது.
- அளவீடுகளை எதிர்க்கும் அல்லது கொடுக்க மறுக்கும் எந்தவொரு நபரின் அளவீடுகளையும் எடுக்க காவல்துறை மற்றும் சிறை அதிகாரிகளுக்கு இந்த சட்டம் அதிகாரம் வழங்குகிறது.

**மிக்-21க்கு விடை கொடுப்போம்**

- பிரான்ஸ் நாட்டுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட 36 ரஃபேல் போர் விமானங்களும் இந்திய விமானப் படையில் இணைந்தால், உலகின் அதிநவீன தாக்குதல் போர் விமானங்கள் கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா மாறக்கூடும்.
- அமெரிக்காவின் எஃப் 16 போர் விமானங்களும் சீனாவின் செங்டு ஜெஎஃப் 17 போர் விமானங்களும் பாகிஸ்தானிடம் இருக்கின்றன.
- இந்திய விமானப் படையின் அங்கீகரிக்கப்பட்ட பலம் 42 ஸ்குவாட்ரன்கள், ஸ்குவாட்ரன் என்பது விமானப் படையின் அடிப்படைத் தாக்குதல் விமானப்பிரிவு.
- 18 போர் விமானங்களும், இரண்டு பயிற்சி விமானங்களும் தயார் நிலையில் இருக்கின்றன.
- மிக் பயிற்சி விமான விபத்துகளில் திறமைசாலியான பல இளம் அதிகாரிகளை நாம் இழந்திருக்கிறோம்.
- 'பறக்கும் சவப்பெட்டிகள்' என்று இந்திய விமானப்படை பயிற்சி விமான ஓட்டிகள், பலரால் மிக் விமானங்கள் ஏளனம் செய்யப்படுகின்றன.
- கடந்த 20 ஆண்டுகளாக ஜாகர்ஸ், மிரேஜ் 2000, மிக் 21 பைசன், தேஜஸ் உள்ளிட்ட போர் விமானங்கள் மூலம் இந்திய விமானப் படையில் நவீனமயமாக்கல் நடைபெறாமல் இல்லை.
- ஒரு காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படும் விமானம் என்று நாம் மிக் போர் விமானங்கள் குறித்து பெருமைப்பட்டது உண்மை.
- நடப்பு நிதியாண்டில், இந்தியாவின் ஜிடிபியில் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீடு 2.7% ஆகும்.
- இரண்டு புறமும் எல்லையில் பதற்றம் நிலவும் சூழலில், தேசத்தின் பாதுகாப்புக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வதில் தவறொன்றும் இல்லை.

## வடக்கின் ஒளிவெள்ளம்

- பூமியின் வடதுருவத்தில், விண்ணில் பல வண்ணங்களில் ஒளிவெள்ளம் தோன்றி நாட்டியமாடுகின்றது. இது ஓர் இயற்கை நிகழ்வு.
- வடதுருவத்தில் ஏற்படுவதால், வடக்கின் ஒளிவெள்ளம் (Aurora Borealis) என்று அழைக்கப்படுகிறது.
- சிவப்பு, நீலம், ஊதா, இளஞ்சிவப்பு ஆகிய வண்ணங்களும் தோன்றுவது உண்டு.
- 1621-இல் பியரி காசண்டி என்னும் இத்தாலிய அறிவியலாளர் விடியலுக்கான ரோமப் பெண் தெய்வத்தின் பெயரான 'அரோரா' என்பதை வடக்கின் ஒளிவெள்ளத்திற்குச் சூட்டினார்.
- வடதுருவ ஒளிவெள்ளம் ஆண்டு முழுவதும், நாள் முழுவதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அனைத்து நாட்களிலும், எல்லா நேரத்திலும் அவை நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை.
- செப்டம்பர் முதல் ஏப்ரல் வரையிலும் கும்மிருட்டான இரவு நேரத்தில் வடக்கின் ஒளியைத் தெளிவாகக் காணலாம்.

**ஒளிவெள்ளமும் நிறங்களும்**

- சூரியனிலிருந்து வெளிப்பட்டு சூரியப் புயலாக (Solar wind) பூமியை நோக்கி வரும் மின்சுமை கொண்ட புரோட்டான்களும், எலெக்ட்ரான்களும் புவிக் காந்தப் புலத்துக்குள் மிகுந்த வேகத்துடன் நுழைகின்றன.
- துகள்களின் மின்சுமை காரணமாக, புவிக் காந்தப்புலத்தின் விசைக்கோடுகளுக்கு இணையாக சுருள்வில் பாதையில் அவை நகர்கின்றன.
- புரோட்டான்கள் நேர்மின்சுமையும், எலக்ட்ரான்கள் எதிர்மின்சுமையும் கொண்டிருப்பதால், அவை நேர்-எதிர் திசைகளில் நகர்கின்றன.
- புரோட்டான்களும் எலெக்ட்ரான்களும் பூமியில் காந்தவிசைக் கோடுகளுக்கு இணையாகப் பயணித்து, பூமியின் வளிமண்டலத்துக்குள் காந்தத் துருவங்களில் வளையமாக நுழைகின்றன. இதற்குக் காரணம், பூமியின் துருவங்களில் புவிகாந்த விசைக்கோடுகள் ஒருங்கிணைவதுதான்.
- வளிமண்டலத்தில் உள்ள காற்றில், 120 கி.மீ உயரத்திலிருந்து 1,200 கி.மீ உயரம் வரையிலும் நைட்ரஜன், ஆக்சிஜன் அணுக்கள் அதிக அளவில் உள்ளன.
- சூரியனிலிருந்து அதிக வேகத்துடன் வரும் துகள்கள் நைட்ரஜன், ஆக்சிஜன் அணுக்களுடன் மோதும்போது, துகள்களின் ஆற்றல் நைட்ரஜன், ஆக்சிஜன் அணுக்களுக்குக் கடத்தப்படுகிறது.
- இப்படிப் பெறப்படும் ஆற்றல் காரணமாக நைட்ரஜன், ஆக்சிஜன் அணுக்கள் கிளர்ச்சி நிலையை அடைகின்றன.
- இது தற்காலிகமானதே. அவை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும்போது, அவை பெற்ற ஆற்றல், ஒளி ஃபோட்டான்களாக (Light Photons) வெளிப்படுகின்றன.
- ஆக்சிஜன் அணுக்கள் வழக்கமாகப் பச்சை ஒளியையும், மிகவும் அரிதாக சிவப்பு ஒளியையும் வெளியிடுகின்றன.
- நைட்ரஜன் அணுக்கள் ஆரஞ்சு, சிவப்பு ஒளியை வெளிப்படுத்துகின்றன.

**பார்க்கக்கூடிய இடங்கள்**

- பொதுவாக, நார்வே, கிரீன்லாந்து, ஐஸ்லாந்து, ஸ்வீடன், ஃபின்லாந்து, ஸ்காட்லாந்து, சைபீரியா, கனடா, அலாஸ்கா ஆகியவை வடக்கின் ஒளியைக் காணும் வாய்ப்புள்ளவை.

**காக்கும் காந்தமண்டலம்**

- காந்தவிசைக் கோடுகள் தென்துருவத்திலிருந்து வடதுருவத்தை நோக்கிப் பூமியின் மையப்பகுதி வழியாகப் பாய்கின்றன.
- இவ்விசைக் கோடுகள், பூமியின் இரு துருவங்களிலும் வளிமண்டலத்திற்கு வெளியே மிக நீண்ட தொலைவு விலகிச்சென்று, பூமியைச் சுற்றி ஒரு காந்தக் குமிழ் தோன்றக் காரணமாகின்றன.
- பூமியின் இந்தக் காந்தமண்டலம்தான் (Magnetosphere) விண்ணிலிருந்து பூமியை நோக்கி வரும் ஆபத்து விளைவிக்கும் மின்துகள்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறது.
- என்றாலும், சூரியனிலிருந்து வரும் துகள்கள் காந்தமண்டலத்தை ஊடுருவி, புவிக் காந்தப்புலத்தால் முடுக்கம் பெற்று. வளிமண்டலத்திலுள்ள நைட்ரஜன், ஆக்சிஜன் அணுக்களைத் தாக்கிக் கிளர்ச்சியுறச் செய்வதாலேயே துருவ ஒளி தோன்றுகிறது.

## ராம்சர் அங்கீகாரம்

- 1971-ல் ஈரானின் ராம்சர் நகரில், ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை கையெழுத்தானது.
- இந்த உடன்படிக்கையின்படி, உலகெங்கும் உள்ள ஈரநிலங்களில் ஒரு சிலவற்றைத் தேர்ந்தெடுத்து ராம்சர் பகுதிகள் என அடையாளப்படுத்தி, சர்வதேச முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.
- இந்தியாவில், இதற்கு முன்பு ராம்சர் பகுதிகள் என 49 பகுதிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அவற்றின் எண்க்கை 64 ஆக அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டின் கரிக்கிலி பறவைகள் சரணாலயம், பள்ளிக்கரணை, பிச்சாவரம், கூந்தன்குளம், வேடந்தாங்கல், உதயமார்த்தாண்டபுரம், வெள்ளோடு, மன்னார் வளைகுடா, வேம்பனூர் ஆகியவை ராம்சர் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.
- இந்தியாவில் மேலும் 15 சதுப்புநிலப் பகுதிகள், சர்வதேச ராம்சர் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பதும் அவற்றில், 9 தமிழ்நாட்டைச் சேர்ந்தவை என்பதும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சூழலியல் ஆர்வலர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.
- இந்திய முழுவதும் பல்வேறு வகைப்பட்ட ஈரநிலப் பகுதிகள் மொத்தம் 7,57,040 உள்ளன. நாட்டின் மொத்தப் பரப்பளவில் ஏறக்குறைய 4% ஈரநிலப் பகுதிகளாகும்.
- சர்வதேச உடன்படிக்கையின் வரையறைகளின்படி, ஈரநிலங்கள் என்ற வகைப்பாடானது ஆறுகள், குளங்கள், இயற்கையாகவோ செயற்கையாகவோ உருவாக்கப்பட்ட நீர்நிலைகள் என அனைத்தின் கரையோரப் பகுதிகளையும் உள்ளடக்கியது.
- ஆனால், இந்தியாவில் ஓடும் ஆறுகளையொட்டிய நிலப்பகுதிகளைத் தவிர்த்துவிட்டு, மற்ற நீர்நிலைகளின் கரையோரப் பகுதிகள் மட்டுமே ஈரநிலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் சதுப்புநிலப் பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவரும் கோரிக்கைகளுக்கு இனிமேலாவது உரிய கவனம் கிடைக்கும்.
- சதுப்புநிலப் பகுதிகள், நீரில் கலந்துள்ள திடக்கூறுகளைப் படியவைத்தும் தாவரங்களிலுள்ள ஆக்ஸிஜனை நீருக்கு வழங்கியும் சூழலை மேம்படுத்தும் இயற்கை அமைப்புகளாகும்.
- வெள்ளங்களின்போது, நீரை உள்வாங்கி அவற்றின் வேகத்தைக் குறைப்பதோடு புயற்காற்றுகளின்போது, நீரை உள்வாங்கி அவற்றின் வேகத்தைக் குறைப்பதோடு புயற்காற்றுகளின்போது கரையோரப் பகுதிகளைப் பாதுகாக்கவும் செய்யும் இயற்கை அரண்கள்.
- அதிவேக நகர்மயமாதலாலும், சுற்றுச்சூழல் மாசுபாடுகளாலும் இவை கடுமையான பாதிப்புகளைச் சந்தித்துவருகின்றன.

## சீனா போர்

- சீனாவில் கடந்த 1911-ம் ஆண்டில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, சீன தேசியக் கட்சி ஆட்சியை கைப்பற்றியது.
- 1949-ம் ஆண்டு வரை சீனாவில் உள்நாட்டுப் போர் நீடித்தது. இந்தப் போரில் தோல்வியை தழுவிய சீன தேசியக் கட்சியினர், தென்சீன கடலில் 168 தீவுகள் அடங்கிய தைவானில் குடியேறினர். அந்தப் பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.
- தைவான் எல்லையல் இருந்து 16 கி.மீ தொலைவில் சீன ராணுவம் நேற்று பிரம்மாண்ட போர் ஒத்திகையை நடத்தியது.
- தைவானின் 6 எல்லைப் பகுதிகளையும் சீனாவின் முப்படைகளும் சுற்றி வளைத்துள்ளன. சீன போர்க் கப்பல்கள், போர் விமானங்கள் தயார் நிலையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.
- ஜி7 வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட கூட்டறிக்கையில், தைவான் வளைகுடா பகுதியில் அமைதியும் ஸ்திரத்தன்மையும் நீடிக்க வேண்டும்.
- சீனாவுக்கு ஆதரவாக ரஷ்யாவும், வடகொரியாவும் குரல் எழுப்பி வருகின்றன.
- தைவானில் 2.36 கோடி மக்கள் வசிக்கின்றனர். அந்த நாட்டு ராணுவத்தில் 25 லட்சம் பேர் உள்ளனர். பொதுமக்களில் 10 லட்சம் பேர் ராணுவ பயிற்சி பெற்று எப்போதும் போருக்கு தயார் நிலையில் உள்ளனர். இவர்கள் அனைவரும் கொரில்லா பயிற்சி பெற்ற வீரர்கள் ஆவர்.

## கைத்தறிக்கு கைகொடுப்போம்

- சுதேசி இயக்கத்தை நினைவு கூரும் வகையில், 2015-ஆம் ஆண்டு ஆகஸ்டு 7-ஆம் தேதி, பிரதமர் நரேந்திர மோடி, இந்திய கைத்தறி முத்திரையை அறிமுகம் செய்து வைத்தார்.
- கைத்தறி தொழிலின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஆண்டுதோறும் ஆகஸ்டு 7-ஆம் தேதி கைத்தறி தினமாகக் கொண்டாடப்படுகிறது.

- விவசாயத்திற்கு அடுத்து மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பினை வழங்கும் தொழிலில் கைத்தறித் தொழில் விளங்கி வருகிறது.
- இந்திய பாரம்பரியத்தின் அங்கமான கைத்தறித் துறையில், நாடு முழுவதும் சுமார் 43 லட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.
- ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழில் புரட்சி இந்தியாவின் கைத்தறித் தொழிலை தலைகீழாக புரட்டிப் போட்டுவிட்டது.
- நெசவு இயந்திரங்கள் நவீனமயமானதால், லட்சக்கணக்கான கைத்தறித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

**கைத்தறி – தமிழகம்**

- தமிழகத்தில் பல நூறு ஆண்டுகளாக காஞ்சிபுரம், திருபுவனம், ஆரணி சின்னாளப்பட்டி, மதுரை, சத்தியமங்கலம், பவானி, கோயம்புத்தூர், சென்னிமலை போன்ற பல பகுதிகளில் கைத்தறி நெசவு கொடிகட்டி பறந்து கொண்டிருந்தது.
- தமிழ்நாட்டில் தற்போது 1,137 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கீழ் சுமார் இரண்டரை லட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன.
- தமிழ்நாடு அரசு, கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் விலையில்லா வேட்டி-சேலை வழங்கும் திட்டம், அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுதோறும் விலையில்லா சீருடைகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி வருகிறது.
- தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வுதியத் திட்டம், குடும்ப ஓய்வுதிய திட்டம், நெசவாளர்களுக்கு சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் வழங்கும் திட்டம், கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம், நெசவாளர் நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம், கைத்தறி ஆதரவு திட்டம், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு - பாதுகாப்புத் திட்டம், கைத்தறி நெசவாளர்களுக்கான வட்டி மானியத் திட்டம், சிறந்த நெசவாளர் விருது வழங்கும் திட்டம், திறன்மிகு கைத்தறி நெசவாளர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது.
- கைத்தறி நெசவை லாபகரமான தொழிலாக்குதல், புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரித்தல், புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல், கைத்தறித் துணிகளை பரவலாக சந்தைப்படுத்துதல், கைத்தறி நெசவைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்க அரசு முன்வர வேண்டும்.

## குடியரசு துணைத்தலைவர் தேர்தல்

- குடியரசுத் தலைவர் தேர்தலைப் போல் அல்லாமல், இத்தேர்தலில் மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்கள் மட்டுமே வாக்களிப்பார்கள்.
- நியமன உறுப்பினர்களும் வாக்களிக்க தகுதிபெற்றவர்களாவர்.
- மொத்தம் 788 எம்.பி.க்களை உள்ளடக்கிய இத்தேர்தலில் ஒவ்வொரு எம்.பி.யின் வாக்குமதிப்பு ஒன்றுதான்.
- ரகசிய வாக்கெடுப்பு முறையில் தேர்தல் நடைபெறும். வாக்கை வெளியே காண்பிப்பது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.
- இத்தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென எம்.பி.க்களுக்கு கட்சிகள் கொறடா உத்தரவு பிறப்பிக்க முடியாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**ஆசிரியர் நியமன முறைகேடு – மேற்கு வங்கம்**

- மேற்கு வங்க ஆசிரியர் நியமன முறைகேடு 2017-18-இல் தொடங்கியது. 19,000 பள்ளி ஆசிரியர்கள், 5,000 பள்ளி ஊழியர்களுக்கான தேர்வு முடிவுகளை மேற்கு வங்க பள்ளிப் பணி வாரியம் வெளியிட்டது.
- தேர்வு எழுதியவர்களின் மதிப்பெண் பட்டியலை வெளியிடுவதற்கு பதிலாக, அவரவர் தங்கள் மதிப்பெண்களையும், தரவரிசைப் பட்டியல் இடத்தையும் இணையவழியில் பார்த்துக் கொள்ளலாம் என்று அறிவித்த போதே, அதற்குப் பின்னால் ஏதோ முறைகேடு இருக்கிறது என்கிற ஐயப்பாடு எழுந்தது.
- தேர்வானவர்களின் பட்டியலை வெளியிட வேண்டும் என்று கோரி கொல்கத்தா உயர்நீதிமன்றத்தை பலர் நாடினார்கள். 2021 செப்டம்பர் மாதம், மேம்படுத்தப்பட்ட பட்டியல் வெளியிடப்பட்ட போது, தங்களைவிடக் குறைந்த மதிப்பெண் பெற்றவர்களுக்குப் பணி வழங்கப்பட்டிருந்தது அவர்களுக்குத் தெரிந்தது.
- நீதிபதி ரஞ்சித் குமார் பாக் கமிட்டியின் விசாரணையில், ரூ.8 லட்சம் முதல் ரூ.18 லட்சம் வரை கையூட்டு கொடுத்து, வெற்று விடைத்தாள்களைக் கொடுத்த பலர் வேலை வாய்ப்பு பெற்றிருப்பது தெரியவந்தது.
- அமைச்சர் பார்த்தா சட்டர்ஜியின் காவலர் விஸ்வம்பர் மண்டல் என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் முறைகேடாக நியமனம் பெற்றிருப்பது வெளிப்பட்டது.

## மாற்று கருவறை தாய் மூலம் குழந்தை பெறும் அரசு பெண் பணியாளர்களுக்கு 270 நாட்கள் விடுமுறை

- மாற்று கருவறை தாய் மூலம் குழந்தை பெறும், அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு.
- குழந்தைகளை தத்தெடுப்பு செய்யும் அரசுப் பணியாளர்களுக்கு 270 நாட்கள் தத்தெடுப்பு விடுப்பு வழங்கப்படும்.
- மாற்று கருவறை தாய் மூலம் குழந்தைகளை பெறும் அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரிர்களுக்கு 270 நாட்கள் குழந்தை பராமரிப்பு விடுப்பு.
- அரசு பெண் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும், 12 மாத மகப்பேறு விடுப்பு நிகழ்வில் காணப்படும்.
- இந்த விடுப்பு இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

## ஜிபிஎஸ் மூலம் கட்டணம்

- தேசிய நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்களுக்கு கி.மீ கணக்கில் நாடு முழுவதும் சுங்கக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.
- சுங்கச் சாவடிகளில் தொடக்கத்தில் ரொக்கமாக கட்டணம் வசூலிக்கப்பட்டது. இதனால் வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.
- இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ‘பாஸ்டேக்’ முறையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. அதன்பின், சுங்கச் சாவடிகளில் வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை குறைந்தது.
- செயற்கைக்கோள் மூலம் வாகனங்களுக்கான சுங்க கட்டணம் வசூல் செய்ய தற்போது திட்டமிட்டுள்ளது. இந்த முறையால், பாஸ்டேக் மற்றும் சுங்கச் சாவடிகளுக்கான தேவையும் இல்லாமல் போகும்.
- நாடு முழுவதிலும் உள்ள சுங்கச் சாவடிகளை அகற்றிவிட்டு ஜிபிஎஸ் திட்டத்தை அமல்படுத்த மத்திய தரைவழிப் போக்குவரத்து துறை முடிவு செய்துள்ளது.
- சுங்க கட்டண வசூலை எவரும் திருட முடியாது. அதே நேரத்தில் கட்டண விதிப்பில் இருந்து தப்பவும் முடியாது.
- தற்போது, தேசிய நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்கள், அரசியல் கட்சியினர், அதிகாரிகள் சிலர் சுங்கச் சாவடிகளில் கட்டணம் செலுத்த மறுத்து பிரச்சினையிலும் ஈடுபடுகின்றனர்.
- முக்கியமாக வாகனங்கள் செல்லும் சாலைகளின் தூரத்தை பொறுத்து சுங்கக் கட்டணம் வசூல் செய்யப்பட உள்து.
- வாகன உரிமையாளர்கள் ஒரு சுங்கச் சாவடியில் இருந்து அடுத்த சுங்கச் சாவடி வரை செல்லாமல் நடுவழியிலேயே இலக்கை அடைந்தால், அவர்கள் சென்ற தூரத்துக்கு ஏற்ப கட்டணம் வசூல் செய்யப்பட உள்து.
- இந்த ஜிபிஎஸ் முறைக்கு ஏற்றபடியே தற்போது நாட்டின் அனைத்து வாகனங்களுக்கும் அதன் ‘நம்பர் பிளேட்’ மின்னணு தொழில்நுட்பத்துடன் மாற்றப்பட உள்ளது.
- நாடு முழுவதும் சராசரியாக 67 சதவிகிதம் பேர் மட்டும் பாஸ்டேக்கில் கட்டணம் செலுத்துகின்றனர். இதில், அன்றாடம் சுமார் ரூ.120 கோடி வசூல் செய்யப்படுகிறது.

## கால்நடைகள் உயிரிழப்பு

- 1929-ம் ஆண்டில் ஆப்பிரிக்க கண்டத்தில் கால்நடைகளுக்கு ‘லம்பி ஸ்கின்’ நோய் பரவுவது கண்டறியப்பட்டது.
- 2019-ம் ஆண்டில் வங்கதேசத்தில் இந்த நோய் கால் பதித்தது. தற்போது இந்தியா உட்பட ஆசியாவின் 23 நாடுகளில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

**இந்தியாவில் முதல் பரவல்**

- 2019-ம் ஆண்டு ஆகஸ்டில் இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில், 5 மாவட்டங்களில் கால்நடைகளுக்கு இந்நோய் பரவுவது முதல் முறையாகக் கண்டறியப்பட்டது.

## சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை பருவநிலை மாநாட்டில் இந்தியாவின் கருப்பொருள்

- ஐ.நா. பருவநிலை மாநாட்டு ஒப்பந்தத்தில் இணைந்துள்ள நாடுகள் ஆண்டுதோறும் கூடி பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசித்து வருகின்றன.
- கடந்த ஆண்டுக்கான கூட்டம் கிளாஸ்கோவில் நடைபெற்றது.

- அக்கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி 'சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை' என்ற சர்வதேச திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- இந்தியாவில் அத்திட்டமானது சர்வதேச சுற்றுச்சூழல் தினமான கடந்த ஜூன் 5-ஆம் தேதி தொடங்கப்பட்டது.
- பூமிக்கு சாதகமான வகையிலும் அதை பாதிக்காத வகையிலும் வாழ்க்கை முறையை முன்னெடுக்க வேண்டும் என்பதே அத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.
- அவ்வாறான வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பவர்கள் 'பூமிக்கு ஆதரவானவர்கள்' என அழைக்கப்படுவர் என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்திருந்தது.
- 27-ஆவது பருவநிலை மாநாடு எகிப்தின் ஷரம்-எல்-ஷேக் நகரில் நவம்பர் 6 முதல் 18-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.
- மாநாட்டில் 'சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை' என் கருப்பொருளின் அடிப்படையிலான காட்சியரங்கை இந்தியா அமைக்கவுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்தியா படைத்துள்ள சாதனைகள் குறித்து அந்தக் காட்சியரங்கில் எடுத்துரைக்கப்படவுள்ளது.

## தலாய் லாமாவுக்கு லடாக்கின் உயரிய விருது

- திபெத்திய பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு (87) லடாக்கின் உயரிய விருதான 'திபல் ரன்கம் டஸ்டன்' விருது.
- யூனியன் பிரதேசத்தில் மனிதநேயத்துக்கு அவர் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்பை பாராட்டும் வகையில் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- லடாக்கும் திபெத்தும் சிந்து நதியால் இணைக்கப்பட்டிருப்பதோடு மட்டுமின்றி, மதம் மற்றும் கலாச்சார ரீதியிலும் ஒன்றுபட்டிருக்கின்றன.
- பருவநிலை மாற்றம் மிகப்பெரிய கவலைக்குரிய விஷயமாக உருவெடுத்து வருகிறது. எனவே, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ஒவ்வொருவரும் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும் என்று கூறினார்.

## ஜெகதீப் தன்கர்

- பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில், மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் ஜெகதீப் தன்கரும், எதிர்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளராக முன்னாள் மத்திய அமைச்சர் மார்கரெட் ஆல்வாவும் போட்டியிட்டனர்.
- இந்த தேர்தலில் மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்கள் 780 பேர் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள்.
- இந்த தேர்தலில் மொத்தமுள்ள 780 எம்.பி.க்களில் 725 பேர் வாக்களித்தனர். 55 எம்.பி.க்கள் வாக்களிக்கவில்லை. வாக்குப்பதிவு சுமார் 93 சதவீதம்.
- பதிவான 725 வாக்குகளில் செல்லுபடியான வாக்குகள் 710. செல்லாத வாக்குகள் 15.
- ஜெகதீப் தன்கர் 528 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவர் 74.36 சதவீத வாக்குகளைப் பெற்றார்.
- எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிட்ட மார்கரெட் ஆல்வா 182 வாக்குகள் பெற்றார். 346 வாக்குகள் வித்தியாசத்தில் ஜெகதீப் தன்கர் அபார வெற்றி பெற்றுள்ளார்.

**உச்சநீதிமன்ற வழக்கறிஞர்**

- ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஜெகதீப் தன்கர் (71), சைனிக் பள்ளியில் பயின்றவர். ராஜஸ்தான் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி. மற்றும் எல்எல்பி பட்டத்தை முடித்தார்.
- 1979-ல் ராஜஸ்தானில் வழக்கறிஞராகப் பணியாற்றிய இவர், 1990-ல் ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராகப் பணியாற்றினார்.
- ராஜஸ்தான் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கத் தலைவராக இருந்த ஜெகதீப் தன்கர், பின்னர் உச்சநீதிமன்ற வழக்கறிஞராகப் பணியாற்றினார்.
- ஜனதா தளம் கட்சியில் உறுப்பினராக இருந்த ஜெகதீப் தன்கர், 1989 முதல் 1991-ம் ஆண்டு வரை ராஜஸ்தான் ஜுன்ஜுனு மக்களவைத் தொகுதி எம்.பி.யாக இருந்தார்.
- பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான அமைச்சரவையில், நாடாளுமன்ற விவகாரத் துறை இணை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.
- 1993 முதல் 1998 வரை ராஜஸ்தான் கிசான்கர் தொகுதி எம்எல்ஏ-வாகவும் இருந்தார்.
- 2008-ல் பாஜகவில் இணைந்தார். கடந்த 2019-ல் இவர் மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

## பெண்களுக்கான சட்டங்கள்

**இந்து திருமணச் சட்டம் 1955**

- திருமணம் என்பது சாத்திரப்படி உடைக்கக்கூடாத பந்தம் என்றிருந்த நிலையில் விருப்பமில்லாத திருமண வாழ்விலிருந்து பெண்கள் விவாகரத்து பெறவும், கணவனிடமிருந்து வாழ்க்கைக்கான பொருளுதவி பெறவும், குழந்தையைத் தத்தெடுக்கவும் உரிமை வழங்கும் சட்டம்.

**சிறப்புத் திருமணச் சட்டம் 1954**

- சாதி, மதம் கடந்த காதல் திருமணங்களையும் சாதி மறுப்புத் திருமணங்களையும் அங்கீகரிப்பதன் மூலம் பெண்களுக்கான திருமண உரிமையை உறுதி செய்யும் சட்டம்

**இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956**

- ஆண்களைப் போல் பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டு. 2005 இல் ஏற்படுத்தப்பட்ட சட்டத் திருத்தம் பூர்வீகச் சொத்தில் பெண்ணுக்கு இருக்கும் உரிமையைக் கால வரையறைக்குட்படுத்தியிருந்த நிலையில், 2020இல் பெண்களின் பூர்வீகச் சொத்துரிமை மீண்டும் உறுதி செய்யப்பட்டது.

**வரதட்சணை தடைச்சட்டம் 1961**

- வரதட்சணைக் கொடுமையால் ஆங்காங்கே பெண்கள் பலி கொடுக்கப்பட்டு வந்த சூழலில் ஆசுவாசமளிப்பதாக அமைந்த சட்டம் இது.
- பணமாகவும் பொருளாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் வாங்கப்படும் வரதட்சணையை இச்சட்டம் குற்றச் செயல் என்கிறது.

**பெண்களைத் தவறாகச் சித்தரிப்பதை தடை செய்யும் சட்டம் 1986**

- அனைத்து விதமான காட்சி ஊடகங்கள், பத்திரிக்கைகள், வார மாத இதழ்கள், விளம்பரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றில் பெண்களைத் தவறாகவும் கண்ணியக் குறைவாகவும் சித்தரிப்பதை இந்தச் சட்டம் தடை செய்கிறது. எழுத்து, பேச்சு, காட்சி, ஓவியம் என்று எந்த விதத்தில் பெண்கள் அவமதிக்கப்பட்டாலும் அது தண்டனைக்குரியது.

**குடும்ப வன்முறை தடைச்சட்டம் 2005**

- குடும்ப உறவில் மனைவி மீது கணவன் நிகழ்த்தும் வார்த்தை ரீதியான வன்முறை, உளவியல் ரீதியான வன்முறை தொடங்கி உடல் ரீதியான, பாலியல் ரீதியான வன்முறை வரை அனைத்து விதமான வன்முறைகளிலிருந்தும் பெண்களைக் காக்கிறது இந்தச் சட்டம்.

**பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை, குறைதீர்வு) சட்டம் 2013**

- பணியிடங்களில் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் துன்புறுத்தலிலிருந்து அவர்களைப் பாதுகாத்து, குற்றமிழைத்தவர்களைத் தண்டித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வழி செய்கிறது இந்தச் சட்டம்.
- பெண்கள் புகார் அளிக்க ஏதுவாகப் பெண்கள் பணியாற்றும் அனைத்து நிறுவனங்களிலும் 'உள்ளகப் புகார்க் குழு' அமைக்கவும் இந்தச் சட்டம் பரிந்துரைக்கிறது.

**தன் பாலின உறவு கிரிமினல் குற்றமல்ல 2018**

- தன் பாலின உறவை 'இயற்கைக்கு முரணான உறவு' என்று வகைப்படுத்தி அதைக் குற்றச் செயலாக அறிவிக்கும் சட்டப்பிரிவு 377 நீக்கப்பட்டது.
- இந்தியாவில் பால் புதுமையரின் 150 ஆண்டுகளுக்கும் மேலான போராட்டம் முடிவுக்கு வந்தது.

**முத்தலாக் ரத்து**

- இஸ்லாமியர்களில் மூன்று முறை 'தலாக்' என்று சொல்வதன் வாயிலாக மனைவியை விவாகரத்து செய்து வந்த வழக்கத்துக்கு முஸ்லிம் பெண்கள் திருமண பாதுகாப்புச் சட்டம் 2019 முற்றுப்புள்ளி வைத்தது.
- நேரிலோ, கடிதம் மூலமோ, வாட்ஸ் அப் உள்ளிட்ட செயலிகள் மூலமோ முத்தலாக் சொல்லி விவாகரத்து செய்வது தண்டனைக்குரியது.

**செயற்கைக் கருத்தரிப்பு ஒழுங்குமுறைச் சட்டம் 2021**

- செயற்கைக் கருத்தரிப்பு, சினை முட்டை தானம், வாடகைத் தாய் போன்றவை குறித்து எவ்விதமான முறையான நெறிமுறைகளும் இல்லாத நிலையில் பெண்ணுடல் சுரண்டப்பட்டு வந்தது. இந்தச் சட்டம் அதுபோன்ற கொடுமைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கிறது.

## சுதந்திர இந்தியாவில் பெண்கள்

**சபரிமலை நுழைவு போராட்டம்**

- மாதவிடாயைக் காரணம் காட்டி 10 முதல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் கேரளத்தில் உள்ள சபரிமலை கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை.
- கோயிலுக்குள் செல்ல இருபாலினத்தவருக்கும் உரிமை உண்டு என்கிற அடிப்படையில் சபரிமலை கோயிலுக்குள் செல்ல பெண்களையும் அனுமதிக்கும்படி பொதுநல வழக்குத் தொடரப்பட்டது.
- பல்வேறு தடைகளுக்குப் பிறகு அனைத்து வயதுப் பெண்களும் சபரிமலைக்குச் செல்லலாம் என 2018 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

**மீடு இயக்கம்**

- அமெரிக்கச் செயற்பாட்டாளர் தரனா புர்க் என்பவரால் 2006இல் தொடங்கப்பட்ட 'மீடு' இயக்கம், ஹாலிவுட் திரைப்பட இயக்குநர் ஹார்வி வெயின்ஸ்டீன் மீது பெண்கள் பலரும் பாலியல் குற்றச்சாட்டு வைத்ததைத் தொடர்ந்து 2017இல் உலகின் கவனத்துக்கு வந்தது.
- பாதிக்கப்பட்ட, குரலற்ற பெண்களுக்கான மாபெரும் இயக்கமாக வலுப்பெற்றது. திரைத்துறை மட்டுமல்லாமல் உயர் கல்வி நிறுவனங்கள், ஊடகம், சட்டத்துறை, அரசியல் என்று பல்வேறு தளங்களிலும் தங்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் சித்திரவதை குறித்து உலகம் முழுவதும் உள்ள பெண்கள் பொதுவெளியில் சொல்லத் தொடங்கினர்.

**அம்மாக்களின் போராட்டம்**

- அசாம் ஆயுதப் படை வீரர்களால் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு, மிக மோசமாகச் சிதைக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 32 வயது தங்ஜம் மனோரமா என்கிற பெண்ணுக்கு நீதி கேட்டு 12 தாய்மார்கள் 2004 இல் நடத்திய நிர்வாணப் போராட்டம் நாட்டையே உலுக்கியது.
- மணிப்பூரில் உள்ள இம்பால் பள்ளத்தாக்கின் காங்க்லா கோட்டை முன்பு இவர்களது போராட்டம் அரங்கேறியது. ஆடைகளோடு சேர்த்து அச்சத்தையும் களைந்திருந்தனர்.
- முதலில், இந்திய ராணுவமே எங்களையும் வல்லுறவுக்கு ஆளாக்கு, எங்களையும் கொன்று போடு என்று மெதுவாகத்தான் தொடங்கியது. அவர்களது கோஷம், பின்னர் உறுதியாகவும் திடமாகவும் ஒலித்தது அவர்களுடைய குரல்

## சதுப்பு நிலங்கள்

- இந்தியாவில் புதிதாக 15 சதுப்பு நிலங்களுக்கு உலக முக்கியத்துவம் வாய்ந்த ராம்சர் அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- இதன் மூலம், 64 ராம்சார் சதுப்பு நிலங்களைக் கொண்ட ஒரே தெற்காசிய நாடு என்ற பெருமையை இந்தியா பெறுகிறது.
- புதிதாக அறிவிக்கப்பட்ட 15 ராம்சர் சதுப்பு நிலங்களில் 9 தமிழ்நாட்டில் அமைந்துள்ளன என்பது சதுப்பு நிலங்களைக் காக்க தமிழக அரசு எடுத்துவரும் கொள்கை முடிவுகளுக்கும் முயற்சிகளுக்கும் ஒரு மகுடமாகும்.
- தற்போது அறிவிக்கப்பட்ட ஒன்பதுடன், கோடியக்கரை பறவைகள் சரணாலயத்தையும் சேர்த்து தமிழகத்தில் மொத்தம் பத்து சதுப்புநிலங்கள் பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.
- சதுப்புநிலங்களைப் பாதுகாக்க 1971-ல் ஈரானின் ராம்சர் நகரில் சர்வதேச ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அதன்படி, சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களுக்கு ராம்சர் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

**சுற்றுச்சூழல் பலன்கள்**

- சதுப்பு நிலங்கள் என்பது கடல் மட்டத்திலிருந்து ஆறு மீட்டர்களுக்கு குறைவான ஆழம் கொண்ட பல்வேறு வகைப்பட்ட சூழல் தன்மைகளைக் கொண்ட நீர் நிலைகளாகும்.
- இவை கடல் நீர் மற்றும் நன்னீர் சார்ந்த நிலங்களை உள்ளடக்கியவையாகும்.
- இந்தியாவில் சுமார் 1,52,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 19 வகையான சதுப்பு நிலங்கள் உள்ளன.
- நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 4.63 சதவீதம் சதுப்பு நிலங்கள் ஆகும்.
- தமிழ்நாட்டில் 9,025 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் சதுப்பு நிலங்கள் உள்ளன. இது தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 6.92 சதவீதம் ஆகும்.
- குறைந்த ஆழம் கொண்டவையே எனினும், இவை பல்லுயிர்ப் பெருக்கத்தின் ஆதாரமாக உள்ளன.
- இவற்றை நல்ல நிலையில் பேணிக்காக்கும் பட்சத்தில் சுற்றுச்சூழல் சார்ந்த இன்றியமையாத, மதிப்புமிக்க பலன்கள் மனிதகுலம் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் கிடைக்கும்.

- நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்க, நிலத்தடி நீரின் உப்புத்தன்மையை குறைக்க, வெள்ளத்தைக் கட்டுப்படுத்த, உயரும் கடல் நீரை உள்வாங்க, மாசு மற்றும் திடக் கழிவுகளைக் கட்டுப்படுத்த, கரியமில வாயு மற்றும் மீத்தேனை உறிஞ்ச, நீர் மகரந்தச் சேர்க்கை நடைபெற, மண் மற்றும் நீரில் உள்ள ஊட்டச்சத்துக்களை சமன்படுத்த, மண் அரிப்பைத் தடுக்க, மீன் இனப்பெருக்கத்தை அதிகரிக்க, அரிய பல்லுயிர்ப் பெருக்கத்தைத் திடப்படுத்தி வளப்படுத்த, புயலின் தாக்கத்தை மட்டுப்படுத்த, வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்க சதுப்பு நிலங்களின் இருப்பு மிக முக்கியமானது.

**அறியாமையின் விளைவு**

- பெருவாரியான சதுப்புநிலங்கள் அளவுக்கு அதிகமாகவும், அவற்றின் தன்மைக்கு மாறாகவும் பயன்படுத்தப்பட்டு, இன்று அவை பயனற்ற நிலங்களாக உருமாற்றப்பட்டுள்ளன.
- சில ஆக்கிரமிப்பு, திட்டமிடப்படாத நிலப் பயன்பாடு, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஏற்படும் விரும்பத்தகாத மாற்றங்கள், தொழிற்சாலை மற்றும் மருத்துவக் கழிவுகள், நகரத்தில் உருவாகும் தீங்கு விளைவிக்கும் திட மற்றும் திரவக் கழிவுகள், உரம் மற்றும் பூச்சி மருந்துக் கழிவுகள், வேலிக்கருவை, ஆகாயத்தாமரை போன்ற சூழ்நிலைக்கு ஒவ்வாத உயிரினங்களின் பெருக்கம் போன்ற பல்வேறு சிக்கலான காரணங்களால் சதுப்பு நிலங்கள் தங்கள் உன்னதத் தன்மையை இழந்து நிற்கின்றன.
- 1970 முதல் 2015 வரையில் உலக அளவில் சுமார் 35 சதவீத சதுப்பு நிலங்கள் அழிக்கப்பட்டிருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
- தமிழ்நாட்டில் பெருநகரத்தில் உள்ள ஒரே சதுப்புநிலம் என்ற பெருமையைக் கொண்ட சென்னையின் பள்ளிக்கரணை சதுப்பு நிலம், 1960-களில் சுமார் 6000 ஹெக்டர் பரப்பளவில் இருந்தது.
- தற்போது அது 700 ஹெக்டருக்கும் குறைவான நிலப்பரப்பையே கொண்டுள்ளது.

**ஈர நிலங்கள்**

- நலவாழ் சூழல் மண்டலத்துக்கும், நீர்வாழ் சூழல் மண்டலத்துக்கும் இடையே அமைந்துள்ள ஈரநிலங்கள் இயற்கை சுத்திகரிப்பு நிலையங்களாகத் திகழ்கின்றன.
- இவை உலகின் பல்லுயிர்த் தன்மையைப் பாதுகாப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- உலகின் மொத்தப் பரப்பளவில் 6 சதவீதமே ஈர நிலங்கள் உள்ளன. 40 சதவீத தாவர மற்றும் விலங்கின உயிரினங்களுக்கு இவை இருப்பிடமாக உள்ளன.
- காடுகள் பெருமளவில் கார்பன்-டை-ஆக்சைடு வாயுவை உள்ளிழுத்து ஆக்சிஜனை வெளியேற்றி புவியின் நுரையீரலாகச் செயல்படுகின்றன.
- நீரில் விரவியுள்ள வண்டல் படிவுகள், திண்மமாசுக்களை வடிகட்டி சுத்திகரிக்கும் ஈர நிலங்களைப் 'புவியின் சிறுநீரகங்கள்' (இயற்கை சுத்திகரிப்பு நிலையங்கள்) எனலாம்.
- வெள்ளப்பெருக்கின் போது நுரைப்பஞ்சு போன்று செயல்பட்டு அதிகப்படியான வெள்ளநீரை உறிஞ்சி பாதிப்பைக் குறைப்பதில் ஈர நிலங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- ஐ.நா. கருத்துப்படி, கடந்த 50 ஆண்டுகளில் 35 சதவீத ஈர நிலங்கள் அழிந்துள்ளன.
- ஈர நிலங்களைப் பாதுகாக்க கடந்த 1971-ஆம் ஆண்டு ஈரானின் ராம்சர் நகரில் ஒப்பந்தம் கையொப்பமானது.
- இதில் 172 நாடுகள் ராம்சர் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.
- இந்த ஒப்பந்தத்தில் கடந்த 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி இந்தியா கையொப்பமிட்டது.
- உலகில் இதுவரை 2,455 ஈர நிலங்கள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஈர நிலங்களின் பரவல் 4.6 சதவீதமாகும். மேற்கு வங்கத்தின் சுந்தரவனக் காடுகள் (பரப்பு 4,230 ச.கி.மீ) இந்தியாவின் மிகப்பெரிய ஈர நிலப்பகுதியாகும்.
- தமிழகத்திலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம், கரிக்கிலி பறவைகள் சரணாலயம், பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், மிஸோரத்தின் பாலா சதுப்பு நிலம்.
- மத்திய பிரதேசத்தின் சக்யாசாகர் ஏரி ஆகிய 6 ஈர நிலங்கள் ராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- கோவாவின் நந்தா ஏரி, கர்நாடகத்தின் ரங்கண்ணாதிட்டு பறவைகள் சரணாலயம், மத்திய பிரதேசத்தின் சிர்பூர் ஏரி, ஒடிஸா மகாநதியின் சட்கோசியா பள்ளத்தாக்கு மற்றும் தமிழகத்திலிருந்து 6 ஈர நிலங்களும் இப்பட்டியலில் இடம்பெற்றது.
- தெற்கு ஆசிய நாடுகளில் அதிக அளவிலான ராம்சர் ஈர நிலங்களை இந்தியா பெற்றுள்ளது.

**எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள்**

- கழிவுநீர் வெளியேற்றத்தால் ஏற்படும் மாசுபாடு
- அயல் இனத் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பரவல்
- ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்
- கட்டட இடிபாட்டு கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டப்படுதல்
- ஈரநிலங்களில் வாழும் உயிரினங்களை வேட்டையாடுதல்
- நீர்நிலையின் மேற்பரப்பில் பாசி படர்தல்
- அதிகளவிலான மீன்பிடிப்பு
- கடல் நீரின் வெப்பநிலை அதிகரிப்பால் பவளப் பாறைகள் சிதைவடைதல்

| தமிழக ஈர நிலங்கள் (ராம்சர் பட்டியலில்.....) | | | |
|---|---|---|---|
| 1. | கோடியக்கரை பறவைகள் சரணாலயம் | நாகப்பட்டினம் | 38,500 ஹெக்டேர் |
| 2. | பள்ளிக்கரணை சதுப்பு நிலம் | சென்னை | 1,248 ஹெக்டேர் |
| 3. | கரிக்கிலி பறவைகள் சரணாலயம் | செங்கல்பட்டு | 58 ஹெக்டேர் |
| 4. | பிச்சாவரம் அலையாத்திக் காடுகள் | கடலூர் | 1,479 ஹெக்டேர் |
| 5. | கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் | திருநெல்வேலி | 72 ஹெக்டேர் |
| 6. | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் | செங்கல்பட்டு | 40 ஹெக்டேர் |
| 7. | வேம்பனூர் ஈர நிலம் | கன்னியாகுமரி | 20 ஹெக்டேர் |
| 8. | வெள்ளோடு பறவைகள் சரணாலயம் | ஈரோடு | 77 ஹெக்டேர் |
| 9. | உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் | திருவாரூர் | 44 ஹெக்டேர் |
| 10. | மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் | ராமநாதபுரம் | 52,672 ஹெக்டேர் |

| மாநிலங்கள் | ஈர நிலங்களின் பரப்பு (ஹெக்டேர்) |
|---|---|
| குஜராத் | 34,74,950 |
| ஆந்திரம் | 14,47,133 |
| உத்தர பிரதேசம் | 12,42,530 |
| மேற்கு வங்கம் | 11,07,097 |
| மகாராஷ்டிரம் | 10,14,522 |
| தமிழ்நாடு | 9,02,534 |

**சிறப்பம்சங்கள்**

- வடிகட்டியாக செயல்பட்டு நீரை சுத்திகரித்தல்
- வறண்ட மற்றும் குறைவான மழைப்பொழிவு காலங்களில் நீர் பாதுகாப்பை உறுதி செய்தல்
- நீர்சுழற்சி, கார்பன் சுழற்சி மற்றும் நைட்ரஜன் சுழற்சியைத் தொடர்ந்து இயங்கச் செய்தல்
- பிற சூழல் மண்டலங்களைக் காட்டிலும் ஈர நில சூழல் மண்டலங்கள் கூடுதல் மதிப்புடையன.
- பல்லுயிர்த் தன்மையை பாதுகாத்தல்.
- உணவுச் சங்கிலித் தொடரை உறுதி செய்தல்
- காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தணித்தல்
- உள்ளூர் சமூகங்களுக்கு பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்பை வழங்குதல்.
- வலசை பறவைகளுக்கு தங்கும் விடுதிகளாகச் செயல்படுதல்
- மண் அரிப்பைத் தடுத்தல்
- புயல் மற்றும் சுனாமி போன்ற கடலோரப் பேரிடர் பாதிப்பை தணிப்பதில்அலையாத்தி காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## கூட்டாட்சி முறை

- கரோனா பெருந்தொற்றில் இருந்து இந்தியா மீள்வதற்கு கூட்டு முயற்சி, கூட்டாட்சி முறை உதவியது.
- திட்டக் கமிஷனுக்கு மாற்றாக கடந்த 2015-ம் ஆண்டில் நிதி ஆயோக் அமைப்பு உருவாக்கப்பட்டது.
- இதன் 7-வது நிர்வாகக் கவுன்சில் கூட்டம், டெல்லியில் நடந்தது.
- நிதி ஆயோக் தலைவரான பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த கூட்டத்தில் 23 மாநிலங்களின் முதல்வர்கள், துணை நிலை ஆளுநர்கள், மற்றும் அமைச்சர்கள், நிதி ஆயோக் துணைத் தலைவர் சுமன் பெரி, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி பரமேஸ்வரன் அய்யர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
- மத்திய அரசின் திட்டங்கள், சேவைகளை கடைநிலை மக்கள் வரை மாநில அரசுகளே கொண்டு சேர்க்கின்றன.
- இந்தியா என்பது தலைநகர் டெல்லி மட்டுமல்ல. பல்வேறு மாநிலங்கள் யூனியன் பிரதேசங்கள் அடங்கியதே இந்தியா என்பதை உலகுக்கு காண்பிக்க வேண்டும்.

## எஸ்எஸ்எல்விடி-1 ராக்கெட்

- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ), பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி வகை ராக்கெட்கள் மூலம் பல்வேறு செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது.
- இதில் பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 1,750 கிலோ வரையும்
- ஜிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் 4 ஆயிரம் கிலோ வரையும் எடை கொண்ட செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த முடியும்.
- சர்வதேச விண்வெளி சந்தையில் சிறிய செயற்கைக் கோள்களை செலுத்துவதற்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் இதன் வர்த்தக மதிப்பு 60 முதல்70 பில்லியன் டாலர் அளவுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவும் எடை குறைவான செயற்கைக் கோள்களை வணிக ரீதியில் விண்ணில் செலுத்த முடிவு செய்துள்ளது.
- அதற்காக தமிழகத்தில் உள்ள குலசேகரப்பட்டினத்தில் பிரத்யேக ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- சிறிய செயற்கைக் கோள்களை (500 கிலோ வரை) புவியின் தாழ்வட்ட சுற்றுப்பாதைக்கு கொண்டு செல்வதற்காக எஸ்எஸ்எல்வி (Small Satellite Launch Vehicle-SSLV) எனும் ராக்கெட்டை இஸ்ரோ புதிதாக வடிவமைத்துள்ளது.
- புதிய எஸ்எஸ்எல்வி டி-1 ராக்கெட் மூலம் இஓஎஸ்-02 (மைக்ரோசாட்-2ஏ) ஆசாதிசாட் ஆகிய 2 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது.
- ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ்தவான் மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து எஸ்எஸ்எல்விடி-1 ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.

## விடுதலைக்குப் பின் கல்வி

- நாடு விடுதலை அடைந்த 1947-ல் இந்தியாவின் எழுத்தறிவு 1% ஆக இருந்தது. (அன்றைய மதராஸ் மாகாணம்-14%); 100 இந்தியர்களில் 12 பேருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும் என்பது இதன் பொருள். இன்று அது 77.7% ஆக உயர்ந்துள்ளது (தமிழகம் 82.95).
- 1948-ல் பிரதமர் நேரு 'அகில இந்தியக் கல்வி மாநாட்'டைக் கூட்டி, 'நாட்டின் வளர்ச்சி நமது கல்வியில் ஏற்படும் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒட்டுமொத்தக் கல்வி முறையிலும் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டுவருவோம்' என்று அறைகூவல் விடுத்தார்.
- அந்தக் கல்வி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட சில புள்ளிவிவரங்களின்படி, 1947-ல் பள்ளியில் சேரும் குழந்தைகளில் 100-ல் 3 பேர் மட்டுமே கல்லூரி வரை சென்றனர். அவர்களில் ஒருவர்கூடப் பெண் இல்லை.
- நாடு முழுவதும் மொத்தம் 18 பல்கலைக்கழகங்கள் இருந்தன. மூன்று மருத்துவக் கல்லூரிகள், 12 பொறியியல் கல்வி நிலையங்கள், சிறிதும் பெரிதுமான சுமார் ஒரு லட்சம் பள்ளிகள் இருந்தன.

**மூன்று மந்திரச் சொற்கள்**

- ஆரம்ப ஆதாரக் கல்வி என்பது ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான அடிப்படைக் கல்வியாகும்.
- உலக நாடுகள் தம் கல்விக் கோட்பாடுகளை அங்கிருந்தே தொடங்கின. ஆனால், இந்தியாவில் அது தலைகீழாக நடந்தது.
- முதலில், 1948-ல் டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் பல்கலைக்கழக கல்விக் குழுவும், 1952-ல் டாக்டர் லட்சுமணசாமி தலைமையில் உயர், மேல்நிலைப் பள்ளிக் கல்விக் குழுவும் அமைக்கப்பட்டன.
- இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எதிரொலியாக, 1961-ல் டாக்டர் சம்பூரானந்த் தலைமையில் தேசிய உணர்வு ஒருங்கிணைப்புக் கல்விக் குழுவை நேரு அமைத்தார். ஆரம்ப ஆதாரக் கல்வியை யாருமே சீண்டவில்லை.
- பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அமைச்சரவையில் கல்வியாளர் எம்.சி.ஜக்லா கல்வி அமைச்சரானார். பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவராக இருந்த விஞ்ஞானி டி.எஸ்.கோத்தாரி தலைமையில் இந்தியக் கல்விக்குழு 1964-ல் அமைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில்தான் ஒட்டுமொத்தக் கல்வியிலும் கவனம் செலுத்தப்பட்டது.
- ஆரம்ப ஆதாரக் கல்வி எனும் சொல்லாக்கமும் முதல்முறையாகப் பயன்படுத்தப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர் செயலராக இருந்த ஜே.பி.நாயக், 1950-களிலேயே இந்தியக் கல்வியின் (முக்கோண) மூன்று முக்கியச் சொற்களை முன்மொழிந்தார்.
- அவை : அனைவருக்கும் கல்வி - தரமான கல்வி - சமத்துவக் கல்வி. அதை முழுமையாக அடைவதற்கான பெரும் போராட்டமே நம் இந்தியக் கல்வியின் உயிரோட்டமாக மாறியது.
- 1950-களின் தொடக்கத்தில் அப்போதைய மதராஸ் மாகாண முதல்வர் ராஜாஜி, தொடக்கக்கல்வி முறையில் சில மாற்றங்களைக் கொண்டுவந்தார்.
- அதன்பின் முதல்வரான காமராஜர், தமிழகத்தில் ஆதாரக் கல்வியில் பெரும்புரட்சி நிகழ்த்தினார். மதிய உணவுத் திட்டம், இலவசச் சீருடை, ஓராசிரியர் பள்ளி என லட்சக்கணக்கான குழந்தைகள் பஞ்சாயத்துகள் நடத்திய பள்ளிக் கல்வியில் இணைந்தனர். தமிழகம் சமத்துவச் சமூகநீதிக் கல்வி முன்மாதிரியை உருவாக்கியது வரலாறு.

**கோத்தாரி கமிஷன்**

- உயர்நிலைப்பள்ளி (பத்தாம் வகுப்பு) முடிவில் மேல்நிலைக் கல்வி (+2), மூன்றாண்டு கல்லூரிப் பட்டம் (10+2+3) என கோத்தாரி கமிஷன் 1966-ல் பொதுக் கல்வியைப் பிரித்தது.
- ஆரம்பக் கல்வி (ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை)
- நடுநிலைக்கல்வி (ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை) என்றும் தனித்தனியாகப் பிரித்து முன்மொழிந்தது.
- பெண் கல்விக்காக நியமிக்கப்பட்ட துர்காபாய் தேஷ்முக் தேசிய கமிட்டி (1960), ஆரம்பக் கல்விக்கான பள்ளிகளில் ஆசிரியைகளே அதிகம் நியமிக்கப்படுதல், கல்வியில் மாற்றுத்திறனாளிகள், இளம் கைம்பெண்கள், பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட வகுப்பினப் பெண்களுக்கு முன்னுரிமை எனப் பலவற்றைச் சாதித்தது.
- இருபாலரும் கல்வி கற்கும் ஆரம்பப் பாடசாலைகள், பெண்களுக்காகவே பிரத்யேகமாக முதியோர் கல்வி ஆகிய பரிந்துரைகளை எம்.பக்தவத்சலம் கல்விக் குழு (1963) வழங்கியது.
- 1968-ல் முன்மொழியப்பட்ட தேசியக் கல்விக்கொள்கை மூலம் பாலிடெக்னிக், ஐடிஐ பயிற்சி நிறுவனங்கள் நாடு முழுவதும் அறிமுகமாகின.

**பொதுப்பட்டியலில் கல்வி**

- பள்ளிக்கு முன், 1974-ல் பருவ அங்கன்வாடிகள் வந்தன. பள்ளி, பல்கலைக் கழகக் கல்வியில் இலக்குகள் உறுதியாகி ஒன்பது உயர்கல்வித் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இந்தியக் கல்வி மாநிலப் பட்டியலில் ஓரளவு தன்னிறைவு அடைந்தது.
- பிரதமர் இந்திரா நெருக்கடி நிலையை அறிவித்ததும், 1976-ல் கல்வி மாநிலப் பட்டியலிலிருந்து இந்திய அரசமைப்பின் 42-வது சட்டத் திருத்தத்தின்படி மத்திய-மாநில அரசுகளின் ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது.
- அப்பட்டியலின் இடுகை 25-ன்படி பள்ளிக் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை மாநில அரசுகள் தன்னிச்சையாகச் செயல்பட முடியாத நிலையை ஏற்படுத்தியது.

**அடிப்படை உரிமையாகக் கல்வி**

- 1986-ல் பிரதமர் ராஜீவ்காந்தி காலத்தில் வெளியிடப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின் (National Policy on Education) செயல்திட்டத்தில் தொழிற்கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது.
- 1999-ல் பேராசிரியர் யஷ்பால் கற்றலின் சுமையைக் குறைக்க ஒரு நபர் குழுவாகக் களமிறங்கினார்; அவரது தலைமையில் தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு 2005-ல் உருவாக்கப்பட்டு பள்ளிக் கல்வியில் தொடர் முழுமையான மதிப்பீட்டு முறை அறிமுகமானது.
- வானொலி, தொலைக்காட்சி என ஊடகங்களின் பயன்பாடு, செயற்கைக்கோள் வழியான தொலைதூரக்கல்வி, எழுத்தறிவு மேம்பாட்டுக்காக அறிவொளி இயக்கம் என இந்தியக் கல்வி மக்கள் இயக்கமாக மாறியது.
- விடுதலை அடைந்து 62 ஆண்டுகளுக்குப் பிறகு 2009-ல், கல்வியைக் குழந்தைகளின் அடிப்படை உரிமை என்று அறிவித்துச் சட்டம் இயற்றப்பட்டது.
- அதன்படி, 86-வது சட்டத் திருத்தத்தில் 45-வது கூறு திருத்தப்பட்டு கல்வி உரிமைச் சட்டம் அமல்படுத்தப்பட்டது.
- பல்கலைக்கழக அளவில் பேராசிரியர் யஷ்பால் தலைமையில் ஒரு கமிட்டி அதே ஆண்டில் நியமிக்கப்பட்டது.

**உலக வங்கியும் கல்வியும்**

- 2001-ல் 'சர்வசிக்ஷா அபியான்' (அனைவருக்கும் கல்வித் திட்டம்) மூலம் உலக வங்கி இந்தியக் கல்வித் துறைக்குள் நுழைந்தது.
- முதல் கட்டமாக 2 கோடிக் குழந்தைகளுக்கு ரூ.500 கோடி அமெரிக்க டாலரும்,
- 2003-ல் இரண்டாம் கட்டமாக மேலும் ரூ.600 கோடி அமெரிக்க டாலரும் நிதியுதவி பெறப்பட்டது.
- தற்போது நான்காம் கட்டமாக ஸ்டார்ஸ் (Strengthening Teaching - Learning and Results for States) என்ற இந்தியக் கல்வித்துறை தர மேம்பாட்டிற்காக உலக வங்கி ரூ.1006 கோடி அமெரிக்க டாலர் வழங்கியுள்ளது.
- அதே நேரம், மத்திய-மாநில அரசுகள் இணைந்து ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6% கல்விக்கு ஒதுக்கிட கோத்தாரிக் குழு பரிந்துரைத்தது.
- 2022 நிதிநிலை அறிக்கையில்கூட கல்விக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை வெறும் 2.88% தான்.

**ஒரே நாடு... ஒரே கல்வி**

- மெட்ரிக், ஆங்கிலோ இந்தியன், மாநிலப் பாடத்திட்டம் எனப் பிரிந்து கிடந்ததை ஒற்றைக் கல்விமுறையாக (சமச்சீர்) தமிழ்நாடு அரசு 2009-ல் அறிவித்தது.
- பள்ளிப் பாதுகாப்பு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட சம்பத் கமிட்டி முதல் பல கல்விக் குழுக்களைத் தமிழக கல்வித்துறை கண்டுள்ளது.
- 2020-ல் அமைக்கப்பட்ட தமிழக பாடத்திட்ட வடிவமைப்புக் குழுவின் அயராத உழைப்பும் குறிப்பிடப்பட வேண்டியது.
- கஸ்தூரி ரங்கன் கல்விக் குழுவின் பரிந்துரைகள் நாடு தழுவிய புதிய கல்விக் கொள்கையாக அறிமுகமாகி உள்ளன. அது 'ஒரே நாடு.... ஒரே கல்வி' எனும் முழக்கத்தை முன்வைக்கிறது.
- அதே சமயம், தமிழகத்திற்கு என்று ஒரு மாநிலக் கல்விக் கொள்கையைப் பரிந்துரைக்க நீதிபதி முருகேசன் தலைமையில் ஒரு கல்விக் குழுவை மாநில அரசு நியமித்துள்ளது.

## குறுங்காடுகள்

- காலநிலை மாற்றத்தால் அதிக பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இத்தனை ஆண்டுகளில் சராசரி வெப்பம் 1.3 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது.
- அடுத்த 10 ஆண்டுகளில் 0.2 டிகிரி உயர வாய்ப்புள்ளது. அப்போது பாதிப்பு கடுமையாக இருக்கும்.

- கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்கவும், பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுத்து, அதிக மரங்கள் வளர்க்கவும், தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
- தற்போது தமிழகத்தின் வனப்பரப்பு 22.71 சதவீதம். அடுத்த 10 ஆண்டுகளில் இதை 33 சதவீதமாக உயர்த்தும் திட்டம்
- சுற்றுச்சூழல் துறை சார்பில் பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து 10 ஆயிரம் குறுங்காடுகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இத்துறையின் கீழ் 52 ஆயிரம் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அவற்றின் மூலம்தலா 1,000 உள்நாட்டு மரங்களைக் கொண்ட குறுங்காடுகள் உருவாக்கப்படும்.

## டெல்லியில் பெண்களுக்கு எதிரான குற்றம் 17% அதிகரிப்பு

- டெல்லியில் பெண்களுக்கு எதிரான குற்றம் 17% அதிகரித்துள்ளது.
- கடந்த 6 மாதங்களில் 1,100 பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளனர்.
- 2,704 பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர். இதனால் தலைநகரில் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது.
- டெல்லியில் கடந்த 2012ம் ஆண்டு டிசம்பர் 16ம் தேதி மருத்துவ மாணவி நிர்பயா தன் நண்பருடன் பேருந்தில் பயணத்திக் கொண்டிருந்த போது 6 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு ஓடும் பேருந்திலிருந்து தாக்கி வீசப்பட்டார்.
- நிர்பயா நிதி என்ற பெயரில் பெண்களின் பாதுகாப்பு திட்டத்துக்காக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.
- இருப்பினும், பாலியல் பலாத்காரம் சம்பவங்கள் மட்டும் குறைந்த பாடில்லை. குறிப்பாக, டெல்லியில் பாலியல் பலாத்காரம் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.
- கடந்தாண்டு புள்ளி விபரங்களுடன் ஒப்பிடுகையில் இந்தாண்டு 6,48 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இந்தாண்டு மட்டும் குடும்ப வன்முறைக்கு 2,704 பெண்கள் ஆளாகி உள்ளனர்.
- வரதட்சணை கொடுமை தொடர்பாக கடந்தாண்டு 72 பேரும், இந்த ஆண்டு 69 பெண்களும் பாதிக்கப்பட்டனர்.

## நம்பி நாராயணன்

- ராக்கெட் அறிவியலில் முக்கியமானது அதன் எரிபொருள். அந்தத் துறையில் சாதனை செய்தவர் விஞ்ஞானி நம்பி நாராயணன்.

**ப்ரொபல்ஷன் இஞ்சின்**

- ஒரு பலூனை எடுங்க. அதோட முனையை அவிழ்த்துவிடுங்க. 'புஸ்'ன்னு பறக்கும். ஏன்? பலூனுக்குள்ள இருக்குறது உயர் அழுத்த வாயு. அது, பலூனோட வாய் (முனை) வழியா வெளியில வரும்போது, பலூனை உந்தி முன்னாடி தள்ளுது.
- அதாவது உந்துவிசை (ஆங்கிலம் : த்ரஸ்ட்) உருவாகுது. இதே மாதிரி தான் ராக்கெட்டும் வேலை செய்யுது. ராக்கெட்டுக்குள்ள இருக்குற எரிபொருள் எரியும் போது நிறைய வாயு உருவாகும்.
- அது ராக்கெட்டோட அடி வாய் (ஆங்கிலம் : நாசில்) வழியா வெளியில் வரும் போது உந்துவிசை உருவாகி, ராக்கெட் பறக்கும். உந்துவிசையால உந்தி முன்னால போகுறதுக்கு பேர்தான் இங்கிலீஷ்ல 'ப்ரொபல்ஷன்'.
- உந்து விசையை உருவாக்கி உந்தித் தள்ளுர இயந்திரம்தான் ப்ரொபல்ஷன் இஞ்சின்.

**2 வகை**

- திட எரிபொருள் பயன்படுத்துற 'ஸாலிட் ப்ரொபல்ஷன் இஞ்சின்'.
- திரவ எரிபொருள பயன்படுத்துற 'லிக்விட் ப்ரொபல்ஷன் இஞ்சின்'.

**திரவ எரிபொருள் இஞ்சினுக்கு முக்கியத்துவம்**

- எந்த ஒரு எரிபொருள் எரியணும்னாலும் ஆக்சிஜன் வேணும். கார் இஞ்சினுக்குள் காத்து போகலைனா பெட்ரோல எரியவைக்க முடியுமா?
- முடியாது. அப்படித்தான் ராக்கெட் எரிபொருளும். திட எரிபொருள்ள, அதுலேயே ஆக்சிஜன் தரக்கூடிய இரசாயனத்த கலந்து வெச்சுடுவோம்.
- திட எரிபொருள் ராக்கெட் ரொம்ப பழைய தொழில்நுட்பம். தீபாவளி ராக்கெட்டெல்லாம் கூட திட எரிபொருள்ள வேலை செய்யிறது தான்.
- இதுவே திரவ எரிபொருள்ள ஆக்சிஜன தனியா தான் கொடுக்கணும். அதனால பல சௌகரியங்கள் இருக்கு.

- முக்கியமா, நினைச்சா அதை 'ஆன்-ஆஃப்' செய்யலாம். தீபாவளி ராக்கெட்டை 'ஆன்-ஆஃப்' செய்ய முடியுமா? பத்தவிட்டா பறந்துகிட்டே இருக்கும். சரியா குறிவைக்கலன்னா பக்கத்து வீட்டுக்குள்ள போயிடும்.
- ஆனா, திரவ எரிபொருள எரியவிட்டு, நிறுத்தி, திரும்பவும் எரிய வைக்கிற சௌகரியம் இருக்குறதால, தேவையான பாதையில ராக்கெட்டை துல்லியமா, கார் மாதிரி ஓட்டலாம்.
- தவிர, எடைக்கு எடை, திட எரிபொருளை விட திரவ எரிபொருள்ள தான் அதிக சக்தி இருக்கு. அதனால திரவ எரிபொருள் இஞ்சின் கூடுதல் விசை தருது.
- இன்னும் அதிக உயரத்துக்கும் தூரத்துக்கும் ராக்கெட்ட செலுத்தலாம். கூடுதல் சுமையும் ஏத்தலாம்.

**க்ரையோஜிஸ் இஞ்சின்**

- இன்னொரு பிரச்சனை எரிபொருளே தான். திரவ நிலையில் உள்ள ஹைட்ரோஜென் வாயுவ எரிபொருளா பயன்படுத்துவாங்க. ஹைட்ரோஜென் வாயுவ திரவ நிலைக்கு மாற்றணும்னா மைனஸ் 253 டிகிரி செல்சியசுக்கு குளிராக்கணும். இப்படி குளுந்த எரிபொருளை பயன்படுத்துற திரவ எரிபொருள் இன்சினுக்கு பெயர் தான் 'க்ரையோஜெனிக் இஞ்சின்'.
- ஹைட்ரோஜென திரவ நிலையில பாதுகாப்பா சேமிச்சு வைக்கிறது ரொம்ப கஷ்டம். ஹைட்ரோஜெனுக்கு வாடை கிடையாது, நிறம் கிடையாது.
- அது கசியிறத சுலபமா கண்டுபிடிக்கவும் முடியாது. ஒருவேளை கசிஞ்சுதுன்னா பெரிய அளவுல வெடிச்சு விபத்தை ஏற்படுத்தும். ரொம்பவும் அபாயகரமானது.

**செமிக்ரையொஜெனிக்**

- 'செமிக்ரையோஜெனிக்' திரவ எரிபொருள் ஒரு வகை. அதில் ஆக்சிஜன் மட்டும் குளுகுளுன்னு மைனஸ் 183 டிகிரி செல்சியசுல இருக்கும்.
- எரிபொருள் மண்ணெண்ணெய் போல, தட்ப வெப்பத்துல திரவ நிலையில் இருக்குற ரசாயனமா இருக்கும். அதைத் தாண்டி, எர்த் ஸ்டோரபிள் தொழில்நுட்பம் அடுத்த கட்டம்.
- இதுல, சாதாரண தட்ப வெப்பத்துல திரவமாக இருக்குற எரிபொருளுக்கு ஆக்சிஜன் கொடுக்க, தட்ப வெப்பத்துல திரவமா இருக்குற ஆக்சிஜன் கலந்த ரசாயனத்தை பயன்படுத்துவாங்க.
- இப்படிப்பட்ட ரசாயனத்த ஆக்சிடைசர்ன்னு சொல்றோம். அதாவது, எரிபொருள்ள ஆக்சிஜன ஏத்தும் வேலைய செய்யுது. இதற்கு உதாரணம் நம் நாட்டுல தயாரிக்கப்பட்ட விகாஸ் இஞ்சினோட எரிபொருளும் ஆக்சிடைசரும்.

**விகாஸ் இஞ்சின் எரிபொருள்**

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த திரவ எரிபொருள் ராக்கெட் இஞ்சின் பி.எஸ்.எல்.வி மற்றும் ஜி.எஸ்.எல்.வி. செயற்கைக் கோள் வாகனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இதன் எரிபொருள் யு.டி.எம்.ஹெச். எனப்படும் அன்சிமெட்ரிகல் டைமெதில் ஹைட்ராசின். இதன் ஆக்சிடைசர் நைட்ரஜன் டெட்ராக்சைட். இரண்டுமே தட்ப வெப்பத்தில் திரவமாக இருப்பவை.
- நம்மோட 43 பி.எஸ்.எல்.வி. ராக்கெட்டும் மேலே போயிருக்குன்னா, அதுக்கு திரவ எரிபொருள்தான் காரணம். அதுல, 2 ஆம் கட்டத்துலையும் 4 ஆம் கட்டத்துலையும் திரவ எரிபொருள் இஞ்சின் தான் இருக்கு.
- நாம அனுப்பின 53 செயற்கைக் கோளுக்கும் திரவ எரிபொருள் தான் உதவியிருக்கு. அதனால, நான் என்ன எதிர்பார்த்தோமோ, அதை அடைஞ்சிருக்கோம்.

## மின்சார சட்டத்திருத்த மசோதா

- மின்சார விநியோகத் துறையில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்க வகை செய்யும் மின்சார திருத்த மசோதாவை மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் ஆர்.கே.சிங் மக்களவையில் அறிமுகம் செய்தார்.
- நுகர்வோர் தாங்கள் விரும்பும் சேவை வழங்குவோரைத் தேர்ந்தெடுக்கவும் இந்த மசோதா வழிவகை செய்கிறது.

**எரிசக்தி பாதுகாப்பு திருத்த மசோதா**

- பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட மரபு சாரா எரிசக்தி ஆற்றலை அதிக அளவில் பயன்படுத்த வழிவகுக்கும் எரிசக்தி பாதுகாப்பு (திருத்த்) மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது.
- பெட்ரோலிய பொருள்கள், நிலக்கரி உள்ளிட்டவற்றுக்கு வெளிநாட்டு இறக்குமதியை இந்தியா நம்பியிருக்கும் நிலையில், பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உள்ளிட்டவற்றின் கட்டாயப் பயன்பாட்டுக்கு எரிசக்தி பாதுகாப்பு (திருத்த்) மசோதா வழிவகுக்கிறது.

**மத்தியஸ்த மசோதா**

- தில்லியில் உலகத்தரம் வாய்ந்த மத்தியஸ்த மையத்தை அமைக்க இந்த மசோதா வழிவகுக்கும் என மத்திய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.
- அந்த மையத்தின் பெயரை இந்திய சர்வதேச மத்தியஸ்த மையம் என மாற்றவும் மசோதா வழிவகுக்கிறது.
- நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் இந்த மையம் உதவும்.

**கதிசக்தி பல்கலைக்கழக மசோதா அறிமுகம்**

- தேசிய ரயில் போக்குவரத்து பல்கலைக் கழகத்தின் பெயரை கதிசக்தி பல்கலைக் கழகம் என மாற்றம் செய்வதற்காக மத்திய பல்கலைக் கழகங்கள் (திருத்த) மசோதாவை மாநிலங்களவையில் மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தாக்கல் செய்தார்.
- ரயில்வே உள்ளிட்ட பல்வேறு போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான விதிமுறைகளும் மசோதாவில் இடம்பெற்றுள்ளன.
- தகவல் தொடர்பு வரிசையில் மின்சாரத்தை தனியார் மயமாக்குவதை அனுமதிப்பது இந்த மசோதாவின் நோக்கமாகும்.
- தொலைபேசி இணைப்பு மற்றும் இணைய சேவைகளுக்கு ஒரு நிறுவனத்தை தேர்வு செய்வது போல் மின்சாரத்துக்கு ஒரு நிறுவனத்தை வாடிக்கையாளர்கள் தேர்வு செய்ய முடியும்.
- அரசியல் சட்டத்தின் ஒத்திசைவு பட்டியலில் மின்சாரம் உள்ளது. எனவே மசோதாவை அறிமுகம் செய்யும் முன் மாநில அரசுகளுடன் விரிவான ஆலோசனை செய்வது மத்திய அரசின் கடமையகும்.
- ஒரே பகுதியில் மின்சாரம் வழங்க பல தனியார் நிறுவனங்களை இந்த மசோதா அனுமதிக்கிறது. இதனால் லாபம் தனியாருக்கும், இழப்பு அரசுகளுக்கும் ஏற்படும்.

## பாலின விகிதம் - ஆய்வு

- 2015-ஆம் ஆண்டு ஐ.நா.சபை அறிக்கையின்படி உலகளாவிய நிலையில் ஆண்-பெண் விகிதாச்சாரம் 100-70. அதாவது 100 ஆண்களுக்கு ஈடாக 70 பெண்கள் இருந்திருக்கிறார்கள்.
- ஐ.நா.சபை கணக்கீடு செய்த 201 நாடுகளில் 124 நாடுகளில் ஆண்-பெண் விகிதாசாரத்தில் பெண்கள் தான் அதிக அளவில் இருக்கிறார்கள்.
- இந்த விகிதாச்சார கணக்கில் இந்தியா 192-ஆவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் ஆண்-பெண் விகிதாசாரத்தில் ஆண்கள்தான் அதிக அளவில் இருக்கிறார்கள்.
- ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை இந்தியாவை விட 9 நாடுகளில் மட்டுமே குறைவு.
- 1901-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஆயிரம் ஆண்களுக்கு 972 பெண்கள் இருந்தார்கள்.
- 2011-ஆம் ஆண்டு கணக்குப்படி, இன்னும் சற்று உயர்ந்து ஆயிரத்துக்கு 940 என்று ஆனது. இந்த விகிதாசாரத்தைக் கண்ட அனைவரும் சற்று ஆறுதலடைந்த அதே வேளையில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் விகிதம் குறைந்து கொண்டே வருகிறது.
- 1991-இல் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு 945 ஆக இருந்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 2001-இல் 927 ஆகக் குறைந்தது. இது 2011-இல் மேலும் குறைந்து 914 ஆகியுள்ளது.
- பத்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒவ்வொரு மக்கள்தொகை கணக்கெடுப்பின் போதும் எழுத்தறிவு விகிதம், நகர்மயமாதல், மக்கள் அடர்த்தி போன்றவை அதிகரித்து வரும் அதே வேளையில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.
- ஓரிரு மாநிலங்களில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும், ஏனைய பெரும்பாலான மாநிலங்களில் குறைந்து வருகிறது.
- ஆணோ, பெண்ணோ இரு குழந்தைகள் போதும் என்ற மனப்பக்குவம் தற்போது அதிகரித்து வருகிறது.
- முதல் குழந்தை ஆண் என்றால் அதுவே போதும் என்ற மனப்பக்குவத்திற்கும் மாறி வருகின்றனர்.
- ஆயினும் ஆண் குழந்தை மோகம் மக்கள் மத்தியில் இன்னும் இருக்கவே செய்கிறது.
- 2016-இல் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிவரத்தின்படி ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 877 ஆகக் குறைந்து விட்டது.
- ஆந்திரம், ராஜஸ்தானில் 806 ஆகவும், பீகாரில் 837, உத்திரகண்டில் 825, தமிழ்நாட்டில் 840 என்ற அளவில் உள்ளது.

- உத்தரகண்ட் மாநிலத்தில் உத்தர காசி எனும் பகுதியைச் சுற்றியுள்ள 132 கிராமங்களில் 3 மாதங்களில் 216 குழந்தைகள் பிறந்துள்ளன. ஆனால் அவற்றில் ஒன்றுகூட பெண் குழந்தை இல்லையாம்.
- தேசிய குடும்பநலக் கணக்கெடுப்பின் முடிவுகள் தமிழகத்தில் பாலின விகிதம் சரிந்திருப்பதாகக் கூறுகிறது.
- 2016-17-இல் தமிழகத்தில் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு பெண் குழந்தைகளின் எண்ணிக்கை கிராமப்புறங்களில் 1,055 ஆகவும், நகர்ப்புறங்களில் 1,031 ஆகவும் உள்ளது.
- இதற்கடுத்து தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாமிடத்தில் உள்ளது. சேலம் மாவட்டம் கடைசி நிலையில் உள்ளது.
- கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிவதை தடை செய்யும் சட்டம் 1994-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டு 2003-இல் கடுமையானதாக மாற்றப்பட்டது.

## பணவீக்கத்தால் வட்டி இறுக்கம்

- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதத்தை (ரெப்போ ரேட்) இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அண்மையில் 0.5% உயர்த்தியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு (எம்பிசி), ரெப்போ விகிதத்தை 50 அடிப்படை புள்ளிகள் உயர்த்த ஒருமனதாக வாக்களித்ததைத் தொடர்ந்து இந்த உயர்வு அறிவிக்கப்பட்டது.
- இதனால், வீட்டுக்கடன், வாகனக் கடன், மாதாந்திர தவணைத் தொகை உள்ளிட்டவற்றுக்கான வட்டி விகிதத்தை வங்கிகள் உயர்த்தும் அபாயம் உள்ளது.
- உலக அளவில் மத்திய வங்கிகள், பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக வட்டி விகிதங்களை உயர்த்தி இறுக்கத்தை கடைப்பிடிக்கின்றன.
- இதனால், உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் மோசமடைந்து வருகிறது என்பதை சொல்லாமல் இருக்க முடியாது.
- சமீபகால வரலாற்றில் உலக பொருளாதாரம் மிகக் கடுமையான சரிவைச் சந்தித்த கடந்த இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னரும், பொருளாதாரக் கண்ணோட்டம் மேகமூட்டம் போலத்தான் உள்ளது.

## விளையாட்டை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு

- கேலோ இந்தியா விளையாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குஜராத் மாநிலத்திற்கு அதிகபட்சமாக ரூ.608.37 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இதனை தொடர்ந்து உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு ரூ.503 கோடியும், அருணாச்சலப் பிரதேச மாநிலத்திற்கு ரூ.183 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழகத்துக்கு ரூ.3.3 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.
- ஹாக்கி தொடர்களை ஒடிசா மாநிலமும், செஸ் ஒலிம்பியாட் போட்டியை தமிழ்நாடும் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளன.

**கேலோ இந்தியா திட்டம்**

- இந்த கேலோ இந்தியா திட்டத்தில்விளையாட்டு மைதான மேம்பாடு, சமூக பயிற்சி மேம்பாடு, சமூக விளையாட்டுகளை ஊக்குவித்தல், பள்ளி மற்றும் பல்கலைக் கழகங்கள் மட்டத்தில் விளையாட்டு போட்டிகளை நடத்துதல், கிராமப்புற, நகர்ப்புற மட்டத்தில் விளையாட்டுகளை நடத்துதல், மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுகள் மற்றும் பெண்கள் விளையாட்டுகளுக்கு வலுவான விளையாட்டு போட்டி கட்டமைப்பு நிறுவுதல், தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக் கழகங்களில் விளையாட்டுத் திறன் மையங்களை உருவாக்குதல் என விளையாட்டு உள்கட்டமைப்பில் உள்ள முக்கியமான இடைவெளிகளை நிரப்புதல் போன்றவை ஆகும்.

## ஜேடியு - பாஜக கூட்டணி

- பீஹாரில் ஐக்கிய ஜனதா தளம் (ஜேடியு), பாஜக கூட்டணி ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.
- 2020-ம் ஆண்டில் நடந்த பீஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் ஐக்கிய ஜனதா தளம், பாஜக கூட்டணி பெரும்பான்மை பலம் பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்தது.
- பாஜக 74 இடங்களில் வெற்றி பெற்ற நிலையில் 43 இடங்களில் வெற்றி பெற்ற ஐக்கிய ஜனதாதள தலைவர் நிதிஷ் குமாருக்கு முதல்வர் பதவி வழங்கப்பட்டது.
- ஆனால் நிதிஷ் குமாருக்கு முழு சுதந்திரம் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

## 4 தங்கம் வென்றது இந்தியா

- பிரிட்டனின் பர்மிங்ஹாம் நகரில் 22-வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வந்தது.
- இதில் நீச்சல், தடைகளம், பேட்மிண்டன், கூடைப்பந்து, வாலிபால், குத்துச்சண்டை, ஹாக்கி, மல்யுத்தம், ஸ்குவாஷ் உள்ளிட்ட 20 விளையாட்டுகளில் மொத்தம் 280 போட்டிகள் நடைபெற்றன.
- இந்தப் போட்டியில் 72 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.
- இந்தியா சார்பில் 15 விளையாட்டுகளில் 200-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.
- மகளிர் கிரிக்கெட் டி20 இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் இந்தியா தோல்வி கண்டு வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது.
- டேபிள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் சரத் கமல்-ஸ்ரீஜா அகுலா ஜோடி தங்கம் வென்றது.
- மகளிர் ஒற்றையர் பேட்மிண்டன் இறுதிப்போட்டியில் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து தங்கம் வென்றார்.
- காமன்வெலத் போட்டியின் ஒற்றையர் பிரிவில் பி.வி.சிந்து வெல்லும் முதல் தங்கப் பதக்கம் இதுவாகும்.
- ஆடவர் ஒற்றையர் பேட்மிண்டன் போட்டியில் இந்திய வீரர் லக்சயா தங்கம் வென்றார்.
- ஆடவர் இரட்டையர் பேட்மிண்டன் இறுதிப் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி ஜோடி.
- ஆடவர் ஒற்றையர் பிரிவு டேபிள் டென்னிஸில் தங்கப் பதக்கத்துக்கான போட்டியில் இந்திய வீரர் அசந்தா சரத் கமலும், இங்கிலாந்தின் லியாம் பிட்ச்போர்டும் மோதினர். இதில் அசந்தா சரத்கமல் தங்கம் வென்றார்.
- ஆடவர் ஹாக்கி இறுதிப் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் மட்டுமே கிடைத்தது.
- பதக்கப் பட்டியலில் இந்தியா 22 தங்கம், 16 வெள்ளி, 23 வெண்கலம் என மொத்தம் 61 பதக்கங்களைப் பெற்று 4-வது இடத்தைப் பிடித்தது.
- கடந்த 2018-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டியில் இந்தியா 26 தங்கம், 20 வெள்ளி, 20 வெண்கலம் என 66 பதக்கங்களுடன் 3-வது இடத்தைப் பிடித்திருந்தது.

**தமிழக வீரர் அசத்தல்**

- டேபிள் டென்னிஸ் விளையாட்டில் தமிழக வீரர் அசந்தா சரத் கமல் 3 தங்கம், ஒரு வெள்ளியை கைப்பற்றி சாதனை புரிந்தார்.
- நிறைவு விழாவில் இந்திய தேசியக்கொடியை டேபிள் டென்னிஸ் வீரர் அசந்தா சரத் கமல், குத்துச்சண்டை வீராங்கனை நிகாத் ஜரீன் ஆகியோர் ஏந்திச் சென்றனர்.

## விஸ்வநாதன் ஆனந்த்

- சர்வதேச செஸ் கூட்டமைப்பின் (ஃபிடே) புதிய தலைவராக ரஷ்யாவைச் சேர்ந்த ஆர்கடி வோர்கோவிச், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விஸ்வநாதன் ஆனந்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## மக்கள் தொகையை கட்டுப்படுத்த சட்டம்

- அரசியலமைப்பு சட்டத்தின் 21-21ஏ பிரிவானது, அனைவருக்கும் சுத்தமான காற்று, குடிநீர், சுகாதார வசதி, வாழ்வாதாரம் ஆகியவை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என கூறுகிறது.
- ஆனால் மக்கள் தொகையை கட்டுப்படுத்தவில்லை என்றால், இத்தகைய உரிமையை உறுதி செய்ய முடியாது.
- எனவே வெளிநாடுகளில் உள்ள மக்கள் தொகை கொள்கைகளை ஆராய்ந்து, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சட்டம் இயற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய மத்திய சட்ட ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.

## தாய்மொழியில் உயர்கல்வி

- விடுதலை பெற்ற இந்தியாவில் ராதாகிருஷ்ணன் கமிட்டி, பல்கலைக்கழகக் கல்வி மேம்பாடு பற்றிய அறிக்கையினை 1948-49இல் சமர்ப்பித்தது.
- ஆங்கிலக் கல்விக்கு மாற்றாக இந்திய மொழிகள்தான் உயர்கல்விப் பயிற்று மொழிகளாக இருக்க வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரைத்தது.

- இந்திய அரசமைப்பும் இந்தியக் கல்விக் கொள்கையும், தாய்மொழியில் கல்வி அளிக்கப்படும் என்ற உத்தரவாதத்தை அளித்திருக்கின்றன.
- 1986, 1992 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட தேசியக் கல்விக் கொள்கைகளிலும் தாய்மொழிக் கல்வி மேம்பாட்டிற்கான பரிந்துரைகள் ஏதுமில்லை.
- தேசியக் கல்விக் கொள்கை 2020, தாய்மொழியில் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி அளிப்பதன் அவசியத்தையும், அதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைகளையும் அளித்துள்ளது.
- உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிகள், தொழிற்கல்வி – மருத்துவப் படிப்புகள் தாய்மொழியில் படிக்க வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்று வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன
- அண்ணல் காந்தி, தாய்மொழியில் கல்வி கற்பது எவ்வளவு பயன்தரும் என்பதை 1946 ‘ஹரிஜன்’ இதழில், ‘தாய்மொழியில் படிப்பது, தாய்ப்பால் குடித்து, வலுவும் பயனும் பெறுவதைப் போன்றது’ என்று குறிப்பிட்டுள்ளார்.
- அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுமம் (ஏஐசிடிஇ), தேசியக் கல்விக் கொள்கை 2020 செயல்பாட்டு வரையறை அமைத்த பிரேம்வீர் கமிட்டி, தொழிற்கல்வியைத் தாய்மொழியிலும் அளிக்கப் பரிந்துரை செய்துள்ளது.
- கல்வி நிறுவனங்கள் தாய்மொழியில் கல்வி, ஆராய்ச்சிப் படிப்புகளை வழங்க, நடப்பு அறிவியல் தொடர்பான உள்கட்டமைப்புகளை உருவாக்க, கல்வி மேம்பாட்டிற்கு உள்நாட்டு மொத்த உற்பத்தியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள 6 சதவீதத்தில், குறைந்தது 1 சதவீதம் அளிக்கப்பட வேண்டும்.

## உழவர்களின் சேவை

- தொடக்கக் கால வளங்களைக் கட்டமைத்த காலம் (1950-60).
- இரண்டாவது பசுமைப் புரட்சிக் காலம் (1961-90).
- மூன்றாவது, உலகமயக் காலம் (1991 முதல் இன்று வரை)
- வாழைப்பழ விளைச்சலில் சீனா, பிரேசில் ஆகிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி உலகின் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- எருமைப்பாலில் முதலிடம், நெல், கோதுமை, கரும்பு, பச்சைக் காய்கறிகள், உருளைக்கிழங்கு, பருத்தி, பசும்பால் ஆகியவற்றில் உலகில் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியுள்ளது.
- இந்தியாவில் இப்போது நாம் பெற்றிருக்கும் 5,000 பெரிய அணைகள் மூலம் 220 டெராலிட்டர் நீரைச் சேமித்து வைக்க முடியும்.
- நேருவின் கனவுத் திட்டமான ஐந்தாண்டுத் திட்டம், சோவியத் ரஷ்யாவின் திட்டத்தை மாதிரியாகக் கொண்டது.
- முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, மீன்வளம் போன்ற முதன்மைத் துறைகளுக்கான ஒதுக்கீடு அதிகமாக்கப்பட்டு, மூலப்பொருள்களை உருவாக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

**தலைகீழ் மாற்றம்**

- மின்சாரம் இல்லை என்றால் இந்திய வேளாண்மையே இல்லை என்று கூறும் அளவிற்கு மின்சாரத்தின் பயன்பாடு மிக அதிக அளவு உயர்ந்தது.
- இயந்திரங்களின் பயன்பாடும் கணிசமாக அதிகரித்துள்ளது. உழவு மாடுகளின் இடத்தில் உழவுந்துகள் (டிராக்டர்கள்) உலவுகின்றன.
- மக்களின் கைகளில் இருந்த நாட்டு விதைகளின் இடத்தில் நிறுவனங்களின் கலப்பின விதைகளும், சாண உரங்கள் – வண்டல் உரங்களின் இடத்தில் யூரியா, டிஏபி போன்ற வேதி உரங்களும் வந்துவிட்டன.
- உத்தரவாதமற்ற மழை, வெயில், பூச்சிகள் என்ற பருவநிலை சார்ந்த நெருக்கடிகள் இருந்த போதிலும் இந்திய உழவர்கள் தங்களை வருத்திக் கொண்டு உணவை வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றனர்.

**உலகமயத்தின் பின்னணியில்...**

- பசுமைப் புரட்சிக் காலத்தில் விதைகள், உரங்கள் போன்றவற்றில் இந்தியா எப்படிப் பிற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்றோ, அதே போல 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர், தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் அமெரிக்கா போன்ற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியதாயிற்று.
- மரபீனித் தொழில்நுட்பங்கள் முற்றிலும் பெரும் விதை நிறுவனங்களைச் சார்ந்து இருக்க வேண்டியதாயிற்று.
- வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைக்கான பொது உடன்படிக்கையின்(GATT)விளைவாக ஏற்பட்ட வேளாண்மைக்கான ஒப்பந்தம் (AoA), வேளாண்மைக்கான மானியங்கள் யாவற்றையும் நீக்கியது.
- இந்த ஒப்பந்தங்கள் 1994 ஆம் ஆண்டு மொராக்கோவின் மரகேசில் அங்கீகரிக்கப்பட்டன.

**காந்தியம் காட்டிய வழி**

- காந்தியடிகள், கிராமங்கள் உயிர் பெற்றால்தான் அமைதியும் மகிழ்ச்சியும் உள்ள இந்தியா உருவாகும் என்று கருதினார்.
- அதை அறிவியல் முறையில் இலக்கணமாக மாற்றித் தந்தவர் ஜே.சி.குமரப்பா. அவரைப் போன்றவர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு 17.4%, அத்துடன் நீர்ப்பாசனத்தைச் சேர்த்தால் 31% ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 21% என்று குறைந்து கொண்டே வந்து 10 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 3.86% ஆகக் குறைக்கப்பட்டது.

**தாக்குப்பிடிக்கும் சாதனை**

- இந்தியா ஆங்கிலேயர்களிடம் இருந்து அரசியல் விடுதலை பெற்றபோது, மக்கள்தொகை ஏறத்தாழ 36 கோடி; அப்போது இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) வேளாண்மையின் பங்கு 51.9%.
- இந்தியாவின் தற்போதைய உத்தேச மக்கள்தொகை ஏறத்தாழ 139 கோடி. அதே நேரம் வேளாண்மை ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 2017 ஆம் ஆண்டு 15.4% ஆகக் குறைந்தது.
- அதன் பின்னர் கரோனாவின் தாக்கத்தால் 2021 ஆம் ஆண்டில் 19.9%ஐத் தொட்டது.
- 63 கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு (45.6%) வேளாண்மைத் துறை மூலமே கிடைத்து வருகிறது.

**தேவை தொலைநோக்குப் பார்வை**

- இந்தியாவில் வேளாண்மையை வளர்த்தெடுக்க நபார்டு போன்ற அமைப்புகள், மாநில அரசு சார்ந்த திட்டங்கள், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், சந்தையாக்க முயற்சிகள் மூலம் பல்வேறு முன்முயற்சிகள் எடுக்கப்படுவதை மறுக்க இயலாது. ஆனால், தெளிந்த தொலைநோக்குப் பார்வை இல்லாததால், நினைத்த நேரத்தில், நினைத்த திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன.

## கல்வித் திட்டங்கள்

**கல்வி ஆணையங்கள்**

- இந்தியாவில் பல்கலைக்கழகக் கல்வி குறித்துப் பரிந்துரைப்பதற்காக டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையில் 1948இல் பல்கலைக்கழக கல்வி ஆணையம் அமைக்கப்பட்டது.
- 1952-இல் இடைநிலைக் கல்விக்காக டாக்டர் லட்சுமணசுவாமி தலைமையில் அமைக்கப்பட்ட ஆணையம் 'முதலியார் ஆணையம்' என்றழைக்கப்பட்டது.
- கல்வியின் அனைத்து அம்சங்களையும் ஆராய்வதற்காக 1964-இல் அன்றைய பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக இருந்த டி.எஸ்.கோத்தாரி தலைமையில் கோத்தாரி கல்வி ஆணையம் அமைக்கப்பட்டது.

**கல்விக் கொள்கைகள்**

- கோத்தாரி ஆணையத்தின் பரிந்துரைப்படி 1968 இல் இந்தியாவின் முதல் தேசியக் கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது.
- கோத்தாரி ஆணையத்தின் பரிந்துரைகள் பலவும் இந்தக் கல்விக் கொள்கையில் இடம் பெற்றன. அனைவருக்கும் 14 வயது வரை கல்வி அளிக்கப்பட வேண்டும்.
- ஜிடிபியின் 6 சதவீதம் கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பவை இக்கொள்கையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள்
- 1986இல் மீண்டும் ஒரு தேசியக் கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது. பெண்கள், பின்தங்கிய வகுப்பினருக்குக் கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பது, ஏழை மாணவர்களுக்குக் கல்விக்கான உதவித் தொகை, முதியோர் கல்வி, ஒடுக்கப்பட்ட பிரிவுகளிலிருந்து ஆசிரியர்களை நியமிப்பது ஆகியவை கல்விக் கொள்கை 1986இன் முக்கிய அம்சங்கள்
- 2020 ஆம் ஆண்டில் புதிய தேசியக் கல்விக் கொள்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.
- இதில் தாய்மொழிவழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 2040க்குள் இந்தியக் கல்வியை ஒட்டுமொத்தமாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் கல்விக் கொள்கை 2020 வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கல்வியைப் பரவலாக்கும் திட்டங்கள்**

- 1986 கல்விக் கொள்கையின்படி இந்தியாவில் தொடக்கப் பள்ளிகளை அதிகரிப்பதற்கும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான 'ஆபரேஷன் பிளாக்போர்டு திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஒவ்வொரு தொடக்கப் பள்ளியிலும், குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்கள், இரண்டு வகுப்பறைகள், கல்விக்கான கருவிகள், கழிப்பறைகளை ஏற்படுத்துவது போன்றவை இத்திட்டத்தின் நோக்கம்.

- பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கும் கல்வி கற்பிக்கத் தகுதிபடைத்தவர்களாக ஆக்குவதற்கும் மத்திய அரசால் நிதியளிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சித் திட்டம் 1987இல் தொடங்கப்பட்டது.
- இதன்படி நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன.
- அனைவருக்கும் தொடக்ககக் கல்வி கிடைப்பதை உறுதி செய்வதற்காக 1994 இல் மாவட்டம் தோறும் தொடக்கப்பள்ளித் திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தத் திட்டத்துக்கான செலவை மத்திய அரசும் மாநிலஅரசுகளும் 85%, 15% என்னும் விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.
- 1995இல் தொடக்கப் பள்ளிகளில் 300 கலோரியையும் 12 கிராம் புரதத்தையும் உள்ளடக்கிய மதிய உணவு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாவட்டந்தோறும் தொடக்கக் கல்வித் திட்டத்தின் மேம்பட்ட வடிவமாக 2001-இல் அனைவருக்கும் கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தொடக்கக் கல்வியில் பாலின இடைவெளியை நீக்கி அனைத்துப் பெண்களுக்கும் கல்வி வழங்குவதற்கான திட்டம் 2003இல் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அனைவருக்கும் கல்வி திட்டத்தில் அனைத்துப் பெண்களுக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதற்கான கூறு இணைக்கப்பட்டது.
- 2009இல் அறிமுகப்படுத்தப்பட்ட 'சாக்ஷார் பாரத்' திட்டம் முறையான பள்ளிக் கல்வியைப் பெற முடியாமல் 15 வயதைக் கடந்து விட்டோருக்கு எழுத்தறிவு வழங்குவதற்கான அமைப்புகளை உருவாக்குவதற்கானது.

**அடிப்படை உரிமையான கல்வி**

- கல்வியை அடிப்படை உரிமைகளில் ஒன்றாக ஆக்கும் வகையில் அரசமைப்பில் 86ஆம் சட்டத்திருத்தம் 2002 இல் மேற்கொள்ளப்பட்டது.
- இதன்படி 6 முதல் 14 வயது வரையில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி அளிப்பது அரசுகளின் கடமையானது.
- இந்த வயதுக் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வாய்ப்பை வழங்குவது பெற்றோர்/பாதுகாவலரின் கடமையாக்கப்பட்டது.
- 86ஆம் அரசமைப்புத் திருத்தத்துக்கு உயிர் கொடுக்கும் வகையில் 2009 இல் கல்வி உரிமைச் சட்டம் என்றழைக்கப்படும் இலவச, கட்டாயக் கல்வியைப் பெறுவதற்கான குழந்தைகளின் உரிமைச் சட்டத்தை இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியது.
- இச்சட்டத்தின்படி அனைத்துத் தனியார் பள்ளிகளும் 25 சதவீத இடங்களை ஏழை, பின்தங்கிய வகுப்புகள் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- இவர்களுக்கான கல்விக் கட்டணத்தை அரசே ஏற்றுக் கொள்ளும். சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு இச்சட்ட நிபந்தனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**உயர் கல்வியில் இடஒதுக்கீடு**

- மத்திய அரசு உயர்கல்வி நிறுவனங்களில் பட்டியலினத்தவருக்கு 22.5 சதவீதம், பழங்குடியினருக்கு 7.5 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.
- 1979 இல் நியமிக்கப்பட்ட மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 2006 இலிருந்து 27 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.
- பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு 2019 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

**தர மேம்பாட்டுக்கான அமைப்புகள்**

- 1948 பல்கலைக் கழக கல்வி ஆணையத்தின் பரிந்துரைப்படி பல்கலைக் கழகங்களை ஒருங்கிணைக்கும் தர நிர்ணயம் செய்யவும் மேற்பார்வையிடவும் பல்கலைக்கழக கல்வி மானியக் குழு உருவாக்கப்பட்டது.
- 1961-இல் பள்ளிக் கல்வி தொடர்பாக அப்போது இயங்கிவந்த ஏழு அமைப்புகளை ஒன்றிணைத்துத் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு (NCERT) உருவாக்கப்பட்டது.
- பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான கொள்கைகளையும் திட்டங்களையும் பகிர்ந்துரைப்பதே தன்னாட்சி பெற்ற இந்த அமைப்பின் முதன்மையான பணி.

- இதேபோல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை மேற்பார்வையிடுவதற்கான அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு 1987இல் தொடங்கப்பட்டது.
- 1951-இல் 18.3 சதவீதமாக இருந்த எழுத்தறிவு விகிதம் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 74 சதவீதமாக உயர்ந்தது.

**தமிழ்நாட்டில் கல்வி**

- 2035-க்குள் பள்ளிக் கல்வியை முடிப்போரில் 50 சதவீதத்தினர் உயர் கல்வியைப் பெற வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தேசிய கல்விக்கொள்கை 2020. தமிழ்நாட்டில் அந்த இலக்கு ஏற்கனவே அடையப்பட்டு விட்டது.
- அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் பல வகைகளில் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இலவச சைக்கிள், பேருந்துப் பயணம், சீருடை, புத்தகங்கள், கட்டணமில்லா கல்வி எனப் பல்வேறு சமூக நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- அண்மையில் அரசுத் தொடக்கப் பள்ளிகளில் காலை உணவு அளிக்கும் திட்டமும் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டுள்ளது.
- உயர் கல்வியில் பிறப்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மாணவர்களுக்கு 69 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.
- இது போன்ற திட்டங்களால் பள்ளிக் கல்வியையும் கல்லூரிக் கல்வியையும் முடித்தவர்களின் எண்ணிக்கையில் தேசிய அளவில் முன்னிலை வகிக்கிறது தமிழ்நாடு.

## தமிழகம் கிராண்ட்மாஸ்டர்களின் மாஸ்டர்

- இந்தியாவின் செஸ் களத்தில் 75-ஆவது கிராண்ட் மாஸ்டராக உருவாகியிருக்கிறார் சென்னையைச் சேர்ந்த வி.பிரணவ்.
- இந்தியாவில் அதிக கிராண்ட்மாஸ்டர்களைக் கொண்ட மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் 27 பேருடன் முதலிடத்தில் இருக்கிறது. அடுத்ததாக, மகாராஷ்டிரம் 10 பேருடன் 2-ஆம் இடத்திலும் மேற்கு வங்கம் 9 பேருடன் 3-ஆம் இடத்திலும் உள்ளன.
- இந்தியாவைப் பொருத்தவரை, அதிக கிராண்ட் மாஸ்டர்களைக் கொண்ட நாடுகள் பட்டியலில் 5-ஆவது இடத்தில் இருக்கிறது. அதுவே கிராண்ட் மாஸ்டர்களின் சராசரி தர மதிப்பு அடிப்படையில் கணக்கில் கொண்டால், இந்தியாவுக்கு 3-ஆம் இடம் கிடைக்கும்.

**தகுதி**

- ஒரு செஸ் போட்டியாளர் கிராண்ட் மாஸ்டர் அந்தஸ்தை பெறுவதற்கு குறைந்தபட்சம் இரு தகுதிகளைப் பெற வேண்டும்.
- தனது செஸ் விளையாட்டு வரலாற்றில் ஏதேனும் ஒரு முறை 2,500 ஈலோ தரமதிப்பு புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
- 27 கேம்களைக் கொண்டிருக்கும் செஸ் போட்டிகளில் குறைந்தபட்சம் இரண்டிலாவது உச்சபட்ச அளவிலான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாதகமான முடிவுகளைப் பெற்றிருக்க வேண்டும்.
- இதுதவிர, உலக சீனியர் சாம்பியன் ஷிப், உலக ஜூனியர் சாம்பியன்ஷிப், உலக மகளிர் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வாகை சூடும் பட்சத்தில், மேற்கண்ட தகுதிகளை எட்டாமலேயே நேரடியாக கிராண்ட் மாஸ்டராகலாம்.
- ஒரு முறை கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை எட்டும் பட்சத்தில் அது வாழ்நாளுக்கும் தொடரும். பட்டத்தைத் தொடர்ந்து தக்க வைக்க நடைமுறைகள் ஏதும் கிடையாது.
- ஆனாலும், சம்பந்தப்பட்ட போட்டியாளர் ஏதேனும் ஒரு போட்டியில் முறைகேடுகளில் ஈடுபட்டதாகத் தெரியும் பட்சத்தில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பறிக்கப்படும்.

## ஒரே பாலின ஜோடி தத்தெடுப்பது

- இந்தியாவில் ஓரினச் சேர்க்கை குற்றமல்ல என கடந்த 2018ம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனாலும், ஒரே பாலின திருமணங்கள் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.
- இந்தியாவில் தத்தெடுப்பதை பாலியல் அடிப்படையில் சட்டம் தடை செய்யவில்லை.
- எந்த ஒரு நபரும் இந்து தத்தெடுப்பு, பராமரிப்பு சட்டம் மற்றும் சிறார் நீதிச் சட்டத்தின்கீழ் தத்தெடுக்கலாம். ஆனால், ஒரே பாலின ஜோடிகள் தத்தெடுப்பதற்கு இடமளிக்கும் சட்டம் எதுவும் இல்லை.

- எல்ஜிபிடிக்யூ ஜோடிகள் ஒரு பெற்றோராக இல்லாமல், தனி நபராக ஒன்றிய தத்தெடுப்பு மறு ஆய்வு ஆணையத்தில் விண்ணப்பித்து, குழந்தையை தத்தெடுக்கலாம்.
- இந்த விஷயத்தில், ஒரே பாலின திருமணங்கள் சட்டப்பூர்வமாக்கப்பட்டால் மட்டுமே எல்ஜிபிடிக்யூ ஜோடிகளுக்கு எதிரான பாகுபாடு என்பது முடிவுக்கு வரும் என்றார்.

## வானிலை நிலவரம்

- வளிமண்டலத்தில் நிலையற்ற தன்மையை பருவநிலை மாற்றம் அதிகரித்துள்ளது.
- இது வெப்பச்சலனத்தால் இடி, மின்னல், பலத்த மழை அதிகரிக்க வழிவகுத்துள்ளது.
- அரபிக் கடலில் புயல்களின் கடுமையும் அதிகரித்து வருகின்றன. இதுபோன்ற தீவிரமான வானிலை நிகழ்வுகள் அடிக்கடி ஏற்படுவது அதிகரித்துள்ளது.
- பருவநிலை மாற்றத்தால் உலகம் முழுவதும் வானிலை நிலவரத்தை கணிப்பது கடினமாகியுள்ளது.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் கூடிய வெவ்வேறு வண்ணங்களில் அந்த முன்னறிவிப்புகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, பச்சை வடிவத்தில் முன்றிவிப்புகள் வழங்கப்பட்டால் வானிலை பாதிப்பு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை.
- மஞ்சள் வடிவத்தில் முன்னறிவிப்புகள் வழங்கப்பட்டால் அடுத்த நிலவரம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.
- ஆரஞ்சு வடிவத்தில் முன்னறிவிப்புகள் இருந்தால் தயாராக இருக்க வேண்டும்.
- சிவப்பு வண்ணத்தில் இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த செயல்பாடு 2025-ஆம் ஆண்டுக்குள் மேலும் துல்லியமாகவும், ஆற்றல் வாய்ந்ததாகவும் மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இமயமலையில் ஒரு மணி நேரத்தில் 5 செ.மீ அல்லது அதற்கு அதிகமான திடீர் பெருமழை சம்பவங்கள் அதிகரிப்பதாக இந்திய வெப்பமண்டல ஆய்வு நிறுவனத்தின் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. இதுவும் சேதத்தை ஏற்படுத்தக்கூடும்.

## விடைவெறும் வேளையில்....?

- மக்களவை தனது 48% நேரமும், மாநிலங்களவை 44% நேரமும்தான் செயல்பட்டன என்று தெரிகிறது. 100% செயல்பாடாக இல்லாவிட்டாலும்கூட, அமர்வு நேரத்தில் சரிபாதி கூட இரு அவைகளும் செயல்படவில்லை என்பது வேதனையளிக்கிறது.
- நடந்து முடிந்திருக்கும் மழைக்கால கூட்டத் தொடருக்கு வரலாற்று முக்கியத்துவம் இருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இப்போதைய நாடாளுமன்ற கட்டடத்தில் நடக்கும் கடைசிக் கூட்டத் தொடராக இது இருக்கக்கூடும்.
- எட்வின் லுட்வினும், ஹெர்பர்ட் பேக்கரும் வடிவமைத்து எழுப்பிய வட்ட வடிவமான பிரம்மாண்ட நாடாளுமன்ற கட்டடம் விரைவிலேயே வரலாற்றின் பக்கங்களுக்குத் தள்ளப்படக்கூடும்.

## இந்தியாவில் பாலின இடைவெளி

**பாலின சமத்துவம் வழங்குவதில் இந்தியா எவ்வளவு மோசமாக உள்ளது?**

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) வெளியிட்ட பாலின சமத்துவத் தரவரிசையில் இடம்பெற்றுள்ள 146 நாடுகளில் இந்தியா 135ஆவது இடத்தில் உள்ளது (2022).
- நேபாளம், வங்கதேசம், மியான்மர் (பர்மா), பூடான், சீனா, இலங்கை ஆகிய இந்தியாவின் மற்ற அண்டை நாடுகள் சிறந்த தரவரிசை நிலைகளைக் கொண்டுள்ளது.
- தாலிபான்கள் ஆளும் ஆப்கானிஸ்தானைவிட இந்தியா 11 இடங்கள் மட்டுமே மேலே உள்ளது.
- இது மிகவும் கவலைக்குரியது. ஏனெனில், ஆறு ஆண்டுகளுக்கு முன்பு 2016-ல், இந்தியா 87ஆவது இடத்தில் இருந்தது.
- WEF-இன் கூற்றுப்படி, இந்தியாவை உள்ளடக்கிய தெற்காசிய மண்டலத்தில் பாலின இடைவெளியைக் களைவதற்கு சுமார் 200 ஆண்டுகள் தேவைப்படலாம்.

**இடைவெளி ஏன் அதிகரிக்கிறது?**

- பெண்கள் மத்தியில் இருக்கும் அரசியல் அதிகாரத்தைப் பொறுத்தவரை உலகளவில் இந்தியா தற்போது 48ஆவது இடத்தில் உள்ளது. இது நல்ல அம்சமாகத் தோன்றலாம்.
- ஆனால் 2016இல் இந்தியா உலகளவில் ஒன்பதாவது இடத்திலிருந்து, 2017இல் 15 ஆவது இடத்துக்கும், 2018இல் 19 ஆவது இடத்துக்கும், 2021இல் 51ஆவது இடத்துக்கும் சரிந்தது.

- கடந்த 50 ஆண்டுகளாக மாநிலத்துக்கான தலைமைப் பதவியில் பெண்கள் பணியாற்றிய ஆண்டுகளின் அளவு குறைந்துவருவதால், அரசியல் அதிகாரமளித்தலுக்கான மதிப்பெண்கள் இந்தியாவுக்கு வெகுவாகக் குறைந்துள்ளன.

**எந்த அளவு கோல்களில் இந்தியா மோசமாக உள்ளது?**

- உடல்நலம் – உயிர்வாழ்தல், பொருளாதாரப் பங்கேற்பு – வாய்ப்புகள் ஆகிய தரவரிசையில் இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது.
- இந்த இரண்டு அளவுருக்களிலும், மொத்தம் உள்ள 146 நாடுகளில் இந்தியா 143ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.
- WEF அறிக்கையின்படி, குழந்தை பிறப்பில், இருக்கும் குறைந்த பாலின விகிதம் காரணமாக, உடல்நலம்–உயிர்வாழ்தல் தரவரிசையில் பின்தங்கி உள்ளது.
- சமீபத்திய தேசியக் குடும்பநல சுகாதாரக் கணக்கெடுப்பின்படி (NFHS), கடந்த ஐந்து ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளின் பாலின விகிதம் 1,000 ஆண்களுக்கு 929 பெண்கள் என்கிற அளவில் உள்ளது.
- இருந்தாலும், உலக சுகாதார அமைப்பு (WHO), குழந்தை பிறப்பில் இயற்கையான பாலின விகிதம் ஒவ்வொரு 1,000 ஆண்களுக்கும் 952 பெண்கள் என்று மதிப்பிட்டுள்ளது.
- பொருளாதாரப் பங்கேற்பு வாய்ப்புகள் என்று வரும்போது, தொழிலாளர்கள் கணக்கெடுப்பின் 2020–21 ஆண்டு அறிக்கையின்படி, இந்தியத் தொழிலாளர்களில் பெண்களின் பங்கேற்பு விகிதம் வெறும் 23.15 சதவீதமாக உள்ளது. மாறாக, ஆண்களின் பங்கேற்பு 57.75 சதவீதமாக உள்ளது.
- 2019–21 கணக்கெடுப்பின்படி, கணக்கெடுக்கப்பட்ட பெண்களில் 25.2 சதவீதம் பேர் வேலையில் இருந்தனர். அதே நேரத்தில், கணக்கெடுக்கப்பட்ட ஆண்களில் 74.8 சதவீதம் பேர் வேலையில் இருந்தனர்.

**இந்தச் சரிவைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?**

- மக்களவை, அனைத்து மாநில சட்டப்பேரவைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க முன்மொழியும் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுவது இந்த நிலையை மேம்படுத்த உதவும்.
- அனைத்துப் பணிகளிலும் பாலின ஊதிய இடைவெளியைச் சீரமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
- உலக சமத்துவமின்மை, அறிக்கை 2022இன் மதிப்பீட்டின்படி, இந்தியாவில், தொழிலாளர் வருமானத்தில் ஆண்கள் 82 சதவீதம் சம்பாதிக்கிறார்கள்.
- அதே வேளை, பெண்கள் 18 சதவீதம் மட்டுமே சம்பாதிக்கிறார்கள். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமூக–பொருளாதார நலன்கள் கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட பாலின வரவு–செலவுத் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

**பாலின சமத்துவத்தில் சிறப்பாகவும் மோசமாகவும் செயல்பட்ட நாடுகள் எவை?**

- ஐஸ்லாந்து, பின்லாந்து, நார்வே, நியூசிலாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.
- பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் முறையே 145, 146 ஆகிய இடங்களைப் பிடித்து, கடைசி இரண்டு இடங்களில் உள்ளன.

## தண்டோரா தேவையில்லை

- தண்டோரா என்றும் தமுக்கு என்றும் அழைக்கப்படும் தோளில் தொங்கவிட்டபடி முழக்கப்படும் தோல் வாத்தியமானது, வரி வசூலித்தல் உள்ளிட்ட அரசின் முக்கிய அறிவிப்புகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக மன்னராட்சிக் காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- பழங்காலத்தில் அரசின் செய்திகளை மக்களிடம் கொண்டுசேர்க்க இதுவே முக்கியமான தகவல் தொடர்பு வழிமுறையாக இருந்து வந்தது. இதற்காகவே தனி அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்.
- நாளேடுகள், வானொலி, தொலைக்காட்சி என்று அரசின் செய்திகளை இன்று மக்களிடம் உடனுக்குடன் கொண்டு சேர்ப்பதற்கான வாய்ப்புகள் பெருகிவிட்டாலும், தண்டோரா போடும் வழக்கம் ஒரு சில இடங்களில் தொடரவே செய்கிறது.
- குறிப்பாக, இயற்கைப் பேரிடர் காலங்களில், நீர்நிலைகளின் கரையிலிருப்போரைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்வதற்கு ஊரக வருவாய்த்துறை அலுவலர்கள் தண்டோரா போடும் வழக்கத்தைப் பின்பற்றி வருகிறார்கள்.
- மக்களிடம் செய்திகளைச் சொல்வதற்கு ஒலிபெருக்கி போன்ற மின்சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்வது இன்று எளிதாகியுள்ளது.

## இந்தியா மருத்துவ வளர்ச்சி

- சுதந்திரத்திற்குப் பிந்தைய இந்தியாவில் கிராமப்புற, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி, 30,813 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.
- 1947இல் இந்தியாவில் 19 மருத்துவக் கல்லூரிகளே இருந்தன. இப்போது 612 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன.
- மத்திய அரசின் அண்மைக்காலப் புள்ளிவிவரப்படி, நாட்டில் 13 லட்சம் நவீன மருத்துவர்கள், 34 லட்சம் செவிலியர்கள் இந்திய மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்திருக்கின்றனர்.
- இந்தியாவில் இளநிலை மருத்துவப் படிப்புக்கு 2014 ஆம் ஆண்டு வரை 51,348 இடங்களே இருந்தன. இப்போது அது 92,927 இடங்களாகி இருக்கின்றன.
- அதுபோல், முதுநிலை மருத்துவப் படிப்புக்கு 2014 வரை 31,185 இடங்களே இருந்தன. இப்போது அது 42,077 இடங்களாகி இருக்கின்றன.

**மருத்துவ முன்னெடுப்புகள்**

- உலக சுகாதார நிறுவனம் 1,000 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் எனச் சொல்லியிருக்கிற நிலையில், இந்தியாவில் 834 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார்.
- அதே நேரத்தில், உலக நாடுகளில் கியூபாவிலும் ஸ்வீடனிலும் 1000 பேருக்கு 5 மருத்துவர்கள் இருக்கின்றனர்.
- இந்தியா சுதந்திரம் பெறும் போது மக்களின் சராசரி ஆயுட்காலம் 32 ஆண்டுகள்தான். அது இப்போது 70 ஆண்டுகளாக அதிகரித்திருக்கிறது.
- காரணம், அந்தக் காலத்தில் காலரா, மலேரியா, பிளேக் போன்ற கடுமையான மரணத் தொற்றுகளுக்குச் சிகிச்சை கிடைக்காமல் போனது. சுற்றுப்புறச் சுகாதாரம் படுமோசமாக இருந்தது.
- இந்தியா சுதந்திரம் பெற்ற போது நாட்டில் ஆண்டுக்கு 2,22,000 பேர் காசநோயால் இறந்து வந்தனர். இதைக் கட்டுப்படுத்தத் இந்தியாவில் 'தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்' (NTCP) 1962-இல் தொடங்கப்பட்டது.
- இதன்படி, காசநோய்க்கெனச் சிறப்பு மருத்துவமனைகளும் சானடோரியங்களும் நாடு முழுவதிலும் தொடங்கப்பட்டன.
- இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 60 சதவீதம் பேர் இந்தியாவில் இருந்தனர்.
- 1995 இல் தொடங்கப்பட்ட இளம்பிள்ளைவாத ஒழிப்பு இயக்கம் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து நாடு முழுவதிலும் குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாதத் தடுப்புச் சொட்டு மருந்து கொடுத்து, இந்த நோய்க்கு முடிவு கட்டியது. 2014 இல் இளம்பிள்ளைவாதம் இல்லாத இந்தியாவானது.

**குறைந்த குழந்தைகள் இறப்பு**

- ஒரு நாட்டின் மருத்துவ வளர்ச்சியைக் கணிக்கும் அளவீடுகள் குழந்தைகளின் இறப்பு விகிதமும் கர்ப்பிணிகளின் இறப்பு விகிதமும்தான்.
- 1950 இல் இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு 1,000 குழந்தைகளில் கிட்டத்தட்ட 800 பேர் வரை ஒரு வயதுக்குள் இறந்து கொண்டிருந்தனர்.
- 75 ஆண்டுகாலச் சுதந்திரத்திற்குப் பிறகு அந்த எண்ணிக்கை 27 ஆகக் குறைந்துள்ளது. காரணம், தாய்ப்பால் விழிப்புணர்வும், தடுப்பூசிகளின் மகிமையும்.

**மேம்பட்ட மருத்துவச் சுற்றுலா**

- இந்தியாவில் பெருநகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் மேல் நாடுகளுக்கு இணையான மருத்துவத் தொழில்நுட்பங்கள் மேம்பட்டு வருகின்றன.
- நோய்க்கணிப்பில் 'செயற்கை நுண்ணறிவும்' சிகிச்சையில் 'ரோபாட்டும்', 'நானோ தொழில்நுட்ப'மும் புகுந்துள்ளன.
- இதனால் சிகிச்சைகளின் தரம் முன்னேறிய நாடுகளுக்குச் சமமாக இருக்கிறது. குறிப்பாக, இதயநோய்களுக்கான சிகிச்சைகள், செயற்கைக் கருத்தரிப்புச் சிகிச்சைகள், உறுப்பு மாற்றுச் சிகிச்சைகள் ஆகியவற்றைச் சொல்லலாம்.
- இந்தியாவில் இவற்றுக்கு ஆகும் செலவு வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது பத்தில் ஒரு பங்குக்கும் குறைவானதே. இதன் பலனால், 'மருத்துவச் சுற்றுலா' (Medical Tourism) 200 சதவீதம் அதிகரித்துள்ளது.

## ஒலிம்பிக் தங்க வேட்டை திட்டம்

- உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் மற்றும் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வோரை உருவாக்க ஒலிம்பிக் தங்க வேட்டை என்ற திட்டம் ரூ.25 கோடியில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.
- சர்வதேச மற்றும் தேசிய அளவில் தங்கப்பதக்கம் வென்று பெருமை சேர்த்த வீரர்கள், வீராங்கனைகள் 1,073 பெருமை சேர்க்கும் விதத்தில் ரூ.26.85 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.
- இதில் அதிக நிதி செஸ் வீரர்களுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது.
- வீரர்களுக்கு அதிநவீனக் கருவிகள் வழங்குதல் மற்றும் பயிற்சி அளிக்கும் திட்டத்தில் 50 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு, 4 ஆண்டுகள் அவர்களை மெருகேற்ற ரூ.60 கோடி செலவு செய்யப்படும்.
- கராத்தே, வாள் சண்டை உள்ளிட்டவற்றில் பதக்கம் பெறுபவர்களுக்கும் சிறப்பு நிதியுதவி வழங்கப்படும்.
- தமிழகத்தில் அனைத்து சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் மினி விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.
- வடசென்னையிலும், கோபாலபுரத்திலும் குத்துச்சண்டை அகாடமிகள் நிறுவப்பட உள்ளன.
- தமிழர்களின் வீர விளையாட்டான ஏறு தழுவுதலுக்கு, பிரம்மாண்ட விளையாட்டுக் களம் அமைக்கப்பட உள்ளது.
- சிலம்பாட்டத்துக்கு தேசிய அங்கீகாரம் பெற முயற்சி மேற்கொண்டுள்ளோம். சிலம்பாட்ட வீரர்களுக்கு கல்வி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

## 5 ஜி

- 2ஜி, 3ஜி, 4ஜி தொழில்நுட்ப சேவையைத் தொடர்ந்து 5ஜி தொழில்நுட்பம் இந்தியாவில் வர உள்ளது.
- இணையசேவையின் வேகத்தை பன்மடங்கு கூட்டுவது மட்டுமின்றி, செயற்கை நுண்ணறிவு, விர்ச்சுவல் ரியாலிட்டி, ஆகுமெண்டட் ரியாலிட்டி என வரவிருக்கும் உலகத்துக்கு தேவையான வேகம் அளிக்க 5ஜி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.
- ரிலையன்ஸ் ஜியோ, பார்தி ஏர்டெல், வோடஃபோன் ஐடியா, அதானி டேட்டா வொர்க்ஸ் லிமிடெட் ஆகிய 4 நிறுவனங்கள் இந்த ஏலத்தில் பங்கேற்றன. இதில் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமாக பிஎஸ்என்எல் பங்கேற்கவில்லை.
- மொத்தம் 72,098 மெகா ஹெர்ட்ஸ் (72 ஜிகா ஹெர்ட்ஸ்) விற்பனைக்கு தயாராக இருந்தது. இதன் மதிப்பு ரூ.4.3 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டிருந்தது.
- 7 நாட்களாக நடைபெற்ற ஏலத்தில் 51,236 மெகாஹெர்ட்ஸ் மட்டும் ரூ.1 லட்சத்து 50 ஆயிரத்து 173 கோடிக்கு விற்பனையானதாக மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

## பீஹாரில் பாஜக - ஜேடியு கூட்டணி முறிந்தது

- ஜேடியு, ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி), காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உட்பட 7 கட்சிகளின் கூட்டணி அரசு இன்று பதவியேற்கிறது.
- முதல்வராக நிதிஷ்குமாரும் துணை முதல்வராக தேஜஸ்வி யாதவும் பதவியேற்க உள்ளனர்.
- பாஜக நமது கட்சியை அவமதித்துவிட்டது. ஐக்கிய ஜனதா தளத்தை உடைக்க முயற்சி செய்தது. எனவே பாஜக உடனான கூட்டணியை முறிக்கிறோம். முதல்வர் பதவியை ராஜினாமா செய்கிறேன்.
- நிதிஷ்குமாரும், கம்சனும் ஒரே குணம் உடையவர்கள். தேவகியின் குழந்தைகளை கம்சன் கொலை செய்தார்.

### ஜேடியு, ஆர்ஜேடி

- பீஹாரில் ஐக்கிய ஜனதா தளம் (ஜேடியு), ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி), காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி அமைத்துள்ளன.
- 8வது முறையாக பீஹார் முதல்வராக நிதிஷ்குமார் நேற்று பதவியேற்றார்.
- லாலுவின் மகன் தேஜஸ்வி யாதவ் துணை முதல்வராக பதவியேற்றுக் கொண்டார்.
- 21 மாதங்கள் ஆட்சிக்குப் பிறகு பாஜக உடனான கூட்டணியை நிதிஷ்குமார் முறித்தார். அன்றைய தினமே முதல்வர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, லாலுவின் ராஷ்டிரிய ஜனதா தளம், காங்கிரஸ், சிபிஐ (எம்.எல்.) உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்தார்.
- ஆளுநர் பாகுசவுகானை சந்தித்து புதிய ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.
- ஆளுநர் பாகுசவுகான் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

## முதல் பிரதமர்

- ஜவஹர்லால் நேரு 1952ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி சார்பில் முதல் தேர்தலில் வெற்றி பெற்று, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் என்கிற சிறப்பையும் பெற்றார்.
- குழந்தைகளின் அடிப்படைக் கல்வி, பெண்கள் முன்னேற்றம், விவசாயம், தொழிற்சாலை ஆகிய துறைகளை முன்னேற்றினார்.
- அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS), இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் (IIT), இந்திய மேலாண்மை நிறுவனங்கள் (IIM) உட்படப் பல உயர் கல்வி நிறுவனங்களை நிறுவினார்.
- உலக நாடுகளை ஒன்றுசேர்த்து அணிசேரா இயக்கத்தை உருவாக்கியவர்களில் முதன்மையானவர். 17 ஆண்டுகள் பிரதமராக இருந்து இந்தியாவை வழிநடத்தினார்.

## 44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட்

- செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஓபன் பிரிவில் உஸ்பெகிஸ்தான் தங்கப் பதக்கமும், அர்மேனியா வெள்ளிப் பதக்கமும், இந்தியா பி அணி வெண்கலப் பதக்கமும் வென்றது.
- மகளிர் பிரிவில் உக்ரைன் தங்கப் பதக்கமும், ஜார்ஜியா வெள்ளிப் பதக்கமும், இந்தியா ஏ அணி வெண்கலப் பதக்கம் வென்றன. மகளிர் பிரிவில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதன்முறையாகும்.

**ஹங்கேரி நாட்டிடம் ஃபிடே கொடி**

- சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் கொடியானது (ஃபிடே) 45-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்தவுள்ள ஹங்கேரி நாட்டிடம் வழங்கப்பட்டது.

## தனிநபர் பிரிவில் டி.குகேஷ் நிஹால் சரினுக்கு தங்கம்

- தனிநபர் பிரிவில் 2 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 4 வெண்கலம் என 7 பதக்கங்களை இந்திய வீரர்கள் வென்றனர்.
- ஓபன்பிரிவில் இந்திய பி அணியின் டி.குகேஷ் முதல் போர்டில் 11 சுற்றுகள் விளையாடி 9 புள்ளிகள் குவித்து முதலிடம் பிடித்து தங்கம் வென்றார்.
- 2-வது போர்டில் விளையாடி நிஹால் சரின் 10 சுற்றுகளில் 7.5 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் பெற்றார்.
- அர்ஜுன்எரிகைசி 3-வது போர்டில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார். ஆர்.பிரக்ஞானந்தா (3-வது போர்டு), ஆர்.வைஷாலி (3-வது போர்டு) தானியா சச்தேவ் (3-வது போர்டு), திவ்யாதேஷ்முக் (ரிசர்வ் போர்டு) ஆகியோர் தனிநபர் பிரிவில் வெண்கலம் வென்றனர்.

## சர்வதேச அமைதி ஆணையம்

- சர்வதேச அமைதி ஆணையத்தில் ஐ.நா.பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ், போப் பிரான்சிஸ், இந்திய பிரதமர் மோடி ஆகிய 3 பேரை நியமிக்க வேண்டும்.
- குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு இந்த ஆணையம் செயல்பட வேண்டும். உலகின் எந்த மூலையிலும் போர் நடைபெறக்கூடாது.
- போரினால் சர்வதேச பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. கோடிக்கணக்கான மக்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே தள்ளப்படுகின்றனர். இஸ்ரேல்-பாலஸ்தீனம் உள்ளிட்ட பல்வேறு தீராத பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

## தலைமை நீதிபதியாக யு.யு.லலித்

- நாட்டின் 49வது தலைமை நீதிபதியாக உதய் உமேஷ் லலித்தை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நியமித்துள்ளார்.
- 2014-ம் ஆண்டு ஆகஸ்ட் 13-ம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறு நேரடியாக நியமிக்கப்பட்டவர்களில் எஸ்.எம்.சிக்ரிக்கு பிறகு தலைமை நீதிபதியாக யு.யு.லலித் பதவியேற்கிறார்.
- மகாராஷ்டிர மாநிலம் சோலாப்பூரில் யு.யு.லலித் 1957 நவம்பர் 9-ம் தேதி பிறந்தார்.

## பானிப்பட்டில் 2ஜி எத்தனால் ஆலை

- ஹரியானா மாநிலம் பானிப்பட் நகரில் ரூ.900 கோடி மதிப்பில் 2-வது தலைமுறைக்கான எத்தனால் உற்பத்தி ஆலை உருவாக்கப்பட்டுள்ளது.
- பானிப்பட்டில் உருவாக்கப்பட்டுள்ள பயோ-எரிபொருள் ஆலையால் இனிவரும் காலங்களில் இயற்கை பாதுகாக்கப்படும். (Waste-to-wealth)

- பயோ-எரி பொருளை நாம் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்.
- பயோ-எரிபொருள் ஆலை பயன்பாட்டுக்கு வந்தபின், வயல்களில் அறுவடைக்குப் பின்னர் வரும் வைக்கோலை இங்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும்.
- இந்த திட்டம் சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிபொருளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதோடு விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும்.
- இந்த ஆலை அரிசி வைக்கோலை புதுப்பிக்கத்தக்க எரிபொருளாக மாற்ற உதவும்.

## மோர்கன் ஸ்டான்லி

- நடப்பு நிதி ஆண்டில் ஆசிய நாடுகளில் வலுவான பொருளாதாரம் கொண்ட நாடாக இந்தியா திகழும் என்று அமெரிக்க நிதி நிறுவனமான மோர்கன் ஸ்டான்லி தெரிவித்துள்ளது.
- நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும் என்று அந்நிறுவனம் கணிப்பு வெளியிட்டுள்ளது.
- குறைவான நிறுவன வரி, உற்பத்தி ஊக்கத் திட்டம், வேலைவாய்ப்பில் உள்ள இளைஞர்களின் எண்ணிக்கை, உள்நாட்டுத் தேவை ஆகியவை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு காரணங்களாக அமைந்துள்ளதாக அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.
- இந்தியாவில் தொழில் முதலீடுகள் நம்பிக்கைத் தருவதாகவும், நிறுவனங்களின் நிதி நிலைமை ஆரோக்கியமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

**கிசான் ட்ரோன்**

- வான்வழி புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு, நில ஆய்வு, கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளுக்கு ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- விவசாயப்பணிகளிலும் ட்ரோன் பயன்பாட்டை அதிகரிக்க மத்திய அரசு முனைப்பு காட்டி வருகிறது.
- வெளிநாட்டு ட்ரோன்களை இறக்குமதி செய்ய தடை விதித்து, உள்நாட்டு ட்ரோன்களின் உற்பத்தியைப் பெருக்கும் பணிகளில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது.
- பயிர் வகைகளை மதிப்பீடு செய்தல், நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், பூச்சிக்கொல்லி மற்றும் ஊட்டச்சத்து மருந்து தெளிப்பு போன்றவற்றுக்கு கிசான் ட்ரோன்கள் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- வருங்காலத்தில் விளைபொருட்களை வயல்களில் இருந்து, ட்ரோன் மூலம் சந்தைக்கு அனுப்பவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- கிசான் ட்ரோன் பயன்பாட்டை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ரூ.10 லட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது.
- எஸ்.சி.எஸ்.டி. பிரிவினர், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ட்ரோன் வாங்க மத்திய அரசு 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை மானியம் வழங்கி வருகிறது.
- மற்ற விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.4 லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது.
- கடன் திட்டத்துக்காக கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் கிசான் ட்ரோன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் இந்த ட்ரோனை ஆய்வு செய்து, அந்நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.
- 2024-ம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கிசான் ட்ரோன்களை தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கருடா ஏரோஸ்பேஸ் நிறுவனர் அக்னிஷ்வர் ஜெயபிரகாஷ் தெரிவித்தார்.

## மின்சார திருத்த மசோதா

- இந்திய அரசியலமைப்பு சட்டம் நமது அரசை 'மக்கள் நல அரசு' என்றுதான் அடையாளம் காட்டுகிறது.
- 2003-ம் ஆண்டு ஜூன் மாதம் அறிமுகமான மின்சார சட்டம் 18 பாகங்களில் 185 பிரிவுகளில் தேசிய மின் கொள்கை-திட்டம், மின் உற்பத்தி, உரிமம் வழங்குதல், மின்சாரம் பரிமாற்றம், மின் வினியோகம், மின் கட்டணம், மின்வாரிய பணிகள், ஒழுங்குமுறை ஆணையம் உள்ளிட்ட அத்தனை அம்சங்களையும் தெளிவாக வரையறுத்தது.
- மின்சார திருத்த சட்டம் 2022 என்கிற ஒன்றை மக்களவையில் அறிமுகப்படுத்தியது. எதிர்க்கட்சிகளின் தீவிர எதிர்ப்பின் காரணமாக இந்த மசோதா இப்போது நாடாளுமன்ற நிலைக்குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.
- மின் வினியோகத்தில் தனியாருக்கு தாராளமாக உரிமம் வழங்கி, அவர்களை சுதந்திரமாக செயல்பட வழிக்கோலுகிறது.
- இதன் மூலம் ஒரே பகுதியில், உரிமம் பெற்ற தனியார் மின் வினியோகிப்பாளர்கள் பலர் இருப்பார்கள். பொதுமக்கள் அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப எவரிடம் இருந்தும் மின்சாரம் பெற முடியும்.
- அரசியலமைப்பு சட்டப்படி, மின்சாரம் மத்திய-மாநில அரசுகள் செயல்படக்கூடிய பொதுப்பட்டியலில் இருக்கிறது.

- வரவிருக்கும் திருத்த சட்டம், மாநில அரசின் அதிகாரத்தில் அளவுக்கு மீறி உள்ளே நுழைகிறது. நாளடைவில் மாநில மின் வாரியங்களை விழுங்கி 'விடுகிற அபாயம்' நிறையவே இருக்கிறது. கூட்டாட்சித் தத்துவத்துக்கு உலை வைக்கிற இந்த முயற்சி நீண்ட காலத்தில் பெரும் தீமையாகவே முடியும்.
- கடும் நிதி நெருக்கடிக்கு இடையிலும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள், விவசாயிகளுக்கு ஆதரவாக இலவச மின்சாரம் வழங்கி வருகிறது.
- மின்துறை தனியார் மயமானால் இந்த நிலை தொடருமா? ஏற்கனவே, 'இலவசங்கள் கூடாது. இலவசங்கள் நமது பொருளாதாரத்தை சீரழித்து விடும்' என்று குரல்கள் வலுவாக கேட்கின்றன.
- இந்தச் சூழ்நிலையில் மின் வினியோகத்தில் ஆதிக்கம் செலுத்த முயலும் தனியார் நிறுவனங்கள், விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருப்பார்களா? அல்லது தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்வதில் குறியாக இருப்பார்களா…?
- இலவசங்கள் மோசமானவை அல்ல. சமூகப் பொருளாதார சமமின்மை, பெரும் தீயாய் மாறி அமைதிக்குக் குந்தகம் ஏற்படுத்தாமல் தடுத்து காத்து கொண்டு இருப்பவை இலவசங்கள்தான்.
- மின் கசிவு, மின் திருட்டு, மின் நுகர்வோர் சிலரின் முறையற்ற செயல்பாடுகள் ஆகியவற்றில் தீவிர கண்காணிப்பு, கடுமையான வழிமுறைகள் ஆகியவற்றை கொண்டு வருவதன் மூலம் மின் வாரியங்களின் நிதி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும்.

## சாண் ஏறினால் முழம் சறுக்கும்

- அணைகளே 'இந்தியாவின் நவீன ஆலயங்கள்' என்ற ஜவஹர்லால் நேருவின் பெருமிதக் குரலில் தொடங்கிய அது 'எமக்குப் பேரணைகளே வேண்டாம்' என்கிற மக்களின் குரலில் வந்து நிற்கிறது.
- 1972இல் தான் உலகின் முதலாவது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற மாநாட்டில் அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி பேசினார்.

**மக்கள் இயக்கங்கள்**

- 1973-இல் இன்றைய உத்தராகண்ட் மாநிலத்தில் மரங்களை வெட்டுவதற்கு எதிராக, எளிய மலைவாழ் பெண்கள் புகழ்பெற்ற 'சிப்கோ' இயக்கத்தைத் தொடங்கினர்.
- அதுவே, விடுதலைக்குப் பிறகான முதல் சுற்றுச்சூழல் போராட்டம்.
- அடித்தள மக்களால் தொடங்கி வைக்கப்பட்ட சூழலியல் விழிப்புணர்வு, அடுத்து அறிவுசார் வட்டத்தையும் எட்டியதன் அடையாளமே கேரளத்தின் அமைதிப் பள்ளத்தாக்குப் போராட்டம்.
- நீர் மின்சாரத்துக்காகக் காடுகளை மூழ்கடித்து, அணை கட்டுவதை எதிர்த்து 1978இல் அது தொடங்கியது.
- சிப்கோ போராட்டம் போன்றே அதுவும் வெற்றிபெற்று, 1985இல் அப்பகுதி தேசியப் பூங்காவாக மாறியது.
- காடழிப்புக்கு எதிராக 1983இல் கர்நாடகத்தில் தொடங்கிய அப்பிகோ போராட்டமும் வெற்றியே. ஆனால், 1985 இல் தொடங்கிய சர்தார் சரோவர் அணை எதிர்ப்புப் போராட்டம் பின்னடைவைச் சந்தித்தது.
- இன்று நர்மதையின் நடுவே எழுந்துள்ள அம் மாபெரும் அணை, பழங்குடிகளின் வாழ்விடங்கள் பலியானதன் சாட்சியாகும்.

**இந்திராவின் முன்னெடுப்பு**

- சூழலியல் ஆர்வம் கொண்ட முதலும் கடைசியுமான பிரதமர் அவர் ஒருவரே. சுற்றுச்சூழல் அமைச்சகத்தை முதன் முதலாக உருவாக்கியவர்; முதல் சுற்றுச்சூழல் அமைச்சரும் அவரே. வனப் பாதுகாப்புச் சட்டம் 1980 அவரது ஆட்சியிலேயே நிறைவேறியது.
- அரசியல் கட்சிகளின் வரலாற்றில் முதன்முறையாகத் தேர்தல் அறிக்கையில் (1980) 'சூழலியல்' என்ற சொல்லை இடம்பெறச் செய்தவரும் அவரே.
- 1984 போபால் யூனியன் கார்பைடு நச்சுவளி விபத்து வரை காத்திருக்க நேர்ந்தது. அக்கொடிய நிகழ்வின் உயிரிழப்புக்குப் பிறகே, 'சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986' இயற்றப்பட்டது.
- 1873 இல் ஒன்றுபட்ட மதராஸ் மாகாணத்தில் யானைகளைப் பாதுகாக்க ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1953 இல் ஆந்திர மாநிலம் தனியே பிரிந்து சென்றதும் அம்மாநிலத்தில் யானைகளின் எண்ணிக்கை குறைந்தது. அது குறித்துக் கருத்துரைத்த இந்திரா, ஆந்திராவில் சட்டம் பாதுகாக்கப்பட்டது – யானைகள் காணாமல் போயின என்றார்.

### சுற்றுச்சூழலின் நிலை

- 2014ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டில் மொத்தமுள்ள 180 நாடுகளில் 155 ஆவது இடத்தில் இருந்த நாம், 2018 இல் மேலும் கீழிறங்கி 177ஆவது இடத்துக்கு வீழ்ச்சியடைந்தோம்.

- சுற்றுச்சூழலை அழிக்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுவது இன்றும் நிறுத்தப்படவில்லை.
- முதன்மையான ஆறு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களையும் நீர்த்துப் போகச் செய்யும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

## ஒடிஸா மாடல்

- பருவநிலை மாற்றத்தின் காரணமாக ஒரு புறம் வறட்சியும், மற்றொருபுறம் எதிர்பாராத அடை மழையால் ஏற்படும் வெள்ளப் பெருக்குமாக இருப்பதால் இந்தியாவில் விவசாயத்திற்கு தேவையான அளவு தண்ணீர் விவசாயத்துக்கு கிடைப்பதில்லை என்கிற அவலம் தொடர்கிறதே தவிர, குறைந்தபாடில்லை.
- வேளாண்துறையில் இந்தியா எதிர்கொள்ளும் பருவநிலை சவால்களையும், இந்திய விவசாயிகளின் பிரச்சனைகளையும் கருத்தில் கொண்டு புதியதொரு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கிறது முதல்வர் நவீன் பட்நாயக்கின் தலைமையிலான ஒடிஸா அரசு.
- 2017-இல் முதல்வர் நவீன் பட்நாயக்கின் நேரடி முனைப்பில் உருவானது 'ஒடிஸா சிறுதானிய மிஷன்' திட்டம்.
- அதன் மூலம் ஒடிஸாவின் மலைவாழ் மக்கள் குடியிருக்கும் வனப்பகுதியில் பசுமைப்புரட்சி ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது.
- சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதே நேரத்தில் பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்வதும் அவசியம் என்பதை முதல்வர் நவீன் பட்நாயக் நன்றாகவே உணர்ந்துள்ளார்.
- மலைப்பகுதிகளில் வாழும் விவசாயிகள் தங்களது பாரம்பரிய தானியங்களைப் பயிரிடுவதன் மூலம் தங்களது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், சுற்றுச்சூழலையும் பாதுகாக்க முடியும் என்பதை அவர் புரிந்து கொண்டார்.
- 'ஒடிஸா சிறுதானிய மிஷன்' அந்த மாநிலத்தின் வேளாண் அமைச்சகத்தால் ஐந்து ஆண்டு பரிசோதனைத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் அவர்கள் அதிகமாக உட்கொள்ளும் சிறுதானியங்களை அதிக அளவில் பயிரிடுவது என்பதுதான் ஒடிஸா வேளாண்துயின் சிறுதானிய மிஷன் திட்டம்.
- மலைவாழ் மக்களின் சுகாதாரத்தையும், பொருளாதார வளர்ச்சியையும், வாழ்வாதாரத்தையும் இந்தத் திட்டத்தின் மூலம் உறுதிப்படுத்த முடியும் என்பதை அரசு விரைவிலேயே புரிந்து கொண்டது.
- பயிரிட்டதைவிட அதிக மகசூலை குறுகிய காலத்திலேயே அந்தத் திட்டம் அறுவடை செய்தது. சுற்றுச்சூழலைப் பாதுகாத்தது மட்டுமல்லாமல், நிலைத்த வளர்ச்சிக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்கிற இலக்கின் மூலம் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள முடியும் என்கிற ஐ.நா. சபையின் நோக்கத்துக்கு வலுசேர்ப்பதாக அமைந்தது ஒடிஸா அரசின் சிறுதானிய மிஷன் திட்டம்.
- அரசு தங்களுக்கு பின்னணியில் இருக்கிறது என்கிற உத்தரவாதம் விவசாயிகளை அதிக தண்ணீர் உறிஞ்சும் நெல் விவசாயத்திலிருந்து, தங்களது முன்னோர் பயிரிட்டு வந்த சிறுதானிய விவசாயத்துக்குத் திருப்பியிருக்கிறது.
- மலைவாழ் மக்கள் மீண்டும் தங்களது பாரம்பரிய உணவுப் பழக்கங்களுக்கு திரும்ப வழிகோலியிருக்கும் இந்த முன்மாதிரி திட்டம்.
- ஒடிஸாவின் பிற பகுதிகளிலும் ஊட்டச்சத்து மிக்க சிறுதானிய விவசாயத்தை ஊக்கப்படுத்தியிருக்கிறது.
- விவசாயிகளுக்கு, அதிலும் சிறுகுறு விவசாயிகளுக்கு வருமான உத்தரவாதத்தையும், கடன் சுமைகளில் இருந்து விடுதலையையும் வழங்கியிருக்கிறது. இது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் மீட்டெடுப்பதிலும் உதவுகிறது என்பது இன்னொரு வரவேற்புக்குரிய விளைவு.
- சிறு தானியங்கள் புல்வகையைச் சேர்ந்தவை. தனக்குத்தானே மகரந்தச் சேர்க்கை செய்து கொள்ளும் வகையைச் சேர்ந்தவை.
- எந்தவிதமான பருவச் சூழலிலும் தாக்குப்பிடித்து வளரக்கூடியவை. ஏனைய தானியப் பயிர்களைப் போல பூச்சித் தாக்குதலுக்கு இவை உள்ளாவதில்லை.
- கோதுமை, அரிசி போன்ற பயிர்களுக்குத் தேவைப்படுவது போல் அதிக அளவிலான இடுபொருள் தேவையும், தண்ணீர் தேவையும், பராமரிப்புத் தேவையும் இல்லாதவை.
- வலுவான வேர்கள் கொண்டவை என்பதால், புயல், மழை சூழலிலும்கூட தாக்குப்பிடிக்கக் கூடியவை. ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் போன்றவை சிறுதானிய விவசாயத்தில் பெரும்பாலும் தேவைப்படுவதில்லை. இதில் ஊடு பயிர்கள் மாற்றுப் பயிர்கள் போன்றவையும் சாத்தியமாகின்றன.
- குறைந்த மழைப்பொழிவு, அதிகரித்த வெப்பம் உள்ளிட்ட எல்லாவிதப் பருவங்களையும் எதிர்கொள்ளும் சிறுதானிய விவசாயம்.

- இரண்டு அல்லது மூன்று மாதப் பயிர்களாக இருப்பதால், குறைந்த அளவு தண்ணீரில் ஆண்டு முழுவதும் விவசாயத்தைத் தொடர முடியும், நல்ல மகசூலும் பெற முடியும்.
- சிறுதானிய விவசாய அதிக முதலீட்டிலான நீர்ப்பாசன கட்டமைப்புத் தேவையைக் குறைத்திருக்கிறது. நீர் மேலாண்மையும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி.
- ஒடிசா அரசு வெற்றிகரமாக முன்னெடுத்திருக்கும் சிறுதானியமிஷன் இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக வேண்டும்.

## இலவசம் வேறு; நலத்திட்டம் வேறு

- இலவசங்களை அறிவிக்கின்ற ஒரே காரணத்துக்காக அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.
- தேர்தல் சமயங்களில் அரசியல் கட்சிகள் இலவச அறிவிப்புகளை வெளியிடுவதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அஸ்வினி உபாத்யாய என்ற வழக்குரைஞர் அண்மையில் பொதுநல வழக்கு தொடர்ந்தார்.
- தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் இலவசங்களை அறிவிப்பது மிகவும் தீவிரமான பிரச்சனை. ஆனாலும், சட்டமியற்றும் அதிகாரத்தில் என்னால் தலையிட முடியாது.
- இலவசத்துக்கும் நலத்திட்டத்துக்கும் இடையே வேறுபாடு உள்ளது.
- இலவச திட்டத்தால் ஏற்படும் பொருளாதார இழப்பையும், நலத்திட்ட நடைமுறையையும் ஈடுசெய்ய வேண்டியது அவசியம்.
- அரசியல் கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்வது ஜனநாயக விரோதமான செயல் என்றார்.

## புளூ பிளேக் அந்தஸ்து

- சுதந்திரப் போராட்ட வீரரும் பொருளாதார நிபுணருமான தாதாபாய் நௌரோஜி தெற்கு லண்டனில் வாழ்ந்த இல்லத்துக்கு 'நீலத் தகடு' (புளூ பிளேக்) அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- பிரிட்டனில் உள்ள 'இங்கிலீஷ் ஹெரிடேஜ் சாரிடி' (ஆங்கில பாரம்பரிய அறக்கட்டளை) என்ற அமைப்பானது லண்டனில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களுக்கு 'நீலத்தகடு' என்ற அந்தஸ்தை வழங்கி வருகிறது.
- அந்தத் தகட்டில் "இந்தியாவின் தேசியவாதியும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருமான தாதாபாய் நௌரோஜி (1825-1917) வசித்த வீடு இது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- பிரிட்டனுக்கு 7 முறை பயணம் மேற்கொண்டுள்ளார் தாதாபாய் நௌரோஜி. லண்டனில் 30 ஆண்டுகளுக்கு மேலாக வசித்துள்ளார்.
- இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கிய நிலையில், 1897-ஆம் ஆண்டில் இந்த வீட்டுக்கு அவர் குடிபெயர்ந்தார்.
- சிறப்புமிக்க புத்தகமான பாவர்ட்டி அண்ட் அன்-பி ரிட்டிஷ்ரூல் இன் இந்தியா (1901) இந்த வீட்டில் இருந்தபோதே வெளியானது.
- பிரிட்டன் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் என்ற பெருமை தாதாபாய் நௌரோஜியையே சேரும்.
- தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை பி.ஆர்.அம்பேத்கர் ஆகியோர் லண்டனில் வசித்த இல்லங்களுக்கு ஏற்கனவே 'புளூ பிளேக்' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

## குடியரசு துணைத்தலைவரின் பணிகள்

**மாநிலங்களவைத் தலைவர்**

- குடியரசு துணைத் தலைவரின் முக்கிய பணி, மாநிலங்களவைத் தலைவராகச் செயல்படுவது
- நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது அவையை வழிநடத்தும் அவர், எம்.பி.க்கள் அவையின் மாண்பை முறையாகக் கடைப்பிடிப்பதை உறுதி செய்வார்.
- மத்திய அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே தோன்றும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதிலும் முக்கியப் பங்காற்றுவார்.

**தற்காலிக குடியரசுத் தலைவர்**

- நாட்டின் குடியரசுத் தலைவரின் இறப்பு, ராஜினாமா, பதவி நீக்கம் உள்ளிட்ட சமயங்களில் தற்காலிக குடியரசுத் தலைவராகத் துணை குடியரசுத் தலைவரே செயல்படுவார்.

- தற்காலிக குடியரசுத் தலைவராக அவர் பதவி வகித்தாலும்கூட, குடியரசுத் தலைவருக்கு உண்டான அனைத்து அதிகாரங்களும் அவருக்கு உண்டு.
- அத்தகைய சமயங்களில் குடியரசுத் தலைவருக்கு உண்டான அனைத்து சலுகைகளும் குடியரசு துணைத் தலைவருக்குக் கிடைக்கும்.
- குடியரசுத் தலைவராகப் பணியாற்றும் சூழலில், மாநிலங்களவையை வழிநடத்த இயலாது. அத்தகைய சமயங்களில் அவையின் துணைத் தலைவரோ அல்லது குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் நபரோ அவையை வழிநடத்துவார்.

**பதவியில் நீடிக்கலாம்**

- பொதுவாக குடியரசுத் துணைத்தலைவர் 5 ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். அவருடைய பதவிக்காலம் நிறைவடைந்த போதிலும், புதிய குடியரசு துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனில் அவர் பதவியில் தொடர்ந்து நீடிக்கலாம்.
- அதற்குத் தடை ஏதுமில்லை. புதிய குடியரசு துணைத்தலைவர் பொறுப்பேற்கும் வரை அவர் அப்பதவியில் தொடரலாம்.

**ராஜிநாமா**

- குடியரசு துணைத் தலைவர் தனது பதவிக்காலம் நிறைவடையும் முன்பே ராஜிநாமா செய்ய விரும்பினால், அதற்கான கடிதத்தைக் குடியரசுத் தலைவரிடம் வழங்க வேண்டும்.

**பதவிநீக்கம்**

- குடியரசு துணைத் தலைவரைப் பதவி நீக்கம் செய்ய விரும்பினால், மாநிலங்களவையில் 14 நாள்களுக்கு முன்பே அதற்கான தீர்மானத்தைத் தாக்கல் செய்ய வேண்டும்.
- அத்தீர்மானத்துக்கு அவைக்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பேர் கட்டாயம் ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- மேலும், அத்தீர்மானத்துக்கு மக்களவை உறுப்பினர்களில் பாதிபேர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அதற்குப் பிறகே குடியரசு துணைத் தலைவரைப் பதவிநீக்கம் செய்ய இயலும். நாட்டில் இதுவரை எந்தக் குடியரசு துணைத்தலைவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டது கிடையாது.

## 14–வது குடியரசுத் துணைத்தலைவர்

- நாட்டின் 14–வது குடியரசுத் துணைத் தலைவராக ஜெகதீப் தன்கர் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இந்திய அரசியல் சாசனப்படி, குடியரசுத் தலைவருக்கு அடுத்தபடியாக 2–வது உயரிய பதவியாக குடியரசு துணைத் தலைவர் பதவி கருதப்படுகிறது.
- குடியரசு துணைத் தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.
- எதிர்பாராதவிதமாக குடியரசுத் தலைவர் பதவி காலியாகும்போது, தற்காலிக குடியரசுத் தலைவராக குடியரசு துணைத்தலைவர் பதவி வகிப்பார்.
- குடியரசு துணைத் தலைவராக பதவியேற்றதன் மூலம் ஜெகதீப் தன்கர் மாநிலங்களவை தலைவராகவும் ஆகியுள்ளார்.
- தன்கர் 528 (74.35%) வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.
- ராஜஸ்தான் மாநிலம் ஜுன்ஜுனு மாவட்டத்தில் சிறிய கிராமத்தில் விவசாய குடும்பத்தில் பிறந்த தன்கர், சித்தர்காரில் உள்ள சைனிக் பள்ளியில் படித்தார்.
- இயற்பியலில் பட்டம் பெற்ற பிறகு ராஜஸ்தான் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். பின்னர் முன்னணி வழக்கறிஞராக உருவெடுத்தார்.
- ராஜஸ்தான் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தில் பணியாற்றினார்.
- 1989–ல் ஜுன்ஜுனு மக்களவை தொகுதியில் ஜனதா தளம் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதன் மூலம் அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தார். 1990–ல் மத்திய இணையமைச்சராக பதவி வகித்தார்.
- 1993–ல் நடந்த ராஜஸ்தான் சட்டப்பேரவைத் தேர்தலில், கிஷண்கார் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.
- 2003–ம் ஆண்டு பாஜகவில் சேர்ந்தார். 2008–ல் நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக பிரச்சாரக் குழு உறுப்பினரானார்.
- 2016–ல் பாஜகவின் சட்டப்பிரிவின் தலைவரானார். 2019–ல் மேற்கு வங்க ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

## செவாலியே விருது

- காங்கிரஸ் மூத்த தலைவரும், எம்.பி.யுமான சசி தரூர், அவருடைய எழுத்து மற்றும் பேச்சாற்றலுக்காக பிரான்ஸ் நாட்டின் உயரிய சிவிலியன் விருதான 'செவாலியே' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## இந்திய பொருளாதாரம்

- பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு இந்திய ரிசர்வ் வங்கியுடன் (ஆர்பிஐ) இணைந்து மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
- நாட்டின் சேவைத்துறை பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. தொழிலக உற்பத்தியும் அதிகரித்துள்ளது.
- நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கான வாய்ப்புகள் இனி இல்லை. நடப்பாண்டிலும் அடுத்த ஆண்டிலும் உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா திகழும்.
- சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதங்களை மாற்றியமைப்பது தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட மாநில நிதியமைச்சர்களைக் கொண்ட குழுவானது விரைவில் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்.
- கிரிப்டோகரன்சி பயன்பாடு குறித்து மத்திய அரசு தொடர்ந்து உன்னிப்பாக கவனித்து வருகிறது என்றனர்.

## கர்நாடகா ஊழல் தடுப்பு பிரிவு கலைத்தல்

- கர்நாடக மாநிலத்தில் ஊழல் வழக்குகளை விசாரிக்க 1984-ல் ஊழல் தடுப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன்கீழ் லோக் ஆயுக்தா அமைப்பு அமைக்கப்பட்டது.
- அந்த அமைப்பு லஞ்ச தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.
- லோக் ஆயுக்தா அதிகாரம் மிக்க பதவியில் இருப்பவர்களையும் பாரபட்சமின்றி விசாரித்து தண்டனை அளித்திருக்கிறது. அதன் பணியை சந்தேகிக்கும் வகையில் ஊழல் தடுப்பு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.
- ஊழல் தடுப்பு பிரிவு போலீஸார் லோக் ஆயுக்தா போலீஸாரின் வழக்குகளில் தலையிடும் சம்பவமும் நடந்துள்ளது.
- ஊழல் தடுப்பு பிரிவுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டால், லோக் ஆயுக்தாவின் பாரபட்சமற்ற விசாரணையை பாதிக்கும்.
- கர்நாடக அரசு ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம், 1988-ன் கீழ் உருவாக்கிய ஊழல் தடுப்பு பிரிவு அரசியலமைப்புக்கு எதிரானது.
- ஊழல் தடுப்புச் சட்டம் 1984-ன் கீழ் ஏற்கெனவே லோக் ஆயுக்தா அமைப்பு இருப்பதால், ஊழல் தடுப்பு பிரிவு தேவை இல்லை. அதனை கலைத்துவிட அரசுக்கு உத்தரவிடப்படுகிறது.
- ஊழல் தடுப்பு பிரிவின் முன்பாக நிலுவையில் இருக்கும் வழக்குகள் அனைத்தும் லோக் ஆயுக்தா போலீஸ் பிரிவுக்கு மாற்றப்படுகிறது.

## க்யூட் தேர்வு (CUET) [Central Universities Entrance Test]

- நாடு முழுவதும் உள்ள மத்தியப் பல்கலைக் கழகங்களில் இளநிலைப் படிப்புகளில் சேர்வதற்கு இத்தேர்வை எழுதுவது நடப்புக் கல்வியாண்டு முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- 44 மத்தியப் பல்கலைக்கழகங்கள் மட்டுமின்றி, மாநில அரசுகளின் 12 பல்கலைக்கழகங்கள், 11 நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் மற்றும் 19 தனியார் பல்கலைக் கழகங்களும் இத்தேர்வை ஏற்றுக்கொண்டு, இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தவுள்ளன.
- தமிழ், ஆங்கிலம் உள்பட மொத்தம் 13 மொழிகளில் கணினிவழியில் நடத்தப்படும் இத்தேர்வுகளில் சரியான விடைகளைத் தேர்ந்தெடுக்கும் வகையில் வினாத்தாள்கள் அமைந்துள்ளன.

## நீட் ஜேஇஇ தேர்வுகளை கியூட் தேர்வுடன் இணைக்க திட்டம்

- எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளில் சேர தேசிய அளவில் நீட் நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது.
- இதேபோல என்.ஐ.டி., ஐ.ஐ.டி. உள்ளிட்ட மத்திய தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர ஜே.இ.இ. நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது.
- மத்திய பல்கலைக் கழகங்களில் இளநிலை படிப்புகளில் சேர கியூட் என்றழைக்கப்படும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு (சி.யு.இ.டி) நடத்தப்படுகிறது.

- தேசிய அளவில் நீட், ஜே.இ.இ., கியூட் நுழைவுத் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த 3 தேர்வுகளையும் தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ.) நடத்தி வருகிறது.
- நீட் தேர்வில் உயிரியல், இயற்பியல், வேதியியல் பாடங்களும், ஜே.இ.இ. தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களும் இடம் பெறுகின்றன.
- கியூட் தேர்வில் இந்த பாடங்கள் அனைத்திலும் இருந்து கேள்விக் கேட்கப்படுகின்றன.
- மூன்று நுழைவுத் தேர்வுகளுக்கு மாற்றாக ஒரே நுழைவுத் தேர்வினை நடத்தி, அதில் தேர்ச்சி பெறுவோர் விரும்பிய படிப்பில் சேர நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஆண்டுக்கு இருமுறை பொதுநுழைவுத்தேர்வு நடத்தப்படும்.
- நீட், ஜே.இ.இ., கியூட் நுழைவுத் தேர்வுகளில் என்சிஇஆர்டி பாடத்திட்டத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படுகின்றன.
- மூன்று நுழைவுத்தேர்வுகளையும் ஒன்றிணைத்து நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வு கணினி வழியே தேர்வாக நடத்தப்படும்.
- இந்தத் தேர்வை எழுதும் மாணவர்கள் மருத்துவம் அல்லது பொறியியல் படிப்பில் சேரலாம். இரண்டும் கிடைக்கவில்லை என்றால் மத்திய பல்கலைக் கழகங்களில் சேரலாம்.

## அறிவியல் : வளர்ச்சியும்... குறைந்துவரும் கவனமும்

- உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவின் பங்கு முகலாயர் ஆட்சிக்காலத்தல் 24% ஆக இருந்தது. ஆனால், காலனிய ஆட்சியில் இந்தியாவின் செல்வம் கொள்ளையடிக்கப்பட்டு, ஐரோப்பிய நாடுகளைச் சென்றடைந்தது.
- நாடு விடுதலை அடைந்தபோது, இந்தியரின் சராசரி ஆயுள் வெறும் 31 ஆண்டுகள்தான். இன்று அது 70 ஆக உயர்ந்திருக்கிறது.
- காலரா போன்ற பெரும் கொள்ளை நோய்கள் பெரும் சேதத்தை விளைவித்திருந்தன.
- 100 குழந்தைகளில் ஊட்டச்சத்து இன்மை, நோய்கள் ஆகியவற்றால் பிறந்த ஒரே ஆண்டுக்குள் 145 குழந்தைகள் மடிந்தன.
- ஒரு லட்சம் கர்ப்பிணிப் பெண்களில் சுமார் 2,000 தாய்மார்கள் பிரசவத்தில் மடிந்தனர். இன்று, குழந்தை இறப்பு விகிதம் வெறும் 28; பிரசவ மரணம் வெறும் 99.
- இந்திய அறிவியல் தொழில்நுட்பம் தோள் கொடுக்கக் காலனிய காலப் பின்னடைவுகளை எதிர்கொண்டு முன்னேற முடிந்துள்ளது.
- உலகில் அதிக கால்நடைகளைக் கொண்ட நாடாக இந்தியா விளங்கியது. ஆனால், 1950-களில் நாளொன்றுக்குத் தலைக்கு 50 கிராம் என்ற அளவிலேயே பால் உற்பத்தி இருந்தது. பருவ காலம் சார்ந்து பால் சுரக்கும் அளவு வேறுபடும்.
- பால் எளிதில் கெட்டுப்போகும் என்பதால், உற்பத்தியாகும் இடத்திலிருந்து சேகரித்து நீண்ட தொலைவு எடுத்துச் செல்லவும் முடியாது.
- பசும்பாலிலிருந்து நீரை நீக்கிப் பதனம் செய்து, உலர் பால்பொடி தயாரிக்கும் தொழில்நுட்பம் இருந்தது. ஆனால், இந்தியாவில் எருமை மாடுகளே மிகுந்திருந்தன.
- எருமை மாட்டுப் பாலைப் பதனம் செய்து உலர் பொடி செய்ய முடியாது என மேலை நாட்டு அறிஞர்கள் பலரும் கூறிவந்தனர்.
- மைசூரில் உள்ள மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவன (CFTRI) ஆய்வாளர்கள் இந்தச் சவாலை வெற்றிகொண்டனர்.
- 1960-களில் வெளிநாடுகளிலிருந்து கப்பலில் தானியம் வந்திறங்கத் தாமதமானால் பஞ்சம் ஏற்படும் அபாய நிலை இருந்தது.
- விடுதலை அடைந்தபோது தலைக்கு ஆண்டொன்றுக்கு 144 கிலோ தானியம்தான் கிடைத்து வந்தது. பசுமைப் புரட்சியின் விளைவாக இன்று 178 கிலோ வரை அது உயர்ந்திருக்கிறது.
- மலேரியாவுக்கு மருந்துகள், அம்மைக்குத் தடுப்பூசிகள் ஆகியவற்றின் விளைவாகவே இந்தியர்களின் சராசரி ஆயுள் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

## மரம் வளர்ப்போம் சூழல் காப்போம்

- சுற்றுச்சூழலைப் பாதுகாக்க ஒரு நாட்டின் மொத்தப் பரப்பளவில் சராசரியாக மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும்.
- தற்போது நம் நாட்டின் மொத்த பரப்பளவில் 24.62% மட்டுமே காடுகள் அமைந்துள்ளன.
- ஒரு புறம் காட்டின் பரப்பளவை அதிகரிக்க அரசு முயற்சி செய்யும் அதே வேளையில் வீட்டு உபயோகப் பொருட்களான கதவு, ஜன்னல், கட்டில், மேசை, நாற்காலிகள் செய்யவும், கிராமப்புறங்களில் அடுப்பெரிக்கவும், செங்கல் சூளைகளில், காகித உற்பத்தியில், தீப்பெட்டி தயாரித்தலில் என ஆக்கப்பூர்வ செயல்பாடுகளுக்கு மட்டுமின்றி சமூக விரோதிகளால் வெட்டப்படுவதாலும், இயற்கையாகவும், மனிதர்கள் உண்டாக்கும் காட்டுத்தீயாலும் மரங்கள் அழிக்கப்பட்டு, காடுகளின் பரப்பளவு பெருமளவில் குறைகிறது.
- நாட்டின் முன்னேற்றம் கருதி அணைகள் கட்டுதல், சுரங்கங்கள் வெட்டுதல், விவசாய நிலங்களை உருவாக்கல், மக்கள்தொகை அதிகரிப்பதால் ஏற்படும் நகர்மயமாதல், சாலைகள் விரிவாக்கம் போன்றவற்றுக்காகவும் மரங்களை வெட்டுவதும், காடுகளை அழிப்பது தவிர்க்க இயலாமல் போகிறது.
- உலகின் ஆக்ஸிஜனில் இருபது சதவீதம் வரை உற்பத்தி செய்யும் 'உலகின் நுரையீரல்' என அழைக்கப்படும் அமேசான் காடுகள், தொடர்ந்து அழிக்கப்படுகின்றன.
- காடுகள் அழிக்கப்படுவதால் பன்னிரெண்டு சதவீத கரியமிலவாயு உருவாகிறது. ஒவ்வொரு ஆண்டும் காடுகளால் கிரகிக்கப்படும் கரியமில வாயுவின் அளவு சுமார் 2.6 பில்லியன் டன்களாகும்.
- காடுகளைச் சார்ந்து கோடிக்கணக்கான காட்டுயிரினங்கள், காடுகளை வாழ்வாதாரமாகக் கொண்ட பழங்குடியின மக்கள் என காடுகள் உலகின் உயிராதாரமாகவும் விளங்குகின்றன.
- நம் நாட்டில் மட்டும் சுமார் ஆறுகோடியே எண்பது லட்சம் பழங்குடியின மக்கள் காடுகளை சார்ந்து வாழ்கின்றனர்.
- தேசிய காடு வளர்ப்பு திட்டம், பசுமை இந்தியா தேசிய இயக்கம் (நேஷனல் மிஷன் பார் கிரீன் இந்தியா) நகர்ப்புற காடு வளர்ப்புத் திட்டம், காட்டுத்தீ தவிர்ப்பு மற்றும் காடுகள் மேம்பாட்டுத் திட்டம் போன்றவை நம் நாட்டின் காடுகளின் பரப்பளவை அதிகரிக்க மத்திய அரசு கொண்டு வந்துள்ள சில திட்டங்களாகும்.
- நூறுநாள் வேலை திட்டத்தின் கீழ் செய்யப்படும் வேலைகள் பெரும்பாலும் சாலையோரங்களில் உள்ள புல், செடி கொடிகளை அகற்றுவது, ஏரி குளங்களைத் தூர்வாரி கரைகளை பலப்படுத்துவது என்றே அமைந்துள்ளன.
- பாமர மக்களிடையே மத்திய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் 'ஏரி வேலை' அல்லது 'குளத்து வேலை' என்றே அழைக்கப்படுகிறது.
- தேவையற்ற தாவரங்களை அகற்றுவது, ஏரி, குளங்களை தூர் வாருவது எவ்வளவு முக்கியமோ அதை விட முக்கியத்துவம் வாய்ந்தது மரங்களை வளர்ப்பது.

## உரிமை கோராத வங்கி இருப்புத்தொகை

- வங்கி, காப்பீடு, அஞ்சல் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு கணக்குகளில் இறந்தவர்கள் சார்பில் உரிமை கோரப்படாமல் இருக்கும் தொகை பல்லாயிரம் கோடி ரூபாயை தொட்டுள்ளது.
- இந்தத் தொகையை சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் எளிதாக பெறும்வகையில் நடைமுறையை உருவாக்க கோரிக்கை
- கோரப்படாத தொகை குறித்து முறையான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அது குறித்த தரவுகள் அடங்கிய ஆன்லைன் தொகுப்பை ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் உருவாக்க வேண்டியது அவசியம்.
- வங்கிகள், செயல்படாத கணக்குகள் குறித்த விவரங்களை ரிசர்வ் வங்கிக்கு தெரிவிப்பதை கட்டாயமாக்க வேண்டும்.
- இறந்தவர்களின் வாரிசுகள் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை கால விரையமின்றி பெற இந்த தகவல் தொகுப்பு மிகவும் அவசியம்.

## 120 இன்ஜின்களில் மட்டுமே கழிப்பறை வசதி

- இந்தியா முழுவதும் இயங்கும் ரயில்களில் 120 ரயில் இன்ஜின்களில் மட்டுமே கழிப்பறை வசதி உள்ளது. தெற்கு ரயில்வேயில் ஒன்றில்கூட கழிப்பறை வசதி இல்லை என்று இந்திய ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.
- சமீபகாலமாக பெண்களும் ரயில் இன்ஜின்களை இயக்கி வருகின்றனர். ஆனால், இன்ஜினில் கழிப்பறை வசதி இல்லாததால், ரயில் ஓட்டுநர்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.
- 2019 ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் ரயில் இன்ஜின்களில் கழிப்பறை அமைக்கும் திட்டத்தை ரயில்வே அமைச்சகம் வெளியிட்டது.
- தேஜாஸ் போன்ற அதிவிரைவு ரயில்கள் 300 கி.மீக்கும் மேல் நிற்காமல் செல்லும் தற்போதைய சூழலிலும், கழிப்பறை வசதியின்றி ஓட்டுநர்கள் அவதிப்படுகின்றனர்.

## சுகாதாரத்துறை பெற்ற ஏற்றங்கள்

**சுகாதாரக் குறியீடுகள்**

- கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவின் மனித வளர்ச்சிக் குறியீடு 0.429 இலிருந்து 0.645 ஆக அதிகரித்துள்ளது.
- நம்முடைய சராசரி ஆயுள்காலம் வெகுவாக அதிகரித்துள்ளது.
- குழந்தை இறப்பு விகிதம், தாய் இறப்பு விகிதம் போன்றவை குறைந்திருக்கிறது.
- அரசு, தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, மேம்படுத்தப்பட்ட நோய்த்தடுப்பு, வளர்ந்து வரும் கல்வியறிவு போன்ற காரணங்களால் நாம் பெற்றிருக்கும் வளர்ச்சி இது.
- போலியோ, எச்.ஐ.வி., காசநோய், தொழுநோய் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தும் தேசிய சுகாதாரத் திட்டங்களும் இந்தியாவின் சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளன.

**மேம்படுத்தப்பட்ட நோய்த்தடுப்பு**

- 1970களில் போலியோவால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 50,000 குழந்தைகள் ஊனமுற்றனர்.
- 1980களில் காசநோய், எச்.ஐ.வி., ஹெபடைடிஸ் போன்ற தொற்றுநோய்கள் பொதுச் சுகாதாரத்திலும் பொருளாதாரத்திலும் பேரழிவை ஏற்படுத்தின.
- இந்தியாவின் உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டம் 1985-இல் தொடங்கப்பட்டது.
- காசநோய், டிப்தீரியா, கக்குவான், இருமல், டெட்டனஸ், போலியோ, தட்டம்மை, ஹெபடைடிஸ் பி ஆகிய ஏழு நோய்களுக்கு எதிரான தடுப்பூசி வழங்குவது அந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது.

**அங்கீகாரத்திற்கு முக்கியத்துவம்**

- இந்தியாவில் சுகாதார அமைப்புகளுக்கான அங்கீகாரம் 1930-களிலேயே தொடங்கிவிட்டது.
- 1952இல்தான் செம்மைப்படுத்தப்பட்டன. 1990-களில் அந்த அங்கீகாரத்துக்கான தரநிலைகள் புதுப்பிக்கப்பட்டன.
- இந்தியாவின் பல மருத்துவமனைகள் NABH அங்கீகாரம் பெற்றவையாக இருக்கின்றன.

**சமூக சுகாதாரப் பணியாளர்கள்**

- பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களின் உடல்நலத்தையும், ஊட்டச்சத்தையும் மேம்படுத்தி சிகிச்சை கிடைப்பதைச் சமூக சுகாதாரப் பணியாளர்கள் எளிதாக்குகின்றனர்.
- 2005இல் தேசியக் கிராமப்புற சுகாதார இயக்கத்தால் அங்கீகாரம் பெற்ற சமூக சுகாதார ஆர்வலர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

**உறுப்பு தானத்தால் காக்கப்படும் உயிர்கள்**

- 2008இல் தமிழ்நாடு அரசு இறப்புக்குப் பிந்தைய உடல் உறுப்புதானத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான அமைப்புகளையும், நடைமுறைகளையும் ஒன்றிணைத்தது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் சிறுநீரகம், கல்லீரல், இதயம், நுரையீரல், கணையம், குடல் போன்ற 1,150 உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டுள்ளன.
- உறுப்பு தானத் திட்டத்தின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக 'கிரீன் காரிடார்' எனப்படும் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி உள்ளது.

**நெறிப்படுத்தப்பட்ட ஆயுஷ்**

- 1995இல் சுகாதார அமைச்சகத்தின் கீழ் இந்திய மருத்துவ முறைகள், ஹோமியோபதி தனித்துறையாக உருவாக்கப்பட்டது. மார்ச் 2003இல் அதன் பெயர் ஆயுஷ் என மாற்றப்பட்டது.
- 2005இல், இந்திய அரசு கிராமப்புறங்களில் சுகாதாரப் பரவலை மேம்படுத்தத் தேசியக் கிராமப்புற சுகாதார இயக்கத்தை அறிமுகப்படுத்தியது. இந்த இயக்கத்தை வலுப்படுத்தும் நோக்கில், ஆயுஷ் அமைப்பு அதனுடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

**அதிகரித்த காப்பீட்டு வசதி**

- ஹெல்த்கேர் ஃபைனான்சிங் வடிவிலான மருத்துவக் காப்பீடு இந்தியாவில் 1980களில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2007இல் தொடங்கப்பட்ட மத்திய அரசு வழங்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்குச் சுகாதார பாதுகாப்பை வழங்குகிறது.
- தமிழகத்தில் ஏழைகளுக்கு வழங்கப்படும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டமும் பெரும் வெற்றியைப் பெற்ற திட்டமாக உள்ளது.

**பல்ஸ் போலியோ திட்டம்**

- 1995-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கீழ், 0-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து தற்போதும் வழங்கப்படுகிறது.
- விரிவான பிரச்சாரம், விழிப்புணர்வு விளம்பரங்கள் மூலம், போலியோ பாதிப்பு இந்தியாவில் வெகுவாகக் குறைந்தது.
- கடைசியாக 2011 ஜனவரி 13 அன்று மேற்கு வங்கத்தில் போலியோ பாதிப்பு பதிவானது.
- இந்தியாவை போலியோ இல்லாத நாடாக 2005இல் உலகச் சுகாதார நிறுவனம் அறிவித்தது.

**தேசியக் காசநோய் கட்டுப்பாட்டு திட்டம்**

- அனைத்து காசநோயாளிகளுக்கும் தரமான நோயறிதலையும் நோயைக் கட்டுப்பாட்டில் வைப்பதை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இது தொடங்கப்பட்டது.
- காசநோய்களின் பாதிப்புகள் NIKSHAY இணையதளத்தில் உடனடியாக பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலம் சிகிச்சையின் தரமும் செயல்திறனும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

**தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம்**

- 1999இல் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் எச்.ஐ.வி தொற்று எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.

**மிஷன் இந்திர தனுஷ்**

- 2014இல் இது தொடங்கப்பட்டது. இரண்டு வயதுக்கு உட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும் கீழே உள்ள பட்டியலில் இருக்கும் ஏழு நோய்களுக்கு எதிராக முழுத் தடுப்பூசி செலுத்துவதை உறுதிப்படுத்துவதே மிஷன் இந்திர தனுஷின் நோக்கம் :
  - டிஃப்தீரியா
  - கக்குவான் இருமல்
  - டெட்டனஸ்
  - காசநோய்
  - போலியோ
  - ஹைபடைடிஸ்பி
  - தட்டம்மை

**பொது சுகாதாரம்**

- 1986இல் தொடங்கப்பட்ட மத்திய கிராமப்புறச் சுகாதாரத் திட்டம், கிராமப்புறங்களில் பாதுகாப்பான சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான சுதந்திர இந்தியாவின் ஆரம்ப முயற்சிகளில் ஒன்று.
- சுகாதார வசதிகளை உருவாக்க மானியம் வழங்குவதில் அது கவனம் செலுத்தியது. பின்னர், அது மறுசீரமைக்கப்பட்டு நிர்மல் பாரத் அபியான் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் திருத்தப்பட்ட இலக்கானது, 2022க்குள் அனைவருக்கும் கழிப்பறை, சுகாதாரத்தை மேம்படுத்துதல், பெண்களுக்குத் தனியுரிமையும் கண்ணியத்தையும் உறுதிப்படுத்துதல், கிராமப்புற மக்களிடையே வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 'ஸ்வச் பாரத்' இயக்கத்தின் முதல் ஆண்டில் கிராமப்புறங்களில் 95 லட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

**மருத்துவச் சுற்றுலா**

- இன்று இந்தியா உலக மருத்துவ சுற்றுலா மையங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இந்தியாவில் குறைந்த செலவில் வழங்கப்படும் உலகத் தரத்திலான சிகிச்சையைப் பெறுவதற்கு, உலகெங்கும் இருந்தும் மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர்.
- மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்த 'இந்தியாவில் குணமடையுங்கள்' என்கிற இணைய தளத்தைச் சுதந்திர தினத்தன்று தொடங்க மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.
- வெளிநாடுகளிலிருந்து ஆண்டுதோறும் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் தமிழகத்திற்கு வருகின்றனர்.

SURESH'

## சூப்பர் கம்ப்யூட்டர்

- 1991-இல், இந்தியாவின் முதல் உள்நாட்டு சூப்பர் கம்ப்யூட்டரான பரம் 8000 (PARAM 8000) பயன்பாட்டுக்கு வந்தது.
- உலக அளவில் ஒரு வளரும் நாடால் உருவாக்கப்பட்ட முதல் சூப்பர் கம்ப்யூட்டரான அது, உலக நாடுகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.
- அது ஒரு சூப்பர் கம்ப்யூட்டர்தானா என்பதில்கூடப் பலருக்குச் சந்தேகம் இருந்தது. சூப்பர் கம்ப்யூட்டர்களுக்கான சர்வதேச மாநாட்டில் தரவுகளுடன் பட்கர் அதை அறிமுகப்படுத்தியபோது, அந்தச் சந்தேகம் வியப்பாக மாறியது.
- 2002இல் பரம் பத்மா எனும் சூப்பர் கம்ப்யூட்டர் இந்தியாவில் உருவாக்கப்பட்டது. பரம் இஷான், பரம் கஞ்சன்ஜங்கா ஆகியவை பரம் கம்ப்யூட்டர் வரிசையின் சமீபத்திய வெளியீடுகள்.
- இன்று சூப்பர் கம்ப்யூட்டர் தொழில்நுட்பத் திறனில் அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்த நிலையில் இந்தியா உள்ளது.

## உலகின் உயரமான ரயில்வே பாலம்

- ஜம்முவின் ரியாசி மாவட்டத்தில் பக்கால் மற்றும் கவுரி என்ற இடத்துக்கு இடையே செனாப் ஆற்றின் குறுக்கே 1,178 அடி உயரத்தில் ரயில்வே பாலம்.

## நமது தேசிய கீதத்துக்கு வயது 104

- நமது தேசிய கீதம் ரவீந்திரநாத் தாகூரால் இயற்றப்பட்டு, அதனை ஆந்திர மாநிலம் மதனபள்ளியில் ஆங்கிலத்தில் 'மார்னிங் சாங் ஆஃப் இந்தியா' என மொழி பெயர்க்கப்பட்டு, அவர் மூலமாகவோ பாடப்பட்டு 104 ஆண்டுகள் ஆகின்றன.
- 'விஸ்வ கவி' என மக்களால் போற்றப்படும் ரவீந்திரநாத் தாகூரால் நமது தேசியகீதம் வங்கமொழியில் இயற்றப்பட்டது.
- இந்த பாடல் கடந்த 24.1950-ம் ஆண்டில் நமது தேசிய கீதமாக, இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இது குறித்து 26.1.1950-ல் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், மதனபள்ளி ஒரு குளிர் பிரதேசமாகும். இவ்விடத்தில் டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார் கடந்த 1915-ல் பி.டி.கல்லூரியை நிறுவி நடத்தி வந்தார்.
- வங்க மொழியில் தான் எழுதியிருந்த 'ஜனகனமன' பாடலை 28.2.1919-ம் தேதியன்று, 'தி மார்னிங் சாங் ஆஃப் இந்தியா' எனும் தலைப்பில் தன் கைப்பட ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- இதனை அன்னிபெசண்ட் அம்மையாருக்கும் காண்பித்தார்.
- அன்றைய தினமே, 'ஜனகனமன' எனும் வங்க மொழி பாடலை இந்த கல்லூரியின் முதல்வராக இருந்த ஜேம்ஸ்.எச்.கசின்ஸும் மிகவும் பாராட்டினார்.
- பின்னர் இதே கல்லூரியில் சங்கீத ஆசிரியராக பணியாற்றிய ஜேம்ஸ்.எச்.கசின்ஸின் மனைவி மார்கரெட் கசின்ஸ் இதற்கு மெட்டு அமைத்தார்.
- அதன்பின்னர் இக்கல்லூரியில் மாணவர்கள் இந்த பாடலை முதன்முதலில் பாடினர். இதில் ரவீந்திரநாத் தாகூரும் கலந்து கொண்டு தேச பக்தி பாடலாக இப்பாடலை பாடினார்.
- அதன்பின்னர் இப்பாடல், 1950ல் நம்முடைய தேசிய கீதமாக அங்கீகாரம் பெற்றது.

## பெண்கள் மருத்துவத்தில் முன்னேற்றம்

- ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்ட பிறகு வீட்டிலேயே பிரசவம் பார்ப்பது பெருமளவில் குறைந்தது. பேறுகால மரணங்களும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டன.
- 1990களில் பிரசவத்தின் போது ஒரு லட்சம் பெண்களில் 600 பேர் இறந்தனர். அடுத்த இருபது ஆண்டுகளில் இறப்பு எண்ணிக்கை 178 ஆகக் குறையும் அளவுக்கு மருத்துவக் கட்டமைப்பு வலுப்பெற்றது.

**ஜனனி சுரக்ஷா யோஜனா**

- பிரசவத்துக்காகப் பெண்கள் மருத்துவமனைக்குச் செல்வத்தை ஊக்குவிக்கும் வகையில் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஜனனி சிசு சுரக்ஷா காரியகிரம்**

- அதன் தொடர்ச்சியாக ஜனனி சிசு சுரக்ஷா காரியகிரம் திட்டமும் நடைமுறைக்கு வந்தது. பிரசவம், மருந்து, சிசு நலம், உணவு போன்றவற்றுடன் பிரசவத்துக்காக வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வாகன ஏற்பாடு என அனைத்தும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.

## இந்தியா - 75

- வேற்றுமையில் ஒற்றுமை என்னும் பன்மைத்துவமே இந்தியாவின் வரலாற்றுச் சிறப்பு. அந்தப் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாக்க உறுதியேற்போம்.
- இந்திய அரசமைப்பின் முகப்புரையில் சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றோடு சகோதரத்துவமும் வழிகாட்டும் ஒளிவிளக்காய் மிளிர்கிறது.
- நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டுணர்வையும் வளர்த்தெடுக்கும் அதே நேரத்தில், தனிமனிதர்களின் மாண்பையும் உள்ளடக்கியது.
- நமது அரசமைப்பு சுட்டுகின்ற சகோதரத்துவம். இன, மொழி, சமய வேறுபாடுகளைக் கடந்து நம் ஒவ்வொருவரிடமும் அந்தச் சகோதர உணர்ச்சி மேம்பட வேண்டும்.
- நாம் இன்று அனுபவிக்கும் சுதந்தித்திற்காகத் தங்கள் இன்னுயிரை இழந்த, அடக்குமுறைகளின் துயரத்தை அனுபவித்த எண்ணிக்கையில் அடங்காத வீரர்களை நினைவுகூரும் இத்தருணத்தில், எதிர்கால இந்தியா குறித்த அவர்களின் கனவுகளை நனவாக்கும் கடமைக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.
- கடந்த 75 ஆண்டுகளில் இந்தியத் திருநாடு எத்தனையோ சவால்களைச் சந்தித்து வெற்றிகரமாக மீண்டும் வந்துள்ளது. எல்லைகளில் அந்நியர் ஊடுருவல், எதிர்பாராத இயற்கைச் சீற்றங்கள், உணவுப் பஞ்சங்கள், பொருளாதாரச் சரிவுகள் என வெவ்வேறுபட்ட சவால்களையும் நாம் வெற்றிகண்டு சாதனைகளைப் படைத்திருக்கிறோம்.பாதுகாப்பை வலுப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.
- தேசம் தழுவிய அளவில் பேரிடர் மேலாண்மை அமைப்புகளை உருவாக்கியிருக்கிறோம். உணவு உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றுவிட்டோம். நவீன உலகமயச் சூழலில் சந்தைப் பொருளாதாரத்தை எதிர்கொள்ளும் வகையிலும் நம்மைத் தகவமைத்துக் கொண்டிருக்கிறோம்.
- அண்மையில், கரோனா தொற்றினை அடுத்து 200 கோடி தடுப்பூசித் தவணைகளை எட்டி, மருத்துவ அறிவியலிலும் சாதனை படைத்திருக்கிறோம். விரைவில், பெருந்தொற்றின் காரணமாக பொருளாதாரப் பாதிப்புகளிலிருந்தும் மீண்டெழுவோம்.

## இந்தியா எனும் பெருங்கனவு

- அலகாபாத் தூண், 35 அடி உயரமும் 35 அங்குல சுற்றளவும் கொண்ட மணற்பாறைக் கல்லால் எழுப்பப்பட்டிருக்கும் இந்தத் தூணில், இந்தியாவின் மூன்று முக்கியமான வரலாற்றுக் காலகட்டங்களைச் சேர்ந்த மூன்று முக்கிய அரசர்களின் சொற்கள் அடுத்தடுத்து இடம் பெற்றுள்ளன.

**மூன்று அரசர்கள்**

- அந்தத் தூணில் முதலில் எழுதியவர் அசோகர். 'அனைவரும் என் குழந்தைகள்' என்று அறிவித்தார்.
- எல்லோரும் எல்லா இடங்களிலும் ஒன்றிணைந்து வாழ வேண்டும். எல்லா நம்பிக்கைகளும் சமமாக மதிக்கப்பட வேண்டும்.
- இந்த வாழ்வில் மட்டுமல்ல, இனிவரும் எல்லாக் காலங்களிலும், எல்லாப் பிறப்புகளிலும் எல்லோருக்கும் மகிழ்ச்சியும் நன்மையும் கிடைக்க வேண்டும்.
- மனிதர்கள் மட்டுமல்ல, பறவைகளும் விலங்குகளும்கூட மகிழ்ச்சியாக வாழ வேண்டும்'.
- சமுத்திரகுப்தரின் அவையில் இடம்பிடித்தவர்களில் முக்கியமானவர் ஹரிசேனர் எனும் கவிஞர். அவர் தனது மன்னரின் வீரத்தையும் தீரத்தையும் புகழ்ந்து இயற்றிய பாடல்களின் வரிகள் அவை.
- அந்தத் தூணில் பதிந்திருக்கும் மூன்றாவது பெயர் ஜஹாங்கீர். முகலாய மன்னரான ஜஹாங்கீர், சமுத்திரகுப்தருக்குப் பிறகு 12 நூற்றாண்டுகள் கழித்து, தன்னுடைய வம்சாவளி பற்றிய குறிப்புகளை அதே தூணில் பதித்து வைத்திருக்கிறார்.

**வெவ்வேறு மொழிகள்**

- பிராகிருத மொழியில், பிராமி எழுத்துருவைப் பயன்படுத்தி அசோகர் தனது பிரகடனத்தைப் பொறித்திருக்கிறார்.
- சமுத்திரகுப்தரின் கல்வெட்டு சமஸ்கிருத மொழியில், பிற்கால பிராமி எழுத்துகளில் அமைந்துள்ளது.
- ஜஹாங்கீர் பற்றிய குறிப்பு பாரசீக மொழியில் 'நஸ்தலிஃக்' எனும் எழுத்துருவைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.
- மொழிகளும் எழுத்துருக்களும் மட்டுமல்ல, சொல்ல வந்த செய்திகளும் வெவ்வேறானவை.
- அசோகர் அகிம்சையையும் தம்மத்தையும் வலியுறுத்துகிறார்.

- நேரெதிராக, சமுத்திரகுப்தர் தான் சந்தித்த ரத்தம் தெறிக்கும் போர்க்களங்களையும் அவற்றிலிருந்து ஈட்டிய மிகப் பெரும் வெற்றிகளையும் நம் முன் அடுக்கிக்காட்டுகிறார்.
- ஜஹாங்கீர் தனது குடும்பத்து உறுப்பினர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.
- மூன்று மன்னர்களும், மூன்று மத நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கிறார்கள். அசோகர் தன்னை ஒரு பௌத்தராக முன்னிறுத்தியவர். சமுத்திரகுப்தர் தன்னை விஷ்ணு பக்தன் என்றே கல்வெட்டுகளில் அழைத்துக் கொள்கிறார். ஜஹாங்கீர் ஓர் இஸ்லாமியர்.
- வெவ்வேறு காலங்கள், வெவ்வேறு நம்பிக்கைகள், வெவ்வேறு கடவுள்கள், வெவ்வேறு கண்ணோட்டங்கள் ஒரே தூணில் அருகருகில் ஒன்றாக வாழ முடியும் என்பதற்கு அலகாபாத் தூண் ஓர் அழியாச் சின்னமாக உயர்ந்து நிற்கிறது.

## இந்தியாவின் எதிர்காலம் என்பது என்ன?

**முரணும் ஒழுங்கும்**

- அர்ஜென்டினாவைச் சேர்ந்த உலகப்புகழ் பெற்ற எழுத்தாளரான போர்ஹேஸ், 'இந்தியா பிரபஞ்சத்தைக் காட்டிலும் விரிவானது' என்றார். அவர் இந்தியாவுக்கு வந்ததே இல்லை.
- பிரபஞ்சத்தைப் போலவே இந்தியாவும் பல்வேறு முரண்களால் நிரம்பியிருந்தாலும் அடியாழத்தில் ஓர் ஒழுங்குடன் இயங்குகிறது.
- நமது முரண்கள் உலகின் மற்ற நாடுகளின் முரண்களைவிட அதிகமானவை.
- அரசமைப்பு, குடியரசு, மக்களாட்சி, அனைவருக்குமான வாக்குரிமை, தேர்தல், அடிப்படை உரிமைகள், நாட்டைப் பேணும் சுயாட்சி, அதிகாரங்கள் கொண்ட, ஒன்றை ஒன்று கட்டுப்படுத்தும் அரசமைப்பின் மூன்று பெரும் தூண்களான சட்டம் இயற்றும் அவைகள், நிர்வாக அமைப்பு, நீதித்துறை, ஒப்பீட்டளவில் அதிக சுதந்திரமுள்ள ஊடகம் என்கிற நான்காவது தூண் ஆகியவை இந்தியாவில் உண்டு.
- அடிப்படை உரிமைகள் காலனிய அதிகார அமைப்பிற்குள்ளும் இல்லாத ஒன்று, அமெரிக்காவை முன்மாதிரியாகக் கொண்டு ஏற்படுத்தியவை.

**காலனியத்துக்குப் பிறகு**

- காலனியம் இந்தியாவிற்கு அளித்த மிகப்பெரிய வாய்ப்பு என்னவென்றால், முதன்முறையாக மொத்த இந்தியாவிற்கும் ஒற்றை எதிரியை அளித்ததுதான்.
- அது இந்தத் துணைக்கண்டத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் ஓர் ஒற்றை எதிரியும், அந்த எதிரியிடம் இருந்து விடுதலை அடையும் லட்சியமுமாக இருந்தது.

## விண்வெளி வளர்ச்சி

- 1957 முதல் விண்வெளிக்காலம் தொடங்கியது. அந்தக் காலம் முதல் நமது மண்ணிலும் விண்வெளி சிந்தனை வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது.
- நமது நாட்டில் சாத்தியப்படாத ஒன்றை நடத்திக் காட்டுவதற்கான சிந்தனைதான் செயற்கைக்கோள் திட்டம். இது வளர்ந்த நாட்டில்கூட 1957 இல் தான் சாத்தியமானது.
- எதிர்கால வளமிக்க பாரதத்தை உருவாக்க இளைஞர்களைத் தூண்டி நடைமுறைப்படுத்திய டாக்டர் விக்ரம்சாராபாய் தீர்க்க தரிசனம்தான் இந்திய விண்வெளி.
- பூமியைச் சுற்றி இயங்கும் இயற்கைக்கோள் சந்திரன் சுற்றி வருவது போல் செயற்கையாகப் படைக்கும் கோள் பூமியின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தலாம் என்பது 1957 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி முதன்முதலில் சோவியத் யூனியன் ஸ்புட்னிக் 1 என்ற செயற்கைக் கோள் பூமியைச் சுற்றிவந்தது.
- இந்தியா 1963 ஆம் ஆண்டு தும்பாவில் 'நைக் அப்பாச்சி' என்ற அமெரிக்க ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவி தொடங்கப்பட்ட இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் எஸ்எல் 3 ராக்கெட் மூலம் செயற்கைக்கோளை பூமியை சுற்றிவரச் செய்ததன் மூலம் நாமும் செயற்கைக்கோளை அனுப்பமுடியும் என்பதை நிரூபித்துக்காட்டியதன் தொடர் பயணத்தில் பிஎஸ்எல்வி, பிஎஸ்எல்வி மார்க் 3 ராக்கெட்களைக் கொண்டு துருவப்பாதை செயற்கைக் கோள்களையும் சந்திராயன், மங்கல்யான் போன்ற கோள்களின் ஆய்வுகளுக்கும் அனுப்பி வெற்றிகண்டு வருகிறது.
- நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் பூமியில் இருக்கும் கனிமவளங்கள், இயற்கை வளங்களை அறிவதற்கும் காடுகள், கடல் பாதுகாப்புக்கும் எல்லைகளை காத்து நிற்பதற்கும் விண்வெளி செயற்கைக்கோள் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது. தகவல் தொடர்பு நிலையில் செயற்கைக்கோள் நம்மை நிலைநிறுத்துகிறது.

- புதிய தொழில்நுட்பம் உருவாகுவதற்கு காரணமாக இருந்து வருகிறது. திட, திரவ, வாயு நிலையில் செலுத்தும் வாகனங்கள் தயாரிப்பதில்தற்சார்பாக முன்னேறியிருக்கிறோம்.
- விண்வெளி ஆய்வின் தந்தை விக்ரம்சாராபாய், செயற்கைக்கோளை முதன்முதலில் சுற்றுப்பாதைக்கு அனுப்பிய டாக்டர். அப்துல்கலாம் திரவ இயக்கத்தின் தந்தையென அறியப்படும் டாக்டர்.ஏ.இ.முத்துநாயகம். கிரையோஜெனிக் தொழில்நுட்பத்தின் தந்தையென போற்றப்படும் பத்மஸ்ரீ ஞானகாந்தி போன்ற அடிப்படை அறிவியலார் போன்று பல ஆயிரம் விஞ்ஞானிகளும் பொறியாளர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் இரவு பகல் பாராமல் உழைப்பினால் கட்டியெழுப்பப்படும் இந்திய விண்வெளி ஆய்வில் இன்றும் பலர் சாதனை படைத்து வருகிறார்கள்.

**முதல் சுதந்திர கொண்டாட்டம்**

- இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கும் மசோதாவை 1947-ம் ஆண்டு ஜூலை 4ம் தேதி பிரிட்டிஷ் மக்களவையில் அப்போதைய பிரதமர் கிளெமென்ட் அட்லீ கொண்டு வந்தார்.
- அதன்படி, இரண்டாம் உலகப் போரில் தான் சரணடைவதாக ஜப்பான் அறிவித்த ஆகஸ்ட் 15-ம் தேதியே இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப் பிரிட்டிஷ் அரசு முடிவு செய்தது.
- ஆகஸ்ட் 14-ம் தேதி நள்ளிரவு சுதந்திரம் வழங்க நேரம் குறிக்கப்பட்டது.
- அன்று இரவு 11 மணிக்கு டெல்லி அரசியல் நிர்ணய சபையில் ராஜேந்திர பிரசாத் தலைமையில் கூட்டம் கூடியது.
- இரவு 11.58 மணிக்குச் சுதந்திர இந்தியாவுக்காக எழுதப்பட்ட ஆவணங்களில் கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் கையெழுத்திட்டார்.
- அப்போது சபையின் மேல்மட்டத்திலிருந்து 12 மணிக்குச் சங்கு முழங்கப்பட்டது.

**நேருவின் முதல் முழக்கம்**

- சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான நேரு விதியுடனான ஒப்பந்தம் [Tryst with Destiny] என்ற தலைப்பில் நீண்ட நெடுநாட்களுக்கு முன்பாக நாம் விதியைக் குறித்த நேரத்தில் சந்திப்பதாக ஒப்பந்தம் செய்திருந்தோம் அந்த நேரம் வந்துவிட்டது.
- உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த நள்ளிரவில், இந்தியா சுதந்திரத்துடன் விழித்துக் கொண்டிருக்கிறது.

**மகாத்மா எங்கிருந்தார்?**

- இந்த வெற்றி கொண்டாட்டம் எதிலும் இந்தியச் சுதந்திர போரை அகிம்சை வழியில் நடத்திய மகாத்மா காந்தி கலந்து கொள்ளவில்லை.
- சுதந்திர வேட்கை ஒரு புறமிருக்க இந்து-முஸ்லீம் மதக் கலவரங்கள் கோரமாக நாடு முழுவதும் பரவிக் கொண்டு இருந்தது.
- பிரிட்டிஷ் மக்களவையில், பிரதமர் கிளெமெனட் அட்லீ இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கும் மசோதாவுடன் பாகிஸ்தான் பிரிக்கப்படுவதற்கான மசோதாவையும் இணைந்தே கொண்டு வந்தார்.
- இந்தியா இரண்டாக பிரியப்போகிறது என்ற கலகத்திலிருந்த காந்தி, பாகிஸ்தானில் ஜின்னா தலைமையில் ஆட்சி அமையட்டும் என்ற மவுண்ட் பேட்டனிடம் தெரிவித்தார்.
- தற்போது உருவாகிக் கொண்டிருக்கும் இந்தியாவில் எனக்கு இடமே இல்லை வன்முறை வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் இன்றைய இந்தியாவில் வாழ எனக்கு விருப்பமே இல்லை என்ற காந்தி அத்தருணத்தில் நொந்து போயிருந்தார்.
- 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் சுதந்திர தினமும் வந்தது.
- கொல்கத்தாவில் நடந்த கலவரங்களைத் தணிப்பதற்காக அங்குச் சென்றிருந்த காந்தி, சுதந்திர தினத்தன்று முழுவதும் உண்ணாவிரதம் இருந்தார்.

## இந்தியாவின் 75 ஆண்டு பொருளாதாரப் பயணம்

**முன்னுரை**

- இனி இந்த நாடு எப்படி பிழைத்திருக்கப் போகிறது? இந்தியா சுதந்திரமடைந்த சமயத்தில் இந்தக் கேள்விதான் உலக நாடுகளின் மத்தியில் இருந்தது.
- தொழில், கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு, வேலைவாய்ப்பு என நாட்டுக்கான அடிப்படைக் கட்டமைப்பை முதலிலிருந்து உருவாக்க வேண்டிய நிலையில் இந்தியா இருந்தது.
- ஆனால், அந்தக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான பொருளாதார மூலதனமும் சமூக மூலதனமும் இந்தியாவிடம் இல்லை.

- நாட்டு மக்களின் 88 சதவீதத்தினர் கல்வி அறிவு அற்றவர்களாக இருந்தனர்.
- அந்நிய செலாவணி கையிருப்பு வெறும் ரூ. 1,029 கோடிதான் இருந்தது.
- அனைத்துக்கும் மேலாக, மக்களுக்கான உணவுத் தேவையை பூர்த்திசெய்யும் நிலையில்கூட இந்தியா இல்லை. வெளிநாடுகளிலிருந்துதான் உதவி பெற்றுவந்தது.
- இன்று இந்தியா சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.
- உலகின் மிகப் பெரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- அந்நிய செலாவணி கையிருப்பு ரூ.45.35 லட்சம் கோடியாக உள்ளது.
- உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதாக மட்டுமல்ல, அதன் ஏற்றுமதியிலும் முக்கிய நாடாக இந்தியா உள்ளது.
- இனி பிழைத்திருக்குமோ என்ற சந்தேகிக்கப்பட்ட ஒரு நாடு, எப்படி 75 ஆண்டுகளில் உலகின் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக தன்னை வளர்த்துக்கொண்டது?

**சோசலிசக் கனவு**

- சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பொறுப்பேற்ற ஜவஹர்லால் நேருவின் முன் இருந்த மிகப் பெரிய சவால், நாட்டு மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதுதான்.
- வேளாண் துறையை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு 1951-ஆம் ஆண்டு அவர் ஐந்தாண்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.
- நேரு எதிர்பார்த்த வளர்ச்சியை முதல் ஐந்தாண்டு திட்டம் தந்தது.
- ஆனால், பொருளாதார ரீதியாக தாக்குப்பிடிக்க வேண்டுமென்றால், வேளாண் துறையில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. தொழில் துறையிலும் கவனம் செலுத்த வேண்டும் என்ற நிலையில் அடிப்படையான தொழில் கட்டமைப்பை உருவாக்குவதை இலக்காகக்கொண்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் உருவாக்கப்பட்டது.
- உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், மின்தயாரிப்பு உள்ளிட்ட துறைகளில் பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்படலாயின.
- அணைக்கட்டுகள், நீர்மின் நிலையங்கள், எஃகு ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- ஐஐடிகள் தொடங்கப்பட்டன.
- இப்படியாக இந்தியாவின் தொழிற்துறையின் வளர்ச்சிக்கான அடித்தளம் நேருவின் காலக்கட்டத்தில் போடப்பட்டது.

**போரும் பஞ்சமும் கூடவே ஒரு புரட்சியும்**

- நேருவின் மறைவை அடுத்து லால் பகதூர் சாஸ்திரி பிரதமராக நியமிக்கப்பட்டார்.
- 1964-1966 வரையில் இரண்டு ஆண்டுகள்தான் அவர் பதவியில் இருந்தார்.
- ஆனால், அந்த இரண்டு ஆண்டுகளில் அவர் இரு பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாக இருந்தது.
- ஒன்று, கடும் உணவுப் பஞ்சம். மற்றொன்று போர்.
- லால் பகதூர் சாஸ்திரியின் ஆட்சி காலத்தில் வேளாண் துறையில் மிக முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்தன.
- அதிக விளைச்சல் தரக்கூடிய நவீனரக விதைகள், வேளாண் இயந்திரங்கள் இந்திய வேளாண் துறையில் அறிமுகமாக ஆரம்பித்தன.
- லால் பகதூர் சாஸ்திரி இந்த மாற்றத்தை ஊக்குவித்தார்.
- பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் கோதுமை உற்பத்தி மிகப் பெரும் அளவில் அதிகரித்தது.
- இந்தியாவில் பசுமை புரட்சி தொடங்கியது.
- பால் துறையில் ஏற்பட்ட வெண்மை புரட்சிக்கும் லால் பகதூர் சாஸ்திரிதான் தூண்டுகோலாக இருந்தார்.

**இந்திரா காந்தி**

- அடுத்தடுத்து இரண்டு போர்கள். கூடவே, கடும் பஞ்சம். இந்த சமயத்தில் (1966), பிரதமராக பதவியேற்ற இந்திரா காந்தி, பொருளாதாரரீதியாக அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டார்.
- வேளாண் துறைக்கு கடன் வழங்கலை அதிகரிக்கும் நோக்கில் 1969-ம் ஆண்டு 14 தனியார் வங்கிகளை அவர் நாட்டுடமை ஆக்கினார்.
- வங்கிகளை நாட்டுடமை ஆக்கியதானது, இந்திரா காந்தி அவரது ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட மிக முக்கியமான பொருளாதார சீர்திருத்தங்களில் ஒன்றாகும்.
- பசுமை புரட்சி இந்தியாவில் உச்சம் தொட்டதால், தானிய உற்பத்தி அதிகரித்தது.

- இதனால் உணவு தட்டுப்பாடு நெருக்கடியிலிருந்து இந்தியா மீளத் தொடங்கியது.
- தானிய சேமிப்புக் கிடங்குகள் உருவாக்கப்பட்டன. இதனால் மற்ற விஷயங்களில், அதாவது வேலைவாய்ப்பு உருவாக்கம், ஏழ்மை ஒழிப்பு, தேசிய நெடுஞ்சாலைகள் விரிவாக்கம் உள்ளிட்டவற்றில் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பு உருவானது.
- இந்தக் காலகட்டத்தில் மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டை இந்திரா காந்தி தீவிரமாக நடைமுறைப்படுத்தினார்.
- அவசரநிலை பிரகடனத்தால் 1977 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தி தோல்வியடையவும், அடுத்த பிரதமராக பதவியேற்றார் மொராஜி தேசாய்.
- 2016-ல் மோடி அறிவித்த பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு முன்னோடி மொராஜி தேசாய்தான்.
- அவரது ஆட்சிக் காலத்தில் ரூ. 1,000, ரூ. 5,000 மற்றும் ரூ. 10,000 நோட்டுகளை செல்லாததாக்கினார்.
- 1980 -ல் மீண்டும் ஆட்சிக்கு வந்தார் இந்திரா காந்தி.
- முந்தைய ஆட்சிக்காலங்களில் சோசலிச அடிப்படையிலான கொள்கைகளை அறிவித்த அவர், இம்முறை தாராளமயக் கொள்கையை நோக்கி நகர்ந்தார்.
- தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தினார்; இறக்குமதி வரிகளைக் குறைத்தார். நேருவின் சோசலிச கட்டமைப்பிலிருந்து விடுபட்டு இந்தியா தாராளமய பொருளாதார கட்டமைப்பை நோக்கி நகரத் தொடங்கியது.

**சோசலிசத்துக்கு விடைகொடுத்தது இந்தியா**

- ராஜீவ் காந்தி, தாராளமயத்தை நோக்கிய நகர்வைத் தீவிரப்படுத்தினார்.
- ராஜீவ் காந்தி, இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் தொலைத் தொடர்புத் துறை கட்டமைப்புக்கு அவர்தான் அடித்தளமிட்டார்.
- ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்தில் இந்தியா நுகர்வு கலாச்சாரத்தை நோக்கி நகரத் தொடங்கியது.
- அதன் காரணமாக இந்தியா மாபெரும் சந்தையாக உருவெடுக்கலானது.
- உள்நாட்டில் வாகனங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் தயாரிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.
- ராஜீவ் காந்தியோடு சோசலிச பொருளாதாரக் கொள்கைக்கு இந்தியா முற்றிலுமாக விடைகொடுத்தது.

**புதிய இந்தியா பிறந்தது**

- வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கு ஏதுவான கொள்கைகள் வகுக்கப்பட்டன.
- பொதுத்துறை நிறுவனங்களில் தனியார் முதலீட்டுக்கு வழிவகை செய்யப்பட்டது.
- தாராளமயமாக்கம், தனியார்மயமாக்கம், உலகமயமாக்கம் எல்லாம் ஒருசேர நடந்தன.
- புதிய பொருளாதாரக் கொள்கையால் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவை நோக்கி வரத்தொடங்கின.
- அந்நிய நேரடி முதலீடு அதிகரிக்கத் தொடங்கியது.
- தொழிற்துறை நவீனமாகத் தொடங்கியது. ஏற்றுமதி அதிகரித்தது.
- 1991-92 -ல் இந்தியாவில் அந்நிய முதலீடு 132 மில்லியன் டாலராக இருந்தது.
- 1995-96-ல் அது 5.3 பில்லியன் டாலராக உயர்ந்தது
- வாகனத் துறை, தொலைத்தொடர்புத் துறை, மென்பொருள் துறை, மருந்துத் தயாரிப்புத் துறை, உயிரி தொழில்நுட்பத் துறை பெரும் வளர்ச்சி காணத் தொடங்கின.
- புதிய இந்தியா பிறந்தது.

**புதிய நூற்றாண்டில் இந்தியா**

- அடல் பிஹாரி வாஜ்பாய் தாராளமயமாக்கத்தை முடுக்கிவிட்டார். தங்கநாற்கர சாலைகள் அமைக்கப்பட்டன. அதன் வழியே இந்தியாவின் உள்கட்டமைப்பு மிகப் பெரும் மாற்றத்துக்கு உள்ளானது.
- வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டதால் ரியல் எஸ்டேட் துறை வளர்ச்சி அடையத் தொடங்கியது.
- வாஜ்பாயைத் தொடர்ந்து, 2004-ல் மன்மோகன் சிங் பிரதமராக பொறுப்பேற்றார். அடுத்தப் பத்து ஆண்டுகள் பிரதமராக அவர் தொடர்ந்தார்.
- 1991-ல் போடப்பட்ட பாதையிலே இந்தியாவின் பொருளாதாரப் பயணம் தொடர்ந்தது.
- கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தரும் நோக்கில் நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டமான தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை அவர் கொண்டுவந்தார்.

- 2006-ல் இந்தியா உச்சபட்ச பொருளாதார வளர்ச்சியை எட்டியது. ஜிடிபி வளர்ச்சி 9 சதவீதத்தை தொட்டிருந்தது. 2007-2008 -ல் சர்வதேச அளவில் மிகப் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.
- வளர்ந்த நாடுகளின் பொருளாதாரம் மோசமான சரிவைக் கண்டது. இந்த நெருக்கடியிலிருந்து மன்மோகன் சிங் தனது பொருளாதாரக் கொள்கையால் இந்தியாவை மீட்டெடுத்தார்.

**டிஜிட்டல் இந்தியா**

- உள்நாட்டுத் தயாரிப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் நோக்கில் மேக் இன் இந்தியா திட்டம் கொண்டுவரப்பட்டது. நிறுவன வரி குறைக்கப்பட்டது. 10 பொதுத்துறை வங்கிகள் 4 வங்கிகளாக மாற்றப்பட்டன.
- மூன்று பொருளாதார அறிவிப்புகள் பணமதிப்பிழப்பு (2016), ஜிஎஸ்டி (2017), மூன்று வேளாண் சட்டங்கள் (2020).
- மோடியின் ஆட்சி காலத்தில் நிகழ்ந்த இரு முக்கியமான மாற்றங்களாக டிஜிட்டலை நோக்கிய நகர்வையும், ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் பெருக்கத்தையும் குறிப்பிட முடியும்.
- யுபிஐயானது இந்தியாவின் பணப்பரிவர்த்தனை நடைமுறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியது.
- டிஜிட்டல்மயமாக்கம் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் பெருக்கத்துக்கு வழிவகுத்தது.
- இன்று இந்தியாவில் 75,000 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உள்ளன.
- இந்நிறுவனங்களால் பல தளங்களில் பொருளாதார வாய்ப்புகள் தூண்டப்பட்டுள்ளன.

**மூவர்ணத்தின் ஒளி வண்ணம்!**

- சுதந்திர இந்தியாவின் 75 ஆண்டு கால வரலாற்றைத் திரும்பிப் பார்க்க முடியவில்லை; அண்ணாந்து பார்க்கத் தோன்றுகிறது.
- இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற ஏறத்தாழ 85 நாடுகளில், நமக்கென ஓர் அரசமைப்புச் சட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையில் இயங்கும் குடியரசாகத் தடம் மாறாமல் பயணிக்கும் ஒரே நாடு நமது இந்தியா மட்டும்தான் என்பது நமது தனிப்பெருமை.
- இந்தியா விடுதலை பெறும்போது நமது மக்கள்தொகை வெறும் 34 கோடி. இப்போது அதுவே 140 கோடி. நான்கு மடங்கிலும் அதிகம். நாம் பஞ்சத்தில் வீழ்ந்துவிடவில்லை. உலகுக்கு உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறோம்.
- 1947-இல் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மக்கள் தொகையில் வெறும் 12%. இந்திய தேசிய கணக்கெடுப்பின்படி இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 2022 - 77.7%.
- உலகின் சிறந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களும், தொலைத்தொடர்பு நிபுணர்களும், மருத்துவர்களும் இந்தியர்களாகத் திகழ்கின்றனர்.
- 1947 ஆகஸ்ட் 15-ஆம் தேதி இந்தியாவின் ஜிடிபி ரூ.2.7 லட்சம் கோடி. உலகின் ஜிடிபியில் வெறும் 3%. 2018 இல் பிரான்ஸ் நாட்டைப் பின்னுக்குத்தள்ளி உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உயர்ந்திருக்கிறோம்.
- 2018 -இல் நமது ஜடிபி ரூ. 147.79 லட்சம் கோடி. உலக ஜிடிபியில் 7.74%. கோவைட் - 19 கொள்ளை நோய்த்தொற்றுப் பரவல் ஏற்படாமல் இருந்தால் 10% ஐ தாண்டியிருக்கக்கூடும்.
- இந்திய மாநிலங்கள் எல்லை ரீதியாகப் பிளவுபட்டிருக்கலாம். ஆனால், கலாச்சார ரீதியாக, நிலத்தடி நீரோட்டம் போல இறுக்கமான பிணைப்புடன் இருக்கிறது என்கிற உண்மை மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்படுகிறது.
- சீனப் போர், பாகிஸ்தானுடனான மோதல்கள், கார்கில் ஊடுருவல், சமீபத்தில் பாலாகோட் தாக்குதல் நடந்தபோதெல்லாம், தங்களது மொழி, இன, ஜாதி, மத வேறுபாடுகளை மறந்து இந்தியர்கள் இணைந்தபோது, காந்திஜியும், நேதாஜியும் கண்ட கனவு பலித்திருப்பதை நாம் பார்க்க முடிந்தது.
- கேரளத்தின் வி.கே. கிருஷ்ணமேனன் மகாராஷ்டிரத்தில் இருந்தும், கர்நாடகத்தைச் சேர்ந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ் பீகாரிலிருந்தும், உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த இந்திரா காந்தி ஆந்திரத்தில் இருந்தும், குஜராத்தின் நரேந்திர மோடி உத்தர பிரதேசத்தில் இருந்தும், உத்தர பிரதேச ராகுல் காந்தி கேரளத்தில் இருந்தும் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றால், ஒன்றுபட்ட இந்தியா என்பது செயற்கை அல்ல, உணர்வுப்பூர்வமான பாரதிய பிணைப்பு என்பது தெளிவாகிறது.
- எத்தனை மொழிகள், எத்தனை மதங்கள், எத்தனை ஜாதிகள், எத்தனை கலாச்சாரங்கள் - ஆனால், பாரதியார் சொன்னதுபோல செப்புமொழி பதினெட்டுடையாள்; எனில் சிந்தனை ஒன்றுடையாள் என்று இணைந்து வெற்றிநடை போடுகிறதே அதைப் பார்க்கும்போது, பாரத நாடு பழம்பெரும் நாடு, நீவிர் அதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர் என்று உரக்கக் கூவி, 75 - ஆவது சுதந்திர தினத்தை வாழ்த்திக் கொண்டாட வேண்டும் போலிருக்கிறது.

## சுதந்திர தின அமுதப் பெருவிழா

- நாட்டுக்காக தனது வாழ்வை அர்ப்பணித்த மகாத்மா காந்தி, நேரு, சர்தார் வல்லவாய் படேல், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், அம்பேத்கர், வீர சாவர்க்கர் உள்ளிட்ட எண்ணற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நாட்டு மக்கள் கடன்பட்டுள்ளனர்.
- சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ராணி லட்சுமிபாய், ஜல்காரி பாய், துர்கா பாபி, வேலுநாச்சியார் உள்ளிட்ட துணிச்சல் மிக்க பெண்களுக்கு இந்த நாடு நன்றி செலுத்துகிறது.
- சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா சிதறுண்டு போகும் என்றும் உள்நாட்டுப் போர் நடக்கும் என்றும் உலக நாடுகள் கருதின.
- ஆனால், இங்கு ஏராளமான வளமும் வலிமையான கலாச்சாரமும் உள்ளது என்பதை உலக நாடுகள் எண்ணிப் பார்க்கவில்லை.
- இன்று ஜனநாயகத்தின் தாயாக இந்தியா திகழ்கிறது. பன்முகத்தன்மைதான் நம்முடைய மிகப்பெரிய பலம்.
- வரும் 2047-ம் ஆண்டு 100-வது சுதந்திர தினத்தை கொண்டாட உள்ளோம். அதற்குள் சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவை நனவாக்குவதற்காக நாம் 5 உறுதி மொழிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**5 உறுதி மொழிகள்**

- சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடி நேற்று உரையாற்றுகையில், நாட்டு மக்கள் அனைவரும் 5 உறுதி மொழிகளை ஏற்க வேண்டும் என்றார்.

**1. முதலாவது உறுதிமொழி :**

- அடுத்த 25 ஆண்டுகளில், இந்தியாவை வளர்ந்த நாடாக உருவாக்க வேண்டும். இதற்காக இளைஞர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு உழைத்து மனித குலத்தின் மேம்பாட்டிற்காக செயலாற்ற வேண்டும்.

**இரண்டாவது உறுதிமொழி :**

- காலனி ஆதிக்க அடிமை மனோபாவத்தை முற்றிலுமாக அழித்து, நாம் நமது நாட்டின் பெருமையை உணர வேண்டும். மொழியை தடையாக உணராமல், அனைத்து மொழிகளையும் பெருமையாக கொள்ள வேண்டும்.

**மூன்றாவது உறுதிமொழி**

- நமது பாரம்பரியத்தின் மீது பெருமை கொண்டு, நமது வேர்களின் மீது உறுதியான தொடர்பு வைத்திருந்தால்தான் உயர பறக்க முடியும். அப்படி பறந்தால் உலகிற்கே நாம் வழிகாட்டியாக இருந்து, உலகின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்.

**நான்காவது உறுதிமொழி**

- பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் மற்றும் மரியாதை வழங்கி, நாட்டின் வளர்ச்சிக்கு பெண் சக்தியை முக்கிய தூண் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**ஐந்தாவது உறுதிமொழி**

- பிரதமர், முதல்வர் மற்றும் மக்கள் என அனைவரும் தங்கள் கடமைகளை சரியாக ஆற்ற வேண்டும் என்றார்.

## நீதி வழங்குவதில் சமபங்கு

- "அரசியலமைப்பின் மீதான நம்பிக்கையை உறுதி செய்வதில் நிர்வாகம், பார்லிமென்ட், நீதித்துறை ஆகிய மூன்றும் சமபங்கு வகிக்கின்றன" என சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என்.வி.ரமணா தெரிவித்தார்.
- நீதித்துறையின் வாயிலாக தங்களுக்கான நீதியும் நிவாரணமும் கிடைக்கும் என மக்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். பிரச்சனையை மக்கள் எதிர்கொள்ளும் மனவலிமையை நீதித்துறை அளிக்கிறது.
- உலகின் மிகப்பெரிய நாடான இந்தியாவின் அரசியலமைப்பை சுப்ரீம் கோர்ட் பாதுகாக்கிறது.
- நாடு சுதந்திரம் பெற்றது முதல், தேர்தல் ஆணையம், மத்திய ஊழல் தடுப்பு கமிஷன் உட்பட பல்வேறு அமைப்புகளுக்கு நீதித்துறை வலு சேர்த்துள்ளது.

**தீர்ப்புகளை விமர்சிக்கலாம்; நீதிபதியை விமர்சிக்கக் கூடாது**

- சமீபகாலமாக நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் விமர்சிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது.
- நீதிபதிகள் தங்கள் தீர்ப்பின் வாயிலாகவும், உத்தரவின் வாயிலாகவும்தான் பேசுகின்றனர். நீதிபதிகள் அளிக்கும் தீர்ப்புகளை விமர்சிக்க எந்த ஒரு நபருக்கும் உரிமை உள்ளது. அவர் அளிக்கும் தீர்ப்பு, அதில் அவரது பார்வை ஆகியவற்றை விமர்சிக்கலாம்.
- தீர்ப்புகளில் நீதிபதிகள் தெரிவித்த கருத்துக்கு எதிர் கருத்துகூட கூறலாம். அதே நேரத்தில் நீதிபதிகளை தனிப்பட்ட முறையில் விமர்சிப்பதை ஏற்க முடியாது.
- குறுகிய காலம் பதவியில் இருந்தாலும் அதிகமான வழக்குகளுக்கு தீர்வு காண முயற்சிப்பேன்.

## மகாத்மா காந்தி

- முதன்முதலாக நாடு முழுவதும் 1920-ல் சுற்றுப் பயணம் மேற்கொண்ட மகாத்மா காந்தி, தமிழகத்தில் அதிக நாட்கள் பயணம் செய்தார். தம் வாழ்நாளில் 20 முறை தமிழகம் வந்துள்ள அவர், தமிழை கற்றுக்கொண்டு. தமிழில் கையெழுத்துப் போட்டார்.
- ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப் போவதை 1920-ல் சென்னையில்தான் அறிவித்தார்.
- அரையாடை அணிவது என, அவரது வாழ்க்கையில் மிக முக்கியமான முடிவையும் மதுரை மண்ணில் இருந்துதான் காந்தியடிகள் எடுத்தார். பாரிஸ்டர் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியாக வந்தவரை மகாத்மா காந்தியாக மாற்றியது தமிழ் மண்.
- 1921 செப்.22-ம் நாளில் இந்த நிகழ்வு நடந்தது. அது நடந்து 100 ஆண்டுகள் ஆவதன் அடையாளமாக, சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகள் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் தொடங்கி போராட்டங்கள்

**தேர்தலும் அரசமைப்பும்**

- இந்தியாவை வெறும் சுதந்திர தேசமாக மட்டுமே வைத்திருக்க நேரு விரும்பவில்லை. மாறாக, அது ஜனநாயக தேசமாகவே கட்டமைக்க விரும்பினார்.
- வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை கொடுத்துத் தேர்தலை நடத்தினார் நேரு. அன்று அவர் வகுத்த தேர்தல் வழி ஜனநாயகப் பாதையில்தான் இன்றளவும்இந்தியா இயங்கிக் கொண்டிருக்கிறது.
- எமர்ஜென்சியை அமல்படுத்திய இந்திராகாந்தியே பிறகு தேர்தலை நடத்தினார் என்பது அதற்கான உதாரணம். அந்த வகையில், நேரு முதல் மோடி வரையிலான சுதந்திர இந்தியாவின் இருப்பில் தேர்தல்களின் பங்களிப்பு முக்கியமானது.
- காலத்துக்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் அமைப்பாகவே நமது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அரசியலமைப்பு பலமுறை திருத்தப்பட்டதே, அதன் நெகிழ்வுத்தன்மைக்கான சாட்சியம்.
- அதேவேளை, நெகிழ்வுத்தன்மையுடன் இருப்பதைப் பயன்படுத்திச் சட்டத்தைத் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப வளைத்தவர்கள் மக்களால் புறக்கணிக்கப்பட்ட கதைகளும் இருக்கின்றன.

**மொழிவாரி ஏற்படுத்திய ஒற்றுமை**

- நிலப்பரப்பின் அடிப்படையில் மாநிலங்களைப் பிரிப்பதைவிட, மொழி அடிப்படையில் பிரிப்பதன் மூலம் மக்களின் அதிருப்தியை அகற்றி, நம்பிக்கையைப் புகட்டி, இந்திய ஒன்றியத்துடன் உணர்வுபூர்வமாக ஒன்றியிருக்கச் செய்ய முடியும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடே ஐம்பதுகளின் மத்தியில் நிகழ்ந்த மொழிவாரி மாநிலப் பிரிவினை.
- சுதந்திர இந்தியா பவளவிழாவை அமைதியுடன் கொண்டாடுவதன் பின்னணியில் மொழிவாரி மாநிலப் பிரிவினையின் பங்கு முக்கியமானது.
- நேரு காலத்தில் தொடங்கிய சமூகநீதி சாதிப்பு முயற்சிகள், மொரார்ஜி தேசாய் காலத்தில் மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டதன் மூலமாகவும், வி.பி.சிங் காலத்தில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளில் முக்கியமானவை செயல்வடிவம் பெற்றதன் வழியாகவும் தொடர்ந்தன.

**சாதனை நகர்வுகள்**

- அகிம்சை நாயகன் காந்தி வழிவந்த தேசம்தான் சுதந்திர இந்தியா என்ற போதும், சூழலுக்கு ஏற்ப எதிரிகளை நோக்கி ஆயுதங்களை ஏந்தத் தயங்கியதில்லை.
- சுதந்திரம் பெற்ற கையோடு பாகிஸ்தான் சீண்டியபோது, தீரத்துடன் போரிட்டு ஊடுருவல்காரர்களை விரட்டியடித்தது இந்தியா.
- அதன்பிறகு 1965, 1971, 1999 என எப்போதெல்லாம் பாகிஸ்தான் இந்தியாவை ராணுவ ரீதியாகச் சீண்டியதோ அப்போதெல்லாம் தகுந்த பதிலடியைக் கொடுத்திருக்கிறது இந்தியா.
- 1962இல் நடந்த இந்திய-சீன யுத்தத்தை தவிர்த்து, ஏனைய எல்லா யுத்தங்களிலும் இந்தியா வெற்றிக்கொடியே நாட்டியிருக்கிறது.
- இந்தியா அணு ஆயுதத்தைத் தயாரிக்க ஆயத்தமானால், தங்களது உறவைத் துண்டித்துக் கொள்ள நேரிடும் என்று சில நாடுகள் விடுத்த எச்சரிக்கைக்கு அப்பால் பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தினார் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி.

- அந்தத் திட்டத்துக்கு அகிம்சையின் முழுவடிவான புத்தரின் பெயரையை வைத்தார். அது இந்தியாவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்திரா எடுத்த துணிகர முயற்சி. அதேபோன்ற துணிகர முயற்சியைப் பின்னாளில் பிரதமராக இருந்த வாஜ்பாயும் எடுத்தார்.

**சாதித்த போராட்டங்கள்**

- இன்று 5ஜி பற்றிப் பேசுகிறோம். தொலைத் தொடர்பிலும் தகவல் தொழில்நுட்பத்திலும் இன்றைய இந்தியா சர்வதேசப் பந்தயத்தில் தவிர்க்க முடியாத சக்தி.
- இப்படியான உயரத்துக்கு இந்தியா செல்லும் என்று அரை நூற்றாண்டுக்கு முன்னால் எத்தனை பேர் கணித்திருப்பார்கள் என்று தெரியாது.
- ஆனால், எண்பதுகளின் இறுதியிலும் தொண்ணூறுகளின் தொடக்கத்திலும் ஏற்பட்ட தொலைத் தொடர்புப் புரட்சிதான் பி.சி.ஓ., எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி என்பன போன்ற அம்சங்களைக் கொண்டுவந்தது. வி.எஸ்.என்.எல், பி.எஸ்.என்.எல். போன்ற அமைப்புகளை உருவாக்கியது.

## பிகாஜி பறக்கவிட்ட கொடி!

- ஆங்கிலேயர்களின் பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ச்சியாக விமர்சித்து வந்த தாதாபாய் நெளரோஜியின் அறிமுகம் பிகாஜிக்குக் கிடைத்தது. இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்.
- பிகாஜி பிரிட்டிஷ் அரசால் தடை செய்யப்பட்ட வந்தே மாதரம் உள்ளிட்ட புரட்சிப் பாடல்களை அச்சிட்டு விநியோகித்தார்.
- 1907 இல் ஜெர்மனியின் ஸ்டட்கார்ட்டில் நடைபெற்ற உலக சோஷலிஸ்ட் மாநாட்டில் பங்கேற்றார். பச்சை, காவி, சிவப்பு ஆகிய மூன்று வண்ணங்களைக் கொண்ட இந்தியக் கொடியை அதில் அறிமுகப்படுத்தினார். சுதந்திர இந்தியாவின் தேசியக் கொடி என்று அவர் பறக்கவிட்டார்.
- நாடு விடுதலை பெறுவதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பே ஜெர்மனி மாநாட்டில் கொடியைப் பறக்கவிட்ட பிகாஜி காமா, "சுதந்திர இந்தியாவின் கொடி பிறந்துவிட்டது. நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் இன்னுயிரைத் தந்த இந்தியர்களால் இந்தக் கொடி புனிதமடைந்துவிட்டது" என்றார்.
- அந்நிய மண்ணில் பிகாஜி காமா பறக்கவிட்ட இந்த மூவண்ணக் கொடியின் அடிப்படையில்தான் தற்போதைய தேசியக்கொடி உருவாக்கப்பட்டது.

## சுதந்திர இந்தியாவில் உயர்கல்வி

**புதிய உயர்கல்வி நிறுவனங்கள்**

- இந்தியா சுதந்திரம் அடைந்தபோது நாட்டில் 20 பல்கலைக் கழகங்கள் இருந்தன.
- 1945 இல் அமைக்கப்பட்ட சர்க்கார் கமிட்டி அமெரிக்காவின் மசாசூ செட்ஸ் தொழில்நுட்பக் கல்வி மையம் போல் அறிவியல், தொழில்நுட்ப பாடப் பிரிவுகளுக்கான உயர்தரமான கல்வியை வழங்குவதற்கான நிறுவனங்கள் இந்தியாவில் தொடங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.
- அதன்படி இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி) 1951 இல் கரக்பூரில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவில் மத்தியக் கல்வி அமைச்சகத்தின் கீழ் 23 நகரங்களில் ஐஐடிகள் இயங்கிவருகின்றன.
- திட்ட கமிஷனின் பரிந்துரைப்படி மேலாண்மை, வணிக நிர்வாகம் சார்ந்த கல்வியை வழங்குவதற்காக 1961 இல் கொல்கத்தாவில் இந்திய மேலாண்மைக் கழகம் (ஐஐஎம்) தொடங்கப்பட்டது. இன்று இந்தியாவில் ஐஐஎம்களின் எண்ணிக்கை 20.

**கல்வி அமைப்புகள்**

- 1969 இல் தொடங்கப்பட ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் கலை, சமூகவியல் பாடப்பிரிவுகளுக்கான உலகின் மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.
- உயர்கல்வியை அனைவரிடமும் சேர்க்கும் நோக்கத்துடன் 1960-70களில் அரசு பல உயர்கல்வி நிறுவனங்களைத் தொடங்கியதோடு தனியார் நிறுவனங்களுக்கு நிதி உதவி அளித்தது.
- இதனால் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளும் சுயநிதிக் கல்லூரிகளும் அதிகரித்தன.
- தொழில்நுட்பக் கல்வியைக் கண்காணித்துத் தரத்தை உறுதிப்படுத்துவதற்கான அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (ஏ.ஐ.டி.யு.சி) 1945லேயே உருவாக்கப்பட்டு விட்டது.
- அதேபோல் பல்கலைக் கழகங்களைக் கண்காணிக்கவும் தரத்தை உறுதிப்படுத்தவும் பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) 1953 இல் தொடங்கப்பட்டது.

- உரிய தர அளவுகோல்களை நிறைவேற்றும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் நிகர்நிலைப் பல்கலைக் கழக அந்தஸ்து வழங்கப்பட்டு வருகிறது.
- 1968இல் வெளியிடப்பட்ட தேசியக்கல்விக் கொள்கை இந்திய உயர்கல்வி அமைப்பை வலுப்படுத்தும் சீர்திருத்தங்களுக்கு வித்திட்டது.
- ராஜிவ்காந்தி பிரதமராக இருந்த போது 1968 கல்விக் கொள்கையைப் புதுப்பிப்பதற்கான பணிகள் தொடங்கின. அவருடைய ஆட்சியில் வெளியிடப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை (1986), உயர்கல்வி நிறுவனங்களை அதிகரித்தல், சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதி அளித்தல், தரமான ஆய்வுகளை மேம்படுத்துதல், ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆகியவை சார்ந்த பரிந்துரைகளின் மூலம் உயர்கல்வி அமைப்பை மேம்படுத்த முயன்றது.
- நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் 1992 இல் அமைக்கப்பட்ட ஜனார்த்தன ரெட்டி குழு பரிந்துரைத்த செயல் திட்டம் உயர்கல்வி நிறுவனங்களில் ஒட்டு மொத்த மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்கான திட்டங்களை முன்வைத்தது.
- ஏழைகள், பட்டியலினத்தவர், பழங்குடியினர், சிறுபான்மையினர் பெண்கள், கல்வியில் பின்தங்கியவர்கள் உள்ளிட்ட உயர்கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர்களைச் சேர்ப்பதற்குமான திட்டங்களையும் முன்வைத்தது.

**கல்லூரிக்கு வெளியே**

- வீட்டிலிருந்தபடியே பட்டம் பெறுவதற்கான தொலைதூரக் கல்வி வாய்ப்புகளும் 1960களிலேயே தொடங்கிவிட்டன.
- 1982 இல் தொடங்கப்பட்ட டாக்டர் அம்பேத்கர் திறந்த நிலைப் பல்கலைக் கழகம் தொலைநிலைக் கல்விக்காகத் தொடங்கப்பட்ட முதல் பல்கலைக் கழகம்.
- 1985 இல் இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக் கழகம் (IGNOU) தொடங்கப்பட்டது. இது இந்தியாவில் தொலைநிலைக் கல்வி வழங்கும் முன்னணி நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் தொலைநிலைக் கல்விப் பணியகம் (Distance Education Bureau) இந்தியாவில் தொலைநிலைக் கல்வியை ஒழுங்குபடுத்தும் அமைப்பு.

**தொடரும் பிரச்சினைகள்**

- இந்தியாவில் 1950இல் 20 ஆக இருந்த பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 2020இல் ஆயிரத்தைக் கடந்துவிட்டது.
- இந்தியாவில் 18-23 வயதுப்பிரிவினரில் 27.4 சதவீதத்தினரே கல்லூரி, பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏதேனும் ஓர் உயர்கல்வி அமைப்பில் இணைந்திருக்கிறார்கள்.
- இந்த விகிதத்தை 50 ஆக உயர்த்துவது தேசியக் கல்விக்கொள்கை 2020இன் நோக்கங்களில் ஒன்று.
- பட்டப்படிப்பை முடிப்போர் அனைவருக்கும் அவர்கள் கல்வித்தகுதிக்கு உரிய வேலை கிடைப்பதில்லை. பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்காத நிலை 1990களில் தலைவிரித்தாடியது.
- இந்தப் பிரச்சினையைச் சரிசெய்வதற்கு அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் உரிய தகுதி பெற்ற தரமான ஆசிரியர்களை நியாயமான ஊதியத்துடன் நியமிக்கப்படுவதை உறுதி செய்வது முதன்மையான தேவை.
- கல்வி நிறுவனங்களின் தரத்தை உறுதி செய்வதற்கான அமைப்புகளுக்கு வலுவூட்டுவது, பல்கலைக் கழகங்களில் அரசியல் தலையீடு, ஊழலைக் களைவது, கல்விக் கட்டணங்களைக் கட்டுப்படுத்துவது, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தரமான கல்வி நிறுவனங்கள் இருப்பதை உறுதி செய்வது உள்ளிட்ட பல்முனைத் தொடர் நடவடிக்கைகள் அவசியத் தேவை.
- சுதந்திர இந்தியாவின் நூற்றாண்டு (2047) கொண்டாட்டத்திலாவது அனைவருக்கும் தரமான உயர்கல்வி வழங்கப்பட வேண்டும்.

## பிரபல ஃபோர்ப்ஸ் பட்டியலில் இந்தியாவுக்கு 4-வது இடம்

- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் ஃபோர்ப்ஸ் ஆசியா எனும் வணிக இதழ் வெளியிட்ட 2022-ம் ஆண்டுக்கான 200 சிறந்த நடுத்தர நிறுவனங்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 24 நிறுவனங்களுடன் 4-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2021-ல் இந்தப் பட்டியலில் இந்தியா 26-வது இடத்தில் இருந்தது.
- ஃபோர்ப்ஸ் பட்டியலில் தைவான் அதிகபட்ச அளவாக 30 நிறுவனங்களை உள்ளடக்கி தொடர்ந்து 9-வது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துள்ளது.
- ஜப்பான் 29 நிறுவனங்களுடன் 2-வது இடத்திலும், தென்கொரியா 27 நிறுவனங்களுடன் 3-வது இடத்திலும் உள்ளன.

## தலாக்-இ-ஹசன் நடைமுறையும், முத்தலாக்கும் ஒன்றல்ல

- 'முஸ்லிம் மதத்தினர், தலாக்–இ–ஹசன் நடைமுறை வாயிலாக விகாகரத்து நடைபெறுவது, முத்தலாக் போன்றது அல்ல' என சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.
- முஸ்லிம் மதத்தை சேர்ந்த ஆண்கள், மூன்று முறை தலாக் கூறி, மனைவியை விவாகரத்து செய்யும் முத்தலாக் நடைமுறைக்கு எதிராக, மத்திய அரசு சட்டத்திருத்தம் மேற்கொண்டது.
- இதையடுத்து, முத்தலாக் தடைசட்டம் அமலுக்கு வந்தது. அதையும் மீறி, முத்தலாக் வாயிலாக விவாகரத்து பெறுபவர்கள் மீது, சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- முஸ்லிம் ஆண்கள் விவாகரத்து பெற, தலாக்–இ–ஹசன் என்ற மற்றொரு பழக்கம் நடைமுறையில் உள்ளது.
- இதன்படி, மனைவியுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாத ஆண், மூன்று மாதத்தில், மாதத்துக்கு ஒரு முறை தலாக் கூற வேண்டும்.
- மூன்றாவது மாதம் தலாக் கூறும் வரை, அவர்களுக்குள் இணக்கம் ஏற்படவில்லை எனில், விவாகரத்து வழங்கப்படும்.
- அதன்பின், திருமணத்தின் போது வழங்கிய நகை, பணம் உள்ளிட்ட அனைத்து பரிசுப் பொருட்களையும் பெண்வீட்டாருக்கு திருப்பி அளிக்க வேண்டும்.

**உரிமை மீறும் செயல்**

- இந்த தலாக்–இ–ஹசன் நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பெனாசிர் ஹீனா என்ற பெண், சுப்ரீம் கோர்ட்டில் மனுதாக்கல் செய்தார்.
- முத்தலாக் சட்டம், அரசியலமைப்புக்கு எதிரானது என தீர்ப்பு வழங்கிய சுப்ரீம் கோர்ட், தலாக்–இ–ஹசன் நடைமுறையை கண்டுகொள்ளவில்லை.
- இதுபோன்ற ஒரு தலைப்பட்சமான, நிதிக்கும் அரசியலமைப்புக்கும் புறம்பான அனைத்து விதமான தலாக் நடைமுறைகளும் ஒழிக்கப்படவேண்டும்.
- இது தன்னிச்சையானது, அடிப்படை உரிமைகளை மீறும் செயல்.
- இந்த தலாக்–இ–ஹசன் நடைமுறை, முத்தலாக் போன்றது அல்ல. பெண்கள் விவாகரத்து கோருவதற்கு 'குலா' என்ற நடைமுறை உள்ளது.
- சேர்ந்து வாழ விருப்பம் இல்லை எனில், கோர்ட் வாயிலாகவும் விவாகரத்து வழங்கப்படுகிறது. திருமணத்தின் போது அளித்த பரிசுப் பொருட்களை திருப்பி அளித்தால், கோர்ட் வாயிலாக விவாகரத்து.

## சிவமெக்கா மோதல் விவகாரம்

- சுதந்திர தின விழாவில் வீரசவார்க்கர் மற்றும் திப்பு சுல்தான் உருவப் படங்கள் கொண்ட பதாகைகளை வைப்பது தொடர்பாக சிவமொக்காவில் இருதரப்புக்கு இடையே நடந்த மோதலில் இளைஞர் ஒருவரை கத்தியால் குத்திய நபரை போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர்.
- அமீர் அகமது சதுக்கத்தில் வீரசவார்க்கர், திப்புசுல்தான் உருவப்படங்கள் அடங்கிய பதாகைகளை வைத்திருந்ததற்கு முஸ்லிம் மற்றும் ஹிந்து மதத்தை சேர்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.
- ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த கார்மென்ட்ஸ் தொழிலாளியான பிரேம்சிங் (20) என்பவரை சூழ்ந்த கும்பலைச் சேர்ந்த நபர் கத்தியால் குத்தினார்.
- இதில் வயிற்றுப்பகுதியில் படுகாயமடைந்த பிரேம்சிங், அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.
- அவரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதனிடையே, சிவமொக்கா மற்றும் பத்ராவதியில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- இந்நகரங்களில் செவ்வாய்க்கிழமை பள்ளிகள், கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. மேலும் மதுக்கடைகள் திறக்க தடை விதிக்கப்பட்டது.
- சிவமொக்காவில் அமைதியை நிலைநாட்ட சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக முதல்வர் பசவராஜ் பொம்மை கூறினார்.

## பில்கிஸ் பானு பாலியல் வழக்கு

- குஜராத்தில் 2002-இல் நிகழ்ந்த வகுப்புக் கலவரத்தின் போது, நடைபெற்ற பில்கிஸ் பானு பாலியல் வன்கொடுமை, கொலை வழக்கின் குற்றவாளிகள் 11 பேர் விடுதலை.

- ‘பெண் சக்தி’ குறித்து சுதந்திரதின விழாவில் பிரதமர் மோடி பேசிய சில மணி நேரத்தில், பாஜக ஆட்சி நடைபெறும் குஜராத்தில் பில்கிஸ் பானு பாலியல் வழக்கு குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
- கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்துக்குப் பிறகு நடைபெற்ற வகுப்புவாத கலவரத்தில் கர்ப்பிணியான பில்கிஸ் பானுவை பாலியல் வன்கொடுமை செய்து, மூன்று வயது குழந்தை உள்பட அவரது குடும்பத்தினர் 7 பேரைக் கொன்ற வழக்கின் குற்றவாளிகள் 11 பேர் தண்டனையை பூர்த்தி செய்ததால் குஜராத் அரசு விடுவிப்பதாக அறிவித்தது.
- சிறையில் இருந்து விடுதலையான அவர்கள் இனிப்புகள் வழங்கியும் மாலைகள் அணிவித்தும் வரவேற்கப்பட்டனர்.
- பெண்களின் பாதுகாப்பு, அதிகாரமளித்தல், கண்ணியப்படுத்தல் ஆகியவை குறித்து பிரதமர் மோடி பேசிய சிலமணி நேரத்தில் பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள் இது குறித்து பிரதமர் விளக்கமளிக்க வேண்டும்.
- பில்கிஸ் பானு வழக்கில் 11 பேரை குற்றவாளிகளாக மும்பை சிபிஐ சிறப்பு நீதிமன்றம் 2008-இல் குற்றவாளிகளாக தீர்ப்பளித்தது.
- இந்த உத்தரவை மும்பை உயர்நீதிமன்றமும் உறுதி செய்தது. இதையடுத்து அவர்கள் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தனர்.
- குஜராத் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தில் 59 கரசேவகர்கள் உயிரிழந்தனர். அதன் பின்னர் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தில் 790 முஸ்லிம்களும் 254 ஹிந்துக்களும் உயிரிழந்தனர்.

## விசாகா நெறிமுறை

- வேலைக்குச் செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டத்துக்கு முன்னோடியாக விளங்கியது ‘விசாகா நெறிமுறைகள்’ ராஜஸ்தானைச் சேர்ந்த பன்வாரி தேவி மீது நிகழ்த்தப்பட்ட கொடூரம்தான் விசாகா நெறிமுறைகள் உருவாக்கப்படக் காரணம்.
- ராஜஸ்தான் மாநிலப் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் பணியாளராகச் செயல்பட்டவர் பன்வாரிதேவி. கிராமப்புறப் பெண்கள் மத்தியில் சுகாதாரம், கல்வி போன்றவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது இவரது வேலை.
- 1990-களில் பரவலாக இருந்த குழந்தைத் திருமண நடைமுறையை ஒழிப்பதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியிலும் இவர் ஈடுபட்டிருந்தார்.
- 1992 இல் இவர் முன்னெடுத்த விழிப்புணர்வுப் பிரச்சாரத்துக்குக் கிராம மக்கள் ஆதரவளிக்கவில்லை. இருந்தபோதும் ஒன்பது வயதுப் பெண் குழந்தைக்கு நடைபெறவிருந்த திருமணத்தைக் காவலர்கள் உதவியுடன் தடுத்து நிறுத்தினர். இதனால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பேர், பன்வாரி தேவியின் கணவரைத் தாக்கி, பன்வாரி தேவியைக் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கினர்.
- இது குறித்து காவல் நிலையத்தில் அவர் புகார் அளித்தார். ஆனால் காவல்துறையினர் 52 மணி நேரம் கழித்தே புகாரைப் பதிவு செய்தனர்.
- மாவட்ட நீதிமன்றத்தில் பன்வாரி தேவிக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
- பன்வாரி தேவிக்கு நிகழ்ந்த இந்த அநீதிக்கு எதிராகப் பெண்ணிய அமைப்புகள் குரல்கொடுத்தன. இதில் அரசு எந்த விதத்திலும் பொறுப்பேற்கவில்லை என்பதை கண்டித்து வீதிகளில் இறங்கிப் போராடினர்.
- பணியிடங்களில் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் பாலியல் சீண்டல் காரணமாகப் பெண்களே வேலையைவிட்டு நீக்கப்படுகின்றனர்.
- அவர்களைப் பணியிலிருந்து நீக்குவதன் வாயிலாக அரசு, தனியார் நிறுவனங்கள் தங்கள் கடமையிலிருந்து தப்பித்துக் கொள்கின்றன.
- பாதிக்கப்பட்ட பெண்கள் இப்படியொரு சூழலில் வேலையின்றி நிராதரவாக நிற்பதைச் சுட்டிக்காட்டிப் பெண்கள் அமைப்பினர் போராடினர்.
- பணியிடங்களில் பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தித் தருவது வேலை வழங்கும் நிறுவனங்களின் பொறுப்பு என்பதை வலியுறுத்தியும் பன்வாரி தேவிக்கு நீதி கேட்டும் விசாகா என்கிற பொதுவான பெயரில் உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனுவைப் பெண்கள் தாக்கல் செய்தனர்.
- அதன் விளைவாக 1997 இல் உருவாக்கப்பட்டதுதான் பணியிடத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ‘விசாகா நெறிமுறைகள்’.
- எவையெல்லாம் பாலியல் சீண்டல், பணி வழங்கும் நிறுவனமும் பணியாளரும் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் போன்றவை அதில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

# நகர்மயமும் உள்கட்டமைப்பும்

- இந்தியா அதிவேகமாக நகர்மயமாகி வருகிறது. நாடு விடுதலை அடைந்தபோது 14% மக்கள் நகரங்களில் வாழ்ந்தார்கள். இப்போது அது 35% ஆக உயர்ந்திருக்கிறது.
- இந்தியாவின் மொத்த உற்பத்தியில் நகரவாசிகள் 75% பங்களிக்கிறார்கள். இவர்கள்தான் இந்தியாவிற்கு உற்பத்தித் துறையிலும் சேவைத் துறையிலும் பொருளீட்டித் தருகிறார்கள்.
- இவர்கள் வாழும் நகரங்களின் உள்கட்டமைப்பு வசதி கடந்த 75 ஆண்டுகளில் வளர்ந்திருக்கிறதா? உள்கட்டமைப்பு என்பது பொதுப் போக்குவரத்து, வீட்டுவசதி, குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல், மழைநீர் வெளியேற்றம், மின்சாரம், தொலைத்தொடர்பு, நகரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை முதலான பல அலகுகளை உள்ளடக்கியது.

**போக்குவரத்து**

- உள்கட்டமைப்பில் பிரதானமானது போக்குவரத்து; போக்குவரத்தில் பிரதானமானது சாலை வசதி. இப்போதைய கணக்கின்படி இந்தியாவின் நகரங்களும் கிராமங்களும் 33.4 லட்சம் கி.மீ. நீளமுள்ள சாலைகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன.
- 1947இல் வெறும் 21,378 கி.மீ ஆக இருந்த தேசிய நெடுஞ்சாலைகள், இப்போது 14 லட்சம் கி.மீ ஆக வளர்ந்திருக்கின்றன. நாட்டின் மொத்த சாலைகளின் நீளத்தில் இது 4% தான்.
- ஆனால், சாலைப் போக்குவரத்தின் 40% பயணங்கள் இந்தத் தரமான சாலைகளின் மீதுதான் மேற்கொள்ளப்படுகின்றன.
- 1947இல் ரயில் தடங்களின் நீளம் 54,693 கி.மீ. இதில் அகல ரயில் பாதை பாதிக்கும் குறைவாகத்தான் இருந்தது (25,170கி.மீ.) விடுதலைக்குப் பிறகு, மீட்டர் கேஜ் தடங்கள் பலவும் அகல ரயில் தடங்களாக மாற்றப்பட்டன. எனினும், 2020ஆம் ஆண்டுக் கணக்கின்படி நாட்டின் மொத்த ரயில் தடங்களின் நீளம் 67,956 கி.மீ.
- டெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் ஆகிய முதல் நிலை நகரங்கள் தவிர அகமதாபாத், போபால், ஜெய்பூர், லக்னோ, நாக்பூர், கொச்சி முதலான இரண்டாம்நிலை நகரங்களிலும் மெட்ரோ ஓடிக்கொண்டிருக்கிறது.

**குடிநீர், கழிவுநீர், மழைநீர்**

- இந்தியாவின் 90% நகரவாசிகளுக்குக் குடிநீர் கிடைக்கிறது. இதில் சரிபாதிப் பேருக்கு மட்டுமே குழாய்நீர் கிடைக்கிறது.
- 60% நகரவாசிகளுக்கு அடிப்படைக் கழிவறை வசதிகள் இருக்கின்றன (உலக வங்கி புள்ளிவிவரம்). ஆனால், இந்தியாவின் எந்த நகரத்திலும் நாள் முழுவதும் குழாய்நீர் கிடைப்பதில்லை.
- பல நகரங்களில் கழிவுநீர், மழைநீர் வடிகால்களில் கலக்கிறது. எந்த நகரத்திலும் பொறியியல் ரீதியாகத் திட்டமிடப்பட்ட, 50 ஆண்டுகளில் பெய்வதற்குச் சாத்தியமுள்ள அதிகபட்ச மழையைக் கடத்திவிடும் மழைநீர் வடிகால்கள் இல்லை.
- உலகின் பல நாடுகளில் நகரவாசிகளுக்குக் கிடைக்கும் இந்த அடிப்படை வசதிகள் நமக்கும் கிடைக்க வேண்டும்.

**வீட்டுவசதி**

- நகரங்களால் பெருகிவரும் மக்கள் தொகைக்கு இணையான வேகத்தில் வாழிடங்களை வழங்க முடியவில்லை. விளைவு நமது நகர மக்களில் நான்கில் ஒருவர் குடிசைப்பகுதிகளிலும் ஒதுக்குப்புறங்களிலும் வாழ்கிறார்கள். (டாடா அறிவியல் கழகம் வழங்கியுள்ள புள்ளிவிவரம்).
- மறுபுறம் நடுத்தர வர்க்கத்தினர் பெருகிவரும் ரியல் எஸ்டேட் ஆதிக்கத்தால் வீடு வாங்கவும் கட்டவும் சிரமப்படுகிறார்கள். இதில் அரசின் தலையீடு அவசியம்.
- வறியவர்களுக்குக் குறைந்த வாடகையில் வீடு கட்டித்தரப்பட வேண்டும். நடுத்தர வர்க்கத்தினருக்கு அரசின் வீட்டு வசதித் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும்.
- தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் முறைசாராத் தொழிலாளர்களுக்கும் சேமநல நிதியைக் கட்டாயமாக்கி, அதிலிருந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கலாம்.

**நகரமைப்புப் புலப்படங்கள்**

- நகரின் வரைபடங்கள் இன்றளவும் டிஜிட்டல் வடிவில் உருவாக்கப்படவில்லை. எல்லா நகரங்களின் வரைபடங்களும் டிஜிட்டல் முறையில் அலகிடப்பட்டு கணினிமயப்படுத்தப்பட வேண்டும்.
- புல எண்கள், உரிமையாளரின் பெயர்கள், புறம்போக்கு நிலங்கள், நீர்ப்படிப்புப் பகுதிகள், வெள்ளச் சமவெளிகள் போன்றவை குறிப்பிடப்பட்டு, அவை பொதுவெளியில் காணக்கூடியதாக இருக்க வேண்டும்.
- இந்த வரைபடங்களில் மின்சாரம், தொலைத்தொடர்பு கேபிள்களையும் குடிநீர், கழிவுநீர்க் குழாய்களையும் ஏற்றி வைக்கலாம். இது நகரின் திட்டமிடலுக்குப் பெரிதும் பயன்படும்.

**கல்வி, மருத்துவம்**

- இந்தத் துறைகளில் தனியார் ஆதிக்கம் களையப்பட வேண்டும். உலகின் வளர்ந்த நாடுகள் பலவும் கல்வியையும் மருத்துவத்தையும் தம் மக்களுக்கு இலவசமாக அளிக்கின்றன.அவை தரமாகவும் இருக்கின்றன. நாமும் அதைச் செய்ய வேண்டும்.
- படிப்பும் ஆரோக்கியமும் மிக்க சமூகம், உள்கட்டமைப்பு வசதிகள் அளிக்கப்படுவதை உறுதி செய்துகொள்ளும். அப்படியான சமூகத்தில் தொழில்துறையும் சேவைத் துறையும் வளரும். மக்களின் வருமானம் பெருகும். வாழ்நிலை உயரும்.

## தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா

**இந்தியாவில் இணையம்**

- **இந்தியாவில் இ**ணையப் பயனாளர்களின் தற்போதைய எண்ணிக்கை சுமார் 69.2 கோடி. கிராமப்புறத்தில் 35.1 கோடியும், நகர்ப்புறத்தில் 34.1 கோடியுமாக உள்ள இந்த எண்ணிக்கை, 2025-ல் 90 கோடியைத் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2019-ல் 23 கோடி பேர் இணையவழிப் பரிவர்த்தனை மேற்கொண்டிருந்த நிலையில் கரோனாவின் விளைவால் அது 51% அதிகரித்திருப்பதாக IAMAI-யின் 'Internet in India' அறிக்கை கண்டறிந்திருக்கிறது.
- பணப்பரிவர்த்தனை தொடங்கி மருத்துவச் சிகிச்சை வரை அன்றாட வாழ்வின் பெரும்பகுதி இணையத்தை அடிப்படையாக கொண்ட டிஜிட்டல் தளத்துக்குத் தற்போது இடம்பெயர்ந்திருக்கிறது.

**தகவல்-தரவுக் கசிவு / திருட்டு (Information-Data breach/theft) :**

- பயனரின் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்து, தரவுகளாகப் பராமரித்து, அதன் அடிப்படையில் இணையதளங்கள், செயலிகள் சேவை வழங்கி வருகின்றன.
- மிகப்பெரும் எண்ணிக்கையிலான இணையப் பயனாளர்களை இந்தியா கொண்டிருக்கும் நிலையில், தகவல்-தரவுக் கசிவு, திருட்டு சமீப காலத்தில் நம்ப முடியாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.
- தகவல்-தரவுக் கசிவு/திருட்டு அதிகளவில் நடைபெறும் நாடுகளில் இந்தியா ஆறாம் இடத்தில் இருக்கிறது; தரவுக்கசிவு, இந்த ஆண்டின் முதல் காலாண்டைவிடத் தற்போது 740% அதிகரித்திருப்பதாக Surfshark-ன் அறிக்கை கூறுகிறது.

**தரவுப் பாதுகாப்பு**

- இணையப் பயன்பாடும் அதன் விளைவாகத் தகவல்-தரவுக் கசிவும் இந்தியாவில் அதிகரித்துவரும் நிலையில் பயனர்களின் தனியுரிமையைப் (Privacy) பாதுகாப்பதற்குத் தனிச் சட்டம் இதுவரை இல்லை. ஏற்கனவே உள்ள தகவல் தொழில்நுட்பச் சட்டம் (Information Technology Act, 2000) தற்போதைய சூழலை எதிர்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை என்று கருதப்படுகிறது.
- ஆகவே, தரவுப் பாதுகாப்புக்கான ஒழுங்குமுறைச் செயல்திட்டத்தையும், தரவுப் பாதுகாப்பு மசோதாவுக்கான வரைவையும் உருவாக்க, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி பி.என்.ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் குழு ஒன்றை ஜுலை 2017-ல் மத்திய அரசு அமைத்தது.
- இந்நிலையில், ஆகஸ்ட் 2017-ல், நீதிபதி கே.எஸ்.புட்டாஸ்வாமி (ஓய்வு) எதிர் இந்திய ஒன்றியம் வழக்கில், தனியுரிமையும் ஓர் அடிப்படை உரிமைதான் என்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்பட்டது.
- ஸ்ரீகிருஷ்ணா குழு தன்னுடைய அறிக்கை, தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதாவுக்கான வரைவு ஆகியவற்றை மத்திய மின்னணு - தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திடம் 2-18 ஜுலை 27 அன்று சமர்ப்பித்தது.
- மத்திய அமைச்சரவை 2019 டிசம்பர் 4 அன்று தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதாவுக்கு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, 2019 டிசம்பர் 11 அன்று மக்களவையில் இது அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஆனால் வரைவுக்குழு வழங்கும் அதிகாரத்தைவிடத் தரவுகள் மீது மத்திய அரசு அதிக அதிகாரத்தைக் கொண்டிருப்பதாக மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட மசோதா குறித்து நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா விமர்சித்தார்.
- இந்த மசோதாவில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் தனிநபர் தகவல் பாதுகாப்பை உறுதி செய்தல், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு எதிராக இருப்பதாகத் தொழில்நுட்ப வல்லுநர்கள், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டினர்.

**நாடாளுமன்றக் கூட்டுக்குழு**

- தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா குறித்து எழுந்த விவாதங்களை ஆராயும் விதமாக டிசம்பர் 2019-ல் நாடாளுமன்றக் கூட்டுக்குழு அமைக்கப்பட்டது.
- பிரிவு 35-ன் கீழ் மத்திய அரசு எந்தவொரு அரசு நிறுவனத்துக்கும் மசோதாவுக்கு இணங்குவதிலிருந்து விலக்களிக்கலாம்.
- மசோதாவின் கீழ் எந்தவொரு பாதுகாப்பையும் பின்பற்றாமல் தனிப்பட்ட தரவை அரசு முகமைகளால் செயலாக்கத்துக்கு (process) உட்படுத்த முடியும். மசோதாவின் இந்த அம்சம் பயனர்களின் தனியுரிமையைக் கடுமையாக மீறும் அபாயங்களைக் கொண்டிருக்கிறது.
- இந்தப் பின்னணியில்தான், நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பல்வேறு திருத்தங்கள், பரிந்துரைகள், மாற்றங்களைச் சுட்டிக்காட்டி மசோதாவைத் திரும்பப் பெறுவதாக ஆகஸ்ட் 3 அன்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.
- கூட்டுக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த சட்ட வழிமுறைகளுக்குப் பொருந்தும் வகையில் புதிய மசோதாவைக் கொண்டுவர அரசு முடிவு செய்திருப்பதாக அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

## இந்திய கால்பந்து சங்கத்தக்கு தடை விதித்தது பிஃபா

- இந்திய கால்பந்து கூட்டமைப்பில் 3-ம் தரப்பினர் தலையீடு இருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ள சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிஃபா), அனைத்திந்திய கால்பந்து கூட்டமைப்புக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.
- இதனால் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலகக் கோப்பை கால்பந்து தொடரை நடத்தும் உரிமையை இந்தியா இழந்துள்ளது.
- 85 வருட வரலாற்றில் அனைத்திந்திய கால்பந்து கூட்டமைப்பு, பிஃபா-வால் தடை செய்யப்படுவது இதுவே முதன்முறை.

**பிஃபா தலையீடு எதற்கு?**

- இந்திய கால்பந்து கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவுக்கான தேர்தலில் 36 மாநில சங்கங்களின் பிரதிநிதிகளும், 36 பிரபல கால்பந்து வீரர்களின் பிரதிநிதிகளும் வாக்களிப்பார்கள் என உச்சநீதிமன்றம் தெரிவித்திருந்தது. வீரர்கள் பட்டியலில் பாய்ச்சுங் பூட்டியா, ஐஎம் விஜயன் ஆகியோரது பெயர்களும் இடம் பெற்றிருந்தன.
- வாக்களிக்கும் உரிமையில் 50 சதவீதம் முன்னாள் வீரர்களுக்கு வழங்கப்பட்டது, உள்ளிட்ட சில புதிய விதிகளுக்கு பல்வேறு மாநில கால்வந்து சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்தன. இந்த விதிகள் அபத்தமாகவும் பாரபட்சமாக இருப்பதாகவும் குற்றம்சாட்டிய அவர்கள், இது தொடர்பாக பிஃபாவுக்கு கடிதம் ஒன்றை எழுதினர்.
- இதைத் தொடர்ந்து இந்திய கால்பந்து கூட்டமைப்பின் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையில் தனிநபர்களின் சேர்ப்பு ஏற்றுக்கொள்ள முடியாது என இந்திய விளையாட்டுத்துறை அமைச்சகத்திற்கு பிஃபா கடிதம் எழுதியது. இதன் தொடர்ச்சியாகவே தற்போது அனைத்திந்திய கால்பந்து கூட்டமைப்புக்கு பிஃபா தடை விதித்துள்ளது.

**பின்னணி என்ன?**

- தொடர்ந்து 3-வது முறையாக இந்திய கால்பந்து கூட்டமைப்பின் தலைவராக பதவி வகித்த பிரஃபுல் படேலின் பதவிக்காலம் கடந்த 2020-ம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்தது.
- ஆனால் அவர் 2017-ம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதை காரணம் காட்டி அப்பதவியில் இருந்து விலக மறுத்தார்.
- விதிமுறைகளின்படி விளையாட்டு கூட்டமைப்பின் தலைவர் பதவியில் அதிகபட்சம் 12 ஆண்டுகள் மட்டுமே தொடர முடியும்.
- இதை எதிர்த்து முன்னாள் கோல் கீப்பரும் தற்போதைய பாஜக தலைவருமான கல்யான் சவுபேனின் தரப்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.
- இதை காரணம் காட்டிதான் பிரஃபுல் படேல் பதவியில் இருந்து விலக மறுத்திருந்தார்.

## சிறைகளில் ஆங்கிலேயர் கால விதிமுறைகளுக்கு முடிவு

## கைதிகளுக்கு புதிய வசதிகள் அளிக்க உ.பி.முதல்வர் யோகி ஒப்புதல்

**குழந்தைகளுக்கு நர்சரி பள்ளி**

- பெண் கைதிகளின் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு முன்பை விட சிறப்பான பாதுகாப்பு அறைகளும், 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு நர்சரி பள்ளியும் அமைக்கப்பட உள்ளது. இவர்களுக்கு பொழுதுபோக்கு வசதிகளுடன் சத்தான உணவும் நோய் தடுப்பு மருந்துகளும் அளிக்கப்படும்.

- 4 முதல் 6 வயது குழந்தைகள் பெற்றோர் அனுமதியுடன் சிறைக்கு வெளியில் உள்ள சிறந்த பள்ளிகளிலும் சேர்க்கப்படுவர். அரசு செலவு வாகனங்களில் அவர்கள் பள்ளிக்கு சென்று வருவார்கள்.
- சிறைகளின் பாதுகாப்புக்காக காவலர்களுக்கு இதுவரை ஆங்கிலேயர் கால 303 வகை துப்பாக்கிகள் அளிக்கப்பட்டன. இதை மாற்றி, இனி அவர்களுக்கு 9 எம்.எம். கைத்துப்பாக்கி இன்ஸாஸ் மற்றும் அதன் ரவைகள் வழங்கப்படும்.

**தாலி அணிய அனுமதி**

- பெண் கைதிகள் இனி கழுத்தில் தாலியும் சுடிதார் உடைகளும் அணிய அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கு சானிட்டரி நாப்கின், தலைமுடிக்கான எண்ணெய் மற்றும் பிற அத்தியாவசிய அலங்காரப் பொருட்களும் அளிக்கப்படும்.
- சிறையில் பிறக்கும் குழந்தைகளுக்கு பதிவு மற்றும் தடுப்பூசிகள் அரசால் வழங்கப்படும்.
- ஆண் கைதிகள் முடிகளை மழிக்க நவீன ரேசர்களும் முடிதிருத்துவோர் வசதியும் அளிக்கப்படும். கைதிகள் தங்கள் துணிகளை துவைத்துக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.
- கைதிகளுக்கான உணவுமுறையிலும் மாற்றம் செய்யப்பட்டு தினமும் தேநீர், அனைத்து மதங்களின் பண்டிகைக் காலங்களில் சிறப்பு உணவு உள்ளிட்ட வசதிகள் கூடுதலாகக் கிடைக்க உள்ளன.
- கம்ப்யூட்டர் பயிற்சி மற்றும் பல்வேறு சுயதொழில் பயிற்சிக்கும் சிறையில் வாய்ப்பு அளிக்கப்படும்.
- ஒரே குடும்பத்தின் கைதிகள் சிறையின் உள்ளே சந்தித்துப் பேச அனுமதி உள்ளிட்ட புதிய வசதிகளும் அளிக்கப்பட உள்ளது.

## தலாக் இ ஹசன் முறை முறையற்றதல்ல

- தலாக் இ ஹசன் என்பது, முத்தலாக் போன்ற மற்றொரு விவாகரத்து முறை ஆகும். முத்தலாக் முறையில், ஒரே நேரத்தில் மூன்று முறை தலாக் என்று கூறி கணவன் – மனைவிக்கு இடையே விவாகரத்து மேற்கொள்ள முடியும்.
- அதுவே தலாக் இ ஹசன் முறையில், 3 மாத காலத்தில், ஒவ்வொரு மாதமும் ஒரு முறை 'தலாக்' என்று கூறுவதன் மூலம் விவாகரத்து நடைமுறையை மேற்கொள்ளலாம்.
- ஒரு வேளை மூன்றாவது மாதம் 'தலாக்' சொல்வதற்குள் கணவன், மனைவி சமாதானம் செய்து கொண்டால், முன்னர் சொன்ன இரண்டு 'தலாக்'குகளும் செயலிழந்து விடும்.
- முஸ்லிம் பெண் ஒருவர் தன் கணவனிடம் இருந்து பெற்ற வரதட்சணை (மஹர்) அல்லது வேறு எதையாவது திருப்பித் தருவதன் மூலமோ அல்லது எதையும் திருப்பித் தராமலோ, வாழ்க்கைத் துணைவர்கள் அல்லது காதியின் (நீதிமன்ற) ஆணையின் மூலம் சூழ்நிலைகளைப் பொறுத்து விவாகரத்து பெற முடியும்.
- ஆனால் தலாக்–இ–ஹசன் விவாகரத்து முறை அவ்வளவு முறையற்றதல்ல என்று தெரிய வருகிறது. எனவே, முஸ்லிம் பெண்களுக்கு மற்றொரு வாய்ப்பு உள்ளது.
- அதாவது, கணவர்களை விவாகரத்து செய்யும் குலா முறைதான் அது. நான் மனுதாரரின் முகாந்திரத்துடன் உடன்படவில்லை. வேறு எந்த காரணத்திற்காகவும் இது ஒரு நிகழ்ச்சி நிரலாக மாறுவதை நான் விரும்பவில்லை.
- தலாக் போன்ற தலாக் இ ஹசன் உள்ளிட்ட பல்வேறு விவாகரத்து நடைமுறைகள், சமூகத்துக்கு தீயவையாகும். சதி போன்ற உடன்கட்டை ஏறுதல் கொடுமையைப் போன்றதாகும்.
- மேலும், தலாக்–இ–ஹசன் தன்னிச்சையானது, பகுத்தறிவற்றது ஆகும்.
- அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14, 15, 21 மற்றும் 25 மற்றும் சிவில் உரிமைகள், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச மரபுகளுக்கு முரணானது.

## காற்று மாசு

- இந்தியாவின் டெல்லி, கொல்கத்தா, சீனாவின் ஷாங்காய் மற்றும் ரஷ்யாவின் மாஸ்கோ நகரங்களில் காற்று மாசின் அளவு உலக சுகாதார மையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை தாண்டி மிக மோசமான நிலையில் உள்ளது.
- குறிப்பாக, டெல்லி, கொல்கத்தா நகரங்களில் அபாயகரமான நுண்ணிய துகள்கள் (பிஎம் 2.5) காற்றில் கலந்துள்ளன.
- ஷாங்காய், மாஸ்கோ நகரங்களில் காற்றில் அதிக அளவில் நைட்ரஜன் டை ஆக்ஸைடு (என்ஓ2) கலந்துள்ளது.
- இந்த மாசு, மனிதர்களின் உயிருக்கு மிகவும் தீங்கு விளைவிக்கக் கூடியவையாகும்.
- உலகளவில் 7,000–க்கும் மேற்பட்ட நகரங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில் பிஎம் 2.5 மற்றும் என்ஓ2 ஆகிய இரண்டு தீங்கு விளைவிக்கும் மாசுகள்தான் காற்றில் அதிக அளவில் கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- 7,239 நகரங்களில் ஏற்பட்ட 17 லட்சம் மரணங்களுக்கு பிஎம் 2.5 மாசு அடிப்படை காரணமாக இருப்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

- பிஎம் 2.5 நுண்ணிய துகள்கள் காற்றில் அதிகம் கலந்துள்ள முதல் 10 நகரங்களின் பட்டியலில் டெல்லி, கொல்கத்தா, கனோ (நைஜீரியா), லிமா (பெரு), டாக்கா (வங்கதேசம்), ஜகர்தா (இந்தோனேசியா), லாகோஸ் (நைஜீரியா), கராச்சி (பாகிஸ்தான்), பெய்ஜிங் (சீனா) மற்றும் அக்ரா (கானா) ஆகிய நகரங்கள் உள்ளன.

## இலவச வாக்குறுதிகளை தடுக்க இயலாது

- நீதிபதிகள், விவசாயிகளுக்கு மின்சாரம், விதைகள், உரங்களுக்கு அளிக்கப்படும் மானியத்தை இலவசங்களாக கருத முடியுமா?
- இலவச சுகாதார சேவைகள், இலவச குடிநீர், நுகர்வோருக்கு இலவச மின்சாரம் ஆகியவையும் இலவசங்களாக கருத முடியுமா?
- வாக்காளர்கள் இலவசங்களையும் எதிர்பார்க்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்களுக்கு வாய்ப்பு அளித்தால் கண்ணியமான வருமானத்தை ஈட்டுவார்கள். மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் அதை செய்கிறது.
- தேர்தல் வாக்குறுதிகள் மட்டும் வெற்றியை நிர்ணயிப்பதில்லை. அதிக வாக்குறுதிகள் அளித்த கட்சிகள் பெரும் தோல்வியைத் தழுவியும் உள்ளன.
- மக்கள் பணம் சரியான வழியில் எப்படி செலவிடப்படுகிறது என்பதில் மட்டும் கவனம் செலுத்தப்படுகிறது. மக்களின் வரிப்பணம் இலவசங்கள் மூலம் வீணாகிறது என்று ஒரு தரப்பும், மக்கள் நலத் திட்டங்களுக்கு பொதுமக்களின் பணத்தைச் செலவிட வேண்டியது அவசியம்.
- இலவச டிவி, வீட்டு உபயோக பொருள்களுக்கும், இலவச வளர்ச்சித் திட்ட அறிவிப்புகளுக்கும் வித்தியாசம் உள்ளது. இலவச கல்வி பயிற்சி வாக்குறுதியை இலவச பொருள்களுடன் ஒப்பிடக்கூடாது.
- அரசியல் கட்சிகள் அறிவிக்கும் இலவச பொருள்களுக்கும், அரசுகள் செயல்படுத்தி வரும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் இடையே வித்தியாசம் உள்ளது. அந்த இரண்டையும் குழப்பிக் கொள்ளக்கூடாது.
- மக்களின் ஊதியம், வாய்ப்புகள் போன்றவற்றில் நிலவி வரும் ஏற்றத்தாழ்வுகளை ஈடு செய்ய மாநிலங்கள் முயற்சி செய்ய வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 38(2) வலியுறுத்துவதாக சரியான வாதம் முன்வைக்கப்பட்டது.
- தேர்தல் நேரத்தில் அளிக்கப்படும் வாக்குறுதிகள் விவகாரத்தில் நிபுணர் குழு அமைப்பது தொடர்பாக ஆலோசனை வழங்கலாம்.

## குறுகிய கால விவசாயக் கடன்களுக்கு 1.5% வட்டி மானியம்

- ரூ.3 லட்சம் வரையிலான குறுகிய கால விவசாயக் கடன்களுக்காக வங்கிகளுக்கு 1.5 சதவீதம் வட்டி மானியம்.
- வங்கி வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி அண்மையில் உயர்த்தியது. இதன் காரணமாக விவசாயிகளிடம் வசூலிக்கப்படும் வட்டியை வங்கிகள் அதிகரிக்காமல் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை.
- 2020-ஆம் ஆண்டு மே மாதம் வட்டி மானிய திட்டத்துக்காக வங்கிகளுக்கு மத்திய அரசு அளித்து வந்த உதவி நிறுத்தப்பட்டது. கடன் அளிக்கும் நிறுவனங்களாலேயே 7 சதவீத வட்டியில் விவசாயக் கடன் அளிக்க முடிந்தது.

**வளர்ச்சி**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் முதல் 30 ஆண்டுகளில் 3.5% ஆக இருந்த நிலையில், அடுத்த 20 ஆண்டுகளில் அது சுமார் 5.5% ஆகவும் 2010-களில் 7%-8% ஆகவும் உயர்ந்தது.
- விடுதலை பெற்றபோது ரூ.2.7 லட்சம் கோடியாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.150 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.
- வாங்கும் சக்தியைக் கொண்டு மதிப்பிட்டால், இந்தியா உலகத்திலேயே மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரம்.
- அந்நியச் செலாவணி கையிருப்பிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் உலகளவில் ஐந்தாவது இடம்.
- வளர்ச்சி விகித இலக்குகளை முன்கூட்டியே எட்டி முடிந்தால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள்ளேயே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அமெரிக்காவை இந்தியா விஞ்சிவிடும் என்றும் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக வளர்ந்து விடும்.
- இந்த வளர்ச்சிக்கு இந்தியாவின் மனிதவளம், உற்பத்தித் தொழில் துறை, ஏற்றுமதி, இந்திய ரூபாயின் சர்வதேச மதிப்பு ஆகியவை முக்கிய இயக்கு விசைகளாக இருக்கும்.

**உருமாறும் கொள்கைகள்**

- ஜே.ஆர்.டி.டாடா, ஜி.டி.பிர்லா உள்ளிட்ட சுதேசப் பெருமுதலாளிகள் சுதந்திரத்திற்கு முன்பே உருவாக்கித் தந்த பம்பாய் திட்டத்தின்படியே இந்தியாவின் முதலாவது தொழிற்கொள்கை தீட்டப்பட்டது.
- பொதுத்துறை நிறுவனங்களோடு தனியாரையும் ஆதரிக்கும் கலப்புப் பொருளாதாரமாக அது மலர்ந்தது.

- 1953-ல் 9 விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அரசின் முழுப் பொறுப்பானது ரயில்வே, ஆயுள் காப்பீடு, சுரங்கங்கள் ஆகியவையும் தேசியமயமாகின. ஜவஹர்லால் நேருவின் வழியில் இந்திராவும் தொடர்ந்தார். 1969-ல் 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. 1980-ல் மேலும் 6 வங்கிகள் தேசியமயமாகின.
- இன்று, நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காகப் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துகளையும் பங்குகளையும் அரசு விற்கிறது. அத்துடன், தனியார் பெருநிறுவனங்களையும் ஆதரிக்கிறது.
- சோவியத் ஒன்றியத்தை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களில் முதலாவது விவசாயத்துக்கும் இரண்டாவது பெருந்தொழிற்சாலை -களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தன.
- ஒரு பக்கம் உணவுப் பற்றாக்குறையைப் போக்கியாக வேண்டும். இன்னொரு பக்கம் அடிப்படைத் தொழிற்சாலைகளை உருவாக்கினால்தான் தொழில் துறையை வளர்த்தெடுக்க முடியும் என்ற நிலையில், அதன் கவனங்கள் ஒன்றிலிருந்து ஒன்றாக மாறி நின்றது.
- வறுமை, ஒழிப்புக்குத் தீவிர முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நீடித்த வளர்ச்சி என்கிற தொலைநோக்கு இலக்கை நோக்கி அது பயணித்தது. இன்று திட்டக்குழு என்ற அமைப்பே கலைக்கப்பட்டுவிட்டது.

## உணவுப் பாதுகாப்பு

- 1950-களில், 34.7 கோடி மக்கள் தொகைக்கு 5 கோடி டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், உணவு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளின் உதவிகளை நம்பியிருக்க வேண்டியிருந்தது.
- இன்று 130 கோடி மக்கள் தொகைக்கு 30 கோடி டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்து உணவு ஏற்றுமதி செய்யும் நிலைக்கு உயர்ந்திருக்கிறோம்.
- 1951-ல் சராசரியாகத் தனிநபர் ஒருவருக்குக் கிடைத்த உணவின் அளவு, நாள் ஒன்றுக்கு 334 கிராம் ஆக இருந்த நிலையில், இன்று அது 500 கிராம் ஆக அதிகரித்துள்ளது.

**பணவியலும் வரியியலும்**

- பணவியல் கொள்கையை வகுப்பது, வங்கி – வங்கியல்லாத நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது என இரண்டு முக்கியப் பொறுப்புகளை ரிசர்வ் வங்கி வகித்து வருகிறது. எனினும், பணவீக்கமும் வராக் கடன்களின் அளவும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.
- பிரதான் மந்திரி ஜன்-தன் யோஜனா திட்டத்தின் கீழ் அனைவருக்கும் வங்கிக் கணக்குத் தொடங்க வாய்ப்பு அளிக்கப்பட்டது.

**உடனடி நெருக்கடி**

- தொடர்ந்து அதிகரித்துவரும் வேலைவாய்ப்பின்மை தான்.
- தொழிலாளர்களின் பங்கேற்பு மிகவும் குறைவு.
- மென்பொருள் தொழில்நுட்பமும் அயல்பணி ஒப்படைப்புகளும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளையும் அந்நியச் செலாவணியையும் அதிகரித்துள்ளன. ஆனாலும், தொழில் துறையின் வளர்ச்சியால் மட்டுமே பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்.
- அவ்வப்போது அதிரடியாக அறிவிக்கப்படும் நிதிக் கொள்கைகளாலும் பணக் கொள்கைகளாலும் சிறு முதலீட்டாளர்கள் பாதிக்கப்படாத நிலையை உறுதிப்படுத்தினால்தான் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் செயல்பட முடியும்.
- தொழில்துறையில் 10% வளர்ச்சியை எட்டினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தொழில் துறையின் பங்களிப்பு 25% ஆக உயரும். அதற்காகத் திறன்மிக்க தொழிலாளர்களைப் பல்லாயிரக்கணக்கில் உருவாக்க வேண்டும்.

## காஷ்மீரில் வெளிமாநில மக்களும் வாக்காளர்

- கடந்த 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் 5-ம் தேதி காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டது. அத்துடன் ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டன.
- இதில் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கான சட்டப்பேரவைத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது.
- காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டதால் காஷ்மீரில் வசிக்கும் வெளிமாநில மக்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க எவ்வித தடையும் இல்லை.
- எனவே சிறப்பு முகாம்களை நடத்தி புதிய வாக்காளர்களை சேர்க்க உள்ளோம்.

## கல்லூரிகளில் தத்தளிக்கும் விளிம்புநிலை விரிவுரையாளர்கள்

**உயர்ந்துவரும் மதிப்பு**

- 1990-க்குப் பிந்தைய புதிய பொருளாதாரக் கொள்கை, நவதாராளமயமாக்கல், 2000-க்கு பிறகு ஏற்பட்ட தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஆகிய காரணங்களால் கலைக் கல்லூரிகளில் சேர்க்கை சற்று மந்தமாக இருந்தது.
- இருந்தபோதும், தற்போது பெற்றோர்கள் மத்தியில் பொதுக்கல்வி முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போக்கு வளரத் தொடங்கியிருக்கிறது.
- பள்ளிக் கல்வி மாணவர்களின் இடைநிற்றல் குறைப்பு, அரசுப் பணியாளர் தேர்வாணையப் பாடத்திட்டத்தில் கலைப்புலக் கல்விக்கு முக்கியத்துவம், தமிழ்வழியில் பயின்றவர்களுக்கு 20% இடஒதுக்கீடு, உயர்கல்வியில் சேரும் பெண்களுக்கு மாதா மாதம் ரூ.1,000 உதவித்தொகை, கட்டணமில்லாப் பேருந்துச் சலுகை, குடும்ப நிதிநிலைமைக்கு உரிய படிப்புகள் ஆகிய உயர் செயல்திட்டங்களால் கலை, அறிவியல் கல்லூரிகள் புதிய வரவேற்பைப் பெற்று வருகின்றன.
- சேவைத் துறையில் வேலைவாய்ப்பு உருவாகிவருவதால் கலைப்புலம் சார்ந்த பாடப்பகுதிகளை, இன்றைய தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டிய சூழல் அரசுக்கும் கல்வியாளர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

**அவல நிலை**

- கல்லூரிகளின் உட்கட்டமைப்பு, நாக் (NAAC), என்.ஐ.ஆர்.எப் தரவரிசைப் பட்டியல், மாணவர்களின் சேர்க்கை விகிதம் ஆகியவற்றில் மேன்மை அடைந்து வந்தாலும், அரசுக் கலைக் கல்லூரிகளில் முதன்மை உறுப்பாக இருப்பது ஆசிரியர்கள்தாம்.
- நிரந்தரப் பேராசிரியர்கள், விளிம்புநிலை ஆசிரியர்களான கௌரவ விரிவுரையாளர்கள் என்னும் இரு பிரிவினரைக் கொண்டுதான் கலைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.
- அரசு வழங்கும் பல்வேறு திட்டங்களையும், கற்றல் முறையையும் நிரந்தரப் பேராசிரியர்களுக்கு இணையாக மாணவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் கௌரவ விரிவுரையாளர்களுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது.
- மேலும், அரசுக்கலை, அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்பட்ட உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் கௌரவ விரிவுரையாளர்கள்.
- நிரந்தரப் பேராசிரியர் இல்லாத இடத்தில் மொத்த வேலைப் பளுவையும் இவர்கள்தான் எதிர்கொள்கின்றனர். ஆனால், புதிய ஊதியக்குழு பரிந்துரையின்படி ஒரு நிரந்தரப் பேராசிரியருக்கும் தற்காலிக விரிவுரையாளருக்கும் வழங்கப்படும் ஊதியம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாகும்.
- இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தைக்கூட மாதாமாதம் பெறமுடியாமல் பெரும் உளவியல் அழுத்தத்தை கௌரவ விரிவுரையாளர்கள் எதிர்கொள்கின்றனர்.
- தற்காலிக ஆசிரியர்களின் ஊதியத்தில் ‘தேவை மற்றும் வழங்கல்’ என்னும் சந்தைப் பொருளாதார உத்தியைக் கையாள்வது அறிவுசார் சமூக உருவாக்கத்திற்குப் பின்னடைவாகும்.
- அரசுக் கலைக் கல்லூரிகள் மட்டுமல்லாது பல தனியார் கல்லூரிகளில் பெரும் அறிவுச் சுரண்டல் நடைபெறுகிறது.
- ஆசிரியர் சமூகத்தை முறைசாரா தொழிலாளர் நிலையில் வைத்திருக்கின்றனர்.
- முனைவர் பட்டம் பெற்ற ஒருவர் தனியார் கலை அறிவியல் கல்லூரிகளில் ஆசிரியராகச் சேரும்போது வெறும் ரூ.5,000 மாத ஊதியம் பெறும் நிலைமை இன்றும் தொடர்கிறது.

**புறக்கணிப்பு களையப்படுமா?**

- ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர் பணியை அதிகப்படுத்துவது, பல்கலைக்கழக மானியக் குழுவின் அதிகாரத்தைக் குறைத்தல், பல்கலைக் கழகத்தின் நிர்வாக குளறுபடிகள் உள்ளிட்ட காரணங்களால் உயர்கல்வித் துறையில் உதவிப் பேராசிரியர் பணி நியமனம் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.
- இதனால் முதல் தலைமுறையாக முனைவர் பட்டம் பெற்றவர்கள் நிரந்தரப் பணிக் கிடைக்காமலே ஓய்வுபெறும் நிலைக்கு வந்துவிட்டனர்.
- கல்வி என்பது பொருளியல் சுதந்திரத்தையும், அதிகாரத்தையும் பெறுவது என்பார் அம்பேத்கர். கல்வியில் உச்சம் தொட்ட ஒருவன் இவை இரண்டையும் பெற முடியாமல் போனால், சமூகப் புறக்கணிப்பு எப்படி இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.
- எளிய மாணவனுக்கும் தரமான உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்றால், ஓர் ஆசிரியருக்கு ஆளுமை வளர்ச்சியும் மனோதிடமும் மிக முக்கியம். இவை தேங்கியும் உலர்ந்தும் போய்விடாமல் பார்த்துக் கொள்வது அரசின் அடிப்படைக்கடமை.

## உன்னத் பாரத் அபியான்

- ‘உன்னத் பாரத் அபியான்’ இந்தத் திட்டம் ஆரம்பத்தில் வேகமெடுக்காமல் இருந்ததால், அதற்கான காரணங்களைக் கண்டறிந்து, இடர்ப்பாடுகளைக் களைந்து, ‘உன்னத் பாரத் அபியான் 2.0’ என்ற பெயரில் தற்போது மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.
- இந்தத் திட்டத்தை தேசிய அளவில் ஒருங்கிணைக்க ஒரு உயர்கல்வி நிறுவனத்தையும், மாநில அளவில் ஒருங்கிணைக்க 45 உயர்கல்வி நிறுவனங்களையும் அடையாளம் கண்டு, பல்கலைக்கழக மானியக் குழு மூலம் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.
- இந்தியாவில் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 1,000-க்கும் மேல், கல்லூரிகள் 42,000-க்கும் மேல், தனி ஆய்வு 12,000-க்கும் மேல் என உயர்ந்து வருகின்றன.
- இவ்வளவு நிறுவனங்களும் சிலமணி நேரம் சமுதாயத்துடன் இணைந்து பணி செய்தால் எவ்வளவோ மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.
- சமூக மாற்றத்திற்கான வாய்ப்புகளைக் கொண்ட உன்னத் பாரத் அபியான் 2.0 திட்டத்தை இயக்கமாக மாற்ற நம் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், ஆகியோர் முனைய வேண்டும். அந்த முனைப்புக்கு மாநில அரசு துணைநிற்க வேண்டும்.

**இடஒதுக்கீட்டுச் சாதனை**

- நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதும், வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டதும், சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட முதல் முன்னேற்றம், ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படத்தக்க வகையில் மூன்றடுக்கு முறையிலும், நகர்ப்புற உள்ளாட்சிகள் ஒவ்வொன்றும் தன்னளவில் தனித்துச் செயல்படும் வகையிலும் கட்டமைக்கப்பட்டுச் செயல்படுகின்றன.
- உள்ளாட்சிகளுக்கு அரசமைப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதுடன், அதன்வழி உள்ளாட்சிகளுக்கும் மத்திய-மாநில அரசுகளுக்கும், சில கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- மத்திய - மாநில அரசுகள் ஒவ்வோர் ஆண்டும் தங்களது வருவாயில் ஒரு பகுதியை உள்ளாட்சிகளுக்குப் பகிர்ந்தளித்து வருகின்றன. மாநிலத் தேர்தல் ஆணையமும் மாநில நிதி ஆணையமும் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.
- மகளிர், பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கும் உள்ளாட்சி மன்றங்களின் அனைத்துப் பொறுப்புகளிலும் இடஒதுக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- அரசமைப்புத் திருத்தங்களின்படி மகளிருக்கான இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அது 50% ஆக நிர்ணயிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- நாடாளுமன்ற, சட்டமன்ற அவைகளில்கூட மகளிருக்கு இடஒதுக்கீடு எதுவும் தரப்படாத நிலையில், தமிழக உள்ளாட்சி அமைப்புகளில் 50% இட ஒதுக்கீடு வழங்கி சமூகநீதி நிலைநாட்டப்பட்டுள்ளது.
- உள்ளாட்சிகளின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளவும் ஆலோசனைகளை வழங்கவும் பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் ‘கிராமசபை’ உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**தொடர் வளர்ச்சி**

- குடிநீர், சாலை, பொது சுகாதாரம், தெருவிளக்கு கழிவு மேலாண்மை உள்ளிட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதே உள்ளாட்சிகளின் முதன்மைப் பணியாகும்.
- விடுதலை பெற்ற காலத்தில் மூன்று கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மக்கள்தொகை இன்று எட்டு கோடிக்கும் மேலாக உயர்ந்துள்ளது.
- பெருகிவரும் மக்கள்தொகை, மக்களின் வாழ்வாதாரச் சூழல் மேம்பாடு, மத்திய-மாநில அரசுகளது வீட்டு வசதித் திட்டங்கள் ஆகியவற்றின் காரணமாகப் பல லட்சம் புதிய வீடுகள், வணிக நிறுவனங்கள், குடியிருப்புகள், பல நூறு புதிய ஊர்கள் ஆகியவை உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

## அனுபவக் கருவூலம் காப்போம்

- மூத்த குடிமக்கள் என்போர் அறுபது வயதும் அதற்கு மேலும் உள்ள ஆண்களும் பெண்களும் ஆவர்.
- வயது முதிர்ந்தவர்களை கண்ணியமாக நடத்துதல், அவர்களின் திறமைகளை அங்கீகரித்தல், அவர்களுக்கான சுகாதார ஏற்பாடுகளில் அக்கறை, வயதானவர்களை பாதிக்கும் பிரச்சனைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உலக முதியோர் தினம் உருவாக்கப்பட்டது.

- மக்கள் விவசாயத் தொழிலை மறந்த பிறகு, கூட்டுக்குடும்ப வாழ்க்கையும் மறைந்தது. தனிக்குடும்பம், ஒரு குழந்தை என்ற நிலை வந்த பிறகு முதியவர்களின் நிலை மிகவும் மோசமாகி முதியோர் இல்லங்களும் சமூகத்தில் உருவாகத் தொடங்கியது. இது மிகவும் துரதிருஷ்டவசமானது.
- 2050-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 20% பேர் மூத்த குடிமக்களாக இருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2019 டிசம்பரில் மத்திய அமைச்சரவை கொண்டு வந்த பெற்றோர் – மூத்த குடிமக்களின் நலன் மசோதாவின்படி முதியோர் இல்லங்களில் மூத்த குடிமக்களின் பராமரிப்பு, நலனுடன் அவர்களின் தேவைகள் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- இவ்வளவு சலுகைகள் இருந்தாலும், உடலிலும் மனதிலும் போதிய பலம் இல்லாததால், பெரும்பாலான முதியோர் இவற்றை பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் இல்லை.
- சமூக அளவில் நகரமயமாக்கல், தாராளமய பொருளாதாரக் கொள்கை, குடும்ப அமைப்பு சிதைவு போன்றவற்றால் மூத்த குடிமக்கள் எண்ணற்ற துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.
- உலக சுகாதார அமைப்பு நடத்திய ஆய்வில், உலகம் முழுவதும் ஐந்தில் ஒரு முதியவர், பொருளாதார ரீதியாகவும், மனநல ரீதியாகவும் துன்பத்தைச் சந்தித்து வருவதாக கூறப்படுகிறது.
- குழந்தைகள் போல் முதியவர்களும் கூடுதல் கவனத்துடன் பராமரிக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் கிடைத்தற்கரிய அனுபவக் கருவூலம்.
- அவர்களின் முதுமையையும், இயலாமையையும் காரணம் காட்டி அவர்களை ஒதுக்குவது சமுதாய சீர்கேடாகும்.

## ஜல்ஜீவன் திட்டம்

**100 சதவீத இணைப்பு**

- கோவாவில் அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் (100 சதவீதம்) குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டது.

**ஜல்ஜீவன் மிஷன்**

- விடுதலையடைந்த 70 ஆண்டுகளில் வெறும் 3 கோடி கிராமப்புற குடும்பங்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தன.
- ஆனால் ஜல்ஜீவன் மிஷன் தொடங்கப்பட்ட கடந்த 3 ஆண்டுகளில் மட்டுமே நமது அரசு கூடுதலாக 7 கோடி கிராமப்புற குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கி உள்ளது.
- கிராமப்புறங்களில் 10 கோடி குடிநீர் இணைப்புகள் உள்ளிட்ட 3 முக்கியமான மைல்கற்களை இந்தியா எட்டியிருக்கிறது.
- இதில் கோவா, தரத்ரா, நாகர் ஹவேலி, டையூ, டாமன் போன்ற யூனியன் பிரதேசங்கள் 100 சதவீத குடிநீர் இணைப்பை பெற்று உள்ளன.
- அரசு ஜல்சக்தி அமைச்சகத்தை உருவாக்கியது. இது நாட்டில் குடிநீர் பாதுகாப்புக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

## சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் சுதந்திர இந்தியாவில் உருவான முன்னெடுப்புகள்

**பசுமை / வெண்மைப் புரட்சிகள்**

- இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அத்தியாவசிய பொருட்களின் உற்பத்தி வெகுவாகக் குறைந்தது. உலக அளவில் அவற்றுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது.
- அந்தச் சூழலில், உற்பத்தித் துறைகளில் தலைகீழ் மாற்றங்கள் நடைபெற்றன. உணவு, உடை, போன்ற உலக மக்களது குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை அந்த மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு பூர்த்தி செய்தன.
- சுதந்திர இந்தியாவில் பசுமைப்புரட்சியும், வெண்மைப் புரட்சியும் முக்கியமானவை.
- பசுமைப் புரட்சியால் இந்தியாவின் வேளாண் உற்பத்தி பன்மடங்கு பெருகியது. உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற்றது.
- வெண்மைப்புரட்சியால் பால் உற்பத்தியிலும், பால் சார்ந்த பொருட்களின் உற்பத்தியிலும் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது.
- இப்படி ஒருபுறம் உணவு மூலப்பொருள் உற்பத்தி பெருகினாலும், நவீன வேதிப்பொருட்களையும் இயந்திரங்களையும் இந்தத் திட்டங்கள் பெருமளவு சார்ந்திருந்ததால், சுற்றுச்சூழலில் ஏற்பட்ட அழிவு சீரமைக்கப்படவில்லை.

**வனப் பாதுகாப்புச் சட்டம்**

- 1980இல் வனப் பாதுகாப்புச் சட்டம் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியால் கொண்டுவரப்பட்டது. வனப்பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு, காடுசாரா காரணங்களுக்காகக் காட்டு நிலங்களை ஒதுக்குவது பெருமளவில் குறைந்தது.
- ஆனால் அதன் பின்னர், தொடர்ச்சியாகப் பல சட்டத் திருத்தங்களால் நிலைமை மோசமடைந்தது.
- 2008-2019 காலத்தில் மட்டும் 2,51,727 ஹெக்டேர் காட்டு நிலம், காடுசாரா பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில், கடந்த ஆண்டு அக்டோபர் 4 அன்று வனப்பாதுகாப்பு சட்டத் திருத்த முன்வரைவு வெளியிடப்பட்டது.

**குறையும் காடுகளின் பரப்பு**

- 1947 உடன் ஒப்பிடும் போது இந்தியாவின் மக்கள்தொகை மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்து விட்டது.
- 1951-80க்கு இடைப்பட்ட காலத்தில் 42,380 சதுர கிலோ மீட்டர் பரப்பிலான காடுகள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.
- 2015-க்குப் பிறகு இந்தியக் காடுகளின் நிலை மிக மோசமாகச் சரிந்து வருவதையும் அதன் தரவுகள் உணர்த்துகின்றன. இந்திய நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி காடாக இருந்து வருகிறது.

**காட்டுயிர் பாதுகாப்புச் சட்டம்**

- காடுகளில் உள்ள உயிரினங்கள், பறவைகள், தாவரங்கள் உள்ளிட்ட காட்டுயிர்களைப் பாதுகாக்கும் நோக்கில் 1972இல் உருவாக்கப்பட்ட சட்டம் இது.
- காட்டுயிர்களின் வாழிட மேலாண்மைக்கு உதவும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின்படி, காட்டுயிர்களை வேட்டையாடுவதும், அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதும் தண்டனைக்குரிய குற்றம். இந்நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் 17 இல் காட்டுயிர் பாதுகாப்புச் சட்டத்திருத்த மசோதா 2021-ஐ மக்களவையில் மத்திய அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளது.

**புலி செயல்திட்டம்**

- இந்தியாவில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 40,000 என இருந்த புலிகளின் எண்ணிக்கை.
- 1972ல் 1872 என அருகியது. இந்நிலையில் புலிகளையும், அவை வசிக்கும் காடுகளையும் பாதுகாக்கும் நோக்கில் 1973இல் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி புலி செயல்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் மூலம் புலிகளின் வழித்தடங்களைப் பாதுகாத்தல், புலிகளின் வசிப்பிடங்களை மேம்படுத்துதல், காட்டுத் தீ ஏற்படாமல் தடுத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- இப்போது புலிகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

**அறிவியல்-சுற்றுச்சூழல் மையம்** (CSE)

- 2003 இல் பெப்ஸி, கோக கோலா உள்ளிட்ட 12 குளிர்பானங்களில் மனிதர்களுக்கு கேடு விளைவிக்கும் நச்சுப் பொருட்கள் இருப்பதை இந்த மையத்தின் ஆய்வு வெளிப்படுத்தியது.
- நாடெங்கிலும் அதிர்வலையை ஏற்படுத்தியது. சுற்றுச்சூழலுக்கென்று வெளியாகும் 'டவுன் டு எர்த்' ஆங்கில இதழையும் இந்த மையம் வெளியிட்டு வருகிறது.

**காற்று மாசு**

- இந்தியாவில் ஆண்டுக்கு 15 லட்சம் மக்கள் காற்று மாசு பாதிப்பினால் மடிகின்றனர். 1998 ஆம் ஆண்டுக்குப் பின் இந்தியாவில் சராசரி காற்று மாசு ஆண்டுக்கு 61.4 சதவீதம் அதிகரித்துள்ளது. உலக சுகாதார அமைப்பின் மதிப்பீட்டின்படி இந்தியாவில் டெல்லி, பீஹார், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் காற்று மாசு பிரச்சினை அதிக அளவில் உள்ளது.
- தற்போதைய நிலை தொடர்ந்தால் டெல்லி மக்களின் ஆயுட்காலம் 10.1 ஆண்டுகளும் உத்தரப்பிரதேச மக்களின் ஆயுட்காலம் 8.9 ஆண்டுகளும், பீஹார் மக்களின் ஆயுட்காலம் 7.9 ஆண்டுகளும் குறையும்.

**ஞெகிழிக் கழிவு**

- ஞெகிழிக் கழிவு, சாக்கடைகள்-வடிகால்கள், ஆறு-வாய்க்கால்கள், தெரு-சாலைகள் என எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது.
- நாம் குடிக்கும் தண்ணீரிலும் சுவாசிக்கும் காற்றிலும்கூட நுண்ஞெகிழித் துகள்கள் கலந்துவிட்டன.
- இந்தச் சூழலில், தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தப்படும் ஞெகிழிப் பொருட்களுக்கு எதிரான தடை 2019இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் ஞெகிழிப் பொருட்கள் 2022 ஜூலை 1 முதல் நாடு முழுவதும் தடை செய்யப்பட்டுள்ளன.

**புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்கள்**

- 2030க்குள் இந்தியா தனது ஆற்றல் தேவையின் 50 சதவீதத்தைப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களின் மூலம் பெறும் என்று அறிவித்திருக்கிறது.
- மின்னாற்றல் உற்பத்தித் துறையில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறையைப் படிப்படியாகக் குறைத்து, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்களின் அடிப்படையிலான உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது.
- 2030இல் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் 450 ஜிகாவாட் என்கிற இலக்கை இந்தியா எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் காற்றாலை மின்னுற்பத்தித் திறனில் 25 சதவீதமும், தேசியப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் 15 சதவீதமும் தமிழ்நாட்டின் பங்களிப்பாக இருக்கின்றன.

**காலநிலை மாற்றம்**

- 2050-க்குள் அனைத்துப் பசுங்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தையும் பூஜ்ய அளவுக்குள் கொண்டுவராவிட்டால், நிலைமை கைமீறிச் சென்றுவிடும் என்று கடந்த ஆண்டு வெளியான ஐ.பி.சி.சி. அறிக்கை எச்சரித்தது.
- இந்த ஆபத்தைக் குறைக்க இந்தியா, தனது கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த வேண்டும். அதே நேரம் அதிகரிக்கும் தண்ணீர் பற்றாக்குறை, வறட்சி, வெள்ளம், புயல், பெருமழை, வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்வதற்கும் இந்தியா தயார்நிலையில் இருக்க வேண்டும்.
- பேரிடர் மேலாண்மை அமைப்புகள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி ஆகியவற்றை மேம்படுத்தும் செயல்பாடுகளில் அரசு முழுவீச்சில் ஈடுபட வேண்டிய தருணம் இது.

**அமைதிப் பள்ளத்தாக்குப் போராட்டம்**

- மேற்கு தொடர்ச்சி மலையில் பாலகாட்டுக்கு அருகே அமைந்துள்ள அமைதிப் பள்ளத்தாக்கே (Silent Valley) குந்தா, பவானி, சிறுவாணி போன்ற ஆறுகளின் பிறப்பிடம்.
- 1970 இல் அந்தப் பள்ளத்தாக்கில், ஓர் அணையைக் கட்ட கேரள அரசு திட்டமிட்டது.
- அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அந்தப் பகுதியின் சூழல் தொகுதி பாதிக்கப்படும்; அந்தப் பகுதிக்கு மட்டுமே உரிய (Endemic) ஓரிடவாழ் தாவர, உயிரினச் சிற்றினங்கள் அழிந்துவிடும்;
- இந்த அபாயங்களிலிருந்து அமைதி பள்ளத்தாக்கைக் காப்பாற்றும் நோக்கில் 'அமைதிப் பள்ளத்தாக்குப் போராட்டம்' முன்னெடுக்கப்பட்டது.
- கவிஞரும் செயல்பாட்டாளருமான சுகதகுமாரி இந்த இயக்கத்தில் முக்கியப் பங்காற்றினார். அவர் இயற்றிய 'மரத்தின்னு ஸ்துதி' எனும் பாடல் போராட்டக்காரர்களின் முழக்க கீதமாக மாறியது.
- 12 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த போராட்டத்தின் இறுதியில் வெற்றி கிடைத்தது.

## முதன்மை சுற்றுச்சூழல் போராட்டங்கள்

**சிப்கோ இயக்கம்**

- அன்றைய உத்தரப்பிரதேச மாநிலத்தின் (தற்போது உத்தராகண்ட்) ஒரு பகுதியாக இருந்த காடுகளில் மரங்களை வெட்டுவதற்குத் தனியார் நிறுவனத்துக்கு 1973இல் அரசு அனுமதி அளித்தது.
- தங்கள் வாழ்வாதாரம் மரங்களை நம்பித்தான் இருக்கிறது எனவும் காடழிப்பால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டு வெள்ளப் பெருக்கு ஏற்படுவதாகவும் அலக்நந்தாவில் உள்ள மண்டல் கிராம மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.
- பெண்கள் மரங்களைக் கட்டியணைத்தபடி போராடினார்கள். அவர்களை மீறி மரங்களை வெட்ட இயலவில்லை.
- பெண்கள் முன்னெடுத்த இந்தப் போராட்டம் இமயமலைக் காடுகளின் பிற பகுதிகளுக்கும் பரவியது.
- 1974 இல் ரேனி பகுதியில் மரம் வெட்ட வந்தவர்களை எதிர்த்து கௌராதேவி என்பவர் தலைமையில் இதே போன்ற போராட்டம் நடைபெற, அந்தக் காடுகளில் மரம் வெட்ட பத்து ஆண்டுகளுக்குத் தடை விதிக்கப்பட்டது.
- இந்திய சுற்றுச்சூழல் போராட்டங்களில், முன்னோடிப் போராட்டம் இது.

**நர்மதை பாதுகாப்பு போராட்டம்**

- மேதா பட்கரால் 1980-களின் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் இது. நர்மதை பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள பழங்குடியின, ஏழை மக்களின் வாழ்க்கையைத் தரைமட்டமாக்கி அதன் மீது கட்டப்படும் இரண்டு அணைகளுக்கு எதிராக லட்சக்கணக்கான பெண்களுடன் மேதா பட்கர் போராடினார்.

- சர்தார் சரோவர், நர்மதா சாகர் ஆகிய இரண்டு அணைகளைக் கட்டுவதன் மூலம் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேர் சொந்த நாட்டிலேயே அகதியாக்கப்பட்ட கொடுமையையும் அவர்களுக்கு இழப்பீடு என்கிற பெயரில் நடைபெற்ற கண்துடைப்பு நாடகத்தையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார்.

**போபால் போராட்டம்**

- மத்தியபிரதேச மாநிலம் போபாலில் செயல்பட்டுவந்த யூனியன் கார்பைடு அமெரிக்க நிறுவனத்தில் 1984 டிசம்பர் 2 இரவு விஷவாயு கசிந்ததில் ஆயிரக்கணக்கானோர் உடனடியாகப் பலியாகினர்.
- ஐந்து லட்சத்துக்கும் அதிகமானோர் மரணத்துக்கு நிகரான பாதிப்பையும் இழப்பையும் எதிர்கொண்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கேட்டு ஆயிரக்கணக்கான பெண்கள் போராடினர்.
- உலகம் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் குற்றவாளிகளோடு ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டது என்று அவர்கள் ஓங்கி ஒலித்தனர்.
- காவல்துறையினரால் கொடூரமாகத் தாக்கப்பட்டும் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டும் எதற்கும் அசையாத உறுதியுடன் அப்பெண்கள் போராடினர்.
- அவர்களில் முன்னணியில் நின்று எலீசா பீ.சம்பா தேவி ஆகியோருக்கு கோல்ட்மன் சுற்றுச்சூழல் பரிசு (2004) கிடைத்தது.

## கல்விக்கு ஜிடிபியில் ஆறு சதவீதம்

- 1964 இல் கல்வியின் அனைத்து அம்சங்களையும் ஆராய்வதற்காக அன்றைய பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவராக இருந்த டி.எஸ்.கோத்தாரி தலைமையில் கோத்தாரி கல்வி ஆணையம் அமைக்கப்பட்டது.
- முதியோர் கல்வி, கல்வி நிர்வாகம், கல்விக்கான நிதி, உயர்கல்வி, மனிதவளம், கற்பித்தல் வழிமுறைகளும் நுட்பங்களும், அறிவியல் கல்வி, மாணவர் நலன், ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் நிலை, பிற்பட்ட வகுப்பினருக்கான கல்வி, பெண் கல்வி, கல்வித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் கவனம் செலுத்துவதற்கான 19 பணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.
- பள்ளிக் கல்வி 10 ஆண்டுகள், எஸ்.எஸ்.எல்.ஸி. பியுசிக்கான இண்டர்மீடியேட் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள், பட்டப்படிப்பு மூன்று ஆண்டுகள் என்கிற வகையில் கல்வி அமைப்பை 10+2+3 என்று இந்த ஆணையம் பிரித்தது.
- பள்ளிகளும் கல்லூரிகளும் இயங்கும் நாட்களின் எண்ணிக்கை முறையே 230, 216 என்று அதிகரிக்கப்பட வேண்டும்; தேசிய விடுமுறைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்; ஒரு கல்வியாண்டின் பாடநேரம் ஆயிரம் மணி நேரத்துக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.
- நாட்டின் ஜிடிபியில் ஆறு சதவீதம் கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. நாட்டுக்கு தேசியக் கல்விக் கொள்கை தேவை என்பதையும் சுட்டிக்காட்டியது.

## அமலான நில உச்சவரம்புச் சட்டம்

- நிலங்கள் ஒரு நபரிடமோ அல்லது குடும்பத்தினரிடமோ குவிவதைத் தடுக்கும் வகையில் கொண்டுவரப்பட்டதுதான் நிலஉச்ச வரம்புச் சட்டம்.
- இதன்படி, தனிநபர்களின் நில உரிமைக்கு உச்சவரம்பை நிர்ணயித்து, உபரி நிலங்களை அரசு கையகப்படுத்தியது.
- இந்தச் சட்டம் 1958-இல் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது. தற்போதுள்ள உடைமைகள் மீது உச்சவரம்பு நிர்ணயிப்பது; எதிர்காலத்தில் வாங்கப்படும் நிலங்கள் மீது உச்சவரம்பு நிர்ணயிப்பது என இரண்டு அம்சங்களை இச்சட்டம் கொண்டிருந்தது.
- அதே வேளையில் விவசாயத்தைச் சீராக்குவதையும் இச்சட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது.
- இச்சட்டத்தைப் பின்பற்றி 1961-இல் தமிழகத்தில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
- இதன்படி தமிழகத்தில் 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்பு அமல்படுத்தப்பட்டது.
- ஆனால், தமிழகத்தில் 1970 ஆம் ஆண்டில் இச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி குடும்பத்துக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது 15 ஏக்கராகக் குறைக்கப்பட்டது.

## பில்கிஸ் வழக்கு

- குஜராத்தில் கடந்த 2002-இல் மதக் கலவரம் நடந்தபோது, 5 மாத கர்ப்பிணியாக இருந்த பில்கிஸ் பானு என்ற பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார்.
- அவரது 3 வயது மகள் உள்பட குடும்ப உறுப்பினர்கள் 7 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- இதுதொடர்பான வழக்கில், கடந்த 2008-ஆம் ஆண்டு 11 பேருக்கு ஆயுள் சிறை தண்டணை விதிக்கப்பட்டது.

- இந்நிலையில், கடந்த 1992-ஆம் ஆண்டின் சிறைக் கைதிகள் தண்டனைக் குறைப்பு கொள்கை அடிப்படையில் மேற்கண்ட 11 பேரும் கடந்த சுதந்திர தினத்தன்று விடுவிக்கப்பட்டனர்.
- பில்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகளை விடுவித்தது, குஜராத் அரசின் வெட்கக்கேடான முடிவாகும். பாலியல் வன்கொடுமை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள், மன்னிப்புக் கொள்கையின் அடிப்படையில் விடுவிக்கப்படக்கூடாது என்று மத்திய அரசின் வழிகாட்டுதலில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- பில்கிஸ் பானு வழக்கு குற்றவாளிகளுக்கு மிக கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். மாறாக, அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## சாதனைகளுக்கு சொந்தக்காரர் ராஜீவ்காந்தி

- முதலாவது சாதனை, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது. அந்நடவடிக்கை இந்தியாவில் பெருமளவில் மாற்றத்தைப் புகுத்தியது.
- சமூக நலனுக்காகத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை அவர் அறிமுகப்படுத்தினார். தடுப்பூசி தயாரிப்பில் இந்தியாவை முன்னிலை பெறச் செய்தார்.
- அதன் காரணமாக போலியோ பாதிப்பு இல்லாத நாடாக இந்தியா மாறியது.
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை ராஜீவ் மேற்கொண்டார்.
- மேலும், உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடும் வழங்கப்பட்டது.
- நாட்டில் 18 வயதைக் கடந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கியது மிகப்பெரிய சாதனை.
- சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினமானது தேசிய இளைஞர்கள் தினமாக அறிவிக்கப்பட்டது.

## சோமாலியா ஓட்டலில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்

- ஆப்பிரிக்க கண்டத்தில் அமைந்துள்ள சோமாலியாவில் 1.59 கோடி மக்கள் வசிக்கின்றனர்.
- அந்த நாட்டின் மக்கள் தொகையில் 90 சதவீதம் பேர் முஸ்லிம்கள் ஆவர். கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சோமாலியாவில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.
- அமைதி, வளர்ச்சிக்கான கட்சியின் தலைவர் ஹாசன் ஷேக் முகமது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது ஆட்சிக்கு எதிராக அல் ஷாபாப் என்ற தீவிரவாத அமைப்பு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது.
- இது அல்-காய்தாவின் ஆதரவு அமைப்பாகும். சோமாலியா தலைநகர் மொகதிசுவில் உள்ள ஹயாத் ஓட்டலை அல் ஷாபாப் தீவிரவாதிகள் சிறைபிடித்தனர். அப்போது ஓட்டலில் சுமார் 250 பேர் தங்கி இருந்தனர்.
- சுமார் 30 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு அனைத்து தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## ஹைட்ரஜன் பேருந்து

- மகாராஷ்டிர மாநிலம் புணேவில் உள்ள கேபிஐடி - சிஎஸ்ஐஆர் மையத்தில் நாட்டின் முதல் ஹைட்ரஜன் பேருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.
- பசுமை ஹைட்ரஜன் என்பது சிறந்த, சுத்தமான எரிசக்தி. இது சுத்திகரிப்பு, உரம், எஃகு, சிமெண்ட் ஆகிய தொழில்களிலும் கனரக வாகனப் போக்குவரத்து துறையிலும் கார்பன் உமிழ்வை குறைக்க உதவுகிறது.
- இந்தப் பேருந்தில் பயன்படுத்தப்படும் எரிபொருள் செல், ஹைட்ரஜன் மற்றும் காற்றை பயன்படுத்தி பேருந்தை இயக்குவதற்கான மின்சாரத்தை உருவாக்குகிறது. பேருந்தில் இருந்து வெளியேறும் ஒரே கழிவு நீர் என்பதால், இது சுற்றுச்சூழலுக்கு உகந்தது.
- நீண்ட தூர வழித்தடங்களில் இயக்கப்படும் ஒரு டீசல் பேருந்து, பொதுவாக ஆண்டுக்கு 100 டன் கார்பன் வாயுவை வெளியேற்றுகிறது.
- இந்தியாவில் 10 லட்சத்துக்கும் அதிகமான பேருந்துகள் இயக்கத்தில் உள்ளன. இதனால், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது.
- ஹைட்ரஜன் செல், கனரக வாகனங்களின் எரிபொருள் செலவை குறைத்து, இந்தியாவில் புரட்சியை ஏற்படுத்தும்.
- ஹைட்ரஜன் பேருந்தை உருவாக்க கேபிஐடி - சிஎஸ்ஐஆர் மேற்கொண்ட கூட்டு முயற்சி.

**உச்சம் தொட்ட வேளாண்மை**

- 1950-51இல் 51 மெட்ரிக் டன்னாக இருந்த இந்தியாவின் ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தி, 2021-22இல் 314 மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது.
- வாழைப்பழ விளைச்சலில் சீனா, பிரேசில் ஆகிய நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி உலகின் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதேபோல எருமைப்பாலில் முதலிடம். நெல், கோதுமை, கரும்பு, பச்சைக்காய்கறிகள், உருளைக்கிழங்கு, பருத்தி, பசும்பால் ஆகியவற்றில் உலகில் இரண்டாம் இடத்தை இந்தியா கைப்பற்றியுள்ளது.
- உணவு தானியங்களின் உற்பத்தி 6 மடங்கு, தோட்டக் கலைப் பயிர்கள் 11 மடங்கு, மீன் உற்பத்தி 18 மடங்கு, பால் 10 மடங்கு, முட்டை 53 மடங்கு உயர்ந்திருக்கிறது.
- விடுதலை பெற்ற காலகட்டத்தில், இந்தியாவின் மக்கள்தொகை ஏறத்தாழ 36 கோடி; அப்போது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 51.9%.
- இந்தியாவின் தற்போதைய உத்தேச மக்கள்தொகை ஏறத்தாழ 139 கோடி. ஆனால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண்மையின் பங்கு 2017 இல் 15.4% ஆகக் குறைந்திருக்கிறது.
- பல்வேறு நெருக்கடிகள், சிரமங்களுக்கு உள்ளான போதும் 63 கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு (45.6%) வேளாண்மைத்துறை மூலமே கிடைத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தொல்லியல்

- இந்திய வரலாற்றின் தொன்மையை வெளிப்படுத்துபவை தொல்லியல் சான்றுகள்தான். அத்தகைய தொல்லியல் சான்றுகள் கள ஆய்வுகள், அகழாய்வுகள் வாயிலாக நமக்குக் கிடைக்கின்றன.

**ஆங்கிலேயர் காலம்**

- இந்தியாவில் தொல்லியல் அகழாய்வுகள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தொடங்கின. உலக நாகரிகங்களுள் தொன்மையானதும் செழுமையானதுமான சிந்துவெளி நாகரிகப் பகுதிகளிலும் மற்றும் பல இடங்களிலும் புகழ்பெற்ற அகழாய்வு அறிஞர்களான அலெக்சாண்டர் கன்னிங்காம், சர் ஜான் மார்ஷல், மார்டிமர் வீலர் உள்ளிட்ட ஆங்கிலேயர்கள், இந்திய அறிஞர்களான அமலானந்த கோஷ், ஆர்.டி.பேனர்ஜி, ஹெச்.டி.சங்காலியா, கே.வி.சௌந்தரராசன் போன்றோரும் பல்வேறு இடங்களில் அகழாய்வுகளை மேற்கொண்டு, இந்திய வரலாற்றின் தொன்மையை உலகறியச் செய்தனர்.
- சுதந்திரத்திற்குப் பிறகான இந்தியாவில் சிந்துவெளி தொடர்புடைய தலங்களில் பெருமளவு அண்டை நாடான பாகிஸ்தான் பகுதிக்குச் சென்றுவிட்ட பிறகு, இந்திய நாகரிகத்தின் தொன்மையைப் பறைசாற்றும் விதமாக இந்தியாவின் பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**வெளிப்படும் தொன்மை**

- சிந்துவெளி நாகரிகக் கூறுகளைக் கொண்டிருக்கக்கூடிய மிக முக்கியத் தலமான குஜராத்திகள் லோத்தலில், இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை 1955 முதல் 1960 வரை அகழாய்வை மேற்கொண்டது. அங்கு 2,200 ஆண்டுகள் பழமையான நகரக் கட்டமைப்பு கண்டறியப்பட்டதோடு, உலகின் தொன்மையான கப்பல் கட்டும் பகுதியும் வெளிக்கொணரப்பட்டது.
- அப்பகுதி சபர்மதி ஆற்றங்கரையின் வணிகப் பெருவழியோடு இணைக்கப்பட்டிருந்ததும் அறியப்பட்டது.
- குஜராத்தின் கட்ச் பகுதியில் உள்ள தோலவீரா. 1960-களின் தொடக்கத்தில் தோலவீராவைச் சேர்ந்த சம்புதான் காத்வி என்பவரால் இப்பகுதி கண்டறியப்பட்டு, அரசின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது.
- அப்பகுதியில் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டு அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியவர் ஜே.பி.ஜோஷி எனும் தொல்லியல் ஆய்வாளர்.
- சிந்துவெளி நாகரிகத்தின் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்திய பகுதி தோலவீராதான். 1990 முதல் 2005 வரை தொடர்ச்சியாக இப்பகுதியில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு நகரக் கட்டமைப்பு, உயிரினங்களின் எலும்புகள், தங்கம், வெள்ளியிலான பொருட்கள் வெளிக்கொணரப்பட்டன.
- தெற்கு குஜராத், பாகிஸ்தானின் சிந்து, பஞ்சாப், மேற்கு ஆசியாவின் பல்வேறு பகுதிகளோடு வணிகத் தொடர்புகளை இப்பகுதி கொண்டிருந்தது என்பதற்குப் பல்வேறு தரவுகள் இப்பகுதியில் கிடைத்தன.

SURESH'

- சிந்துவெளி நாகரிகத்தின் எச்சங்களைக் கொண்டிருக்கக்கூடிய ஹரியானாவின் பனவாலி என்ற இடத்தில், 1974 ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை அகழாய்வு மேற்கொண்டது.
- அகழாய்வில் கிடைத்த தரவுகளின் அடிப்படையில், இதன் காலம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. முதல் கட்டம், 2500-2300 பொது ஆண்டுக்கு முந்தையது (சூளையில் இட்டுச் சுடப்பட்ட செங்கற்கள், பல்வேறு வகையான பானை ஓடுகள்).
- இரண்டாம் கட்டம், 2300-1700 பொது ஆண்டுக்கு முந்தையது (105 மீட்டர் நீளம், 4.5 மீட்டர் உயரம், 6 மீட்டர் அகலம் நீண்ட சுவரால் பாதுகாக்கப்பட்ட 200 × 500 மீட்டர் அளவுடைய சதுரங்கப் பலகை வடிவிலான சரியான கோணங்களில் வடிவமைக்கப்பட்ட தெருக்கள், வீடுகள் கொண்ட நகரக் கட்டமைப்பு).
- மூன்றாம் கட்டம், 1700-1450 பொது ஆண்டுக்கு முந்தையது (சிந்துவெளி நாகரிகத்திற்குப் பிறகான காலம்) என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

**திருப்புமுனை அகழாய்வு**

- இந்தியாவில் சிந்துவெளி நாகரிகத்தின் எச்சங்களைக் கண்டறியும் பணியின் ஒரு மைல் கல்லாகக் கிடைத்ததுதான் ராஜஸ்தானின் ஹனுமன்கர் மாவட்டத்தில் உள்ள காளிபங்கன் என்கிற இடம்.
- இந்தியப் பண்பாட்டின் தொன்மையைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டிருந்த இத்தாலியரான லூஜி பியொ டெசிடோரேயால் இப்பகுதி முதலில் கண்டறியப்பட்டாலும், 1960-களில்தான் இந்த இடம் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.
- இந்தியாவின் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர்களான பி.பி.லால், பி.கே.தாப்பர், எம்.டி.கரே, கே.எம்.ஸ்ரீவாஸ்தவா போன்றோரால் 1960-1969 வரை தொடர்ச்சியாக அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான அகழாய்வாகப் பார்க்கப்படுவது, ஹரியானாவின் ராக்கிகரியில் மேற்கொள்ளப்பட்டதாகும்.
- சிந்துவெளி நாகரிகத்தின் வளர்ச்சியடைந்த காலகட்டத்தைச் சார்ந்தது (2600-1900) என்று கணிக்கப்பட்டுள்ள இப்பகுதியில், முதலில் 1969, 1997, 2000, 2011-2016 வரை, அண்மைக்காலத்தில் 2021 என அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- நன்கு கட்டமைக்கப்பட்ட சாலைகள், கழிவுநீர் வெளியேற்றும் வசதிகள், மழைநீர் சேகரிப்புத் திட்டம், தாமிரத்தால் செய்யப்பட்ட பொருட்கள், மனித எலும்புகள் உள்ளிட்ட தொல்லியல் தரவுகள் வெளிக்கொணரப்பட்டன.

**தமிழகத்தில் தொல்லியல்**

- தமிழகத்தில் 50-க்கும் மேற்பட்ட இடங்கள் அகழாய்வு செய்யப்பட்டுள்ளன.
- அவற்றில் 2013இல் தமிழகத்தில் கண்டறியப்பட்டு, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அகழாய்வு செய்யப்பட்ட இடம் கீழடி. பின்னர், அப்பகுதியில் தமிழகத் தொல்லியல் துறை தொடர்ச்சியாக அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டது.
- இதன்மூலம் தமிழர் வரலாற்றுத் தொன்மையையும், செழிப்பான வாழ்க்கை முறைக் கூறுகளையும், கல்வியறிவைப் பறைசாற்றும் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், செங்கல் கட்டுமானங்கள், சாயத்தொட்டிகள், கூரை ஓடுகள், குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், பசு மாடு, எருமை, ஆடு ஆகியவற்றின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.
- அவை இந்தியாவில் உள்ள பல்வேறு ஆய்வகங்கள், அமெரிக்காவில் உள்ள பீட்டா ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு கீழடியின் பண்பாட்டுத் தொன்மை பொ.ஆ.மு. (கி.மு.) முதல் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- தென்தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் பகுதியில் 1902-1903, 1903-1904 ஆகிய ஆண்டுகளில் அலெக்சாண்டர் ரீ என்பவரால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு முறையே 1,872, 4,000 தொல்பொருட்கள் கண்டறியப்பட்டன.
- அவற்றில் பானை ஓடுகள், இரும்புப் பொருட்கள், தாமிரத்தால் ஆன ஆபரணங்கள், தங்க ஆபரணங்கள், அரிய கல் மணிகள், பல தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.
- தூத்துக்குடி மாவட்டத்தின் சிவகளை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த பொருட்களின் காலம் அறிவியல் ஆய்வுகளின் வாயிலாக பொ.ஆ.மு.(கி.மு.) 1155 என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இதன் வாயிலாக இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு தமிழ் மண்ணிலிருந்து தொடங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகியிருக்கிறது.

SURESH

- இவை மட்டுமின்றி தமிழகத்தில் பொருந்தல், மணலூர், மயிலாடும்பாறை, கொடுமணல், பொற்பனைக்கோட்டை, அழகங்குளம், உறையூர், அத்திரம்பாக்கம், பையம்பள்ளி, கேரளத்தில் பட்டினம், கர்நாடகத்தில் பிரம்மகிரி, சந்திரவல்லி, வடகிழக்கு இந்தியாவில் உள்ள பெருங்கடற்படைக் காலத்தைச் சார்ந்த பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் இந்திய வரலாற்றின் தொன்மையையும், பண்பாட்டுச் செழுமையையும் உலகிற்கு வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை!.

## புதிய மசோதாவால் ஏற்படும் பிரச்சனைகள்

- மின்சார சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டால், விநியோகம் உரிமம் பெற்ற தனியார்கள் அனைவரும் ஒட்டுமொத்த அதிகாரத்தை பெற்று தனிகாட்டு ராஜாவாக வலம் வருவார்கள்.
- டெல்லி, கொல்கத்தா, மும்பை போன்ற மாநிலங்களில் மின்விநியோகம் செய்ய தனியாருக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டு உள்ளது.
- ஆனால், உற்பத்தி மற்றும் கொள்முதல் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. மசோதா நிறைவேற்றப்பட்டால் அவர்களே ராஜா, அவர்களே மந்திரி.
- பெட்ரோல், டீசல் விலை சர்வதேச சந்தைக்கு ஏற்பட விலை நிர்ணயிக்கப்படுவது போல், மின்கட்டணம் நிர்ணயிக்கும் அதிகாரம் வழங்கப்படும். இதனால், மின்கட்டணம் கடுமையாக உயரும்.
- மின் துறையில் தனியார் பங்களிப்பு வந்தால், ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் தனித்தனி கேபிள் போட முடியாது. இதனால், ஒரு நிறுவனத்தை மற்றொரு நிறுவனம் சார்ந்திருக்கும். இதைத் தடுக்க மாநில மின்வாரியத்தின் மின்கட்டமைப்பை பயன்படுத்த தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு வேளை தனியார் நிறுவனங்கள் போட்டி ஏற்பட்டால், ஒரு நிறுவனத்தின் கேபிளில் இருந்து மற்றொரு நிறுவனத்தின் சார்பில் மின்விநியோகம் வழங்கப்படும். இதற்காக ஏற்படும் மொத்த செலவையும் உரிமையாளர்கள் தலையில் கட்டுவார்கள்.
- தனியார்வசம் சென்றால் மின்கட்டணம், மின் விநியோகம் அதிகாரம் அவர்களுக்கு செல்லும். இதனால், மாநில அரசு அதிகாரம் பறிபோகும்.
- புதிய திட்டங்கள் போடமாட்டார்கள். மின் உற்பத்தி நிலையங்கள் முடங்கும். இறக்குமதி அதிகரிக்கும்.
- செல்போன் நிறுவனங்கள் போல் பல்வேறு தனியார் நிறுவனங்கள் மின் விநியோகம் செய்ய வழிவகுக்கும்.
- ஒரு மாநிலத்தில் உள்ள மின்கட்டமைப்பை பயன்படுத்தி அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அவர்கள் இஷ்டம் போல் வெளிமாநிலத்துக்கு விற்பனை செய்வார்கள்.
- தனியார் வசம் சென்றால் நகரத்தில் உள்ளவர்கள். உடனுக்கு உடன் மின்கட்டணத்தை செலுத்தக்கூடியவர்கள், விலை உயர்வை தாங்க கூடியவர்கள் கட்டுவார்கள். விவசாயிகள், நெசவாளர்கள், கைத்தறி தொழிலாளர்கள் போன்றோர் மட்டுமே மாநில அரசிடம் மின்சாரத்தை வாங்குவார்கள்.
- மக்களுக்கு யூனிட்டாக கொடுக்கும் மானியத்தை ரத்து செய்துவிட்டு, அவரது வங்கி கணக்கில் அதற்கான பணத்தை செலுத்தலாம் என திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட காஸ் மானியமே வங்கி கணக்கில் செலுத்தாததால், இந்த மானியம் வங்கி கணக்கில் வருவது சந்தேகம்தான்.

**தற்போதைய பிரச்சனைகள்**

- ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு விதமான மின்கட்டணம் வசூலிக்கப்படுகிறது.
- போதிய அணுகுமுறை இல்லாததால் ரூ.1.10 லட்சம் கோடி கடனில் பல மாநிலங்கள் தவிக்கின்றன.
- நகரம், கிராமம், தொழிற்சாலைகள், வீடுகள் என ஒவ்வொரு இடங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தில் பாகுபாடு காட்டுகிறது ஒன்றிய அரசு.
- நிறைய மாநிலங்களில் சரியான அளவு மற்றும் தரமான மின்சாரம் வழங்கப்படுவதில்லை.
- மின் விநியோக நிறுவனங்கள் கடனில் தவிப்பதால், அரசுக்கு அழுத்தம் தருகின்றன.
- உலகிலேயே மிகப்பெரிய மின்கட்டமைப்பை கொண்ட நாடாக இந்தியா இருந்தும் எந்த பயனுமில்லை.

## பங்குச்சந்தை நாயகன்

- இந்தியாவின் வாரன் பஃபெட் என்று அழைக்கப்பட்டு வந்த ராகேஷ் ஜுன்ஜுன்வாலா.
- ரூ.46 ஆயிரம் கோடி சொத்து மதிப்பைக் கொண்ட இந்திய பில்லியனார் என்ற காரணத்தினாலா? நிச்சயமாக இல்லை. இவ்வளவு சொத்தையும் அவர் பங்குச் சந்தை முதலீடு வழியாகவே உருவாக்கினார் என்பதால்தான் அவர் பேசப்படலானார்.

- 1985-ல் ரூ.5,000-த்தைக் கொண்டு பங்குச் சந்தை முதலீட்டை தொடங்கினார் ஜுன்ஜுன்வாலா.
- இன்று அவரது பங்குகளின் மதிப்பு ரூ,32,000 கோடி. இந்த வளர்ச்சி, இந்த மாயாஜாலம்தான் அவரை பங்குச் சந்தை உலகில் நாயகனாக நிலைநிறுத்தியது.
- ராகேஷ் ஜுன்ஜுன்வாலா 1960-ல் ஹைதராபாத்தில் பிறந்தார். ஆனால், வளர்ந்ததெல்லாம் மும்பையில்தான். அவரது தந்தை வருமான வரித்துறை ஆணையராக இருந்தார். தந்தை அவரது நண்பர்களுடன் பங்குச் சந்தை குறித்து காரசாரமாக பேசக்கூடியவர். இந்தப் பேச்சுகள் வழியாகத்தான் சிறுவயதிலே ஜுன்ஜுன் வாலாவுக்கு பங்குச் சந்தை குறித்து அறிமுகம் கிடைத்தது.
- மகனின் ஆர்வத்தைக் கண்ட தந்தை, மகனுக்கு பங்கு சந்தை முதலீடு குறித்து கற்றுத்தர ஆரம்பித்தார். ஆனால், சில கட்டுப்பாடுகளை விதித்தார் : "பங்கு சந்தையில் முதலீடு செய்வதற்கு ஒருபோதும் வீட்டில் பணம் கேட்கக்கூடாது. நண்பர்களிடமும் கடன்வாங்கக் கூடாது". இதனால் ராகேஷ் ஜுன்ஜுன்வாலா, அவரது செலவுக்கு வீட்டில் தரும் பணத்தை சேமிக்க ஆரம்பித்தார்.
- பங்குச் சந்தையில் அவர் பெற்ற முதல் லாபம் டாடா நிறுவனம் மூலம்தான். 1986-ல் டாடா டீ நிறுவனத்தின் 5,000 பங்குகளை ரூ.43மதிப்பில் வாங்கினார். பிறகு அந்தப் பங்குகளின் மதிப்பு ரூ.143 ஆக உயர்ந்தது. மூன்று மடங்கு லாபம்
- ஜுன்ஜுன்வாலா கல்லூரியில் பட்டயக் கணக்கராக பயிற்சி பெற்றிருந்தார். இதனால், நிதி நிர்வாகம் சார்ந்து அவருக்கு கூடுதல் புரிதல் இருந்தது. இது அவருக்கு பங்குச் சந்தை முதலீட்டில் கைகொடுத்தது.
- பங்கின் போக்கு எப்படி இருக்கும் என்பதை அதன் ஆரம்பநிலையிலே கணிக்கும் திறன் அவரிடமிருந்தது.
- ஜுன்ஜுன்வாலா மிக வெளிப்படையாக தன்னுடைய முதலீட்டை அறிவிப்பவர், எந்தெந்த நிறுவனங்களில் எவ்வளவு பங்கு வாங்கினார், ஏன் வாங்கினார் உட்பட அனைத்து விவரங்களை பொதுவெளியில் முன்வைப்பவர்.
- டி-மார்ட் நிறுவனரும் பங்குச் சந்தை முதலீட்டில் முன்னோடியுமான ராதாகிஷான் தமனியை ஜுன்ஜுன்வாலா தனது பங்குச் சந்தைக் குருவாக கொண்டிருந்தார்.
- ஜுன்ஜுன்வாலாவுக்கு பாலிவுட் திரைப்படங்கள் மீது பெரும் ஈடுபாடு இருந்தது. சில படங்களை தயாரிக்கவும் செய்தார். இங்கிலீஷ் விங்க்லீஷ், ஷமிதாப் (shamitabh), கி & கா (Ki & Ka)ஆகிய படங்களின் தயாரிப்பாளர் அவர்தான்.
- ஆரம்ப முதலே முதலீடு தொடர்பாக துணிச்சலான முடிவுகளை எடுப்பவராக அவர் இருந்தார்.
- ஒரு நிறுவனம் அதன் தகுதிக்கு மீறி அதிக மதிப்பைப் பெறும்பட்சத்தில் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்வதை தவிர்க்க வேண்டும். இதுதான் பங்குச் சந்தை முதலீடு சார்ந்து அவர் கொண்டிருந்தத் தத்துவம்.

## வெளிநாட்டு பல்கலையில் தமிழ் இருக்கை

- புகழ்பெற்ற வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலமாக அமைக்கப்படும் என்று அப்போது நான் சொன்னேன். அதற்குரிய பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. முதற்கட்டமாக,
    1. ரீயூனியன் – டி லா ரீயூனியன் பல்கலைக் கழகம் (ரீயூனியன் தீவு பல்கலைக்கழகம்)
    2. இந்தோனேசியா – சுமத்ரா உத்தாரா பல்கலைக்கழகம்
    3. கம்போடியா – கெமர் மொழிகள் ஆய்வு மையம்
    4. வியட்நாம் – மொழிகள் மற்றும் பன்னாட்டு ஆய்வியல் பல்கலைக்கழகம்
    5. தாய்லாந்து – கலாலோங்கோர்ன் பல்கலைக்கழகம் ஆகிய தெற்காசிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் விரைவில் ஏற்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்றார்.

## ஆகம விதிகளின்படியே அர்ச்சகர் நியமனம்

- 2020-ம் ஆண்டு புதிய விதிகளை அறநிலையத்துறை கொண்டு வந்தது. அதன்படி, கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுபவர்கள் 18 முதல் 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.
- பத்தாம் வகுப்பு முடித்து ஆகம பள்ளிகளில் ஓராண்டு பயிற்சி முடித்தவர்கள் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமனம் பெறலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது.
- கோயில்களை எங்கு அமைப்பது, எப்படி அமைப்பது, பிரதான கடவுளுக்கான சன்னதி, பரிவார மூர்த்திகளுக்கான சன்னதி, அன்றாட பூஜை மற்றும் வழிபாட்டு முறைகள், சாத்துப்படி, நைவேத்யம், திருவிழாக்கள் உள்ளிட்ட கோயில்களின் மரபு சார்ந்த அனைத்தும் ஆகம விதிகளின்படியே நடைபெற்று வருகின்றன.

- இந்த ஆகம விதிகளை முழுமனதுடன் முறையாக கற்று, தொழில் ரீதியாக பயிற்சி எடுத்தவர்கள் மட்டுமே ஆகம விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ள கோயில்களில் அர்ச்சகர்களாகவோ, ஓதுவார்களாகவோ பணிபுரிய முடியும்.
- இந்துவாக உள்ள அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என கடந்த 2006-ம் ஆண்டு தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.
- அதை எதிர்த்து சிவாச்சாரியார்கள் சங்கம் சார்பில் தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், அர்ச்சகர் பணி நியமனம் என்பது ஆகம விதிகளுக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என மீண்டும் உறுதி செய்துள்ளது.
- கோயில்களில் அர்ச்சகர்கள் பணி நியமனம் தொடர்பான அறநிலையத்துறையின் புதிய விதிகள் செல்லும்.
- அதேநேரம் ஆகம விதிகளை பின்பற்றி கட்டப்பட்டுள்ள கோயில்களில் ஆகம விதிகளின்படியே அர்ச்சகர்களை நியமிக்க வேண்டும். அதேபோல கோயில்களில் அர்ச்சகர்களையும், பூசாரிகளையும் நியமிக்கும் அதிகாரம் கோயில் அறங்காவலர்களுக்கும், தக்காருக்கும் மட்டுமே உள்ளது. அறநிலையத் துறைக்கு கிடையாது.

## இந்தியாவுக்கு இணையத்தை சாத்திப்படுத்திய முன்னோடிகள்

**வலைப்பின்னலுக்கான முதல் தொடர்பு**

- கிரிக்கெட்டில் இந்தியா உலகக் கோப்பையை வென்ற 1983இல்தான் ஸ்ரீனிவாசன் ரமணி, இந்தியக் கல்வியியல் வலைப்பின்னலுக்கான யோசனையை முன்வைத்தார்.
- இதுவே எர்நெட்டுக்கான அடிப்படை. பொறியியல் பட்டதாரியான ரமணி அமெரிக்கா சென்று பணியாற்றிய பிறகு, 1973இல் இந்தியா திரும்பினார். அமெரிக்காவில் மின்னஞ்சல் பயன்பாடு உள்ளிட்டவற்றைப் பார்த்து, அவற்றின் பின்னே இருந்த கணிணி வலைப்பின்னலால் ஈர்க்கப்பட்டவர்.
- நாடு திரும்பியதும், மென்பொருள் வளர்ச்சி, கணினியில் நுட்பங்கள் மையத்தின் உருவாக்கத்தில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றார்.
- இந்தியாவில் உருவாக்கப்பட்ட கணினிக்கான தகவல் தொடர்பு மென்பொருளை உருவாக்கிய குழுவுக்குத் தலைமை வகித்த ரமணி.
- 1981 இல் மூன்று நகரங்களைச் செயற்கைக்கோள் வாயிலாக இணையத்தின் அடிநாதமான பாக்கெட் ஸ்விட்ச் முறையில் இணைத்தார்.
- இவற்றின் தொடர்ச்சியாக எர்நெட் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக இதன் மைய மின்னஞ்சல் ஸ்விட்ச், சர்வதேச கேட்வே ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தார்.
- இந்தியாவிலிருந்து சர்வதேச வலைப்பின்னலுக்கான முதல் தொடர்பாக இது அமைந்தது.

**இந்திய இணையத்தின் தந்தை**

- இந்திய மக்களுக்கு இணைய வசதி தேவை என்பதை உணர்ந்து, இது தொடர்பாக வாதிட்டு, அரசைச் சம்மதிக்க வைத்தது மட்டுமல்லாமல், அறிமுகத்தின்போது இந்திய இணைய வசதியில் ஏற்பட்ட குளறுபடிகளுக்கெல்லாம் பொறுப்பேற்று, தனிக்குழு அமைத்து, அடுத்த பத்து வாரங்களில் இவற்றைச் சரிசெய்த செயல்வீரராகவும் சிங்கால் அறியப்படுகிறார்.
- இணையத்தைப் பொதுப்பயன்பாட்டின் பொருட்டு அறிமுகம் செய்ததற்காக சிங்கால் ‘இந்திய இணையத்தின் தந்தை’ எனப் போற்றப்படுகிறார்.

## ஐ.எஸ்.தீவிரவாதி

- 1999-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு, கடந்த 2014-ம் ஆண்டில் சிரியா, இராக்கின் பெரும்பகுதியை கைப்பற்றி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது.
- 2019-ம் ஆண்டு மே மாதம் விலயா ஆப் ஹிந்த் என்ற பெயரில் இந்திய துணை கண்டத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கால் பதித்தது.
- இந்த அமைப்பு இந்தியாவின் காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான், வங்கதேசம், மியான்மரில் அவ்வப்போது தீவிரவாத தாக்குதல்களை நடத்தி வருகிறது.

## உயர்கல்வியில் அதிகரிக்கும் மாணவியர் சேர்க்கை

- இந்தியாவில் உயர்கல்வி பயில்பவர்களில் 49% பெண்கள் என தெரிவிக்கிறது.
- இவ்வாய்வின்படி இளங்கலை, கணினி அறிவியல் சார்ந்த இளம் அறிவியல், முதுகலை பாடப்பிரிவுகளில் கலை, அறிவியல், வணிகவியல் போன்ற குறிப்பிட்ட சில பாடப்பிரிவுகளில் மாணவியர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

- அதிக உயர் கல்வி சேர்க்கையுடைய மாநிலமாக உத்தரப் பிரதேசம் விளங்குகிறது.
- உயர்கல்வி சேர்க்கையில் மூன்றாமிடம் வகிக்கும் மாநிலமான தமிழகத்தில் உயர் கல்வி சேர்க்கை பெற்றவர்களில் 50.5% பேர் மாணவர்கள் என்றும், 49.5% பேர் மாணவியர் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- தமிழகத்தில் உள்ள 163 கலை – அறிவியல் கல்லூரிகள் உள்ளன.
- பெண்களைப் பொறுத்தவரை, ஆராய்ச்சிப் படிப்பு என்பதைக் காட்டிலும் ஆசிரியப் பணியே இன்றும் முதன்மையானதாக இருந்து வருகிறது. அதனால் ஆசிரியப்பணியில் எந்த பாடப்பிரிவுக்கு வரவேற்பு உள்ளதென அறிந்து அப்பாடப்பிரிவுகளைத் தேர்வு செய்து பயின்றனர்.

## உத்தரகண்டில் முதல் விண்வெளி கண்காணிப்பு மையம்

- நாட்டின் முதலாவது விண்வெளி கண்காணிப்பு மையத்தை உத்தரகண்டில் கர்வால் பகுதியில் 'திகன்தாரா' என்ற புத்தாக்க நிறுவனம் அமைக்கவுள்ளது.
- விண்வெளியில் பூமியைச் சுற்றிவரும் சுமார் 10 செ.மீ அளவுள்ள பொருள்களைக் கூட அந்த மையத்தில் இருந்து கண்காணிக்க முடியும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.
- நாட்டின் வர்த்தக நோக்கில் அமைக்கப்படவுள்ள முதல் கண்காணிப்பு மையம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.
- தற்போது அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் விண்வெளி கண்காணிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை விண்வெளி குப்பைகளைத் தொடர்ந்து ஆய்வு செய்து தரவுகளைத் திரட்டி வருகின்றன.
- தற்போது இந்தியாவில் அமைக்கப்படவுள்ள விண்வெளி கண்காணிப்பு மையமானது பிராந்தியத்தில் முக்கிய மைல்கல்லாக இருக்கும்.
- விண்வெளி குப்பைகள் உள்ளிட்டவை செயற்கைக் கோள்கள் மீது மோதும் வாய்ப்பைத் தடுக்கவும் முடியும்.

## 2 லட்சம் வேலைவாய்ப்பு

- காலணி உற்பத்தியில் முன்னணி இடத்தில் உள்ள தமிழகத்தில், காலணி, தோல் பொருட்கள் உற்பத்தியில் மேலும் ரூ.20 ஆயிரம் கோடி முதலீடு மற்றும் 2லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் புதிய கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.
- காலணி உற்பத்திப் பிரிவுக்கான உலகளாவிய சந்தை வாய்ப்புகளை ஊக்கப்படுத்துவதும் அவசியமாகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு தனியான கொள்கையை உருவாக்குவதன் மூலம், தற்போது காலணி உற்பத்தித் துறையில் உள்ளவர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் சிறந்த மாநிலமாக தமிழகத்தை உருவாக்க முடியும் என்று அரசு நம்புகிறது.
- காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் கூடுதலாக ரூ.20 ஆயிரம் கோடி முதலீட்டை ஈர்ப்பது மற்றும் 2 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்குவது என்ற இலக்கை எட்டும் வகையில் இந்த கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

**கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

- காலணி, தோல் பொருட்கள் தயாரிப்பு தொடர்பான குழுமங்கள், பூங்காக்கள், பொதுவான வசதிகள் என கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், தோல் இல்லாத காலணிகள் உற்பத்திக்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, சார்பு தொழில் நிறுவனங்களுக்கு உதவுதல், பிரத்யேகமான திறன் பயிற்சி திட்டங்கள் மூலம், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு திறன் வாய்ந்த தொழிலாளர்களை வழங்குதல்.
- காலணி, தோல் பொருட்கள், தோல் இல்லாத காலணிகள் ஏற்றுமதியை ஊக்குவித்தல், தோல் பொருட்கள் பிரிவில் இருந்து தோல் இல்லாத காலணி மற்றும் இதர பொருட்கள் பிரிவுக்கு மாற்றம் செய்யும் வகையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு ஊக்கமளித்தல், காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி தொழிலை எளிதாக தொடங்குவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகியவை இக்கொள்கையின் முக்கிய திட்டங்களாகும்.
- மேலும், சிப்காட், சிட்கோ மற்றும் பொது தனியார் பங்களிப்பில் தோல் இல்லாத காலணி உற்பத்திக்கான குழுமங்கள் அடிப்படையில் பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன.
- இந்த பூங்காக்களில் சேமிப்புக் கிடங்குகள், வடிவமைப்பு அரங்கம், பயிற்சி மையம், பரிசோதனை கூடம், காலணி தயாரிப்புக்கான தொழிற்சாலைகள், ஷு பாக்ஸ் தயாரித்தல் உள்ளிட்டவை இருக்கும்.
- மேலும், ஏற்கனவே உள்ள தோல் பொருட்கள் குழுமங்களின் வளர்ச்சிக்கும் அரசு உதவிபுரியும்.
- அனைத்து விதமான பணியாளர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுவதுடன், காலணி தயாரிப்பு குழுமங்கள் அமைந்துள்ள மாவட்டங்களின் அருகில், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி மையங்கள் நிறுவ அரசு ஒத்துழைப்பு நல்கும்.

- மேலும், கிராமங்கள், நகர்ப்புறங்களில் இருந்து பணியாளர்கள் இதுபோன்ற தொழில் குழுமங்களுக்குச் செல்வதற்காக பேருந்து நேரங்களை மாற்றுதல் அல்லது புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஊக்க திட்டங்கள்**

- விற்றுமுதல் அடிப்படையிலான மானியம், நில மதிப்பு ஊக்கத்தொகை, பயிற்சிக்கான மானியம், தரச்சான்று ஊக்கத்தொகை, அறிவுசார் சொத்து மானியம், வட்டி மானியம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.
- இது தவிர, காலணி மற்றும் தோல் பொருட்கள் வடிவமைப்பு மையங்களுக்கு சிறப்பு மூலதன மானியம், பயிற்சி மானியம் உள்ளிட்டவை வழங்கப்படும்.

## எங்கே போகின்றன நமது ஊடகங்கள்?

- அமெரிக்காவை கொலம்பஸ் கண்டறிந்த செய்தி ஐந்து மாதங்கள் கழித்துத்தான் அவரை அனுப்பிவைத்த ஸ்பெயின் நாட்டு மன்னருக்குத் தெரியவந்தது.
- அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டு 12 நாட்களுக்குப் பிறகே அந்தச் செய்தி ஐரோப்பியர்களுக்குத் தெரியவந்தது.
- ஆனால், 2001 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் உலக வர்த்தக மைய இரட்டைக் கோபுரம் விமானத் தாக்குதலில் தகர்க்கப்பட்டதை உலகமெங்கும் மக்கள் தங்களது வீடுகளில் தொலைக்காட்சி மூலம் உடனடியாகக் காண முடிந்தது. ஊடகத் தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள அற்புதத்தின் விளைவு இது.
- மக்களிடம் கருத்துகளை உருவாக்குவதிலும் மனித மதிப்பீடுகளை வளர்த்தெடுப்பதிலும் பத்திரிக்கைகளுக்கு முக்கியப்பங்கு உண்டு. அதனால்தான் பத்திரிக்கைகளை 'மூன்றாவது கண்' என்கிறோம்.
- இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில், எந்தவித வியாபார நோக்கமுமின்றி சமூக அக்கறையோடு இந்தியவிடுதலைப் போராட்டம் குறித்து மக்களுக்குச் செய்திகளைக் கொண்டு சேர்க்கப் பல பத்திரிக்கைகள் தொடங்கப்பட்டன.

**செய்தி உற்பத்தியும் கருத்தும்**

- ஜனநாயகத்தின் கண்களாகவும் நேர்மறையான மாற்றங்களுக்குத் துணைநிற்பவையாகவும் இருக்க வேண்டிய ஊடகங்கள், காலப்போக்கில் செய்திகளை உற்பத்தி செய்யும் கூடங்களாக மாறிவிட்டன.
- வர்த்தக நோக்கமும் அரசியல் நோக்கமும் செய்திகளைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணிகளாகி விட்டன. செய்திகளில் ஜனநாயகத் தன்மை குறைந்து, நுகர்பொருள் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் விளம்பரத்தன்மை பெருகிவிட்டது.
- விளம்பரதாரர்களே செய்தியின்–நிகழ்ச்சியின் தன்மையை முடிவு செய்கிறார்கள். அதனால், முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைச் சில நேரம் ஊடகங்கள் புறக்கணிக்க நேர்கிறது.
- அரசியல், திரைப்படம், குற்ற நிகழ்வுகள் போன்ற செய்திகளுக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கும் பல ஊடகங்கள், மக்களின் முக்கியப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்வதில்லை.
- சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக வெகுமக்களுக்கான ஊடகங்கள் மாறிவிட்டதால், அதனை நடத்தும் உரிமையாளர்கள் செய்திகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றனர்.
- அது ஊடகங்களின் உள்ளடக்கத்திலும் பிரதிபலிக்கிறது. முன்பு செய்திக்கும் செய்தி விமர்சனத்துக்கும் தனியே வேறுபாடு இருக்கும்.
- இப்போது பல பத்திரிகைகளில் செய்திகளுடனேயே தங்களது கருத்துகளையும் திணித்து, அதையும் செய்தி போல வெளியிடும் போக்கும் உருவாகிவிட்டது.
- அரசு நிர்வாகத்தில் நிகழக்கூடிய தவறுகளை, குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் செய்திகளை வெளியிடும் சில பத்திரிக்கைகள், பெரும்பாலும் அதன் அடிப்படை அம்சங்களைப் பற்றிக் கேள்வி எழுப்புவதில்லை.
- தற்போதுள்ள அமைப்பினுடைய கோளாறுகளின் அறிகுறிகளை மட்டுமே சுட்டிக்காட்டி, அதைச் சரிசெய்ய வேண்டும் என்று கோரிக்கைகளை முன்வைக்கும் வகையிலேயே பெரும்பாலும் உள்ளன.

**ஊடகங்களின் இன்றைய நிலை**

- தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இணைய இதழ்கள் (நியூ மீடியா) முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. அதே வேளையில், கட்டற்ற சுதந்திரத்துடன் சமூக ஊடகங்கள் அபரிமிதமான வேகத்தில் வளர்ந்து வருகின்றன.
- மாறுபட்ட பல்வேறு கருத்துகளை விவாதிக்கின்றன. அச்சுவழிப் பத்திரிகைகளே இணையவழியில் இதழ்களை நடத்துவதும் வாசகர்களுடன் விவாதிக்க சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதும் நிகழ்கிறது.
- சிலநேரம் செய்திப் பத்திரிகைகளில் சில செய்திகள் ஓரங்கட்டப்பட்டாலோ அல்லது மறைக்கப்பட்டாலோ சமூக ஊடகங்கள் அந்தச் செய்திகளை வெளியிடுவதுடன், அந்த இதழ்கள் ஏன் வெளியிடவில்லை என்ற விவாதத்திலும் இறங்குகின்றன.

- சமூக ஊடகங்களில் வரும் செய்திகளின் நம்பகத்தன்மை பல நேரம் சந்தேகத்துக்குரியதாக இருப்பதையும் தனிநபர் காழ்ப்புணர்ச்சியுடன் செய்திகள் வெளிவருவதையும் சில நேரம் பொய்ச் செய்திகள் உண்மை போலச் சமூக ஊடகங்களில் உலா வருவதையும் பார்க்க முடிகிறது.
- தற்போது ஊடகத்துடன் சம்பந்தப்படாதவர்கள் ஊடகத்துறைக்கு அதிகம் வரத் தொடங்கிவிட்டார்கள். பெரிய தொழில் நிறுவனங்களின், பெரிய பணக்காரர்களின் கட்டுப்பாட்டில் பெரிய ஊடக நிறுவனங்கள் உள்ளன.
- தற்போது விளம்பரதாரர்கள் அல்லது தொழில் நிறுவனங்கள் ஊடகங்களின் உள்ளடக்கத்தை நிர்ணயிப்பதில் மறைமுகமாகத் தலையிடுகின்றன.
- இந்தச் செய்தியைப் போடலாம், இந்தச் செய்தியைப் பெரிதுபடுத்தக்கூடாது, இந்தச் செய்தியைப் போடவே கூடாது என்றெல்லாம் அழுத்தங்கள் வருகின்றன.
- பத்திரிக்கையாளர்கள் முழுச் சுதந்திரத்துடன் எழுதுவதற்கான வாய்ப்புகள் குறைந்து வருகின்றன. எனினும், ஒரு சில பத்திரிகைகளும், சில சுயாதீனப் பத்திரிகை ஊடகங்களும் தங்களது கருத்துகளைச் சுதந்திரமாக வெளியிடுவதில் தயக்கம் காட்டுவதில்லை என்பது ஆறுதல் அளிக்கிறது.

**பத்திரிகைச் சுதந்திரம்**

- நெருக்கடி நிலைக் காலத்தில் பத்திரிகைகள் அரசின் தணிக்கைக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகின. அதைத் தைரியமாக எதிர்கொண்ட பத்திரிகைகளும் உண்டு. ஆனால், தற்போது மக்களைப் பாதிக்கும் முக்கியப் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுகின்றன.
- முக்கியத்துவம் வாய்ந்த சில மக்கள் பிரச்சினைகள் தொலைக்காட்சி ஊடகங்களின் விவாதப் பொருளாக இருப்பதில்லை.
- மக்களைப் பாதிக்கும் பல விஷயங்களில் பல ஊடகங்கள் மௌனம் சாதிப்பதையும் அல்லது கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதையும் பார்க்க முடிகிறது.
- கடந்த காலத்தில் கௌரி லங்கேஷ், நரேந்திர தபோல்கர் எம்.எம்.கல்புர்கி போன்றவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.
- செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர் சித்திக் காப்பன் பிணை கிடைக்காமல் தவித்து வருகிறார். பல பத்திரிக்கையாளர்கள் மீது வழக்குகள் பாய்ந்துள்ளன.
- அரசின் செயல்பாடுகளை விமர்சனம் செய்யும் குரல்களை ஒடுக்கும் வகையில் சட்டவிரோதச் செயல்பாட்டுத் தடுப்புச் சட்டம் (உபா) போன்ற சட்டங்களை அரசு கையில் எடுக்கிறது.
- ஜனநாயகத்தின் குறியீடாகப் பத்திரிகைச் சுதந்திரம் கருதப்படுகிறது. ஆனால், பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பற்ற நாடுகளில் ஒன்றாக இந்தியா மாறிவருகிறது என்பதை எல்லைகளைக் கடந்த செய்தியாளர்கள் (Reporters Without Borders) அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
- இந்த ஆண்டு அறிக்கைப்படி, பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீட்டு எண்ணில் 180 நாடுகளில் இந்தியா 150-வது இடத்தில் உள்ளது.
- கருத்துச் சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் கேள்விக்குள்ளாகியுள்ள காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.
- நமது நாட்டில் அநேகப் பத்திரிகைகள் இருந்தாலும் தங்கள் மனசாட்சிக்கு உண்மை என்று பட்டதைத் தெரிவிக்க அஞ்சுகின்றன என்று குடியரசு இதழில் பெரியார் (19.05.1925) எழுதினார்.
- இந்தியச் சுதந்திரத்துக்கு முன் பெரியார் எழுதியது, இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது.
- பத்திரிகைகளுக்கு என்று தற்போது தணிக்கை முறை இல்லை. அதே சமயம் தணிக்கை முறை கொண்டுவரப்பட்டால், அது கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் விதமாகத்தான் முடியும் என்பதில் சந்தேகமில்லை.
- மரபாக இருந்துவரும் வழக்கப்படி, பத்திரிகைகள் தங்களைச் சுயதணிக்கை செய்துகொள்ளும் முறையே தொடர வேண்டும்.

## மின்சாரச் சட்டத்திருத்த மசோதா 2022

**மின்சாரச் சட்டத் திருத்த மசோதா 2022**

- மத்திய அரசின் மின்துறை அமைச்சகம், மின்சாரச் சட்டத் திருத்த மசோதா 2022-ஐ ஆகஸ்ட் 8 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தியது.
- அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் இருக்கும் நாடாளுமன்றத்தின் எரிசக்தி நிலைக்குழுவுக்கு அனுப்பி, மசோதாவின் முழு சாராம்சத்தையும் விவாதிக்கலாம் என்று மத்திய மின்துறை அமைச்சர் ஆர்.கே.சிங் தெரிவித்தார்.

- ஆனால், விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பான ‘சம்யுக்தா கிஸான் மோர்ச்சா’வுக்கு (எஸ்.கே.எம்) அளித்த வாக்குறுதியை மீறி, இந்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்வதாக மத்திய அரசு மீது எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின.
- இந்த மசோதா விவசாயிகளுக்கு எதிரானது மட்டுமல்ல; அரசமைப்புக்கு எதிரானது.

**மின்சாரச் சட்டத் திருத்த மசோதாவின் வரலாறு**

- 2003 இல் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, மின்சார மசோதா முதன்முறையாகக் கொண்டுவரப்பட்டு, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- மின்சார உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், வர்த்தகம், பயன்பாடு தொடர்பான சட்டங்களை ஒன்றாக்குவதே அதன் நோக்கம்.
- நுகர்வோர் நலனை மேம்படுத்துதல், அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குதல், மின் கட்டணத்தைச் சீரமைத்தல், மானியங்கள் தொடர்பான கொள்கைகளில் வெளிப்படைத்தன்மை போன்றவற்றை வழங்கும் விதமாக இந்தச் சட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டம் மின் விநியோக நிறுவனங்களைத் தனியார்மயமாக்கியது.
- 2007 இல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டுவந்த சட்டத் திருத்தத்தின் வாயிலாக, ஏழைக் குடும்பங்களுக்கு மானியம் வழங்குவதை உறுதி செய்யும் விதிகள் மின்சாரச் சட்டத்தில் சேர்க்கப்பட்டன.
- 2014, 2017, 2018, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் மசோதாவை மேலும் திருத்தப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- இவற்றில் 2014 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடனான மசோதா எரிசக்தி நிலைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- இருப்பினும், மத்திய அரசு அதை மறுஆய்வுக்கு உட்படுத்த விரும்பியதால், நாடாளுமன்றத்தில் அது நிறைவேறவில்லை.
- சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்ட பிறகு பெற்ற பதில்களில் மத்திய அரசு திருப்தி அடையாததால், இது சார்ந்த பிற வரைவு மசோதாக்கள் எதுவும் நாடாளுமன்றத்திற்கு வரவில்லை. அவை அனைத்தும் அவற்றின் வரைவு வடிவத்திலேயே இருந்தன.

**இந்த மசோதாவின் முக்கியத் திருத்தங்கள் என்ன?**

- மின்சாரச் சட்டத் திருத்த மசோதா 2022, பல முக்கிய மாற்றங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் மிகவும் முக்கியமானது, மாநில அரசுகளின் கீழ் உள்ள மின் விநியோகத்தில் மத்திய அரசின் தலையீட்டை அனுமதிக்கும் முன்மொழிவு.
- மசோதாவின் 11 ஆம் பிரிவு, ஒரே பகுதியில் பல விநியோக உரிமதாரர்களின் செயல்பாட்டை எளிதாக்கும் விதமாக மின்சாரச் சட்டத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்த முயல்கிறது.
- தனியார் நிறுவனங்கள் மின்விநியோகத்தில் ஈடுபட்டால், மிகப்பெரிய செலவில் மாநில அரசுகள் ஏற்கனவே உருவாக்கி வைத்திருக்கும் மின் விநியோகக் கட்டமைப்பை அவை பயன்படுத்திக் கொள்ளலாம் என அந்தச் சட்டத் திருத்தம் சொல்கிறது.
- தாங்கள் உருவாக்கி வைத்திருக்கும் கட்டமைப்பைத் தனியார் நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு ஏன் தர வேண்டுமென மாநில அரசுகள் கேள்வி எழுப்புகின்றன.
- இந்தப் பயன்பாட்டிற்கெனத் தனியார் நிறுவனங்கள் அளிக்கும் கட்டணம் போதுமானதாக இருக்காது என்பதே மாநில அரசுகளின் ஆட்சேபனைக்கு முக்கியக் காரணம்.
- இதனால், தொலைத்தொடர்புத் துறையில் ஏற்பட்டதுபோல், மின் விநியோகத்தில் கால்பதிக்கும் ஏகபோக நிறுவனங்களால், பொதுத்துறை நிறுவனங்களும் சிறிய கட்டமைப்புகளும் அழிந்துவிடும் நிலை உருவாகும் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இதேபோல், இந்த மசோதாவின் 13 ஆம் பிரிவு மின்சாரச் சட்டத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்த முயல்கிறது.
- ஒரே பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு உரிமம் தரும்போது, மின்சாரத்தைக் கூடுதல் விலைக்கு வாங்குபவர்களிடமிருந்து பெரும் தொகையை வேறு பிரிவினருக்கு மானியமாகத் தருவதற்கு ஏதுவாக, ஒரு நிதியை அரசு உருவாக்க வேண்டும் என இந்தத் திருத்தம் வலியுறுத்துகிறது.

**இந்த மசோதா ஏன் எதிர்க்கப்படுகிறது?**

- இந்த மசோதா மின்சாரப் பயன்பாட்டில் விவசாயிகளுக்கும் ஏழைகளுக்கும் வழங்கப்பட்டுவரும் மானியங்களை நிறுத்துவதற்கு வழிவகுக்கும் என்றும், அதன் பிறகு மின்சார விநியோகம் தனியார் நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குச் செல்லும் என்றும் விவசாயிகள் அஞ்சுவதால், இந்த மசோதாவுக்கு முதன்மையாக எதிர்ப்பு எழுந்தது.
- விநியோக நிறுவனங்களையும், உற்பத்தி நிலையங்களையும் தனியார்மயமாக்கினால் வேலை இழப்பு ஏற்படும் என்று மின்துறை ஊழியர்கள் இந்த மசோதாவை எதிர்க்கின்றனர்.

- மத்திய தொழிற்சங்கங்கள் இந்தச் சட்டத்திற்கு எதிராகப் பிரச்சாரத்தைத் தொடங்கியபோது, எஸ்.கே.எம். ஆதரவளிப்பதாக உறுதியளித்தது.
- இந்த மசோதா, கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு எதிரானது என எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன. அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பட்டியலின் கீழ் மின்சாரம் வருவதால், இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்பு, மத்திய அரசு மாநிலங்களுடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.
- இந்த மசோதா, லாபத்தைக் தனியார்மயமாக்குவதற்கும், நஷ்டத்தைத் தேசியமயமாக்குவதற்கும் வழிவகுக்கிறது என காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரி கூறினார்.
- திமுக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் மானிய விலையில் மின்சாரம் பெறும் ஏழை விவசாயிகளின் கதி என்னவாகும் எனக் கேள்வி எழுப்பினார்.

**இனி என்ன நடக்கும்?**

- மசோதா மீதான விவாதத்தை எரிசக்தி நிலைக்குழு விரைவில் தொடங்க இருக்கிறது. இந்தக் குழுவுக்குத் தற்போது ஐக்கிய ஜனதா தளக் கட்சின் எம்பி ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் தலைமை வகிக்கிறார்.
- ஆகஸ்ட் 9 அன்று பாஜகவுடனான கூட்டணியை ஐ.ஜ.க. முறித்துக் கொண்டுள்ளது. இதற்குப் பிறகும் எரிசக்தி நிலைக்குழுவில் பாஜகவுக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்றாலும், இதுபோன்ற மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, தலைவரின் நிலைப்பாடு முக்கியப் பங்கு வகிக்கும்.
- விவாதத்திற்குப் பின்னர், இந்த மசோதா தொடர்பாக சம்பந்தப்பட்ட துறையினர், அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோரின் கருத்துகளை இந்த நிலைக்குழு கேட்டறியும்.
- அந்தக் கருத்துகளின் அடிப்படையில் நிலைக்குழு புதிய திருத்தங்களைப் பரிந்துரைக்கும். அவை மக்களவை சபாநாயகருக்கு அனுப்பப்படும்.
- மக்களவையில் அவற்றின் மீது விவாதம் நடத்தப்படும். பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால், அந்த மசோதா மக்களவையிலும் பின்னர் மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும். குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்த பிறகு மசோதா சட்ட வடிவத்தைப் பெறும்.

## தொடர்ந்து குறையும் மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு

- மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான கூட்டாட்சித் தத்துவத்தை அடித்தளமாகக் கொண்டே நாடு செயல்பட்டு வருகிறது.
- நாட்டின் முறையான செயல்பாட்டுக்கு நிதி முக்கியமானது நிதி விவகாரத்தில் அதிக அதிகாரம் மத்திய அரசுவசமே உள்ளது.
- திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மாநில அரசுகளுக்கு இருந்தாலும், அதற்குரிய நிதியை வழங்க வேண்டிய தார்மிகக் கடமை மத்திய அரசுக்கு உள்ளது.
- மத்திய, மாநில அரசுகளுக்கிடையேயான வரிப் பகிர்வை முறைப்படுத்தும் நோக்கிலேயே 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழு அமைக்கப்பட்டு வருகிறது.
- ஒட்டுமொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்கு எவ்வளவு பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற பரிந்துரையை மத்திய அரசுக்கு நிதிக்குழு வழங்கும்.
- அந்தப் பரிந்துரைகளை ஏற்க வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்குக் கிடையாது. அதன் காரணமாக, மாநிலங்களுக்குத் தேவையான நிதியைப் பகிர்ந்து வழங்குவதால் நிதிக்குழுவின் பரிந்துரைக்கும் அதை மத்திய அரசு நடைமுறைப்படுத்துவதற்கும் இடையே பெரும் இடைவெளி காணப்படுகிறது.
- அதேபோல், செஸ் எனப்படும் வரி மீது கூடுதல் வரி விதிக்கும் நடைமுறையையும் மத்திய அரசு அதிகமாகக் கடைப்பிடித்து வருகிறது.
- செஸ் வரி மூலமாகக் கிடைக்கும் வருவாயை மத்திய அரசு மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. இதுவும் மாநிலங்களின் நிதியாதாரத்தை பாதிக்கும் வகையில் உள்ளது.

**நிதிக்குழு பரிந்துரை**

- மாநில அரசுகளுக்கு நிதியைப் பகிர்ந்தளிப்பதில் நிதிக்குழுவின் பரிந்துரைக்கும் நடைமுறைக்கும் இடையேயான இடைவெளி

**வரி வருவாய் பங்கு**

- ஒட்டுமொத்த வரி வருவாயில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு (லட்சம் கோடி ரூபாயில்). 2019-20, 2020-21-ஆம் நிதியாண்டுகளில் கரோனா தொற்று பரவல் காரணமாக மாநில அரசுகளின் வருவாய் பெருமளவில் குறைந்தது. ஆனால், மத்திய அரசின் வரி வருவாய் தொடர்ந்து அதிகரித்தவாறே இருந்தது.

**செஸ் வரி பங்கு**

- மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் செஸ் வரி மூலமாகக் கிடைத்த வருவாயின் பங்கு. 2011-12-ஆம் நிதியாண்டில் செஸ் வரி மூலமாக 10.4 சதவீத வருவாய் மட்டுமே மத்திய அரசுக்குக் கிடைத்தது.
- ஆனால், இது 2020-21-ஆம் நிதியாண்டில் சுமார் 20 சதவீதமாக அதிகரித்துள்ளது. மத்திய அரசு தனது வருவாய் பெருக்கத்துக்கு செஸ் வரியை மட்டுமே நம்பியுள்ளது இதன் மூலமாக வெளிப்படுகிறது.

## 2 டிரில்லியன் டாலர் ஏற்றுமதி இலக்கு

- 2030-ஆம் ஆண்டுக்குள் 2 டிரில்லியன் டாலர் (சுமார் ரூ.1.56 லட்சம் கோடி) ஏற்றுமதி இலக்கை அடைய, மத்திய வர்த்தகத் துறையை மேம்படுத்தி மாற்றியமைக்க இருப்பதாக மத்திய வர்த்தகம், தொழில், ஜவுளித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
- இந்திய சுதந்திரத்தின் நூற்றாண்டான 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக இருக்க வேண்டும் என்பது பிரதமரின் எண்ணம்.
- அதற்கான வலுவான அங்கமாக வர்த்தக துறை இருக்கும்.
- பிரசித்தி பெற்ற பொருளாதார வல்லுநர்கள் எந்த நாடு சர்வதேச சந்தையை விரிவுபடுத்துகிறதோ அந்த நாடே வளர்ச்சியடைந்த நாடாக இருக்கும்.
- இந்தியாவின் ஏற்றுமதி 675 பில்லியன் டாலர் (சுமார் ரூ.52.65 லட்சம் கோடி). இதை வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் 2 டிரில்லியன் டாலராக (சுமார் ரூ.1.56 லட்சம் கோடி) உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இந்த மறுசீரமைப்பில், உலக வர்த்தக அமைப்புடன் பேச்சு வார்த்தை திறனை வலுப்படுத்துவது, இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் போன்றவற்றுடன், மின்னணுமயமாக்கல், உரிய தரவுப் பகுப்பாய்வு சூழல், ஒற்றைச்சாளர முறை போன்ற வர்த்தகத்தை எளிதாக்கும் செயல்முறைகளில் கவனம் செலுத்தப்படும்.
- இந்த மறுசீரமைப்பில் வர்த்தக அமைச்சகத்தில் மனிதவளம் அதிகரிக்கப்படலாம். ஆனால் குறைக்கப்படாது.
- சர்வதேச அளவில் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கை அதிகரிப்பதின் மற்றொரு நோக்கம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுதான்.
- வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு சர்வதேச அளவில் உள்ள இந்தியாவின் 200 தூதரங்களின் சக்தியையும் பயன்படுத்திக் கொள்ளும்.
- இதில் வர்த்தகம், தொழில்நுட்பம், சுற்றுலா ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

**வர்த்தக பற்றாக்குறையில் சரிவு**

- 'எதிர்காலம் தயார்' என்கிற அறிக்கையின் 9 பொருள்களின் விரிவாக உள்ளடக்கங்கள், துறைகள் குறித்து விளக்கினார்.
- இதில் 8 முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், அனைத்து மாநிலங்களிலும் மத்திய வர்த்தக அமைச்சகத்தின் அலுவலகங்கள் முறையாக அமைக்கப்படும்.
- சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது. இதனால் பலதரப்பட்ட பொருள்களின் இறக்குமதி விலை குறையும்.
- இதன்மூலம் நிகழாண்டில் வர்த்தக பற்றாக்குறையில் சரிவு ஏற்படும். நிகழாண்டில் ஏற்றுமதியும் கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நிகழாண்டில் ஒட்டுமொத்த ஏற்றுமதி அளவு ரூ.58.50 லட்சம் கோடியாக (750 பில்லியன் டாலர்) இருக்கும். இதில் சரக்குக்கான ஏற்றுமதி ரூ.37.44 லட்சம் கோடி (480 பில்லியன் டாலர்) அடக்கம் என்றார்.

## இலவசங்களும் நலத்திட்ட உதவிகளும்

**இலவசம்**

- இலவசம் இழிவு உழைப்பே உயர்வு என்று கூறியவர் தேசப்பிதா காந்திஜி. இலவசம் என்பது உன்னதமான உழைப்பை உதாசீனப்படுத்தும் சொல். லஞ்சம் என்பதை அன்பளிப்பு என்று கூறுவது போலத்தான் இதுவும்.
- 'மீனைக் கொடுக்காதே, மீன் பிடிக்கத் தூண்டில் கொடு' என்பது ஒரு மேலைநாட்டுப் பழமொழி.

**வழக்கு**

- உத்தரபிரதேச மாநிலத்தின் புந்தேல்கண்ட் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட நான்குவழி விரைவுச் சாலையைத் திறந்து வைத்துப் பேசிய இந்திய பிரதமர் நரேந்திரமோடி, உத்தர பிரதேச மக்கள் இனிப்புப் பண்டத்தை விரும்பிச் சாப்பிடுவதைப் போல இலவசங்களை விரும்புகிறார்கள்.
- இதே கருத்தை வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் இலவசங்களுக்கு எதிராக அஸ்வினி உபாத்யாய என்கிற வழக்குரைஞர் ஒரு பொதுநல வழக்கைத் தாக்கல் செய்தார்.
- தேர்தலில் வாக்காளர்களைக் கவரும் வகையில் நியாயப்படுத்த முடியாத இலவசங்களை அரசியல் கட்சிகள் அறிவிப்பது, அரசியல் சாசனத்தின் ஜனநாயகக் கோட்பாட்டிற்கே முரணானதாகும்.
- அத்தகைய அரசியல் கட்சிகளின் சின்னத்தை முடக்கவும், அக்கட்சிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்யும் தேர்தல் ஆணையத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று அவர் கூறியிருந்தார்.
- இலவசம் என்பது அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் தேசத்தின் பொருளாதாரப் பேரழிவுக்கு வழிவகுக்கக்கூடியது என்பதை மறுக்க முடியாது என்று மத்திய அரசு உச்சநீதிமன்றத்துக்கு அளித்த பதில் மனுவில் கூறியுள்ளது கவனிக்கத்தக்கதாகும்.
- இப்போது நம் முன் உள்ள கேள்வி, இலவசங்கள் என்பவை எவை என்பதுதான். அவற்றைத் தீர்மானிக்க ஒரு நிபுணர் குழுவை நியமிக்க உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்துள்ளது.
- அக்குழுவில் மத்திய அரசு – மாநில அரசுகள், நிதி கமிஷன், நீதி ஆயோக், இந்திய ரிசர்வ் வங்கி, பயனாளிகள் ஆகியோர் இடம்பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- இலவசங்களால் அரசு நிதி அதிக அளவு செலவாகிறது. அதனால் மாநில அரசுகள் கடன் வாங்க வேண்டிய நிலை உருவாகிறது.
- இலவசங்களை வழங்கும் ஆளுங்கட்சி, வாக்காளர்களின் அபிமானத்துக்கு உரியதாவதால், அதனுடைய ஆட்சி தொடர்வதற்கு உதவுகின்றது.
- இந்த இலவசங்களால் அடுத்து வரும் தேர்தலிலும் மீண்டும் அரசியல் கட்சியே வெற்றி பெறுகிறது. இலவசம் இவ்வாறு வாக்கு வங்கியாக செயல்பட்டு வருகிறது.
- ஆளுங்கட்சிக் கூட்டணியைத் தோற்கடிக்க வேண்டுமானால் எதிர்க்கட்சிக் கூட்டணியைத் தோற்கடிக்க வேண்டுமானால் எதிர்க்கட்சி கூட்டணியும் இதே போல் அதிக இலவசங்களை அறிவிக்க வேண்டியதாகிறது.
- ஒரு கட்சி மிக்ஸி, கிரைண்டர் இலவசமாகத் தருவதாகச் சொன்னால், இன்னொரு கட்சி வாஷிங்மெஷின் தருவதாகப் போட்டிக்கு அறிவிக்கும்.
- ஒரு கட்சி மடிக்கணினி என்றால், இன்னொரு கட்சி இலவச இணையம் என்கிறது.
- ஒரு கட்சி 10–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மிதிவண்டி தருவதாகச் சொன்னால், இன்னொரு கட்சி 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தரப்போவதாக அறிவிக்கிறது.
- ஒரு கட்சி புதிய ஓய்வூதியத் திட்டம் என்றால், இன்னொன்று பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறுகிது.
- குடும்ப அட்டைக்கு ரூ.2,000 என்று ஒரு கட்சி அறிவித்தால், இன்னொரு கட்சி குடும்பப் பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தருவதாகக் கூறுகிறது.
- இந்த இலவசப் போட்டாபோட்டிக்கு எல்லையே இல்லை. இலவச அறிவிப்பின் நோக்கம் ஆட்சியைப் பிடிப்பதுதான்.
- வருடம் இரண்டு கோடி பேருக்கு வேலைவாய்ப்பு தரப்போவதாகக் கூறிய மத்திய ஆளுங்கட்சி, அப்படித் தரவில்லை என்பது மட்டுமல்ல, வேலையில் இருந்த தொழிலாளர்கள் தங்கள் வேலையை இழக்குமாறு பல தொழிற்சாலைகளையும் மூடிவிட்டது என்கின்றன எதிர்க்கட்சிகள்.
- இலவசங்களைப் பற்றி இரண்டுவிதமான கருத்துகள் நிலவுகின்றன. ஏழைகளால் மிக்ஸி, கிரைண்டர்களை வாங்க முடியாது.
- அவர்கள் ஆட்டுக்கல், அம்மிக் கல்லைத்தான் பயன்படுத்துகின்றனர். அவர்களுடைய தினக்கூலி அவர்களின் உணவுக்குக்கூட போதுமானதாக இல்லை.
- அதனால்தான் நியாயவிலைக் கடைகளின் மூலம் அவர்களுக்கு 20 கிலோ இலவச அரிசி தரப்படுகிறது. விலைக்கு வாங்கும் அரிசியும் குறைந்த விலையில் தரப்படுகிறது.
- இப்படிப்பட்ட சாமானிய மக்களுக்கு வாங்கும் சக்தி குறைவாக உள்ளதை கவனத்தில் கொண்டுதான், இலவச அரிசி, பருப்பு, சர்க்கரை, இலவச வேட்டி, புடவை முதலியவற்றை அரசு வழங்குகின்றது.

SURESH'

- இவற்றை இலவசம் என்று கூறாமல், நலத்திட்ட உதவி என்றே அரசு கூறுகிறது. முந்தைய அரசும் இவற்றை செய்து வந்த காரணத்தால், இலவசங்களை குற்றமாக அரசியல் கட்சிகளால் கூறமுடிவதில்லை.
- மத்திய அரசு ஒரு குடும்பத்துக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் மருத்துவ சிகிச்சைக்காகத் தருவதாகக் கூறுகிறது.
- மாநில அரசுகளும் பல சலுகைகளை வழங்குகின்றன. கல்விக்கான கடன்கள் ரத்து செய்யப்படப்போவதாக அறிவிக்கப்படுகிறது.
- வட்டியில்லாக் கடனாக அதனைக் கருதி, மாணவர்கள் படிப்பை முடித்து வேலைக்குச் சென்ற பிறகு கடனை தவணைமுறையில் திருப்பிக் கட்டலாம் எனக் கூறப்படுகிறது. இன்னொரு கட்சி கல்விக்கடனையே முழுமையாக ரத்து செய்வதாக அறிவிக்கிறது.
- ஹிமாச்சல பிரதேசத்தில் ஒரு கட்சி, வீடுகளுக்கு மாதம் 300 யூனிட் மின்சாரம் இலவசம் என்றும், ஏழைப் பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1,500 நிதியுதவி என்றும் அறிவித்துள்ளது. (அங்கு நான்கு மாதத்தில் தேர்தல் வரவிருக்கிறது).
- இதற்கான நிதி எவ்வாறு திரட்டப்படும் என்பதற்கான விளக்கத்தை அக்கட்சி தரவில்லை. அவ்வாறு தராமல் இலவசங்களை மட்டும் அறிவிப்பது தவறானது என்று கட்சிகளைக் கண்டிக்கும் சட்ட விதிகளும் தேர்தல் ஆணையத்திடம் இல்லை ; நீதிமன்றத்திடமும் இல்லை. நீதிமன்றம் அறிவுரை கூறலாம், அவ்வளவுதான்.
- தமிழ்நாட்டில் மகளிருக்கு பேருந்துப் பயணம் இலவசம் என்று அறிவிக்கப்பட்டதால், அவர்களுடைய பயணச் செலவு மிச்சமாகியுள்ளது. பொருளாதார சிக்கலிலிருந்து அவர்கள் மீண்டுள்ளனர் என அரசு கூறுகிறது.
- வீடு இல்லாதவர்களுக்கு வீடு கொடுப்பது, இலவச கழிப்பறைக் கட்டிக் கொடுப்பது, இலவச சமையல் எரிவாயு உருளைகளைத் தருவது போன்றவை வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளாகவே கருதப்பட வேண்டுமே தவிர, அவற்றை இலவசமாகக் கருதுவது தவறு.
- இலவச மதிய உணவு, இலவச காலை சிற்றுண்டி ஆகியவை ஏழை மாணவர்களுக்கு அளிக்கப்படும் நலத்திட்டங்களே தவிர, அவர்களின் சுயமரியாதையை பாதிக்கும் இலவசங்கள் அல்ல என்று கூறப்படுகிறது.
- இதேபோலத்தான் ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி வழங்க உச்சநீதிமன்றமே முன்வந்துள்ளது.
- நாடு முழுவதுமுள்ள 10 கோடி விவசாயிகளுக்கு ஆண்டுக்கு மூன்று தவணைகளாக ரூ.6,000 சென்ற இரு ஆண்டுகளாகத் தரப்பட்டு வருகிறது. இதனை விவசாயிகளுக்குத் தரப்படும் நிதி உதவியாக நினைக்க வேண்டுமே தவிர, விவசாயிகளை வாக்கு வங்கியாக்கும் நோக்கமுள்ளதாகக் கருதக்கூடாது என்கின்றனர்.
- இவை இலவசங்கள், இவை நலத்திட்டங்கள் என வரையறை செய்வதில் குழப்பமே நீடிக்கிறது. ஆனாலும், இலவசங்கள் தேசப் பொருளாதாரத்தை சீர்குலைக்கிறது என்கிற விமர்சனம் தவறல்ல.
- இலவசம், நலத்திட்டம் இரண்டுமே வாங்கும் சக்தியற்றவர்களின் வாக்குகளைக் கவர்வதற்கானவை. இலவசம் வாக்குவங்கியாக உருமாறுகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை. வாக்காளர்களின் ஏழ்மை நிலை அதனை நியாயப்படுத்துகிறது.
- வேலைவாய்ப்பை உடனடியாக உருவாக்க முடியாத நிலையில்தான் கிராமப்புறங்களில் நூறுநாள் வேலைத்திட்டம் எனும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நடைமுறைக்கு வந்தது.
- எவையெல்லாம் இலவசங்கள், எவையெல்லாம் நலத்திட்டங்கள் என்பதை வரையறுக்க வேண்டிய இன்றைய அவசரத் தேவையாகும். உச்சநீதிமன்ற ஆலோசனைப்படி அமைக்கப்படும் குழுவை ஆளுங்கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் வரவேற்க வேண்டும்.
- எதிர்கட்சித் தலைவர்களும் அக்குழுவுக்குத் தங்களின் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.
- இலவச பட்டியலும் நலத்திட்ட உதவி பட்டியலும் தயாரிக்கலாம். இலவச பட்டியலில் உள்ளவற்றை நலத்திட்ட பட்டியலுக்கு மாற்றலாம். அதேபோல நலத்திட்டப் பட்டியலில் உள்ளவற்றை இலவச பட்டியலுக்கு மாற்றலாம்.
- இவ்வாறு உருவாக்கப்படும் இறுதிப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலவசங்களை வழங்குவதற்குரிய நிதி ஆதாரத்தை இலவசங்களை அறிவிக்கும் அரசியல் கட்சிகள் எப்படித் திரட்டப் போகின்றது என்பதை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கலாம்.
- தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்தி முடிக்கும் மாபெரும் பணியை செய்து வருவது பாராட்டுக்குரியது. ஆனால், அது மட்டும் போதாது. தேர்தல் ஆணையம் அரசியல் சாசனத்தின்படி, சுயாட்சியுள்ள நிறுவனம்.

## சாகித்திய அகாதெமி : புரஸ்கார், பால சாகித்திய விருதுகள்

- இலக்கிய உலகில் உயரிய விருதாக சாகித்திய அகாதெமி விருது கருதப்படுகிறது. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு இந்த விருது அளிக்கப்படுகிறது.

- இலக்கிய படைப்பாளிகளை கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் இளம் எழுத்தாளர்களுக்கு யுவபுரஸ்கார் விருதையும்,
- சிறுவர் இலக்கியத்துக்கான பால சாகித்திய புரஸ்கார் விருதையும்,
- இந்திய பிராந்திய மொழிப் படைப்புகளுக்கு சாகித்திய அகாதெமி வழங்கி வருகிறது.
- தமிழ் மொழிப் பிரிவில் ... : தமிழ் மொழிப்பிரிவில் தனித்திருக்கும் அரளிகளின் மதியம் எனும் கவிதை தொகுப்புக்காக தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் பி.காளிமுத்துவுக்கு யுவ புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- குழந்தைகளுக்கான பால சாகித்ய புரஸ்கார் விருது பிரிவில், தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஜி.மீனாட்சி எழுதிய மல்லிகாவின் வீடு எனும் சிறுகதை நூலுக்கு பால சாகித்ய புரஸ்கார் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த இரு விருதுகளும் தாமிரப்பட்டயம் மற்றும் ரூ.50 ஆயிரம் காசோலை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

## விண்ணப்பதாரர் ஒருமுறை பதிவு நடைமுறை : யுபிஎஸ்சி

- மத்திய அரசுப் பணிகளுக்கான பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கேற்ற விண்ணப்பதாரர்கள் அவர்களின் அடிப்படை விவரங்களை ஒருமுறை மட்டுமே பதிவு செய்யும் வகையிலான (ஓடிஆர்) வசதியை யுபிஎஸ்சி அறிமுகம் செய்துள்ளது.
- யுபிஎஸ்சி சார்பில் மத்திய அரசின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு ஆண்டு முழுவதும் வெவ்வேறு வகையான போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.
- இதில் ஏராளமானோர் பங்கேற்கின்றனர். இந்த விண்ணபதாரர்களுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறையை எளிமையாக்கும் வகையில் ஓடிஆர் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**குடிமைப் பணிகள் தேர்வில் எத்தனை முறை பங்கேற்கலாம்?**

- ஐஏஎஸ் ஐஎஃப்எஸ், ஐபிஎஸ் போன்ற பணிகளுக்காக முதல் நிலை (பிரிலிமினரி), முதன்மை (மெயின்) மற்றும் நேர்முகத் தேர்வு என்று மூன்று கட்டங்களாக ஆண்டுக்கு ஒரு முறை குடிமைப் பணிகள் தேர்வு நடத்தப்படும்.
- இந்தத் தேர்வை பொதுப்பிரிவு (ஓசி) மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப்பிரிவினர் (இடபிள்யுஎஸ்) 6 முறை எழுத முடியும்.
- இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினர் (ஓபிசி) மற்றும் மாற்றுத் திறனாளிகள் 9 முறை எழுத முடியும்.
- எஸ்சி, எஸ்டி பிரிவினர் எத்தனை முறை வேண்டுமானாலும் குடிமைப் பணிகள் தேர்வை எழுத முடியும்.
- இதில் முதல்நிலைத் தேர்வில் ஒரு தாளில் விண்ணபதாரர் பங்கேற்றாலும், அவர் குடிமைப்பணிகள் தேர்வில் ஒருமுறை பங்கேற்றவராக கருதப்படுவர்.
- குடிமைப் பணிகள் தேர்வில் இதுவரை எத்தனை முறை பங்கேற்றுள்ளேன் என்ற விவரத்தை தவறாக பதிவிடும் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதோடு, அடுத்த 10 ஆண்டுகளுக்கு அவர்கள் எந்தத் தேர்விலும் பங்கேற்காத வகையில் தடை விதிக்கப்படும் என்றும் யுபிஎஸ்சி தெரிவித்துள்ளது.

## உலகின் முதல் ஹைட்ரஜன் ரயில் சேவை : ஜெர்மனியில் தொடக்கம்

- லோயர் சாக்ஸோனி மாகாணத்துக்கு வழங்கப்பட்டுள்ள 14 ஹைட்ரஜன் ரயில்கள் மூலம் 4 நகரங்களை இணைக்கும் 100 கி.மீ. ரயில் பாதையில் இந்த சேவை வழங்கப்படுகிறது.
- இதுவரை பயன்படுத்தப்பட்ட டீசல் ரயில்களுக்கு மாற்றாக, புவியை வெப்பமாக்கும் வாயுக்களை முற்றிலும் வெளியிடாத ஹைட்ரஜன் ரயில்கள் இயக்கப்படவுள்ளன.
- 9.3 கோடி யூரோ (சுமார் ரூ.737 கோடி) செலவில் தொடங்கப்பட்டுள்ள இந்த ரயில் திட்டத்தால் ஆண்டுக்கு 4,400 டன் கரியமில வாயு காற்றில் கலப்பது தடுக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## போலியோவை ஒழித்த திட்டம்

- 1995-ல் அறிமுகப்படுத்தப்பட்ட பல்ஸ் போலியோ திட்டம்
- இளம்பிள்ளைவாதம் என்கிற கோலியோமைலிட்டிஸ் ஒரு தீவிரமான தொற்றுநோய். பெரும்பாலும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளையே அது பாதிக்கும்.
- இந்த வைரஸ் மனிதரிடமிருந்து மனிதருக்குப் பரவும்.
- 1970-களில் போலியோவால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 50,000 குழந்தைகள் ஊனமுற்றனர்.
- இதைக் கட்டுப்படுத்தவே ‘பல்ஸ் போலியோ திட்டம்’ தொடங்கப்பட்டது.

- பல்ஸ் போலியோ திட்டத்தின் கீழ் விரிவான பிரச்சாரம், விழிப்புணர்வு விளம்பரங்கள் மூலம், போலியோ பாதிப்பு இந்தியாவில் வெகுவாகக் குறைந்தது.
- இந்தியாவை போலியோ இல்லாத நாடாக 2015-இல் உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.
- இந்தத் திட்டத்தின் கீழ், 0-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து தற்போதும் வழங்கப்படுகிறது.
- போலியோ வைரஸ் தடுப்பூசியை அறிமுகப்படுத்திய உலகின் முதல் நாடு என்கிற பெருமையையும் இந்தத் திட்டம் இந்தியாவுக்குப் பெற்றுக்கொடுத்தது.
- கடைசியாக 2011 ஜனவரி 13 அன்று மேற்கு வங்கத்தில் போலியோ பாதிப்பு பதிவானது. கடந்த பத்து ஆண்டுகளில் போலியோ பாதிப்பற்ற நாடாக இந்தியா விளங்குகிறது.
- தமிழ்நாடு கடந்த 18 ஆண்டுகளாக போலியோ இல்லாத மாநிலமாக விளங்குகிறது.

## திருநங்கைகளுக்கு சுகாதார காப்பீட்டு அட்டை

- இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கு, பயனாளி திருநங்கையாக இருக்க வேண்டும்.
- அதேபோல் இந்திய அரசால் அறிவிக்கப்பட்ட திருநங்கை சான்றிதழை வைத்திருக்க வேண்டும்.
- இது ஆயுஷ்மான் பாரத் டிஜி சுகாதாரக் காப்பீடு அட்டை என்று அழைக்கப்படும்.
- இந்த திட்டத்தின் கீழ், ஒவ்வொரு திருநங்கைக்கும் மருத்துவக் காப்பீடு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரை சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மூலம் நிதியளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த அட்டையை வைத்துக் கொண்டு தேர்வு செய்யப்பட்ட மருத்துவமனைகளில் திருநங்கைகள் இலவச சிகிச்சை பெற முடியும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் திருநங்கைகள் பயன்பெற வருமான உச்சவரம்பு எதுவும் கிடையாது.
- பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு ஆயுஷ்மான் பாரத் டிஜி சுகாதாரக் காப்பீடு அட்டை வழங்கப்படும்.

## சட்டசபையில் நிறைவேற்றிய மசோதாக்கள்

- ஒரு பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பதவிக்காலம் முடிந்தவுடன், 3-பேர் கொண்ட தேர்வுக்குழுவினர், பல்கலைக்கழக துணைவேந்தராக விரும்புகிறவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று பரிசீலித்து, அதில் 3 பேர்களைத் தேர்ந்தெடுத்து, வேந்தர் பொறுப்பிலிருக்கும் கவர்னருக்கு அனுப்புவார்கள். கவர்னர் அவர்களை நேர்முக போட்டிக்கு அழைத்து, அதில் ஒருவரை துணைவேந்தராக நியமிப்பார்.
- தமிழ்நாட்டிலுள்ள 13 பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை, கவர்னருக்கு பதிலாக, மாநில அரசுக்கு வழங்கப்படுகிறது.
- 1949-ம் ஆண்டு குஜராத் பல்கலைக்கழக சட்டம், 1991-ம் ஆண்டு தெலுங்கானா பல்கலைக்கழகங்கள் சட்டம் ஆகியவற்றில், பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு உள்ளது.
- கர்நாடக மாநில பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி, மாநில அரசின் ஒப்புதலுடன் வேந்தரால் துணைவேந்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
- "முதல்-அமைச்சர் பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிப்பது 1956-ம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு சட்டத்துக்கு எதிரானது. ஏனெனில், இது நேரடி அரசியல் தலையீட்டுக்கு வழிவகுக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

## திட்டமிட்ட தொழில் வளர்ச்சி தொடர்கிறதா?

- நாட்டின் வருவாய், வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி மேம்பாடு, நவீனமயம், வேளாண் வளர்ச்சிக்கான உந்து சக்தி, வேளாண் தொழில்நுட்பம், சேவைத் துறை வளர்ச்சி, உள்நாட்டு - வெளிநாட்டு வர்த்தகம் எனப் பல்வேறு அம்சங்கள் தொழில் துறையின் வளர்ச்சியைச் சார்ந்தே அமைகின்றன.
- நாடு சுதந்திரம் அடைந்தபோது தனியார் வருமானம் 27 ரூபாய், சராசரி ஆயுட்காலம் 32 வயதுதான்;
- எழுத்தறிவு விகிதம் 16.1%; குழந்தை இறப்பு 1,000 பேருக்கு 146. முறையான புள்ளிவிவரக் கட்டமைப்புகள் உருவாக்கப்படும் வரை பொருளாதார ஆய்வறிக்கையை மட்டுமே நம்பியிருக்க வேண்டியிருந்தது. இங்கிருந்துதான் நமது இன்றைய வளர்ச்சிப் பாதையை மதிப்பீடு செய்ய வேண்டும்.

**தொழில் கொள்கைகள்**

- சுதந்திரத்திற்குப் பிறகு தொழில் வளர்ச்சிக்குப் பெரும்தடைக்கல்லாக இருந்தது முதலீட்டுப் பற்றாக்குறை.

- தனியார் முதலீடுகள் போதுமான அளவுக்கு இல்லை; இருந்தவை அதிக இடர்பாடுகளைக் கொண்டிருந்தன.
- எனவே, அரசே முதலீடுகளில் முன்கை எடுக்க வேண்டிய நிலை இருந்தது.
- 1951 இல், உள்ளாட்டு உற்பத்தி மதிப்பில் தொழில் துறையின் பங்கு 11.8%. சணல், பருத்தி ஆலைகள் மட்டுமே பெருந்தொழில்கள். இந்தப் பின்னணியில், ஒரு தொழில் கொள்கைக்கான தேவை உடனடியாக எழுந்த நிலையில், 1948 இல் முதல் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது.
- சோஷலிசக் கட்டமைப்பின் அடிப்படையில் 1956 ஆம் ஆண்டின் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது. நாட்டின் வலுவான தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டது.
- இத்தொழில் கொள்கையே சிறுதொழில் வளர்ச்சியின் முக்கியத்துவம் கருதி 1977இல் தொழில் கொள்கை மறுகட்டமைப்பு செய்யப்பட்டது.
- 1980 இல், தொழில் துறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் பொதுத்துறை நிறுவனங்களின் திறன்களை மேம்படுத்தவும் உள்நாட்டுச் சந்தையில் போட்டியை அதிகரிக்கச் செய்யவும் திருத்தம் செய்யப்பட்டது.
- 1991 இல் புதிய தொழில் கொள்கை, தாராளமயம், தனியார் மயம், உலகமயமாக்கலை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

**ஐந்தாண்டுத் திட்டம்**

- முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. திட்ட ஒதுக்கீட்டில் 2.8% தொழில் துறைக்கு ஒதுக்கப்பட்டது.
- இரண்டாவது தொடங்கி ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் வரை ஒவ்வொரு திட்டக் காலத்திலும் தொழில்துறை வளர்ச்சிக்கெனச் சராசரியாக 20% ஒதுக்கப்பட்டது.
- ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 22.8% ஆக இருந்த நிதி ஒதுக்கீடு
- ஆறாவது திட்டத்தில் 13.7%, ஏழாவது திட்டத்தில் 11.9%, எட்டாவது திட்டத்தில் 8.4%, ஒன்பதாவது திட்டத்தில் 7.6%, பத்தாவது திட்டத்தில் 3.9% எனப் படிப்படியாகக் குறைந்து, ஒரு கட்டத்தில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி முறைமையை நிறுத்தப்பட்டுவிட்டது.

**நான்கு வளர்ச்சி நிலைகள்**

- இந்தியப் பொருளாதார வளர்ச்சி நிலைகளை நான்காக வகைப்படுத்தலாம். 1951 முதல் 1965 வரையிலான முதல் நிலை : இக்கால கட்டத்தில்அடிப்படைத் தொழில்கள், முதலீட்டுப் பண்டங்கள், பெரும் முதலீடுகள், இரும்பு உள்ளிட்ட கனரகத் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- 1965 முதல் 1980 வரையிலான காலத்தைத் தொழில் துறை வளர்ச்சிப் பின்னடைவுக்காலம் என வரையறுக்கலாம்.
- இந்தக் காலத்தில், 9% ஆக இருந்த தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி விகிதம் 4.1% ஆகச் சுருங்கியது. 1962 சீன யுத்தம், 1971 பாகிஸ்தான் யுத்தம், 1965 முதல் 1971 வரையிலான காலகட்ட வறட்சி, உள்கட்டமைப்பு வசதி நெருக்கடிகள், 1973 இல் ஏற்பட்ட பெட்ரோலியப் பொருட்களுக்கான நெருக்கடி என இதற்குப் பல காரணங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன.
- 1960 முதல் 1990 வரையுள்ள காலம் தொழில் துறை மீட்சிக்காலம். இக்காலகட்டத்தில் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி 7.9% ஆக உயர்ந்து தாராளமயமாக்கலுக்கு வித்திட்ட காலம் இது.
- 1991 முதல் நான்காம் நிலை தொடர்கிறது. 1991 இல் 2.3% இருந்த தொழில் துறை வளர்ச்சி விகிதம் தற்போது 19.6%ஐ எட்டியிருக்கிறது.

**இன்றைய நிலை**

- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில் தொழில் துறையின் பங்கு தற்போதைய நிலையில் 17.1% என்ற அளவில் உள்ளது.
- 2016-17 இல் 5.1 கோடியாக இருந்த இத்துறையின் வேலைவாய்ப்பு எண்ணிக்கை, 2020-21-இல் 2.73 கோடியாக சரிந்துவிட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வேலைவாய்ப்பு 21% குறைந்துள்ளது.
- தொழில்துறை வேலைவாய்ப்புகளில் முறைசாராத் தொழில்கள் 70% பங்களிக்கின்றன.
- 1955இல் அமைக்கப்பட்ட கார்வே கமிட்டி, சிறு தொழில் வளர்ச்சிக்கான பரிந்துரைகளை அளித்தது. அதன் அடிப்படையில் 1977 இல் உருவாக்கப்பட்ட கொள்கையின் காரணமாக இந்தியச் சிறுதொழில் துறை வேகமாக வளர்ந்தது.
- உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் பெரும் தாக்கம் செலுத்தினாலும் தொழில்துறை உற்பத்தியில் சிறுதொழில் துறை 40% பங்களிக்கிறது, ஏற்றுமதியில் 40%, வேலைவாய்ப்புகளில் 45% பங்களிப்பையும் சிறுதொழில் துறை வழங்கி வருகிறது.

**சிக்கல்கள்**

- இந்தியாவில் தொழில்துறையின் பங்கு கணிசமாக இருந்தாலும், வேலைவாய்ப்புகளிலும் இந்தியத் தொழில்துறை பின்தங்கியே உள்ளது.
- இந்தியாவில் கூட்டுப் பங்கு நிறுவனங்கள், பொதுப் பங்கு நிறுவனங்களின் வளர்ச்சி குறைந்து வருகிறது. அதே சமயம், தனியார் பங்கு நிறுவனங்களின் வளர்ச்சி அதிகரித்து வருகிறது.
- பொருளியல் அறிஞர் சைமன் குஷ்நெட் குறிப்பிடுவதைப் போல், பொருளியல் வளர்ச்சி பரவலாகும்போது வேளாண்மையிலிருந்து மாறிச் செல்லும் போக்கு, மற்ற வளர்ந்துவரும் நாடுகளைப் போல இந்தியாவில் நடைபெறவில்லை. ஒரு வரம்பிற்கு உட்பட்ட மாற்றமே நிகழ்ந்துள்ளது.

## புரத உணவை மறுக்கும் தனியார் பள்ளிகள்

**புரதம் ஏன் அவசியம்?**

- தேசியக் குடும்பநலக் கணக்கெடுப்பு (NFHS) 2019-21 இன்படி இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக, ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 39.7% பேர் (தமிழ்நாடு 22%) வயதுக்கு ஏற்ற எடையுடன் இல்லை.
- அதே போல ஊட்டச்சத்துக் குறைவால், இந்தியாவில் 39.7% குழந்தைகள் வளர்ச்சி குறைபாட்டுடன் உள்ளனர் (தமிழ்நாடு 25%). இவ்வாறான ஊட்டச்சத்துக் குறைபாட்டில் புரதச்சத்துக் குறைபாடு முதன்மையானதாக உள்ளது.
- புரதம் என்பது உடலின் ஒட்டுமொத்த அடிப்படைக் கட்டுமானத்துக்குப் பங்களிப்பதாகும்.
- குழந்தைகளின் உடல், மூளை வளர்ச்சி என்பது அவர்களின் எதிர்காலத்தோடு நேரடியாகத் தொடர்புடையது.
- ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் வளரும் ஒரு குழந்தைக்குத் தொற்றுநோய்கள் அதிகம் தாக்கும் சாத்தியம் உள்ளதோடு, அவர்கள் சரியான உடல் மனநல வளர்ச்சி இல்லாமல் போவதால் கல்வியில் பின்தங்கி விடுவர்.
- தோராயமாக மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனித இனம் தோன்றியபோது, பிற விலங்குகளைவிடப் பாரிய மூளைத் திறன் மனிதனுக்குக் கிடைத்ததற்குக் காரணம், இறைச்சிதான் என்பது ஆய்வாளர்களின் முடிவாகும்.
- பிரிட்டனில் 1850 முதல் 1950 வரை 100 ஆண்டுகளில் மக்கள் இறைச்சி உணவு எடுத்துக்கொண்ட அளவு, அதனை ஒட்டிய நல்வாழ்வு குறித்து நடத்தப்பட்ட மாபெரும் ஆய்வு முடிவுகள் 2017 இல் வெளியாகின.
- அதில், இறைச்சி உணவு எடுத்துக்கொண்ட மக்கள், தாவர உணவு மட்டும் எடுத்துக் கொண்டோரைவிட அதிக உயரம் வளர்ந்துள்ளனர் என்பதோடு, அவர்கள் நோய்வாய்ப்படுவதும் குறைவாக இருந்துள்ளது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.
- அதேபோல இறைச்சி உணவுப் பழக்கம் கொண்டோரை அக்கால பிளேக் நோய் குறைவாகத் தாக்கியுள்ளது என்பது அந்த ஆய்வில் வெளிப்பட்டிருந்தது.
- கடல் உணவு, இறைச்சி, ஈரல், முட்டை ஆகியவை ஊட்டச்சத்துக்களின் சுரங்கம். தாவர உணவு மட்டும் எடுத்துக்கொண்டோருக்கு உடலுக்குத் தேவையான B12விட்டமினில் பத்தில் ஒரு பகுதி மட்டுமே கிடைக்கின்றது.
- அதேபோல மூளை வளர்ச்சிக்குத் தேவையான B2, B3/ அயோடின், செலினியம் போன்றவையும் சரிவரக் கிடைப்பதில்லை.

**பள்ளி எனும் சமூக அனுபவம்**

- வளர்ச்சிக் குறியீடுகளில் முதல் ஐந்து இடங்களில் உள்ள ஸ்காண்டிநேவிய நாடுகள், அந்நாட்டு மக்களுக்கான உணவுப் பரிந்துரைகளை வெளியிட்டுள்ளன.
- அவற்றை நோக்கினால், நாம் வாரம் மூன்று முறை கடல் உணவையும், வாரம் 500 கிராமுக்கு மிகாத இறைச்சியையும் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளதை அறிய முடிகிறது.
- அறிவியல் உண்மைகள் இப்படியிருக்க சமூக அரசியல் நோக்கில் இங்கு தனியார் பள்ளிகள் இறைச்சி, முட்டை, மீன் கொண்டுவரக் கூடாது என்று தடை விதித்துள்ளது நடைமுறைக்கு எதிரானது.
- தனியார் பள்ளிகளை நடத்துவோருக்குப் பல்வேறு நம்பிக்கைகள், கலாச்சாரம், உணவுப்பழக்கம் ஆகியவை இருக்கலாம்.
- ஆனால், அவர்கள் அதனை அவர்களின் வீடுகளைத் தாண்டி பள்ளிக்குக் கொண்டு வருவது ஏற்புடையதல்ல.
- அரசமைப்புக்கு உட்பட்டே ஒரு நிறுவனம் செயல்பட வேண்டும். பள்ளி என்பது குழந்தைகளின் முதல் சமூக அனுபவமாகும். அந்த முதல் சமூக அனுபவத்திலேயே தாவர உணவு உண்போர் உயர்வானவர்கள் என்றும் இறைச்சி உண்பது உயர்வானதல்ல என்றும் கற்பிப்பது சமூக அநீதி ஆகும்.

## டி.ஆர்.டி.ஓ., தலைவராக சமீர் வி காமத் நியமனம்

- காமத், 1985-ல், ஐ.ஐ.டி., காரக்பூரில் பி.டெக் படித்துள்ளார். கடந்த 1989-ல் டி.ஆர்.டி.ஓ,. அமைப்பில் விஞ்ஞானியாக இணைந்து பணியாற்றினார்.
- இவர், டி.ஆர்.டி.ஓ., தலைவராக 60 வயது அல்லது மறு உத்தரவு வரும் வரை நீடிப்பார்.

## கே. ராமச்சந்திரனுக்கு தேசிய நல்லாசிரியர் விருது

- முன்னாள் குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப்டம்பர் 5-ஆம் தேதி ஆண்டுதோறும் ஆசிரியர் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- இந்த விருது ரூ.50 ஆயிரம் ரொக்கம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- நிகழாண்டு தேசிய நல்லாசிரியர் விருதுக்கு நாடு முழுவதும் 46 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.
- ராமநாதபுரம் மாவட்டம், கீழம்பல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் கே.ராமச்சந்திரனுக்கு 2022-ஆம் ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் கே.ராமச்சந்திரனின் செயல்பாடுகள்**

- இடைநிலை ஆசிரியரான கே.ராமச்சந்திரன், தனது கிராமத்தில் உள்ள பட்டதாரிகளுக்கு டி.என்பிஎஸ்சி போட்டித் தேர்வுக்கு பயிற்சி வழங்கி வருகிறார்.
- Students skills என்ற பெயரில் யூடியூபில், கீழம்பல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு எனத் தனியாக கணக்கைத் தொடங்கி, மாணவர்களின்தனித்திறனை வெளிக்கொணர்ந்து வருகிறார்.
- தமிழர்களின் தொன்மையும் பெருமையுமான திருக்குறளின் முக்கியத்துவத்தை மாணவர்களிடம் விதைக்கும் பணியை மேற்கொண்டுள்ளார்.
- தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குத் திருக்குறளைக் கற்றுக் கொடுத்து, ஒப்பிக்கவும் வைக்கிறார். அதேபோன்று அரசின் திட்டங்களான எண்ணும் எழுத்தும் உள்ளிட்டவற்றையும் சிறப்புறக் கற்பித்து, யூடியூப் பக்கத்தில் பதிவேற்றி வருகிறார்.

## ஐஎம்எஃப் செயல் இயக்குநராக கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன்

- கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் தற்போது இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிசினஸில் நிதித்துறை பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.
- நவம்பர் 1-ஆம் தேதி முதல் சர்வதேச நிதியத்தில் இந்தியா சார்பில் செயல் இயக்குநராக அவர் பொறுப்பு ஏற்கவுள்ளார். அவரது நியமனத்துக்கு மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

## பெகாசஸ் உளவு மென்பொருள்

- இஸ்ரேல் நாட்டின் பெகாசஸ் உளவு மென்பொருளை பயன்படுத்தி இந்தியாவில் அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை மத்திய அரசு அமைப்புகள் உளவு பார்ப்பதாக கடந்த ஆண்டு குற்றச்சாட்டு எழுந்தது.
- குடிமக்களின் அந்தரங்க உரிமையை பாதுகாக்கவும் தேசத்தின் இணைய பாதுகாப்பை உறுதி செய்யவும் சட்டத்திருத்தம் செய்யுமாறு அறிக்கையின் ஒரு பகுதி பரிந்துரைக்கிறது.
- தொழில்நுட்பக்குழு ஆய்வு செய்த 29 மொபைல் போன்களில் பெகாசஸ் உளவு மென்பொருளுக்கான உறுதியான ஆதாரம் இல்லை. 5 போன்கள் ஏதோ ஒரு மென்பொருளால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவை பெகாசஸ் உளவு மென்பொருளால்தான் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.
- இணைய பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளே 5 போன்களின் பாதிப்புக்கு காரணம் என தொழில்நுட்பக் குழு கூறியுள்ளது.

## மகாத்மா அய்யன்காளி

- கேரளத்தின் புகழ்மிக்க சமூகப் போராளியான அய்யன்காளி நவீன கேரளத்தின் முதன்மையான சிற்பிகளில் ஒருவர்.
- மனித வளர்ச்சிக் குறியீட்டிலும், நீடித்த வளர்ச்சிக் குறியீட்டிலும் இந்திய மாநிலங்களின் தரவரிசையில் கேரள மாநிலம் இன்று முன்னணியில் இருப்பதற்கு அடித்தளமிட்டவர்களில் அய்யன்காளியும் ஒருவர்.

**அய்யன்காளியின் போர்க்குரல்**

- ஒடுக்கப்பட்ட அனைவருக்காகவும் போர்க் குரல் கொடுக்கும் சமூகப் போராளியாக உருவெடுத்தார். 'அநீதிக்கு இடம் கொடாதே அநீதிக்கு அடிபணியாதே' என்பது அவரின் புகழ்மிக்க முழக்கமாக இருந்தது. அநீதிக்கு எதிராக இடைவிடாது தொடர்ந்து செயல்பட வேண்டும்.

- 'பேச்சல்ல... செயல்' என்பதே அவரின் செய்தி. 'சாதி உயர்வினை எப்போதும் ஏற்காதே, உனது சமூகத்தின் சுயமரியாதையை எப்போதும் விட்டுக்கொடுக்காதே' என வலியுறுத்தினார்.
- 'அஞ்சாதே, தீரமுடன் போராடு' என்னும் அவரின் போர்க்குரல், அடிமைப்பட்டுக் கிடந்த புலையர்களின் மனத்தில் ஆழமாகப் புகுந்தது.
- மேலாடை அணியத் தடை இருந்த பகுதிகளில் தலைப்பாகையுடன் மிக உயர்ந்த ஆடை அணிந்து செல்வது அவரது வழக்கம். தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்ட சாலைகளில் அலங்கரிக்கப்பட்ட வில்லு வண்டியில் அச்சமில்லாது செல்வார்.
- தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காக 'சாது ஜன பரிபாலன சங்கம்' என்ற அமைப்பினை உருவாக்கினார். சட்டப் போராட்டத்தில் அவர் நம்பிக்கை வைத்திருந்தார். அதே நேரம், அநீதிகளை முடிவில்லாது பொறுத்துக் கொள்ள அவர் தயாராக இல்லை.
- "அணிதிரண்டுப் போராடுவோம்" என்ற அவரது போராட்ட உத்தி பெரும் வெற்றிகளை மக்களுக்குப் பெற்றுத் தந்தது.
- ஏழை எளியவர்கள் தாக்கப்பட்டால் அவர்களைப் பாதுகாக்க இளைஞர்கள் கொண்ட 'அய்யன்காளிப்படை' என்னும் கெரில்லா அணி உருவானது.

**காந்தியும் அய்யன்காளியும்**

- காந்தியும் அய்யன்காளியும் சந்திக்க நேர்ந்த போது, காந்தி தான் நடத்திய தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேசப் போராட்டத்தில் பங்கேற்குமாறு அய்யன்காளியைக் கேட்டுக்கொண்டார்.
- அய்யன்காளி அதில் ஆர்வம் காட்டவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆலயப் பிரவேசம் முக்கியமானதல்ல. பள்ளிகளுக்குள் பிரவேசமே முக்கியம் என்றார்.

## வாடகை டாக்ஸி

- செல்பேசிச் செயலிகளின் வழியாக வாடகை டாக்ஸி மற்றும் ஆட்டோ சேவையை வழங்குவதில் பன்னாட்டுப் பெருநிறுவனங்களுக்கு இடையே போட்டிகள் நிலவிவரும் நிலையில், தற்போது கேரள அரசும் முக்கியப் போட்டியாளராகக் களத்தில் இறங்கியிருக்கிறது.
- கேரள சவாரி என்ற பெயரில் இச்சேவை தொடங்கப்பட்டுள்ளது.
- மாநில அரசே இப்படி இணையவழி வாடகை டாக்ஸி சேவையை நடத்துவதற்குக் கேரளம் ஒரு முன்னுதாரணமாக மாறியுள்ளது என்றபோதும், இதைப்போன்ற ஒரு செயலிவழிச் சேவையை 2018-லேயே கோவா அரசும் முயன்று பார்த்தது.
- தனியார் வாடகை டாக்ஸி ஓட்டுநர்களின் பலத்த எதிர்ப்பாலும், கடைசி நேரத்தில் ஓட்டுநர்கள் சவாரிக்கு மறுத்துவிடுகிறார்கள் என்று பயணிகள் தெரிவித்த கருத்துகளாலும் அம்முயற்சி ஆரம்ப நிலையிலேயே முடிவுக்கு வந்துவிட்டது.
- கேரள அரசு இச்சேவைக்காக 8 சதவீத சேவைக் கட்டணத்தை மட்டுமே பெற இருப்பதால், அம்மாநில ஓட்டுநர்களுக்கு இச்சேவை ஒரு பெரும் நம்பிக்கையை அளித்துள்ளது.
- பிரபல தனியார் பெருநிறுவனங்களின் சேவைக் கட்டணத்தைக் காட்டிலும் இது 20 முதல் 30 சதவீதம் வரையில் குறைவாக இருக்கும். பயணிகள், ஓட்டுநர் என இருதரப்புக்கும் பயனளிக்கும் இந்தச் சேவையை மாநிலஅரசே தொடங்கி வைத்திருப்பது தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்களும் முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கது.

## முதல் முயற்சியில் வென்ற மங்கள்யான்

- செவ்வாய்க்கோள் ஆராய்ச்சிக்கு விண்கலத்தை அனுப்பும் முயற்சி 1960களிலேயே தொடங்கிவிட்டது. 2013க்கு முன்புவரை இந்த வகையில் வெற்றி அடைந்திருந்த நாடுகள் ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பியக் கூட்டமைப்பு மட்டுமே.
- இந்த நிலையில்தான், செவ்வாய்க்கோளின் சுற்றுவட்டப் பாதைக்குள் முதல் முயற்சியிலேயே விண்கலத்தை நிலைநிறுத்திய நாடு என்ற பெருமையை 2013 இல் இந்தியா பெற்றது.
- 'மங்கள்யான்' விண்கலத்தை 'செவ்வாய் சுற்றுக்கலன் திட்ட'த்தின் (Mars Orbiter Mission) கீழ் இஸ்ரோ 2013 நவம்பர் 5 அன்று விண்ணில் செலுத்தியது.
- அந்த விண்கலன் 2014 செப்டம்பர் 24 அன்று செவ்வாயின் சுற்றுவட்டப் பாதையை வெற்றிகரமாகச் சென்றடைந்தது. இந்தத் திட்டத்திற்கு ஆன செலவு 450 கோடி ரூபாய் மட்டுமே.
- உலகிலேயே செவ்வாய் கோளுக்கு மிகக் குறைந்த செலவில் அனுப்பப்பட்ட விண்கலம் என்கிற பெருமையும் இதற்கு உண்டு.
- மங்கள்யானில் அதி நவீன கேமராக்கள், கடந்த 7 ஆண்டுகளாகச் செவ்வாய்க்கோளில் ஏற்படும் சூறாவளி உள்ளிட்ட நிகழ்வுகளை ஒளிப்படம் எடுத்து பூமிக்கு அனுப்பி வருகின்றன.

- மார்ஸ் கலர் கேமரா (Mars Color Camera) மூலம் apoapsis நிலையிலிருந்து, அதாவது 72,000 கி.மீ தொலைவிலிருந்து எடுக்கப்பட்ட இந்த ஒளிப்படங்கள் செவ்வாய் கோளின் வளிமண்டலத்தின் மேகங்கள், தூசு, எதிரொளித்திறன் குறித்த தரவுகளை வழங்குகின்றன.
- நிலையிலிருந்து எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் செவ்வாயின் மேற்பரப்பு பற்றிய செய்திகளை வழங்குகிறது. இந்தியாவின் அறிவியல் திறனை உலகுக்கு அழுத்தந்திருத்தமாக உணர்த்திய திட்டம் இது.

## ரஷ்யாவுக்கு எதிராக முதல்முறை இந்தியா வாக்களிப்பு

- இதுவரை உக்ரைன் – ரஷ்யா போர் தொடர்பான தீர்மான விவகாரங்களில் இந்தியா ஒதுங்கியே இருந்தது. இந்த நிலையில், தற்போது உக்ரைன் பிரச்சனையில் ரஷ்யாவுக்கு எதிராக இந்தியா முதல் முறையாக தனது வாக்கை பதிவு செய்து எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உக்ரைன் விவகாரம் தொடர்பாக கொண்டுவரப்பட்ட அனைத்து தீர்மான நிகழ்வுகளிலும் இந்தியா கலந்து கொள்ளாமல் புறக்கணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வந்தது.
- இந்தியாவின் இந்த செயல், அமெரிக்க தலைமையிலான மேற்கத்திய நாடுகளிடையே கடும் அதிருப்தியையும், எரிச்சலையும் ஏற்படுத்தியது.
- உக்ரைனின் 31-வது சுதந்திரதின கொண்டாட்டத்தையொட்டி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் முன் நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்ட உக்ரைன் தொடர்பான தீர்மானத்தின் மீது இந்தியா ரஷ்யாவை எதிர்த்து தனது வாக்கினை பதிவு செய்துள்ளது.
- 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கருத்தரங்கில் பங்கேற்க உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி காணொலி காட்சி மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டதற்கு ஆதரவாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக 13 நாடுகளும், எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யாவும் வாக்களித்தன. சீனா இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இவ்வாறு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## தத்தளிக்கும் காட்டுயிர்கள்

- ஆங்கிலேய ஆட்சிமுறை 1947இல் ஒருவழியாக முடிவுக்கு வந்தாலும், மழை விட்டாலும் தூவானம் விடாது என்பதுபோல் 1960 வரையிலும்கூட காட்டுயிர்கள் (புலிகளையும் சேர்த்துத்தான்) கேளிக்கைக்காகவும், விருதுகளுக்காகவும், வீரசாகசத்திற்காகவும், வேட்டையாடப்பட்டு வந்தன.
- இதனால் பல (ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம், ஆசிய யானை, சிங்கம், புலி போன்ற) பெரும் பாலூட்டிகள் எண்ணிக்கையில் வெகுவாகக் குறைந்து போயின.
- 20ஆம் நூற்றாண்டின் முதல் 50 ஆண்டுகளில் ஜாவா காண்டாமிருகம், சுமத்ரா காண்டாமிருகம், பாண்தெங் (Banteng) – ஒரு வகைக் காட்டு மாடு, சிவிங்கிப் புலி (Cheetah) ஆகியவை இந்தியாவிலிருந்து முற்றிலும் அற்றுப்போயின.
- இவற்றில் இந்தியா சுதந்திரம் அடைந்தபின் அற்றுப்போனது சிவிங்கிப் புலி. இன்னும் பல காட்டுயிர்களின் எண்ணிக்கையும் அவற்றின் வாழிடப் பரப்பும் வெகுவாகக் குறைந்து போயின.
- இதன் விளைவாக உருவானதே இந்தியக் காட்டுயிர்ப் பாதுகாப்புச் சட்டம் 1972. இதனைத் தொடர்ந்து 1973இல் புலிகள் பாதுகாப்புச் செயல்திட்டம் தொடங்கப்பட்டது.
- பின்னர் காட்டுயிர்ச் சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், புலிகள் காப்பகங்கள், யானைக் காப்பகங்கள் (யானைகள் பாதுகாப்புச் செயல்திட்டம் 1992 இல் தொடங்கப்பட்டது), உயிர்மண்டலக் காப்பகங்கள், பறவைகள் சரணாலயங்கள், பல்லுயிர்ப் பாதுகாப்பகங்கள் (Conservation reserves) எனப் பல பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உருவாயின.
- ஒரு பக்கம் இதெல்லாம் நடந்து கொண்டிருந்தபோதே, இன்னொரு பக்கம் நீர் மின்சாரம், அணைகள், சாலைகள், கனிமச்சுரங்கம், தோண்டுதல் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்காக இயற்கை வாழிடங்கள் அழிக்கப்பட்டும், திருத்தப்பட்டும் வந்தன.
- இந்தியக் காட்டுயிர்ப் பாதுகாப்புச் சட்டம் 1972 ஒரு வகையில் காட்டுயிர்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பைத் தந்தாலும், அது பூர்வீகக் குடிகளின் பாரம்பரிய உரிமைகளைப் பறிக்கவும், காலங்காலமாக அவர்கள் வாழ்ந்து வந்த காட்டுப் பகுதிகளிலிருந்து அந்நியப்படுத்தவும் செய்தது.
- சட்டங்கள் இருந்தாலும் கள்ளவேட்டையும் அது தொடர்பான சந்தையும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

- 2006 இல் பூர்வகுடிகளின் பாரம்பரிய உரிமைகளை மீட்கும் வகையில் காட்டுரிமைச் சட்டம் (Forest Right Act 2006) இயற்றப்பட்டது. இந்தியாவில் பல இடங்களில் பாதுகாக்கப்பட்ட வாழிடங்களின் (Protected Areas) பரப்பு கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- பல்லுயிர்ப் பாதுகாப்புக்கு காட்டுயிர் ஆராய்ச்சிகளின் முடிவுகளைக் கொண்டும், பொதுமக்களின் உதவியுடனும் (மக்கள் அறிவியல் திட்டங்கள்) செயல்படுத்தப்படும் சூழல் உருவாகியுள்ளது.
- வருங்காலங்களில் வளர்ச்சியையும், பொருளாதாரத்தையும் மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், வாழிடங்களைச் சீரழிக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.
- சீரழிந்த சூழலமைப்புகளை அறிவியல்பூர்வமான முறையில் மீளமைத்து (ecological restoration), சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம், அது சார்ந்த கல்வி குறித்த விழிப்புணர்வைப் பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

## ஜி 23 தலைவர்கள் யார்?

- காங்கிரஸ் தலைமைக்கு எதிராக அந்த கட்சியின் மூத்த தலைவர்கள் 23 பேர் போர்க்கொடி உயர்த்தினர். அவர்கள் ஜி 23 தலைவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.
- குலாம் நபி ஆசாத், ஆனந்த் சர்மா, பூபிந்தர் சிங் ஹூடா, மிலிந்த் தியோரா, முகுல் வாஸ்னிக், மணீஷ் திவாரி, சசி தரூர், ராஜிந்தர் கவுர், வீரப்ப மொய்லி, பிருத்விராஜ் சவாண், கபில் சிபல், விவேக் தன்கா, ஜிதின் பிரசாத், ரேணுகா சவுத்ரி, பி.கே.சூரியன், ராஜ் பப்பர், குல்தீப் சர்மா, யோகானந்த் சாஸ்திரி, அகிலேஷ் பிரசாத் சிங், அரவிந்தர் சிங் லவ்லி, கவுல் சிங் தாக்குர், அஜய் சிங், சந்தீப் தீக்சித் ஆகியோர் ஜி 23 தலைவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இதில் பலர் காங்கிரஸில் இருந்து விலகிவிட்டனர்.

## கடற்படையில் இணைய ஆயத்தமாகும் விக்ராந்த்

- கொச்சி கப்பல் கட்டுமான தளத்தில் உருவாக்கப்பட்ட விக்ராந்த் போர்க்கப்பல் 262 மீட்டர் நீளம், 62 மீட்டர் அகலம், 45,000 டன் எடை கொண்டது.
- மிக்-29கே போர் விமானங்கள் காமோவ்-31 ராணுவ ஹெலிகாப்டர்கள், எம்-60 ஆர் பன்முக பயன்பாடு கொண்ட ஹெலிகாப்டர்கள், இலகு ரக ஹெலிகாப்டர்கள், இலகு ரக போர் விமானங்கள் என 30 விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களைக் கொண்ட விமானப் பிரிவை இயக்கும் திறன் இந்தக் கப்பலுக்கு உள்ளது.
- கப்பலில் 1,600 வீரர்கள் உள்ளிட்டோர் தங்கும் வகையில் சுமார் 2,200 அறைகள் உள்ளன. அவற்றில் பெண் அதிகாரிகள் மற்றும் பெண் மாலுமிகளுக்கான சிறப்பு அறைகளும் அடங்கும்.
- அறுவை சிகிச்சை அரங்குகள், இயன் மருத்துவ சிகிச்சையகம், அவசர சிகிச்சை பிரிவு, ஆய்வகங்கள், தனி சிகிச்சை அறைகள் உள்பட நவீன மருத்துவ உபகரண வசதிகளுடன் மருத்துவ சிகிச்சை வளாகம் இடம்பெற்றுள்ளது.
- கப்பலில் அறுவை சிகிச்சை நிபுணர் உள்பட 5 மருத்துவர்கள், மயக்கவியல் மருத்துவர், பல் மருத்துவர், வான்வெளியியல் மருத்துவ நிபுணர்கள் ஆகியோர் இருப்பார்கள். இதுதவிர, ஆய்வகம் மற்றும் எக்ஸ்ரே பணியாளர்கள் உள்பட 15 மருத்துவ உதவியாளர்கள் உள்ளனர்.
- நடுக்கடல் நடவடிக்கைகளின் போது கப்பலில் எந்நேரத்திலும் 1,600 பேர் இருப்பார்கள் என்கிற நிலையில், இவர்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பிரம்மாண்டமான 3 சமையல் தளங்கள் உள்ளன.
- கடந்த 1971-ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் இடையே நடைபெற்ற போரில் 'விக்ராந்த்' என்ற பெயர் கொண்ட இந்தியாவின் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் முக்கிய பங்காற்றியது. அந்தக் கப்பலின் பெயரே தற்போது முற்றிலும் உள்நாட்டில் கட்டப்பட்டுள்ள விமானந்தாக்கிக் கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

## நவீன தொழில்நுட்ப அறிமுகம் அவசியம்

- நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் இருப்பது மிகப்பெரிய சவாலாக இருந்து வருகிறது. வழக்குகளைப் பட்டியலிடுவதிலும், ஒதுக்கீடு செய்வதிலும் என்னால் அதிக கவனம் செலுத்து முடியவில்லை.
- நிலுவை வழக்குகளுக்குத் தீர்வு காண செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பக் கருவிகளை அறிமுகம் செய்வது அவசியம்.
- நீதித்துறை என்பது காலத்தோடு வளர்ந்து வருவதாகும். ஒரு தனி உத்தரவு அல்லது தீர்ப்பின் அடிப்படையில் இந்தத் துறையை தீர்மானித்துவிடவோ அல்லது வரையறை செய்துவிடவோ முடியாது.
- நீதிமன்றத்தின் அலுவலராக நீதித்துறையின் நம்பகத் தன்மையைப் பாதுகாக்கவில்லை எனில், மக்கள் மற்றும் சமூகத்தின் மதிப்பைப் பெற முடியாமல் போய்விடும்.

## கோத்தாரி ஆணையம்

- கோத்தாரி ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று 1968 இல் இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது தேசிய கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தேவையான விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் இந்தக் கல்விக் கொள்கை கவனம் செலுத்தியது. நாட்டின் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியில் கல்வி மகத்தான பங்களிப்பை ஆற்றக்கூடும் என்று இந்த கல்விக் கொள்கை அங்கீகரித்தது.
- இந்திய அரசமைப்பு சட்டத்தின் 45 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறி, 14 வயதுவரை உள்ள அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வி கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்கிறது. இந்த வழிகாட்டு நெறியை நிறைவேற்றுவதில் தேசிய கல்விக் கொள்கை 1968 கவனம் செலுத்தியது. நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை உருவாக்குவது அந்தக் கல்விக் கொள்கையின் முதன்மை இலக்காக இருந்தது.
- மாற்றுத் திறனாளிகளுக்கும் கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, பழங்குடியினர் பகுதிகளில் வாழ்வோருக்கும் கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளித்தது. பெண் கல்விக்கு கூடுதல் அழுத்தம் கொடுத்தது.
- பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லாமலே அவற்றுக்கு உரிய வயதைக் கடந்துவிட்டோருக்கு அடிப்படைக் கல்வியை அளிக்கும் முதியோர் கல்வி உள்ளிட்ட திட்டங்களின் மூலம் நாட்டின் எழுத்தறிவு விகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்றது.
- கற்பித்தலில் தரத்தை உறுதிசெய்வதற்கான ஆசிரியர் பயிற்சி, தொழிற்கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்துதலும் இந்தக் கல்விக் கொள்கையின் நோக்கங்களாக இருந்தன.
- இந்தி, ஆங்கிலம், மாநில மொழி ஆகிய மூன்று மொழிகளை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்றது.
- அனைத்துப் பாடங்களையும் தாய்மொழிவழியில் கற்பிப்பதையும் ஆதரித்தது. இந்தி மொழியை தேசிய ஒருமைப்பாட்டுக்கான கருவியாகக் கருதிய இந்தக் கல்விக் கொள்கை, நாடு முழுவதும் அது மேம்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது.
- கோத்தாரி ஆணையத்தின் பரிந்துரைப்படி பள்ளிக் கல்வி 10 +2 +3 என்று வரையறுக்கப்பட்டது.

## விண் முட்டும் வளர்ச்சி

- 1962 இல் அப்போதைய பிரதமர் நேருவின் வழிகாட்டுதலின்படி 'INCOSPAR' எனும் விண்வெளி ஆராய்ச்சி குழுவை டாக்டர் விக்ரம் சாராபாய் உருவாக்கினார்.
- அதில் தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி அப்துல் கலாமும் ஓர் உறுப்பினர். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், 'இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ)', என அது பெயர் மாற்றப்பட்டது.
- அமெரிக்காவும் ரஷ்யாவும் மனிதர்களை விண்ணுக்கு அனுப்பிய காலகட்டத்தில்தான், பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டிருக்கும் இஸ்ரோ விண்வெளி அறிவியலில் தளிர்நடை போடத் தொடங்கியது.
- அந்த அமைப்பு 1975 ஏப்ரல் 19 அன்று முதன்முதலாக வடிவமைத்த 'ஆரியப்பட்டா' செயற்கைக்கோள், சோவியத் ஒன்றியத்தின் இண்டர்காஸ்மோஸ் உதவியுடன் விண்ணில் செலுத்தப்பட்டது. அதன் பின்னர் விண்வெளித் துறையில் இஸ்ரோ நிகழ்த்தியிருக்கும் சாதனைகள் அளப்பரியவை.
- 114 விண்கல செலுத்து முயற்சிகள், 84 ஏவுகல செலுத்து முயற்சிகள், 13 மாணவர் செயற்கைக்கோள்கள், 2 மறுநுழைவுப் பணிகள், 34 நாடுகளின் 342 வெளிநாட்டுச் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துதல் உள்ளிட்ட பல விண்வெளித் திட்டங்களை இஸ்ரோ வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது.
- புவி கண்காணிப்பு, தகவல் தொடர்பு, வானிலை முன்னறிவிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை ஆய்வுகள், விவசாயம் ஆகியவற்றுக்கு இஸ்ரோவின் செயற்கைக்கோள் திட்டங்கள் பெரிதும் வலுசேர்த்து வருகின்றன. நீர் பாதுகாப்புக்கும் பேரிடர் மேலாண்மைக்கும் இஸ்ரோவின் தரவுகள் பேருதவியாக இருக்கின்றன.
- குறைந்த செலவில் இஸ்ரோவால் நிலவுக்கு ஏவப்பட்ட சந்திரயானும், செவ்வாய்க் கோளுக்கு அனுப்பப்பட்ட மங்கள்யானும் இன்று விண்வெளி அறிவியலில் இந்தியாவை அமெரிக்க, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்கு இணையாக உயர்த்தியுள்ளன.

## உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

- உச்ச நீதிமன்றத்தின் 49 வது தலைமை நீதிபதியாக உதய் உமேஷ் லலித் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

- வழக்கறிஞராக இருந்து, உச்ச நீதிமன்ற நீதிபதியாக நேரடியாக நியமிக்கப்பட்ட ஒருவர், தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்ற 2-வது நபர் என்ற பெருமை இவருக்குக் கிடைத்துள்ளது. இதற்கு முன், இதுபோன்ற பெருமையை முதல்முறையாகப் பெற்றவர் நீதிபதி எஸ்.எம்.சிக்ரி. இவர் 1971 இல் உச்ச நீதிமன்றத்தின் 13வது தலைமை நீதிபதியாகப் பதவியேற்றார்.

**யு.யு.லலித்தின்**

- மகாராஷ்டிர மாநிலம் சோலாப் பூரில் 1957 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் தேதி யு.யு.லலித் பிறந்தார். மும்பை உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் கிளையில் கூடுதல் நீதிபதியாகப் பதவி வகித்த யு.ஆர்.லலித்தின் மகனாக யு.யு.லலித், 1983 ஆம் ஆண்டு வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டார்.
- மும்பை உயர்நீதிமன்றத்தில் 1983 முதல் 1985 வரை வழக்கறிஞராகப் பணியாற்றினார். பின்னர், டெல்லிக்குச் சென்ற அவர், 2004 இல் உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞரானார்.

**சலுகை**

- ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, நீதிபதிகளுக்கு பாதுகாவலர்கள், உதவியாளர், ஓட்டுநர்களை நியமித்துக் கொள்ள மாதந்தோறும் பணம் வழங்கப்பட்டு வந்தது. தலைமை நீதிபதிகளுக்கு மாதம் ரூ.70 ஆயிரமும், நீதிபதிகளுக்கு ரூ.39 ஆயிரமும் வழங்கப்பட்டன. இனி, இது வழங்கப்படாது.
- ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு, ஓய்வு நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு தனிப்பட்ட பாதுகாப்புக்காவலருடன், அவரது வீட்டிற்கும் 24 மணி நேர பாதுகாப்பு வழங்கப்படும். இந்த சலுகை மற்ற நீதிபதிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.
- ஓய்வுக்குப் பின் தலைமை நீதிபதிக்கு 6 மாதத்திற்கு டெல்லியில் வாடகை இல்லாத டைப் 8 ரக குடியிருப்புகள் வழங்கப்படும். இவை முன்னாள் ஒன்றிய அமைச்சராக இருந்த எம் பி. க்களுக்கு வழங்கப்படுபவை.
- ஓய்வுபெற்ற நீதிபதிகள் தனது வீட்டிற்கு ஒரு பணியாளர், டிரைவர், உதவியாளரை வாழ்நாள் முழுக்க நியமித்துக் கொள்ளும்.
- வீட்டுக்கு இலவச தொலைப்பேசி, தொலைப்பேசிகட்டணம், செல்போன், பிராண்ட்பேண்ட், டேட்டாகார்டு ஆகியவை மாதத்துக்கு ரூ.4, 200க்கு மிகாமல் பயன்டுத்தலாம். அனைத்து செலவுகளையும் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளும்.

## ‘ஒரே நாடு ஒரே உரம் திட்டம்’

- பிரதமரின் உரங்கள் மானியத் திட்டத்தின் கீழ் (பிரமரின் பாரதிய ஜனூர்வாரக் பரியோஜனா - பிஎம்பிஜேபி) ‘ஒரே நாடு ஒரே உரம்’ திட்டம்.
- உரப் பைகளின் மீது மூன்றில் ஒரு பங்கு இடத்தில், சம்பந்தப்பட்ட தயாரிப்பு நிறுவனத்தின் வணிகப் பெயர், இலச்சினை, பொருள் தொடர்பான இதர விவரக் குறிப்புகள் இடம்பெற அனுமதிக்கப்படும். மூன்றில் 2 பங்கு இடத்தில்பாரத் என்ற வணிகப் பெயரும், பிஎம்பிஜேபி திட்டத்தின் இலச்சினையும் இடம்பெற வேண்டும்.
- யூரியாவின் சில்லறை விற்பனை விலையில் 80 சதவீதம்,டை அமோனியம் பாஸ்பேட்டுக்கு 65 சதவீதம், என் பிகே உரத்துக்கு 55 சதவீதம், எம்ஓபி உரத்துக்கு 31 சதவீதம் மத்திய அரசு மானியம் வழங்குகிறது.
- பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட போதிலும், கடந்த 1985 –ஆம் ஆண்டின் உரங்கள் கட்டுப்பாட்டு உத்தரவின் படி அவற்றின் உள்ளடக்கங்கள் ஒன்றுதான். பல்வேறு வணிகப்பெயர்களில் தயாரிக்கப்படும் உரங்கள், பல்வேறு மாநிலங்களில் சந்தைப்படுத்தப்படுகின்றன. உரங்களை மாநிலங்களுக்கு இடையே எடுத்துச் செல்வதன் காரணமாக தேவையற்ற தாமதம் ஏற்படுவதுடன்,அவற்றுக்கான போக்குவரத்து மானிய சுமையும் அரசுக்கு அதிகரிக்கிறது.
- உரங்கள் விநியோகத்தில் ஏற்படும் தடைகளைக் களைந்து, உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையிலான ஆரோக்கியமற்ற போட்டியை தடுப்பதே ஒரே நாடு, ஒரே உரம் திட்டத்தின் நோக்கமாகும்.
- ஒரே பெயரில் மானிய உரங்களை விற்பனை செய்யும்போது, உர தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது அருகிலுள்ள இடங்களிலேயே விற்பனை செய்ய வழி ஏற்படும். தேவையற்ற போக்குவரத்து தடுக்கப்படும். விவசாயிகளுக்கு ஏற்படும் குழப்பம் தீரும்.

## கல்விக்கொள்கை அடிப்படையில் தர ஆய்வு

- பல்கலைக்கழக மானியக் குழு, அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (ஏஐசிடிஇ) ஆகியவற்றால் ‘நாக்’, என்.ஐ.ஆர்.எஃப்,. என்.பி.ஏ. ஆகிய தரமதிப்பீட்டு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.
- அவை இந்தியாவிலுள்ள கல்லூரிகள் ஆகியவற்றுக்கான தரமதிப்பீடு, தரவரிசை ஆகியவற்றை வழங்குகின்றன.

- இந்தியாவில் உள்ள 1,043 பல்கலைக்கழகங்களில் 446 பல்கலைக்கழகங்கள் தனியார் நடத்துபவை.
- 'நாக்' தரச்சான்று, என்.பி.ஏ. தரமதிப்பீட்டில் 69% தனியார் பல்கலைக்கழகங்கள் 'நாக்', என்.ஐ.ஆர்.எஃப்., என்.பி.ஏ. ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தரவரிசை நிலைகளைப் பெற்றிருக்கின்றன.
- மத்தியக் கல்வி அமைச்சகம், 2017 மார்ச் 20 அன்று வெளியிட்ட நெறிமுறையின்படி, உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஏ$^{++}$, ஏ$^{+}$, பி$^{++}$, பி$^{+}$, பி, சி ஆகிய தர மதிப்பீடுகளில் 'நாக்' தரச்சான்று வழங்கப்பட்டு வருகிறது.

**சுய ஆய்வு அறிக்கை**

- கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் தரச்சான்று பெறுவதற்கு சுய ஆய்வு அறிக்கை ஒன்றினை 'நாக்' இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
- அதில் ஏழு அளவுருக்களின் அடிப்படையில் அமைந்த கேள்விகளுக்குப் புள்ளிவிவரங்களுடன் பதிலளிக்க வேண்டும்.
- அவற்றுக்கு வழங்கப்படும் மதிப்பெண்கள் அடிப்படையில் ஏ$^{++}$ முதல் சி வரை தரச்சான்று வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழகத்திலுள்ள உயர்கல்வி நிறுவனங்கள் தகுதி அடிப்படையில் இந்தத் தரவரிசைகளில் இந்தியஅளவில் மற்ற மாநிலங்களை விஞ்சி நிற்கின்றன.
- தற்போது தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஒன்பது பல்கலைக் கழகங்களுக்கு ஏ$^{++}$, ஐந்து பல்கலைகழகங்களுக்கு ஏ$^{+}$, 16 பல்கலைக் கழகங்களுக்கு ஏ தரவரிசை நிலை 'நாக்'-ஆல் வழங்கப்பட்டுள்ளது.
- தேசியக் கல்விக் கொள்கையின் வழிகாட்டுதலின்படி கற்பித்தல், ஆராய்ச்சி-மாணவர் சேர்க்கை, ஆசிரியர்கள் நியமனம் - பிறவற்றைச் செயல்படுத்தாமல் இருந்தால், அந்தக் கேள்விகளுக்குச் சுய ஆய்வு அறிக்கையில் 'இல்லை' என்றே குறிப்பிட வேண்டியிருக்கும்.
- அதனால் பெறப்படுகின்ற மதிப்பெண்கள் பூஜ்யமாக இருக்கும்.
- மொத்தம் 1,000 மதிப்பெண்கள் தேசியக் கல்விக் கொள்கை 2020 இன் வழிமுறைகளைச் செயல்படுத்தாமலிருக்கும்போது ஏ$^{++}$, ஏ$^{+}$, ஏ பெறும் வாய்ப்புகள் அரிதாகிவிடும்.
- தற்போது உள்ள ஏ$^{++}$, ஏ$^{+}$, ஏ பெற்று இந்தியாவிலேயே உயர்ந்த தரவரிசையில் இருக்கும்.

## நாடு முழுவதும் ஒரே மாதிரியான சர்வதேச ஓட்டுநர் உரிமம்

- நாடு முழுவதும் ஒரே மாதிரியான சர்வதேச ஓட்டுநர் உரிமத்தை (ஐடிபி) அளிக்க மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- 1949-ஆம் ஆண்டு ஜெனீவா சர்வதேச சாலைப் போக்குவரத்து ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது.
- இந்த மாநாட்டில் பங்கேற்ற நாடுகளுடனான பரஸ்பர ஒப்பந்த அடிப்படையில் சர்வதேச ஓட்டுநர் உரிமம் (பெர்மிட்) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- தற்போது, நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் அளிக்கப்படும் சர்வதேச ஓட்டுநர் உரிமத்தின் வடிவம், அளவு, முறை, வண்ணம் ஆகியவற்றில் வேறுபாடுகள் இருந்து வருகின்றன.
- இதன் காரணமாக, இந்த சர்வதேச ஓட்டுநர் உரிமத்தைப் பயன்படுத்துவதில் வெளிநாடு செல்லும் இந்திய வாகன ஓட்டிகள் சிரமங்களைச் சந்தித்து வந்தனர்.
- இப்போது இந்த திருத்தத்தின் மூலம், சர்வதேச ஓட்டுநர் உரிமத்துக்கான வடிவம், அளவு, நிறம் போன்றவை இந்தியா முழுவதும் ஒரே மாதிரி வழங்கப்படும் என மத்திய சாலைப் போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது.
- 1989-ஆம் ஆண்டு, மத்திய மோட்டார் வாகன விதிகளின்படி, பல்வேறு வாகன வகைகளின் கீழும் இந்த உரிமத்தை (ஐடிபி) வழங்கும் வசதி சேர்க்கப்பட்டுள்ளது.
- இதன்படி நாடு முழுவதும் ஒரே மாதிரியாகவும், வெளிநாடுகளில் இடர்ப்பாடுகள் ஏற்படாதவாறும் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஐடிபி-யைப் பெற முடியும் என மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ஓய்வுபெறும் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு கூடுதல் சலுகைகள்

**உதவியாளர்கள்**

- வாகன ஓட்டுநர், வீட்டு உதவியாளர் உள்ளிட்ட சேவைகள் நீதிபதிகளின் வாழ்நாள் வரை நீட்டிப்பு. (முன்பு ஓராண்டு வரை சேவைகள் வழங்கப்பட்டன).
- வாழ்நாள் முழுவதும் அலுவலக உதவியாளர் சேவைகள்
- உதவியாளர்களுக்கான செலவுகள் அனைத்தும் உச்சநீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படும்.

**பாதுகாப்பு வசதி**

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஓய்வுபெறும் நாளில் இருந்து 5 ஆண்டுகள் வரை இருப்பிடத்தில் 24 மணி நேர பாதுகாப்பு வசதி; தனிப்பட்ட பாதுகாவலர் வசதி
- அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு நீதிபதிக்கு பணியின்போதே உயர்நிலை பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டிருந்தால், பணி ஓய்வுக்குப் பிறகும் அத்தகைய வசதிகள் தொடர்ந்து வழங்கப்படும்.
- நீதிபதிகளுக்கு 3 ஆண்டுகள் வரை 24 மணி நேர பாதுகாப்பு வசதிகள்; தனிப்பட்ட பாதுகாவலர் வசதி

**வாடகை இல்லா வீடு**

- ஓய்வுபெறும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தில்லியில் 6 மாதங்கள் வரை வாடகை இல்லா வீடு (7–ஆம் தரத்திலானது).
- தலைமை நீதிபதிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தங்குமிடத்துக்குக் கூடுதலாக இந்த வசதி. இந்த வசதி, முன்பு அமைச்சராக இருந்த தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருக்கே வழங்கப்பட்டு வருகிறது.
- ஓய்வு பெற்ற தலைமை நீதிபதிக்கும் தற்போது இந்த வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

**தொலைபேசி, இணையசேவை**

- இலவச தொலைபேசி வசதி
- தொலைபேசி, கைப்பேசி, இணையசேவை ஆகியவற்றுக்கான கட்டணமாக மாதந்தோறும் அதிகபட்சமாக ரூ.4,200 (வரிகள் நீங்கலாக).

**விமான நிலைய ஓய்வறைகள்**

- நீதிபதிகள் விமானத்தில் பயணம் மேற்கொண்டால், விமான நிலையத்தில் உள்ள வசதிமிக்க ஓய்வறைகளை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வசதி.
- உயர்நீதிமன்றங்களின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதிகளுக்கும் இந்த வசதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

## சுதந்திரத்தை வலுப்படுத்திய நீதித்துறை

- இந்திய சமூகத்தின் ஆன்மாவாக இருந்துவரும் அரசமைப்பை முக்கியமான சில வழக்குகளின் தீர்ப்புகள் உயர்த்திப்பிடித்து நம்பிக்கை தந்துவருகின்றன

**அப்படிப்பட்ட சில தீர்ப்புகள் :**

**அரசமைப்பே பெரிது**

- ஒரு மடத்தின் சொத்துரிமை பற்றிய பிரச்சனையில் அரசின் தலையீடு கூடாது என்று கோரி, கேசவானந்த பாரதி என்பவர் 1972இல் மனு தாக்கல் செய்திருந்தார்.
- 13 நீதிபதிகள் கொண்ட அமர்வு இவ்வழக்கை விசாரித்த பிறகு ஏழுக்கு ஆறு என்கிற எண்ணிக்கையில் தீர்ப்பளித்தனர்.
- பெரும்பான்மையானவர்கள், அரசமைப்பின் அடிப்படைக் கட்டுமானத்தை மீறக்கூடிய வகையில் கொண்டுவரக்கூடிய எவ்விதமான சீர்திருத்தத்தையும் ரத்து செய்யும் அதிகாரம் அரசமைப்பின் கீழ் உள்ளதாக வலியுறுத்தினார்.
- அரசமைப்புக்கு முன், மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்றமும் பெரிதல்ல என்கிற தீர்ப்பு இன்றுவரை நம் நாட்டைக் காத்துவருகிறது.

**வங்கிகளின் நாட்டுடைமையாக்கம்**

- தனியாரின் உடைமைகளை, நிறுவனங்களை அரசு பொதுப் பயன்பாட்டுக்குக் கையகப்படுத்தி, அதற்குரிய இழப்பீட்டைத் தரலாம் என்று உச்சநீதிமன்றம் ஆர்.சி.கூப்பர் எதிர் மத்திய அரசு வழக்கில் தீர்ப்பளித்தது.
- இது பெரும்பான்மையோரின் நலனை அரசு பிரதிபலிக்கும் என்கிற கருத்தின் அடிப்படையில் அமைந்தது.
- எனவே, தனிநபரோ நிறுவனங்களோ தங்களின் சொத்துரிமையை அடிப்படை உரிமையாகக் கோர முடியாது என்பதைக் கூறியது.
- இதன் காரணமாகவே நம் நாட்டில் வங்கிகள், நிறுவனங்கள் பலவும் நாட்டுடைமையாக்கப்பட்டன.

**தனிநபர் வாழ்வுரிமை**

- மேனகா காந்தி வழக்கின் தீர்ப்பு மூலமாக வாழ்வுரிமையின் எல்லை விரிவாக்கப்பட்டது.
- சட்டத்துக்குப் புறம்பாகத் தனிநபர் சுதந்திரத்தை அரசு பறிக்குமானால், அதை அரசமைப்பின் அடிப்படை உரிமையான வாழ்வுரிமையைப் பறிக்கும் செயலாகக் கருதியது.

- சட்டத்துக்கு உட்பட்ட வகையில், சட்டப்பூர்வமான வழிமுறைகளின்றி தனிநபர் சுதந்திரத்தைத் தடைசெய்ய இயலாது என்று தீர்ப்பளித்தது.
- இந்தத் தீர்ப்பு பலரது தனிப்பட்ட வாழ்க்கையில் அரசியல் பணிகளில் தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் முக்கியப் பங்கு வகித்தது.

**சிறைவாசிகளும் மனிதர்களே**

- எந்தவொரு விசாரணை சிறைவாசியும் சட்டப்படி 60 அல்லது 90 நாட்கள் சிறைப்படுத்தப்பட்ட பின் நீதிமன்றங்கள் சட்டப்படி பிணை வழங்க வேண்டும் என்பதையும், பிணையில் வெளிவரக்கூடிய உரிமை இருப்பதை நீதிமன்ற நடுவர்கள் சிறைவாசிகளிடம் தெரியப்படுத்த வேண்டும் என்பதையும் 1979 இல் வெளியான தீர்ப்பு (ஹுசைனரா காட்டூன் வழக்கு) எடுத்துரைத்தது.
- குறிப்பாக, எல்லா குடிநபர்களுக்கும் சட்ட உதவி கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்றும், சட்ட உதவி பெறுவது அடிப்படை உரிமை எனவும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சிறைக்குள் இருப்பவர்கள் எல்லாரும் குற்றவாளிகளும் அல்லர்; வெளியே சுதந்திரமாக உலவும் அனைவரும் குற்றம் செய்யாதவர்களும் அல்லர் என்பதையும் இது உணர்த்தியது.

**கைது செய்ய 11 கட்டளைகள்**

- கரடுதட்டிப்போன காவல் துறையில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான அறைகூவலாக டி.கே.பாசு வழக்கின் (1997) தீர்ப்பு இருந்தது.
- ஒருவரைக் கைது செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய 11 கட்டளைகளை இந்தியாவில் காவல்துறைக்கான புதிய சட்டத்தை உச்சநீதிமன்றம் அறிவித்தது.
- கைது செய்யப்படும் நபர்களுக்கு அதற்கான காரணத்தையும் அவர்களுக்கு உள்ள உரிமைகளையும் தெரிவிப்பது காவல்துறையின் கடமை எனக் கூறியது.
- காவல்துறை அந்த 11 கட்டளைகளை மீறினால், நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு ஆளாக நேரிடும் எனவும் காவல்துறையினருக்குத் தண்டனை உண்டு எனவும் கூறியது.
- குற்றம் சுமத்தப்பட்ட சாதாரண மக்களுக்காக அமைப்புகளும் வழக்கறிஞர்களும் போராடுவதற்கும் நியாயம் பெறுவதற்கும் மிகப்பெரிய சாதனமாக இத்தீர்ப்பு செயல்படுகிறது.

**கல்வி அடிப்படை உரிமை**

- சுதந்திர இந்தியாவில் அடிப்படைக் கல்வி பலருக்கும் கிட்டாத சூழ்நிலையே தொடர்ந்தது. ஐந்து நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு 1992 இல் ஆரம்பக் கல்வி என்பது அடிப்படை உரிமை எனவும், இந்திய அரசமைப்பில் சொல்லப்படாவிட்டாலும் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளையும் ஒருங்கே வாசிக்கும்போது 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி என்பது ஒவ்வொரு குழந்தைகளின் அடிப்படை உரிமை எனக் கல்வியை உத்தரவாதப்படுத்தியது.

**தனிப்பட்ட தகவல்களை வெளியிடக்கூடாது.**

- தனிநபர் ஒவ்வொருவரும் தம்மைப் பற்றிய தகவல்களைப் பொதுவெளியில் பகிராமல் தனியுரிமையாகப் பாதுகாத்துக் கொள்வதை Right to Privacy என்கிற அடிப்படை உரிமையாகக் கே.எஸ்.புட்டசாமி வழக்கில் உச்சநீதிமன்றம் நிறுவியது.
- குறிப்பாக, தன்னடையாள அட்டையைத் தரும் பணியை இந்திய அரசு மேற்கொண்ட பின் தங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி எண், கைரேகை, கருவிழிப் பதிவு போன் மிக அந்தரங்கமான தகவல்களை அரசு பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று அளிக்கப்பட்ட தீர்ப்பு.
- ஆதார் விவரங்களை அரசு பயன்படுத்துவது குறித்து மிக முக்கியமான தீர்ப்பாக அமைந்தது.
- குறிப்பாகத் தனியுரிமை என்பது அடிப்படை உரிமை, அதைப் பாதுகாப்பதே அரசமைப்பின் உள்ளார்ந்த கருதுகோள், அரசால் அந்த உரிமைகளை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்று கேள்வி எழுப்பியது; தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மிகப்பெரிய எல்லையைத் தொட்டிருக்கும் சூழலில் இது மிகவும் அத்தியாவசியமான தீர்ப்பு

**பெண்களின் பணியிடப் பாதுகாப்பு**

- இந்திய வரலாற்றிலேயே முதன்முதலாகப் பெண்ணின் வாழ்வுரிமை என்பது கண்ணியமான வாழ்க்கை உரிமை என்கிற விளக்கத்துக் நீட்சியாக விளங்கியது. இந்தத் தீர்ப்பு (விசாகா வழக்கு).
- கல்வியால் பெண்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலை பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை முடக்கும்விதமான பாலியல் வன்முறை என்பது பெண்ணின் அடிப்படை உரிமைகளை மீறுகிற செயல் என்பதை அங்கீகரித்து, பெண்கள் மீதான அனைத்து வகைப்பாகுபாடுகளையும் களைவதற்கான சீடா ஒப்பந்தத்தின் அடிப்படைக் கருத்துகளைக் கொண்டு அளிக்கப்பட்ட தீர்ப்பு இது.

- பணியிடங்களில் பாலியல் சீண்டல் அல்லது பாலியல் துன்புறுத்தல் ஆகியவை அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று அது விளக்கம் அளித்தது.
- பெண்களுக்கான வேலை வெளியை, சமூகத்தின் ஒரு முக்கியமான பகுதியைப் பெண்களுக்குக் பாதுகாப்பானதாக ஆக்கிய தீர்ப்பு, பெண்ணுரிமைப் பாதையில் மிகப்பெரிய மைல்கல்.

**பால்புதுமையினருக்கான விடியல்**

- பால்புதுமையரின் மன்னிப்பைப் பெற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம் என்று நவ்ஜோத் சிங்ஜோஹர் வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதி கூறியது.
- இச்சமூகத்தின் மனசாட்சியின் குரல், காலம்காலமாகப் பாவித்து, அவர்களை மனிதர்களுக்கும் கீழாக நடத்தும் பார்வையை இச்சமூகம் கொண்டிருந்தது.
- இந்நிலையில் மனித உரிமைப் பார்வையில் அவர்களின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்த இந்தத் தீர்ப்பு உதவியது.
- அவர்களுடைய தனியுரிமை, வாழ்வுரிமை, ஆகியவற்றை அரசு தனது கொள்கை மாற்றத்தால் உத்தரவாதப்படுத்த வேண்டும் என்று இந்தத் தீர்ப்பு கூறியது.
- ஆண், பெண் இருபாலர் தவிர பிறர் மக்களே அல்ல என்கிற குறுகிய பார்வையை மாற்றி, அந்தப் பார்வையை விரிவுபடுத்திச் சமூகத்தின், அரசின் கண்களைத் திறந்த ஒரு மிகப்பெரிய அடிவைப்பு இந்தத் தீர்ப்பு.

**சமூக சுதந்திரம்**

- அரசியல் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் சமூக அளவிலான சுதந்திரத்தைப் பெறுவதற்கு இந்தியாவில் நீதித்துறை மிகப்பெரிய அளவில் பங்காற்றியிருக்கிறது.

## 14 சதுப்பு நிலங்களுக்கு ராம்சர் அங்கீகாரம்

- தெற்காசிய நாடுகளிலேயே 64 ராம்சர் சதுப்புநில அங்கீகாரம் கொண்ட நாடு இந்தியாதான்.
- அதில் 14 இடங்கள் தமிழ்நாட்டில்தான் இருப்பது நமக்கு பெருமை.
- சதுப்பு நிலம் என்பது கடல்மட்டத்திலிருந்து 6 மீட்டருக்கும் குறைவான ஆழம் கொண்ட, பல்வேறு வகையிலான சுற்றுச்சூழல் தன்மைகளைக் கொண்ட நீர்நிலைகளாகும்.
- இந்த நீர்நிலைகளில் கடல்நீரும், நன்னீரும் சேர்ந்திருக்கும்.
- நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்க, நிலத்தடி நீரின் உப்புத்தன்மையை குறைக்க, வெள்ளத்தை கட்டுப்படுத்த, கரியமில வாயு மற்றும் மீத்தேனை உறிஞ்ச, நீர் மகரந்தச் சேர்க்கை நடைபெற, மண் மற்றும் நீரிலுள்ள ஊட்டச்சத்துக்களை சமன்படுத்த, மண் அரிப்பை தடுக்க, மீன் இனப்பெருக்கத்தை அதிகரிக்க, புயலின் தாக்கத்தை மட்டுப்படுத்த சதுப்பு நிலங்கள் முக்கியமானது என்றார்.
- இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களுக்கு உரிய அங்கீகாரம், உலகில் 1971ஆம் ஆண்டுதான் கிடைத்தது.
- புயல், வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்து உலகைக் காப்பாற்றுவதில் அரணாக, கேடயமாக விளங்கும் சதுப்பு நிலங்கள் அழிந்துவருவது வேதனை.
- இதை தடுக்க 2-2-1971 அன்று ஈரான் நாட்டிலுள்ள ராம்சர் நகரில், முதல் சர்வதேச மாநாடு நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டில் சதுப்பு நிலங்களை பாதுகாக்க உருவாக்கப்பட்ட பல்வேறு திட்டங்களுடன், ராம்சர் பிரகடனம் வெளியிடப்பட்டது.
- இதில், கையெழுத்திட்ட 172 நாடுகளுள் இந்தியாவும் ஒன்று.
- இந்த பிரகடனத்தின்படி, சிறந்த முறையில் பராமரிக்கப்படும் சதுப்பு நிலங்களுக்கு ராம்சர் அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது.
- இந்த அங்கீகாரத்தை பெறுவது, சர்வதேச அளவில் மிகப்பெரிய கவுரவத்தை கொடுப்பதுடன், சீரமைப்பு பணிகளுக்கும் சர்வதேச நிதி உதவி கிடைக்கும்.
- இந்த அங்கீகாரத்தை பெறும் சதுப்பு நிலங்களில், சுற்றுச்சூழலை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறதா?, சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறதா? என்பது சர்வதேச அளவில் கண்காணிக்கப்படும்.
- இதில் தொய்வு ஏற்பட்டால், அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.
- 20 ஆண்டுகளுக்கு முன்பு கோடியக்கரை வன உயிரின மற்றும் பறவைகள் சரணாலயம்தான், கடைசியாக அங்கீகாரம் பெற்றது.
- செங்கல்பட்டு மாவட்டம் கரிக்கிலி பறவைகள் சரணாலயம், சென்னையிலுள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலம், கடலூர் மாவட்டத்திலுள்ள பிச்சாவரம் அலையாத்தி காடுகள் ஆகியவற்றுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

- செங்கல்பட்டு மாவட்டம் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், திருநெல்வேலி மாவட்டம் கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரத்தை ஒட்டிய மன்னார் வளைகுடா, கடல்சார் உயிர் கோளகக் காப்பகம், சித்திரங்குடி பறவைகள் சரணாலயம், கஞ்சிரான்குளம் பறவைகள் சரணாலயம், கன்னியாகுமரி மாவட்டம் வேம்பனூர் பறவைகள் சரணாலயம், சுசீந்திரம் தேரூர் சதுப்பு நில வளாகம், ஈரோடு மாவட்டம் வெள்ளோடு பறவைகள் சரணாலயம், திருவாரூர் மாவட்டம் உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம், வடுவூர் பறவைகள் சரணாலயம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரேயொரு சரணாலயத்துக்கு மட்டும் கிடைத்த இந்த அங்கீகாரம், இப்போது ஓராண்டில் 13 சரணாலயங்களுக்கு கிடைத்திருப்பது பாராட்டுக்குரியது.

## 10% இட ஒதுக்கீடு விவகாரம்

- பொருளாதாரத்தில் நலிவடைந்த பொதுப் பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் நோக்கில் 103-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு 2019-ஆம் ஆண்டில் இயற்றியது. அதன் காரணமாக ஒட்டுமொத்த இடஒதுக்கீடு 50 சதவீதத்தைக் கடந்தது.
- சமூக கல்வி அடிப்படையில் மட்டுமே இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

**மதமாற்ற எஸ்.சி.பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழக்கு**

- ஹிந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்களாக இருக்கும் எஸ்.சி. பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருவது போல, கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய எஸ்.சி. பிரிவினருக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

## கல்வித் திட்டங்கள்

- தமிழக அரசு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளியில் படித்த அனைத்து மாணவிகளுக்கும் உயர்கல்வி உதவித் தொகையாக மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்.
- சிறந்த பள்ளிகள் - தில்லியை போலவே, தமிழக அரசும் மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் அதிநவீன 26 தகைசால் பள்ளிகளை அறிமுகப்படுத்துகிறது.
- தொலைநோக்குப் பார்வையுடன் வலுவான அடித்தளத்தையும் கற்றலின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்டதாக இந்தப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.
- தமிழகத்தில் ஏற்கெனவே கடந்த 2021 அக்டோபர் மாதம் தொழில்முறை படிப்புகளை வழங்கும் 10 ஸ்டெம் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை, மருத்துவம்) மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- மேலும் 15 இடங்களில் ரூ.125 கோடியில் இந்த மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன.

## பெண் கல்வியை அதிகரிப்பதற்கான திட்டங்கள்

- பெண்கள் கல்வி கற்பது பெரும்பாதகச் செயலாக கருதப்பட்ட காலகட்டத்தில் சாவித்திரிபாய் புலே, தான் தொடங்கிய பள்ளியில் பல்வேறு எதிர்ப்புகளை மீறிப் பெண்களுக்குக் கல்வி புகட்டினார்.
- கோத்தாரி கல்விக் குழு (1964), தேசிய கல்விக் கொள்கைகள் (1968, 1986), ஆகியவை பெண்கல்வியை அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளித்தன.
- கல்வியின் மூலமாகவே பெண்களை பாலின ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்து அவர்களுக்கு அதிகாரமளிக்க முடியும் என்ற புரிதலை இந்தக் கல்விக் கொள்கைகள் வெளிப்படுத்தின.
- 'பாலிகா சம்ருத்தி யோஜனா' (1997) என்னும் திட்டம் மூலம் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு முதல் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு ஆண்டும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.
- 2001-இல் 6 முதல் 14 வயதிலான அனைவருக்கும் கல்வியை அடிப்படை உரிமையாக்கும் வகையில் அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 86 ஆம் திருத்தம் இந்தியக் கல்வியில் ஒரு மைல்கல் தருணம்.
- இந்த அரசமைப்பு திருத்தத்துக்கு பிறகான நடவடிக்கைகள் மூலம் பெண்கள் கல்வி பெறுவது மென்மேலும் அதிகரித்தது.
- அனைவருக்கும் கல்வி அளிக்கும் இலக்கை அடைவதற்காக தொடங்கப்பட்ட அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் (சர்வ சிக்ஷா அபியான்) கீழ் பெண் கல்விக்கென்றே பிரத்யேகமான பல திட்டங்கள் தொடங்கப்பட்டன.
- பெண்களின் தொடக்கக் கல்விக்கான தேசிய திட்டம் (2003) சமூக, பொருளாதார ரீதியாக பிற்பட்ட பெண் குழந்தைகளுக்கு 1-8 ஆம் வகுப்புவரை கல்வி அளிப்பதற்கானது.
- 'கஸ்தூர்பா காந்தி பால விகாஸ் வித்யாலயா' திட்டத்தின்கீழ் (2004) பெண் குழந்தைகளுக்கான உண்டு உறைவிடத் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டன.
- இந்தப் பள்ளிகளில் பட்டியலின் பழங்குடிப் பெண் குழந்தைகளுக்கு 75 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.
- 1951 இல் இந்தியப் பெண்களின் எழுத்தறிவு விகிதம் 8.9% ஆக இருந்தது. இது 2011 இல் 65 சதவீதமாக உயர்ந்து, இப்போது 70%ஐக் கடந்துள்ளது.

- ஆனால் ஆண்களின் எழுத்தறிவு விகிதத்துக்கும் பெண்களுக்கான எழுத்தறிவு விகிதத்துக்கும் இடையே 10 சதவீதத்துக்கு மேல் இடைவெளி உள்ளது.
- பெண் கல்விக்கான திட்டங்களும் அரசு நடவடிக்கைகளும் மென்மேலும் தேவைப்படுவதை இது உணர்த்துகிறது.

## பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 15.3 சதவீதம் உயர்வு

- நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக கடந்த 2021-ம் ஆண்டில் 4.28 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 2020-ம் ஆண்டைக் காட்டிலும் 15.3% அதிகம் ஆகும்.
- கரோனா பேரிடர் காரணமாக பொது முடக்கம் அமலில் இருந்த 2020-ல் 3.71 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.
- 2021-ல் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பெண்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகளில், கணவரால் அல்லது உறவினர்களால் கொடுமைப்படுத்தப்பட்ட வழக்குகளின் பங்கு 31.8% ஆக (1.36 லட்சம் வழக்குகள்) இருந்தது.
- கணவர் அல்லது நெருங்கிய சொந்தங்களால் பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் பங்கு 2020-ல் 30 சதவீதம் ஆகவும், 2019-ல் 30.9% ஆகவும் இருந்தன.

**பாலியல் வன்கொடுமை**

- 2021-ல் பெண்களை குறிவைத்து தாக்கப்பட்டது தொடர்பான வழக்குகளின் பங்கு 20.8% ஆகவும், அதைத் தொடர்ந்து கடத்தல் (17.6%), பாலியல் வன்முறை (7.4%) ஆகிய பிரிவுகளில் பதியப்பட்ட வழக்குகளும் கணிசமான அளவில் இருந்தன.

**குழந்தைகளுக்கு எதிரான குற்றம்**

- 2021-ல் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 1.49 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- 2021-ல் பதிவான குழந்தைகளுக்கு எதிரான மொத்த குற்ற வழக்குகளின் எண்ணிக்கையில் கடத்தல் தொடர்பாக பதிவான வழக்குகளின் பங்கு 45% ஆகவும், பாலியல் தொடர்பான வழக்குகளின் பங்கு 38.1 சதவீதம் ஆகவும் இருந்தன.

## இந்தியத் தலைமை நீதிபதி

**தலைமை நீதிபதி யார்?**

- இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, உச்சநீதிமன்ற நீதிபதிகளில் தலையாயவர் என்பது மட்டுமல்லாமல், இந்திய நீதிமன்றக் கட்டமைப்பின் மிக உயர்ந்த பொறுப்பில் இருப்பவரும் ஆவார். எனவே, அவர் இந்தியாவின் தலைமை நீதிபதி (CJI) என்றும் அழைக்கப்படுகிறார்.

**தலைமை நீதிபதியாவதற்கான தகுதிகள்**

- அரசமைப்புச் சட்டக் கூறு 124, உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு தகுதிகளை வரையறுத்துள்ளது.
- 65 வயதுக்கு உட்பட்ட இந்திய குடிநபராக இருக்க வேண்டும்.
- ஐந்து ஆண்டுகளுக்கு உயர் நீதிமன்ற நீதிபதியாகவோ, பத்தாண்டுகளுக்கு உயர்நீதிமன்ற வழக்கறிஞராகவோ பணியாற்றியிருக்க வேண்டும்.
- அல்லது இந்தியக் குடியரசுத் தலைவரால் சிறந்த சட்டவியலாளர் (Distinguished Jurist) என்று கருதப்படுகிறவராக இருக்க வேண்டும்.
- உச்சநீதிமன்ற நீதிபதியின் பணி ஓய்வு பெறும் வயது 65. இவை அனைத்தும் தலைமை நீதிபதிக்கும் பொருந்தும்.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளில் இருப்பதிலேயே அதிக காலம் உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றியவர் எவரோ அவரே அதன் தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுவார்.
- ஒரே அளவு பணி மூப்புக்கொண்ட இரண்டு நீதிபதிகளுக்கிடையே போட்டி வந்தால், முதலில் உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டவர் யார், உயர்நீதிமன்ற நீதிபதியாக யார் அதிக அனுபவம் கொண்டவர் என்பது போன்ற அளவுகோல்கள் கணக்கில் கொள்ளப்படும்.

**தலைமை நீதிபதி எப்படி நியமிக்கப்படுகிறார்?**

- பணிஓய்வு வயதை எட்டிவிட்ட தலைமை நீதிபதி ஓய்வுபெறும் தேதிக்கு ஒரு மாதம் முன்னர், அவரிடமிருந்து அடுத்த தலைமை நீதிபதிக்கான பரிந்துரையை மத்திய சட்ட அமைச்சர் கோருவார்.
- பணிமூப்பு வரிசையில் தனக்கு அடுத்த நிலையில் இருக்கும் நீதிபதியின் தகுதி குறித்து தலைமை நீதிபதிக்குச் சந்தேகம் இருந்தால், அவர் கொலீஜியத்துடன் கலந்தாலோசிப்பார்.
- ஓய்வு பெறப்போகும் தலைமை நீதிபதி தன் பரிந்துரைக் கடிதத்தின் மூலம் அடுத்த தலைமை நீதிபதி யார் என்பதை மத்திய சட்ட அமைச்சருக்கு அதிகாரப்பூர்வமாகத் தெரிவிப்பார்.
- சட்ட அமைச்சர், தலைமை நீதிபதியின் பரிந்துரையைப் பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்புவார். பிரதமரின் ஆலோசனையின் அடிப்படையில், இந்தியக் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதிக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைப்பார்.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளையும் தலைமை நீதிபதியையும் நியமிக்கும் அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கிறது.

- ஆனால், அவர் பிரதமரின் ஆலோசனையின் அடிப்படையிலேயே இந்த நியமனத்தை மேற்கொள்ள முடியும்.
- மேலும், யார் அடுத்த தலைமை நீதிபதி என்று தேர்ந்தெடுப்பதில் மத்திய அரசுக்குத் தலைமை நீதிபதியின் பரிந்துரையைக் கேட்டுப் பெறும் அதிகாரம்தான் உள்ளது.
- தலைமை நீதிபதிக்கும் அவர் உட்பட ஐந்து மூத்த நீதிபதிகளை உள்ளடக்கிய கொலீஜியத்துக்குமே இந்த விஷயத்தில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளது.
- நடப்புத் தலைமை நீதிபதி அளிக்கும் பரிந்துரையை மறுபரிசீலனை செய்யக்கோரும் அதிகாரம்கூட மத்திய அரசுக்கு இல்லை.

**பணிமூப்புக் கொள்கையும் விதிவிலக்குகளும் விமர்சனங்களும்**

- இந்திய உச்சநீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி ஹெச்.ஜே.கனியா இறந்த பிறகு, அப்போது பம்பாய் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த ஜே.சுக்லாவை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்க அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு முயன்றார்.
- உச்சநீதிமன்ற நீதிபதியாக அதிக பணி மூப்பு கொண்டவரான சாஸ்திரி .ஜே தான் அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும், இல்லையென்றால் பதவி விலகிவிடுவோம் என்றும் உச்சநீதிமன்றத்தின் ஆறு நீதிபதிகள் போர்க்கொடி உயர்த்தினர். இதையடுத்து, சாஸ்திரி இந்திய உச்சநீதிமன்றத்தின் இரண்டாவது தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.
- இதற்குப் பிறகே, பணி மூப்பு அடிப்படையில் தலைமை நீதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது.
- இந்தப் பணி மூப்புக்கொள்கை இதுவரை மூன்று முறை மீறப்பட்டுள்ளது. நீதிபதி கஜேந்திர கட்கர் (1964), ஏ.என்.ரே (1973), எம்.ஹெச்.பெக் (1973) ஆகியோர் அவர்களைவிட அதிகப் பணி மூப்புகொண்ட நீதிபதிகளை மீறி, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்கள்.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க கொலீஜியம் நடைமுறை பின்பற்றப்படுவதற்கு வழிவகுத்த வழக்கில் (1993) உச்சநீதிமன்றத்தின் அதிகப் பணி மூப்பு கொண்ட நீதிபதியே தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட வளர்ந்த நாடுகளில் தலைமை நீதிபதி நியமனத்தில் பணி மூப்புக் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதில்லை.
- பணிமூப்புக் கொள்கையின் காரணமாகத் தலைமை நீதிபதியாகும் ஒருவரின் பதவிக்காலம் பெரும்பாலும் மிகவும் குறைவாக இருப்பதும் அதற்கு எதிரான வாதமாக முன்வைக்கப்படுகிறது.

**தலைமை நீதிபதியின் பணிகள், அதிகாரங்கள்**

- உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சமமானவர்களில் முதலாமவர் (First among Equals) என்றழைக்கப்படுகிறார்.
- நீதிபதியாக அவருக்கும் உச்சநீதிமன்றத்தின் பிற நீதிபதிகளுக்கும் சமமான அதிகாரங்கள்தாம். ஆனால், உச்சநீதிமன்றத்தையும் அதன் செயல்பாடுகளையும் நிர்வகிப்பதிலும் அதன் மூலமாக நீதியை நிலைநாட்டுவதிலும் தலைமை நீதிபதிக்குக் கூடுதல் அதிகாரங்களும் பொறுப்புகளும் உள்ளன.
- வழக்கின் தன்மையைப் பொறுத்து எந்த வழக்கை, எந்த அமர்வு விசாரிக்க வேண்டும் என்பதையும் ஒரு வழக்கை விசாரிக்கும் அமர்வு எத்தனை நீதிபதிகள் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதையும் தலைமை நீதிபதிதான் தீர்மானிக்கிறார்.
- அரசமைப்பு சார்ந்த சட்டச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான அரசமைப்பு அமர்வைத் தலைமை நீதிபதிதான் நியமிக்க முடியும்.
- தலைமை நீதிபதி உட்பட பணிமூப்பில் முதல் ஐந்து இடங்களில் இருக்கும் நீதிபதிகளை உள்ளடக்கிய கொலீஜியம்தான் உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் இறுதி முடிவெடுக்கிறது.
- நீதிமன்ற அதிகாரிகளை நியமித்தல், உச்சநீதிமன்றத்தின் செயல்பாடு, மேற்பார்வை தொடர்பான விவகாரங்களையும் தலைமை நீதிபதியே கவனித்துக்கொள்வார்.

**தலைமை நீதிபதியின் பதவி நீக்கம்**

- நிரூபிக்கப்பட்ட தீய நடத்தை அல்லது திறனின்மை ஆகிய இரண்டு காரணங்களின் கீழ் உச்சநீதிமன்ற நீதிபதி பதவி நீக்கம் செய்யப்பட முடியும். இதற்கான அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ஆனால், அதற்கு முன் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் பதவிநீக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். இது தலைமை நீதிபதிக்கும் பொருந்தும். வரலாற்றில் இதுவரை ஒரு உச்சநீதிமன்ற நீதிபதிகூடப் பதவிநீக்கம் செய்யப்பட்டதில்லை.

## அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்குமா?

- இந்தியா சுதந்திரம் அடைந்தபின் நடந்த முதல் நாடாளுமன்றத் தேர்தல் 25.10.1951 முதல் 21.02.1952 வரை 68 கட்டங்களாக நடைபெற்றது.
- இத்தேர்தலில் எந்தப் பாகுபாடுமின்றி 21 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

- சுதந்திரத்திற்குப் பிறகு 17 நாடாளுமன்றத் தேர்தல்களைச் சந்தித்துள்ள இந்தியாவில், அரசியலில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை.
- 1917 இல் ஆங்கிலேய ஆட்சிக்காலத்திலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கக் கோரி 'உமன்ஸ் இந்தியன் அசோசியேஷன்' குரல் எழுப்பியது.
- 1919இல் கொண்டுவரப்பட்ட மான்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் அம்சம் இடம்பெற்றிருந்தது.
- 1920 இல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

**அரசியலுக்கு ஆண்கள்; ஆரத்திக்குப் பெண்கள்!**

- இந்தியாவின் மக்கள் தொகையில் பெண்கள் 49% .
- ஒவ்வொரு தேர்தலின்போதும் பெண் உறுப்பினர் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. 2019இல் நடைபெற்ற 17 ஆவது மக்களவைத் தேர்தலில் 78 பெண் எம்பிக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்; இது வெறும் 11% தான். பெண்களைப் பெருமளவில் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய வரலாறு தமிழகத்துக்குக் கிடையாது.
- ஒடிசாவில் 33% ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

**33% இடஒதுக்கீடு**

- ஒவ்வொரு தேர்தலின்போதும் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு என்ற பேச்சு தீவிரமாக எழுவதுண்டு. ஆணும் பெண்ணும் சமம் என்று அரசமைப்பு சொல்லும் நாட்டில் உள்ஒதுக்கீடாக நாடாளுமன்றத்தில் தொடங்கி எல்லா அமைப்புகளிலும் இடஒதுக்கீடு வேண்டும் எனப் பெண்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடுக்கின்றனர்.
- 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 173 தொகுதிகளில் போட்டியிட்ட திமுக 12 பெண்களுக்கும், 171 தொகுதிகளில் போட்டியிட்ட அதிமுக 15 பெண்களுக்கும் வாய்ப்பளித்தன. பெண் வேட்பாளர்களுக்கு வாக்காளர்களிடம் எதிர்பார்த்த ஆதரவு கிடைப்பதில்லை என்றே காரணம் கூறப்படுகிறது.

**உள்ளாட்சி அமைப்புகளின் நிலை**

- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான ஒதுக்கீடு 30% இல் இருந்து 50% ஆக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.
- என்றபோதும், இதனால் எந்தப் பலனும் இல்லை என்பதே உண்மை. அரசியல் கட்சிகள் இல்லாத கிராமங்களே இன்று இல்லை.
- நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தலின்போது மட்டும் கிராமங்களில் கவனம் செலுத்திய அரசியல் கட்சிகள், இன்று உள்ளாட்சியிலும் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டன.
- அரசியல் சார்ந்த குடும்பங்களிலிருந்து தேர்தல் களம் காணும் பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட முடிவதில்லை.
- கணவர், உறவினர்களின் உத்தரவுக்குக் காத்திருக்கும் பொம்மைகளாகவே செயல்பட வேண்டியுள்ளது. இந்நிலை மாற ஆண் அரசியல்வாதிகளைச் சார்ந்திருக்காத பெண்கள் தேர்தலில் களமிறங்க வேண்டும்.

## தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை

**கொலை குற்றங்கள் : உ.பி. முதலிடம்**

**தற்கொலை சம்பவங்கள் : தமிழகம் 2–வது இடம்**

மொத்த கொலைகள் : 29,272

| மாநிலங்கள் | கொலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| உத்தர பிரதேசம் | 3,717 |
| பீகார் | 2,799 |
| மகாராஷ்டிரம் | 2,330 |
| மத்திய பிரதேசம் | 2,034 |
| மேற்கு வங்கம் | 1,884 |

**குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்**

| மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மத்திய பிரதேசம் | 19,173 |
| மகாராஷ்டிரம் | 17,261 |
| உத்தரப்பிரதேசம் | 16,838 |
| மேற்கு வங்கம் | 9,523 |
| ஒடிஸா | 7,899 |

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள்**

| மாநிலங்கள் | குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உத்தரபிரதேசம் | 56,083 |
| ராஜஸ்தான் | 40,738 |
| மகாராஷ்டிரம் | 39,526 |
| மேற்கு வங்கம் | 35,884 |
| ஒடிஸா | 31,352 |

**பாலியல் வன்கொடுமை**

| மாநிலங்கள் | பாதிக்கப்பட்டவர்கள் |
|---|---|
| உத்தரபிரதேசம் | 48 |
| அஸ்ஸாம் | 47 |
| மத்தியப்பிரதேசம் | 38 |
| மகாராஷ்டிரம் | 23 |
| ஜார்க்கண்ட் | 22 |

**தற்கொலை சம்பவங்கள்**

| மாநிலங்கள் | தற்கொலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மகாராஷ்டிரம் | 22,207 |
| தமிழ்நாடு | 18,925 |
| மத்தியப்பிரதேசம் | 14,965 |
| மேற்கு வங்கம் | 13,500 |
| கர்நாடகம் | 13,056 |

**பழங்குடிகளுக்கு எதிரான குற்றங்கள்**

- 2021-ஆம் ஆண்டு நாட்டில் பழங்குடிகளுக்கு எதிராக மொத்தம் 8,802 குற்றங்கள் பதிவாகியுள்ளன.
- அதிகபட்சமாக மத்திய பிரதேசத்தில் 2,627 குற்றங்கள், ராஜஸ்தானில் 2,121 குற்றங்கள் நடைபெற்றுள்ளன.

**விபத்துகள்**

| மாநிலங்கள் | பலியானோர் எண்ணிக்கை |
|---|---|
| உத்தரப்பிரதேசம் | 24,711 |
| தமிழ்நாடு | 16,685 |
| மகாராஷ்டிரம் | 16,446 |
| மத்தியப்பிரதேசம் | 13,755 |
| ராஜஸ்தான் | 10,698 |

**பட்டியலினத்தவருக்கு எதிரான குற்றங்கள்**

- கடந்த ஆண்டு நாட்டில் பட்டியலினத்தவருக்கு எதிராக 50,900 குற்றங்கள் நடைபெற்றுள்ளன.
- இதில் அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 13,146 குற்றங்கள் நடைபெற்றுள்ளன.

**கள்ளநோட்டு வழக்குகள்**

| மாநிலங்கள் | வழக்குகள் எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு வங்கம் | 82 |
| அஸ்ஸாம் | 75 |
| தமிழ்நாடு | 62 |
| மகாராஷ்டிரம் | 55 |
| ராஜஸ்தான் | 54 |

**முதியவர்களுக்கு எதிரான குற்றங்கள்**

- 2021-ஆம் ஆண்டு நாட்டில் முதியவர்களுக்கு எதிராக 26,110 குற்றங்கள் நடைபெற்றுள்ளன.
- இதில் குற்றங்களின் எண்ணிக்கை அடிப்படையில் மகாராஷ்டிரமும் (6,190), குற்றங்களின் விகிதாசார அடிப்படையில் தில்லியும் (101.7%) முதலிடத்தில் உள்ளன.

# 02 மாநில நிகழ்வுகள்

## காவல்துறை

### டிஜிபி முதல் காவலர்

- 1856-ல் அன்றைய மதராஸ் மாநகரில்தான் முதன்முதலில் காவல்துறை வரலாறு தொடங்கியது.
- 1859-ல் மதராஸ் மாகாண காவல்துறை சட்டம் இயற்றப்பட்டது.
- நாட்டிலேயே முதன்முதலாக மகளிர் காவலர்களை நியமித்தவர் கருணாநிதி கடந்த 1973-ம் ஆண்டு உதவி ஆய்வாளர் உஷா தலைமையில் ஒரு தலைமைக் காவலர் மற்றும் 20 காவலர்கள் சென்னை மாநகரில் பணியமர்த்தப்பட்டனர்.
- ஆயிரம் விளக்கு – முதல் அனைத்து மளிர் காவல்நிலையம் 1992
- இன்று காவல்துறையில் ஒரு டிஜிபி, 2 கூடுதல் டிஜிபிக்கள், 14 ஐஜிக்கள் உள்ளிட்ட பெண் உயர் அதிகாரிகளும், 20 ஆயிரம் பெண் காவலர்களும் களப்பணியாற்றி வருகின்றனர்.
- பெண்களுக்கு காவல்துறையில் அதிகாரம் அளித்ததில் முன்னோடி மாநிலம் தமிழகம்.
- நாட்டிலேயே குடியரசுத் தலைவரின் கொடியை பெறும் 5-வது மாநிலம் தமிழகமாகும்.
- உத்தரப்பிரதேசம், டெல்லி, மகாராஷ்டிரா, ஜம்மு காஷ்மீர் மாநிலங்களைத் தொடர்ந்து தமிழகம் இந்த பெருமையை பெற்றுள்ளது.

## கற்றல் இடைநிலை நிற்றல்

- இக்குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு வரையிலான கல்வி கட்டணம் மற்றும் விடுதி கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்கும்.
- அரசு காப்பகம் அல்லது விடுதிகளில் இல்லாது, உறவினர், பாதுகாவலரின் ஆதரவில் வளரும்.

### பராமரிப்பு செலவு

- குழந்தைகளின் பராமரிப்பு செலவாக, மாதந்தோறும் தலா ரூ.3 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்.
- தனியார் பள்ளிகளிலும் பயிலும் கொரோனா தொற்றால் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு.

## சட்டத்துறையிலும் சமூக நீதி

- சமூக நீதியை நடைமுறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்ட சட்டங்களும் விதிமுறைகளும் கல்வி, வேலைவாய்ப்பு, பதவி உயர்வு ஆகியவற்றில் எந்த அளவுக்குச் செயலாக்கம் பெறுகின்றன என்பதைக் கண்காணிப்பதற்காக சுப.வீரபாண்டியனைத் தலைவராகக் கொண்ட சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவை தமிழ்நாடு அரசு நியமித்தது.
- தமிழ்நாடு அரசின் சட்ட அலுவலர்கள் நியமனங்களில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடும் பெண்களுக்கான இடஒதுக்கீடும் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்றும் இந்நியமனங்களில் இடஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டும்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வில் நியமிக்கப்பட்டுள்ள 201 சட்ட அலுவலர்களில், பட்டியலின மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் 6 பேர் மட்டுமே.
- அவர்களும் கூடுதல் அரசு வழக்கறிஞர்களாகவும் அரசு வழக்கறிஞர்களாகவும்தான் (உரிமையியல்) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.
- கூடுதல் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள அரசு வழக்கறிஞர்களில் ஒருவர்கூடப் பட்டியலினத்தவரோ பழங்குடியினரோ பெண்களோ இல்லை.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அவ்வப்போது பல கட்டத் தேர்வுகளின் வழியாக அரசு உதவி வழக்கறிஞர்களைத் தேர்ந்தெடுக்கையில், இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது.
- ஆனால், ஆட்சிகள் மாறும்போது, ஆளுங்கட்சியின் விருப்பத்துக்கேற்பத் தற்காலிகமாக நியமிக்கப்படும் அரசுத் தரப்பு வழக்கறிஞர்களில் இடஒதுக்கீடு என்பது கேள்விக்குறியாகவே இன்னும் தொடர்கிறது.

## கருவேலமரங்கள்

- தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் தமிழகத்தில் பரவியுள்ள சீமைக் கருவேல மரங்களை அழிக்க வேண்டும் என ஆணை.

**சீமைக் கருவேல பாதிப்புகள்**

- இந்த மரங்கள் வெகு விரைவாக அடுத்தடுத்த நிலப்பரப்புகளை ஆக்கிரமித்து வளரும் தன்மை கொண்டவை.
- பரவும் இடங்களின் நீர் வளத்தையும் மண் வளத்தையும் இது தீவிரமாகப் பாதிக்கும். நில வளம் பெரிய மாற்றத்தைச் சந்திக்கும்.
- இயல்பான பிற தாவரங்கள் அந்தப் பகுதிகளில் வளர முடியாமல் போய்விடும்.
- தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த மரங்கள் நீர்நிலைகள், வயல்வெளிகள், புறம்போக்கு இடங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன.
- இந்த மரங்களின் பரவலால் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்துக்கு வரும் அயல்நாட்டுப் பறவை இனங்கள் கூடுகட்ட முடியாதமல் தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
- தமிழகத்தின் வறண்ட பகுதியான ராமநாதபுரம், சிவகங்கை பகுதிகளில் விவசாய நிலத்தில் உள்ள இந்த மரங்களை, நல்ல விலைக்கு அப்பகுதி விவசாயிகள் விற்பதும் தெரியவந்துள்ளது.
- வேளாண் நிலங்களில் இந்த மரங்கள் அழிக்கப்படும் போது, எலி-அணில் வகை சார்ந்த கொறிக்கும் விலங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- இவை அனைத்தையும் மனதில் கொண்டு, சீமைக் கருவேல மரங்களை அழிக்கும் வரைவு அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும்.

## புதிய விமான நிலையம்

- தமிழகத்துக்கு வரும் முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.
- மாநிலத்தின் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து சேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், சென்னையில் புதிய விமான நிலையம் அமைக்கத் தகுதியான இடத்தைத் தேர்வு செய்யும் பணியை அரசு நிறுவனமான டிட்கோ மூலம் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது.
- புதிய விமான நிலையம் அமைக்க நான்கு பொருத்தமான இடங்கள் தேர்வு செய்ப்பட்டன. அவற்றில் இந்திய விமான நிலைய ஆணையம் ஆய்வு செய்து பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- ரூ.20 ஆயிரம் கோடி திட்ட மதிப்பு : புதிதாக அமையவுள்ள விமான நிலையம் 10 கோடி பயணிகளை கையாளக்கூடிய திறன் உடையதாக அமைக்கப்படவுள்ளது.
- இரண்டு ஓடுதளங்கள், விமான நிலைய முனையங்கள், இணைப்புப் பாதைகள், விமானங்கள் நிறுத்துமிடம், சரக்கு கையாளும் முனையம், விமான பராமரிப்பு வசதிகள் மற்றும் தேவையான இதர உள்கட்டமைப்பு வசதிகளுடன் இந்த புதிய விமான நிலையம் அமைக்கப்பட உள்ளது.
- புதிய விமான நிலையங்கள் அமைப்பதற்கான வழிகாட்டுதல்களை மத்திய அரசானது 2008-ஆம் ஆண்டில் வெளியிட்டது.
- அதன்படி, தேர்வு செய்யப்பட்ட இடத்துக்கான ஒப்புதல் பெற மத்திய அரசின் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழுள்ள குழுவிடம் விரைவில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்.
- இட அனுமதி ஒப்புதல் பெற்றபிறகு, திட்டத்துக்கான நிலம் கையகப்படுத்தப்படும்.

## பரந்தூர் விமான நிலையம்

- 24 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1998-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்போதைய விமானப் போக்குவரத்து மந்திரி ஆனந்தகுமார், சென்னையில் ஒரு புதிய சர்வதேச விமான நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை இருக்கிறது.

- தமிழக அரசு இந்த 2-வது விமான நிலையத்தை படாளம், திருப்போரூர், பன்னூர், பரந்தூர் ஆகிய இடங்களில் ஒரு இடத்தில் தொடங்கலாம் என்று தெரிவித்தது.
- பரந்தூர் மற்றும் பன்னூர் ஆகிய இடங்களில், ஒரு இடத்தில் தொடங்கலாம் என்று சாத்தியக்கூறு ஆய்வுக்கு பிறகு முடிவு செய்யப்பட்டது.
- வி.கே.சிங் இந்த 2-வது விமான நிலையம் பரந்தூரில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்.
- இந்த புதிய விமான நிலையம் சென்னையிலிருந்து 69 கிலோ மீட்டர் தூரத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைய இருக்கிறது.
- இரு ஓடுதளங்களுடன் ஆண்டுக்கு 10 கோடி பயணிகளை கையாளக்கூடிய திறன் படைத்தது. இப்போதைய திட்டமதிப்பு ரூ.20 ஆயிரம் கோடியாகும்.

## திராவிட மாடல் ஆட்சி

- எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கக்கூடிய வகையில், உன்னத இலக்கோடு திராவிட மாடல் ஆட்சி
- சிறு, குறு தொழிலும் மிகப்பெரிய முன்னேற்றத்தை கண்டுவருகிறது.
- தொழில்புரிய, எளிதான மாநிலங்களின் பட்டியலில் 3வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது.
- டான்சிட் திட்டத்தின் கீழ் அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 31 புத்தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசின் புத்தொழில் ஆதாரநிதி வழங்கப்பட்டுள்ளது.
- இந்த 31 நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் பெண் தொழில் முனைவோர்களால் நடத்தப்படுகிறது.
- இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழில் காப்பகங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருவதாக தரவுகள் சொல்கிறது.
- ஸ்டார்ட் அப் தமிழ்நாடு பிராண்ட் லேப், புதிய தொழில் நிறுவனங்களை அறிமுகப்படுத்த லான்ச் பேட் நிகழ்வுகள் நடத்தப்படும்.
- ஊரக பகுதியில் உள்ள பெண்கள் தொழில் முனைவில் ஈடுபட தமிழ் ஏஞ்சல்ஸ் நெட்வொர்க் தளம் அமைக்கப்படும்.
- சென்னை நந்தனத்தில் புத்தொழில் மையம் 3 மாதத்தில் செயல்பட தொடங்கும்.

## சிறப்பு பேரிடர் மேலாண்மை திட்டம்

- தமிழகத்தில் வீடு, வணிகம், தொழிற்சாலை, விவசாயம், குடிசை போன்ற பிரிவுகளின் கீழ் மொத்தமாக 3.24 கோடிக்கும் அதிகமான மின் இணைப்புகள் உள்ளன.
- 2008ம் ஆண்டு வீசிய 'நிஷா' புயல்
- 2010ம் ஆண்டு வீசிய 'ஜல்' புயல்
- 2011ம் ஆண்டு வீசிய 'தானே' புயல்
- 2012ம் ஆண்டு வீசிய 'நீலம்' புயல்
- 2016ம் ஆண்டு வீசிய 'வர்தா' புயல்
- 2017ம் ஆண்டு வீசிய 'ஒக்கி' புயல்
- 2018ம் ஆண்டு வீசிய 'கஜா' புயல்
- 2020ம் ஆண்டு வீசிய 'நிவர்' புயல்களால் கடுமையான சேதம் ஏற்பட்டது.

## சீரான மின் விநியோகம்

- சீரான மின் விநியோகம் வழங்கும் வகையில் சிறப்பு பேரிடர் மேலாண்மை திட்டம் ஒன்றை தமிழக மின்சார வாரியம் வகுத்துள்ளது.

**பொதுமக்கள் செய்ய வேண்டியது**

- ஐஎஸ்ஐ முத்திரை கொண்ட மின்னணு சாதனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மின்சார வேலைகளை சான்றளிக்கப்பட்ட மின் ஊழியர்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும்.
- மின் வயர்களில் பழுது ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசோதித்து, பழுதடைந்து இருந்தால் உடனடியாக புதுப்பிக்க வேண்டும்.

- வீட்டில் உள்ள சிறுவர்கள் மேல்நிலை மின்சார வயர்களுக்கு அருகில் விளையாடும்போது அவர்களை கண்காணிக்க வேண்டும்.
- மற்ற வேலைகளுக்காக நிலத்தை தோண்டும் போது கவனமாக இருக்க வேண்டும்.
- வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளை மின்கம்பங்களில் அல்லது அதற்கு அருகில் வைக்கக்கூடாது.

**பொதுமக்கள் செய்யக்கூடாதது**

- மின்சார வயர்களில் ஈரமான ஆடைகளை தொங்கவிடக்கூடாது.
- மின்கம்பங்கள், மின்கம்பிகள், வேலிகள் போன்றவற்றின் அருகில் செல்லவோ, தொடவோ கூடாது.
- மின்கம்பிகளுக்கு அருகில் கட்டடங்கள் கட்டக்கூடாது. அப்படி கட்ட வேண்டும் என்றால் வாரியத்தை அணுக வேண்டும்.
- மின்கம்பிகளுக்கு அடியில் அதிக உயரத்தில் இருக்கும் வாகனங்கள், ஏணிகள் போன்றவற்றை எடுத்துச் செல்ல வேண்டாம்.
- உயிரிழப்பை ஏற்படுத்தும் மின்வேலிகளை அமைக்கக்கூடாது. அப்படி செய்தால் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

## தமிழக உயர்கல்வி நிறுவனங்கள்

- நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை பட்டியலை மத்திய கல்வி அமைச்சகத்தின் என்ஐஆர்எஃப் அமைப்பு கடந்த 2016 முதல் வெளியிட்டு வருகிறது.
- இந்த ஆண்டுக்கான தரவரிசை பட்டியல் கடந்த ஜுலை 15-ம் தேதி வெளியிடப்பட்டது. இதில், அதிகபட்சமாக தமிழகம் 163 கல்வி நிறுவனங்களுடன் முதலிடம் பிடித்தது.
- நாட்டிலேயே தமிழகத்தில்தான் உயர் கல்வி பயிலும் மாணவர்கள் 53 சதவீதம் பேர் உள்ளனர்.
- உயர் கல்வியின் தரத்திலும் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.
- தேசிய அளவிலான 1,000 இடங்களில் 163 உயர்கல்வி நிறுவனங்கள் தமிழகத்தை சேர்ந்தவை.

## விமான பயிற்சி மையம்

- தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் தோணுகால் வருவாய் கிராமத்தில் இருந்து முடுக்குமீண்டான்பட்டி கிராமம் வரை மொட்டைமலை அடிவாரத்தில் மிகப்பழமையான விமான ஓடுதளம் உள்ளது. இதை சீரமைத்து விமான பயிற்சி மையம் உருவாக்கப்படும்.

**இலக்குமி ஆலை (லட்சுமி மில்ஸ்)**

- கோவையை தலைமையிடமாகக் கொண்ட இலக்குமி ஆலை நிர்வாகம், அதன் கிளையை 1941-ம் ஆண்டு கோவில்பட்டியில் நிறுவியது.
- எளிதாக விமானத்தில் வந்து செல்ல, அரசிடம் அனுமதி பெற்று ஒப்பந்த அடிப்படையில் மொட்டைமலை அடிவாரத்தில் சுமார் 2 கி.மீ தூரம் வரை 70 அடி அகலத்தில் விமான ஓடுதளம் அமைத்தனர்.
- இந்த விமான ஓடுதளம் 1978-ம் ஆண்டு முதல் செயல்பட்டது.
- செஸ்னா வகை சிறிய ரக விமானத்தில் அவர்கள் வந்து சென்றுள்ளனர்.
- 1993-ம் ஆண்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா கோவில்பட்டிக்கு வந்த போது, இந்த ஓடுதளத்தில்தான் அவரது விமானம் இறங்கியது.
- 1998-ம் ஆண்டு வரை ஓடுதளம் பயன்பாட்டில் இருந்துள்ளது. அதன்பின்னர் அரசிடம் ஒப்படைத்து விட்டதாக கூறப்படுகிறது.
- தற்போது இந்த ஓடுதளம் சேதமடைந்த நிலையில் உள்ளது. விவசாயிகள் இதனை களமாக பயன்படுத்தி வருகின்றனர்.
- இந்நிலையில், தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சி கழகம் (சிட்கோ) மூலம் கோவில்பட்டியில் உள்ள விமான ஓடுதளத்தில் விமான பயிற்சி மையம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- கோவில்பட்டியில் உள்ள விமான ஓடுதளத்துக்கு ஏற்கனவே VO26 என்ற ஜிபிஎஸ் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- கோவில்பட்டி விமான ஓடுதளம் சீரமைக்கப்பட்டு, விமான பயிற்சி மையம் நிறுவப்படும் என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார். இது தென்மாவட்ட மாணவர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதம்.
- ஓடுதளம் செயல்பாட்டுக்கு வந்துவிட்டால் சிறிய ரக விமானங்கள் அடிக்கடி இங்கு வந்து செல்லும். இதனால் கோவில்பட்டி நகரம் தொழில் வளர்ச்சியில் அடுத்தகட்டத்தை எட்டும்.

## தகைசால் தமிழர் விருது

- தமிழ்நாட்டுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் 'தகைசால் தமிழர்' என்ற பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்.
- முதல் விருது, சுதந்திரப் போராட்ட வீரரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடிகளில் ஒருவருமான, நூற்றாண்டு கண்ட என்.சங்கரய்யாவுக்கு கடந்த ஆண்டு சுதந்திர தினவிழாவன்று வழங்கப்பட்டது.
- 2022-ம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருதுக்கு இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்.
- தனது இளம் வயதை சிறைச்சாலையிலும், தலைமறைவு வாழ்க்கையிலும் கழித்தார். ஏழை மக்களுக்காக குரல் கொடுத்து, சமூக நல்லிணக்கத்தையும் சுற்றுச்சூழலையும் காக்க தொடர்ந்து பாடுபட்டு வருகிறார்.
- தன்னலமற்ற சிறந்த அரசியல்வாதியாகவும் செயல்பட்டு, தமிழ்நாட்டுக்கும், தமிழ் இனத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு அளித்த தமிழராக விளங்குகிறார்.
- அதனால், 2022-ம் ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருதுக்கு ஆர்.நல்லகண்ணுவை தேர்வுக் குழுவினர் ஒருமனதாக தேர்ந்தெடுத்துள்ளனர்.
- இவ்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.நல்லகண்ணுவுக்கு ரூ.10 லட்சத்துக்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழை வரும் 15-ம் தேதி நடைபெறும் சுதந்திர தின விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்க இருக்கிறார்.

## தமிழக பெண் விஞ்ஞானி கலைச்செல்வி

- அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கவுன்சில் (சிஎஸ்ஐஆர்) தலைமை இயக்குநராக தமிழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி கலைச்செல்வி நியமிக்கப்பட்டுள்ளார்.
- நாடு முழுவதும் 4,500 விஞ்ஞானிகள் பணியாற்றும் 38 ஆராய்ச்சி மையங்களுக்கு தலைமை தாங்கும் முதல் பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- காரைக்குடியில் உள்ள சிஎஸ்ஐஆர் - மத்திய எலக்ட்ரோ கெமிக்கல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராக இருப்பவர் ந.கலைச்செல்வி.
- லித்தியம் அயர்ன் பேட்டரி துறையில் இவர் பல பங்களிப்புகளை அளித்துள்ளார்.
- திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே உள்ள விக்கிரமசிங்கபுரத்தைச் சேர்ந்தவர் கலைச்செல்வி.
- இந்தியாவின் உயர் அறிவியல் ஆய்வு நிறுவனமான சிஎஸ்ஐஆர்-ன் முதல் பெண் தலைமை இயக்குநர் என்ற சிறப்பை தமிழகத்தைச் சேர்ந்த கலைச்செல்வி அடைந்திருக்கிறார்.

## மின்சார சட்ட திருத்த மசோதா - தமிழகத்திற்கு பாதிப்பு

- தமிழகத்தில் விவசாயிகளுக்கான இலவச மின்சாரம், விசைத்தறி தொழிலாளர்களுக்கு 500 யூனிட்கள், குடிசை தொழிலுக்கு 100 யூனிட்கள், வீடுகளுக்கு முதல் 100 யூனிட்கள் இலவச திட்டம் ரத்து செய்யப்படலாம்.
- கமர்ஷியல் கட்டணங்கள் வேறு, குடியிருப்புகளுக்கான கட்டணங்கள் வேறு என்ற நிலை மாறி அனைவருக்கும் ஒரு யூனிட்டுக்கு ஒரே விலை என்ற நிலை ஏற்படும்.
- மாநில மின்வாரியங்களுக்கு பதிலாக ஒன்றிய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, இந்த ஆணையத்தின் அனுமதி பெற்று மின் விநியோகத்தில் நேரடியாக தனியார் நிறுவனம் ஈடுபடலாம்.
- ஒன்றிய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடமே உச்சபட்ச அதிகாரம் இருக்கும் என்பதால், மின்துறையில் மாநிலங்களின் உரிமை பறிக்கப்படும்.
- மின்விநியோகம் இனி தனியாரிடம் ஒப்படைக்கப்படும். செல்போன் நிறுவனங்களை தேர்வு செய்வதுபோல், நுகர்வோர்கள் இனி மின் விநியோகம் செய்யும் நிறுவனங்களை தேர்வு செய்யலாம்.
- மாநிலத்தின் மின் உற்பத்தியை மற்ற மாநிலங்களுக்கு பங்கிட்டு தர மாநிலத்தின் ஒப்புதல் தேவையில்லை. இதனால், தமிழகத்தில் மின் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.
- மின்சாரத்தை அண்டை நாடுகளுக்கு விற்பனை செய்யலாம்.
- மானியங்கள் கணக்கில் கொள்ளாமல் கட்டணம் நிர்ணயிக்கப்படும். இவ்வாறு நடந்தால் மானியம் பறிபோகும்.
- இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் ஆண்டுத்தோறும் மின்சார கட்டணம் திருத்தப்படும்.

- குறைந்தபட்சம் மற்றும் அதிகபட்ச கட்டணம் அறிவிக்கப்படுவது கட்டாயமாகும்.
- எந்தவித வரம்புமின்றி மின்கட்டணம் உயர்த்தப்படும்.
- தனியார் நிறுவனங்கள் கொள்ளை லாபம் ஈட்ட கூடும்.
- மின்சார பகிர்மான நிறுவனங்களுக்கு இந்த மசோதா கூடுதல் அதிகாரத்தை வழங்கும்.
- மின் உற்பத்திக்கும், விற்பனைக்கும் இணையாக கட்டணம் உருவாக்கப்படும்.
- ஒரே இடத்தில் பல தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படும். இதனால், அரசு மின்பகிர்மானங்கள் பாதிக்கப்படும்.
- அடித்தட்டு, நடுத்தர மக்கள், சிறு,குறு நடுத்தரத் தொழில்நடத்துவோர், விவசாயிகள் என அனைவரும் பாதிக்கப்படுவார்கள்.
- நாடு முழுவதும் மின்துறையில் பணியாற்றும் 27 லட்சம் பொறியாளர்கள் மற்றும் லட்சக்கணக்கான ஊழியர்கள் வேலை பறிபோகும் அபாயம் உள்ளது.
- மானியத்தை குறிப்பிட்ட நபர்களின் வங்கிக் கணக்குகளுக்கே செலுத்திக் கொள்ளலாம் என்பதால், விவசாயிகள் பாதிக்கக்கூடும்.

## மூவலூர் ராமாமிர்தம் உயர்கல்வி உறுதி திட்டம்

### மாதந்தோறும் 7-ம் தேதி ரூ.1,000 நிதியுதவி

- உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 நிதியுதவி அளிக்கும் மூவலூர் ராமாமிர்தம் உயர்கல்வி உறுதி திட்டம்.
- ஏழை குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் கல்வியை ஊக்குவிக்கவும், திருமண உதவிக்காகவும் கடந்த 1989-ம் ஆண்டு மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியால் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது.
- அதன்பின், அதிமுக ஆட்சியில் திருமண நிதியுதவியுடன் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தை மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்தார்.
- தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கை மிகக் குறைவாக இருப்பதை கருத்தில் கொண்டு, மூவலூர் ராமாமிர்தம் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், உயர் கல்வி உறுதித்திட்டம் என மாற்றி அமைக்கப்படுகிறது.

**செயல்பாடு**

- இதன் மூலம் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை பயின்று, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டம், பட்டயம், தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும்வரை மாதம் ரூ.1,000 அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.
- இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம்.
- இத்திட்டம் மூலம் 6 லட்சம் மாணவிகள் ஆண்டுதோறும் பயன்பெற வாய்ப்புள்ளது.
- இந்த புதிய முயற்சிக்காக ரூ.698 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**வழிகாட்டுதல்கள்**

- 6 முதல் 12-ம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து, தமிழக அரசு, மத்திய அரசு மற்றும் யுஜிசியால் அங்கீகரிக்கப்பட்ட தமிழகத்தில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு இத்திட்டம் பொருந்தும்.
- மேலும், அரசுப் பள்ளியில் 6 முதல் 10-ம் வகுப்பு வரை முடித்து டிப்ளமோ, ஐடிஐ படிப்புகளில் சேர்ந்தவர்களுக்கு இத்திட்டம் பொருந்தும்.
- வேறு மாநிலத்தில் இருந்து எல்லை தாண்டி வந்து படிக்கும் மாணவிகளுக்கு இத்திட்டம் பொருந்தாது.
- உயர்கல்வி என்றால் கலை மற்றும் அறிவியல், தொழிற்கல்வி படிப்புகள், பாராமெடிக்கல், பட்டயம், ஐடிஐ, ஒருங்கிணைந்த முதுநிலைக் கல்வி என அனைத்துக்கும் பொருந்தும்.
- முதல் உயர்கல்விக்கு மட்டுமே உதவித்தொகை பெற முடியும். ஒருங்கிணைந்த முதுநிலைக் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு முதல் 3 ஆண்டுகளுக்கு மட்டுமே உதவித்தொகை வழங்கப்படும்.
- தொகைநிலைக் கல்வியிலும், அங்கீகரிக்கப்படாத கல்வி நிறுவனங்களிலும் உயர்கல்வி பயின்றால் இத்திட்டத்தில் பயன்பெற இயலாது.

- பாலிடெக்னிக் படிப்பவர்களுக்கு 3 ஆண்டுகள், ஐடிஐ சான்றிதழ் படிப்புகளுக்கு குறைந்தபட்சம் ஓராண்டு, கலை அறிவியல் பட்டப் படிப்புகளுக்கு 3 ஆண்டுகள், பொறியியல் படிப்புக்கு 4 ஆண்டுகள், வேளாண் படிப்புகளுக்கு 4 ஆண்டுகள், மருத்துவப் படிப்புக்கு 5 ஆண்டுகள், சட்டம் மற்றும் பாரா மெடிக்கல் படிப்புகளுக்கு 3 முதல் 5 ஆண்டுகள் வரை உதவித்தொகை பெற முடியும்.
- அரசுப் பள்ளிகளில் இருந்து வெளியேறும் மாணவிகளில் யார் உயர்கல்வி பயில்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே இந்த உதவித்தொகை வழங்கப்படும்.
- உதவித்தொகை பெற ஆதார் எண் கட்டாயம்.
- பயன்பெற விரும்பும் தகுதியான மாணவிகள், தாங்களாகவே ஆன்லைனில் பதிவு செய்யலாம். அல்லது கல்லூரி வாயிலாக பதிவு செய்யலாம்.
- இத்திட்டம் தொடர்பான தகவல்கள் மற்றும் கோரிக்கைகளுக்கு ஆன்லைன் மூலம் தகவல்களை பதிவு செய்யலாம்.

## ஆதிச்சநல்லூரில் தங்க நெற்றிப்பட்டயம்

- தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி நதிக்கரையில் உள்ள ஆதிச்சநல்லூரில் மத்திய தொல்லியல் துறை சார்பில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இதுவரை 80-க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- தங்கத்தால் செய்யப்பட்ட 3.5 சென்டிமீட்டர் நீளம் கொண்ட நெற்றிப்பட்டயம் கண்டுபிடிக்கப்பட்டது.
- வெண்கல ஜாடி ஒன்றும் இருந்தது. அந்த ஜாடியைச் சுற்றி 5 இடங்களில் கொக்கு, வாத்து போன்ற பறவைகள் நீர் அருந்துவது போல் அலங்காரங்கள் இருந்தன.
- 1902-ல் ஆங்கிலேய அதிகாரியான அலெக்சாண்டர் ரியா இங்கு அகழாய்வு செய்தபோது தங்கத்தால் செய்யப்பட்ட நெற்றிப்பட்டயம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 120 ஆண்டுகளுக்கு பிறகு அதுபோல் மீண்டும் தங்க நெற்றிப்பட்டயம் கிடைத்துள்ளது.

**கீழடியில்....**

- சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கொந்தகை அகழாய்வில் ஒரே முதுமக்கள் தாழியில் 74 சூதுபவளங்கள் (அரிய வகை கல்) கண்டெடுக்கப்பட்டன.
- கீழடி அருகே கொந்தகை பகுதி ஈமக்காடு என்பதால், அங்கு தொடர்ந்து முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.
- கொந்தகையில் முதன்முறையாக ஒரே முதுமக்கள் தாழியில் 74 சூதுபவளங்கள், ஒரு செப்புத் துண்டு கிடைத்தது.
- சூதுபவளம் ஓரி அரியவகை கல் ஆகும். பழங்காலத்தில் இந்தக் கல் மதிப்பு மிக்கதாக கருதப்பட்டது.
- இந்தவகை கற்களால் தயாரிக்கப்பட்ட அணிகலன்களை மன்னர்கள், அரசின் முக்கிய பிரமுகர்கள், செல்வந்தர்கள் அணிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 48-வது ஜிஎஸ்டி கூட்டம்

- நாட்டின் 48-வது ஜிஎஸ்டி கூட்டம் ஆகஸ்ட் 4-வது வாரத்தில் மதுரையில் நடைபெற இருக்கிறது.
- 2017ம் ஆண்டு முதல் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது.
- மாநில அரசுகள் ஜிஎஸ்டியில் கூறும் குறைபாடுகள், ஆலோசனைகளைப் பற்றி விவாதித்து சீர்திருத்தம் செய்ய நாட்டின் முக்கிய நகரங்களில் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- சண்டிகரில் நடந்த கடைசிக் கூட்டத்தில் 48-வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தை மதுரையில் நடத்த மத்திய நிதியமைச்சகம் முடிவு செய்து அறிவித்தது.

## மாயத்தேவர்

- அதிமுகவின் இரட்டை இலை சின்னத்தை பெற்றுத் தந்தவரும், அதிமுக தொடங்கியதும் நடைபெற்ற முதல் தேர்தலில் அக்கட்சி சார்பில் போட்டியிடும் எம்.பி.யான கே.மாயத்தேவர் (88) உடல்நலக் குறைவால் சின்னாளப்பட்டியில் காலமானார்.
- மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள டி.உச்சப்பட்டி கிராமத்தில் 1934-ம் ஆண்டு பிறந்தவர் கே.மாயத்தேவர்.
- சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராகப் பணிபுரிந்தார்.

- கட்சி தொடங்கிய பிறகு முதன்முதலில் 1973-ம் ஆண்டு திண்டுக்கல் மக்களவை தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.
- அதில் அதிமுக சார்பில் மாயத்தேவரை, எம்.ஜி.ஆர் போட்டியிடச் செய்தார். அதிமுகவின் முதல் வேட்பாளர் இவரே.
- சுயேச்சை சின்னமான இரட்டை இலையை மாயத்தேவர் தேர்வு செய்தார். இச்சின்னத்தில் போட்டியிட்ட கே.மாயத்தேவர் அமோக வெற்றி பெற்றார்.
- இதையடுத்து 1977-ல் நடந்த மக்களவைத் தேர்தலிலும் திண்டுக்கல் தொகுதியில் போட்டியிட்டு 2-வது முறையாக வெற்றி பெற்றார்.
- மாயத்தேவர் அதிமுகவில் இருந்து விலகினார். இதன் பிறகு திமுகவில் இணைந்து 1980-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் திண்டுக்கல் தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் எம்.பி.யாகத் தேர்வு செய்யப்பட்டார்.
- இங்கிலாந்தில் வின்சென்ட் சர்ச்சில் வெற்றியை குறிக்கும் விதமாக 'வி' வடிவில் தனது இரட்டை விரலை உயர்த்திக் காண்பிப்பார். இது மக்களிடம் எளிதில் சென்றடைந்தது.
- இதேபோல் நாமும் இரட்டை இலை சின்னத்தில் பெற்றால் வெற்றிக்கு அடையாளமாக இரண்டு விரலை காட்டுவதுடன், அது இரட்டை இலையை குறிக்கும் விதமாகவும் இருக்கும் என்பதால் இச்சின்னத்தை தேர்வு செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

## அரசு ஊழியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை

- அரசு அதிகாரிகள், தங்களின் கீழ் பணியாற்றுவோர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கும் போது, கவனத்துடன், சுய கட்டுப்பாட்டுடன் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- இடைநீக்க நடவடிக்கையில் முடிவு எடுக்கும்போது அவசரம் கூடாது.
- இடைநீக்கம் செய்யப்பட்டால் விசாரணையை 6 மாதங்களில் முடிக்க வேண்டும்.
- ஊழல் வழக்கில் விசாரணை அறிக்கையை அரசிடம் ஓராண்டுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். ஆதாரங்கள் அடிப்படையில், தேவைப்பட்டால் இடைநீக்கத்தை தொடரலாம்.
- குற்றவியல் நடவடிக்கை தொடர்பான வழக்குகளுக்கு இது பொருந்தாது.
- தொடர் இடைநீக்கம் தேவைப்படாது என்று கருதினால், அதை திரும்ப பெறலாம்.
- ஓராண்டுக்குள் விசாரணையை முடித்து, ஊழல் தடுப்பு இயக்கத்தில் அறிக்கை தர வேண்டும். அறிக்கை கிடைத்ததும் 4 மாதங்களுக்குள் இறுதி உத்தரவை துறைத் தலைவர் செயல்படுத்த வேண்டும்.
- இந்த வழிகாட்டுதலை அனைத்து அதிகாரிகளும் பின்பற்ற வேண்டும். இதில் தவறு செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 44-வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட்




| ஓபன் – இறுதி நிலை | |
|---|---|
| 1 | உஸ்பெகிஸ்தான் |
| 2 | அர்மேனியா |
| 3 | இந்தியா 2வது அணி |

| பெண்கள் – இறுதி நிலை | |
|---|---|
| 1 | உக்ரைன் |
| 2 | ஜியார்ஜியா |
| 3 | இந்தியா 1வது அணி |

**INDIA 2 MEN'S TEAM - BRONZE**

| Name | Rating* | Points |
|---|---|---|
| குகேஷ் | 2,867 | 9/11 |
| நிகல் சரின் | 2,774 | 7.5/10 |
| பிரகனானந்தா | 2,767 | 6.5/9 |
| அதிபன் | 2,594 | 4/6 |
| ரௌனாக் சத்வானி | 2,642 | 5.5/8 |

* Tournament ELO rating

**BEST INDIAN MEN PERFORMERS**

| Board | Position | Name |
|---|---|---|
| 1 | | குகேஷ் |
| 2 | | நிகல் சரின் |
| 3 | | அர்ஜுன் எரிகைசி |
| 3 | | பிரகனானந்தா |

^ India 1

**INDIA 1 WOMEN'S TEAM - BRONZE**

| Name | Rating* | Points |
|---|---|---|
| கோனேரு ஹம்பி | 2,440 | 6/10 |
| ஹரிகா | 2,411 | 3.5/7 |
| வைசாலி | 2,452 | 7.5/11 |
| தானியா சச்தேவ் | 2,441 | 8/11 |
| பக்தி குல்கர்னி | 2,379 | 4/5 |

**BEST INDIAN WOMEN PERFORMERS**

| Board | Position | Name |
|---|---|---|
| 3 | | வைஷாலி |
| 4 | | தனியாசச் தேவ் |
| 5 | | திவ்யா தேஷ்முக் |

# India 2

SURESH'

- செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஓபன் பிரிவில் உஸ்பெகிஸ்தான் தங்கப் பதக்கமும், அர்மேனியா வெள்ளிப் பதக்கமும், இந்தியா பி அணி வெண்கலப் பதக்கமும் வென்றது.
- மகளிர் பிரிவில் உக்ரைன் தங்கப் பதக்கமும், ஜார்ஜியா வெள்ளிப் பதக்கமும், இந்தியா ஏ அணி வெண்கலப் பதக்கம் வென்றன. மகளிர் பிரிவில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதன்முறையாகும்.

**ஹங்கேரி நாட்டிடம் ஃபிடே கொடி**

- சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் கொடியானது (ஃபிடே) 45-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்தவுள்ள ஹங்கேரி நாட்டிடம் வழங்கப்பட்டது.

## தனிநபர் பிரிவில் டி.குகேஷ் நிஹால் சரினுக்கு தங்கம்

- தனிநபர் பிரிவில் 2 தங்கம், ஒரு வெள்ளி மற்றும் 4 வெண்கலம் என 7 பதக்கங்களை இந்திய வீரர்கள் வென்றனர்.
- ஓபன்பிரிவில் இந்திய பி அணியின் டி.குகேஷ் முதல் போர்டில் 11 சுற்றுகள் விளையாடி 9 புள்ளிகள் குவித்து முதலிடம் பிடித்து தங்கம் வென்றார்.
- 2-வது போர்டில் விளையாடி நிஹால் சரின் 10 சுற்றுகளில் 7.5 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் பெற்றார்.
- அர்ஜுன்எரிகைசி 3-வது போர்டில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார். ஆர்.பிரக்ஞானந்தா (3-வது போர்டு), ஆர்.வைஷாலி (3-வது போர்டு) தானியா சச்தேவ் (3-வது போர்டு), திவ்யாதேஷ்முக் (ரிசர்வ் போர்டு) ஆகியோர் தனிநபர் பிரிவில் வெண்கலம் வென்றனர்.

## மதுவிலக்கு அமலாக்க பிரிவோடு போதைப்பொருள் பிரிவு இணைப்பு

**முதல்வர் மு.க.ஸ்டாலினின் சில முக்கிய அறிவிப்பு**

- மதுவிலக்கு அமலாக்க பிரிவோடு போதைப்பொருள் நுண்ணறிவு தடுப்பு பிரிவு இணைக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தேன். அதற்கு விரைவில் அரசாணை வழங்கப்படும்.
- போதைப்பொருள் தடுப்பில் தகவல் தொழில்நுட்பம் முக்கிய பங்காற்றுகிறது. ஆகவே, இப்பிரிவிற்கு தனியாக ஒரு ‘சைபர் செல்’ உருவாக்கப்படும்.
- என்டிபிஎஸ் வழக்குகளை விசாரிக்க, தற்போது 12 சிறப்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன. இனி இரு மாவட்டங்களுக்கு ஒரு சிறப்பு நீதிமன்றம் என முதற்கட்டமாக அமைக்கப்படும்.
- போதைப்பொருள் தடுப்பு பிரிவு - மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுடன் இணைக்கப்படுவதால், மதுவிலக்கு பிரிவில் உள்ள ‘மத்திய நுண்ணறிவு பிரிவு’ மேலும் வலுப்படுத்தப்படும் என்றார்.
- போதை மருந்தை பயன்படுத்துபவர் அதில் இருந்து விடுபட வேண்டும்.
- விடுபட்டவர், போதை பயன்பாட்டுக்கு எதிராக பிரச்சாரம் செய்ய வேண்டும்.
- பெற்றோர் தங்கள் பிள்ளைகளை போதைப் பொருளை பயன்படுத்தாமல் கண்காணிக்க வேண்டும்.
- இதே கடமை பள்ளி ஆசிரியர்களுக்கும் இருக்கிறது.
- இதே பணி, கல்லூரிகளின் நிர்வாகத்திற்கும் இருக்கிறது.
- வியாபாரிகள், கடைக்காரர்களும் போதைப் பொருளை விற்கமாட்டேன் என உறுதி எடுக்க வேண்டும்.
- போதை பொருட்கள், பள்ளி மற்றும் கல்லூரி அருகே விற்பனையாகாமல் கண்காணிக்க வேண்டும்.
- மாவட்ட நிர்வாகமானது, தனது எல்லைக்குள் இப்பொருட்களின் நடமாட்டத்தை தடுத்தாக வேண்டும்.
- காவல் நிர்வாகமானது, போதை பொருட்களை முற்றிலுமாக ஒழித்தாக வேண்டும்.
- போதைப்பொருள் விற்கும் வியாபாரிகள் அனைவரையும் காவல்துறை கைது செய்தாக வேண்டும்.
- அவர்களது மொத்த சொத்துகளும் முடக்கப்பட வேண்டும்.
- மாநிலம் விட்டு மாநிலம் கடத்தி வருவதை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.
- போதையின் தீமையை மருத்துவர்கள், குறிப்பாக, மனநல மருத்துவர்கள் பரப்புரை செய்ய வேண்டும்.
- போதையில் விழுந்தவர்களை மீட்கும் பணியை சமூக நல அமைப்புகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் செய்தாக வேண்டும்.
- போதையில் இருந்து மீள்பவர்களுக்கு மறுவாழ்வு வழங்கப்பட வேண்டும்.

## அசாமில் ரூ.5,500 கோடியில் மின்திட்டம்

- கடலூர் மாவட்டம், நெய்வேலியில் உதயமான என்.எல்.சி., இந்தியா நிறுவனம், தமிழகத்தின் பிற பகுதிகள், ராஜஸ்தான், உ.பி., ஒடிசா, ஜார்க்கண்ட் மாநிலங்கள் மற்றும் அந்தமான் தீவுகளிலும் தனது திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
- வடகிழக்கு மாநிலமான அசாமில் ரூ.5,500 கோடி செலவில், ஆயிரம் மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட சூரியஒளி மின் திட்டங்களை அமைக்க ஒரு கூட்டு நிறுவனத்தை என்.எல்.சி., இந்தியா நிறுவனம், அசாம் மாநில மின் விநியோக நிறுவனத்துடன் இணைந்து துவக்க உள்ளது.

## உதவி பெறும் கல்லூரிகள்

- ஆங்கிலேய அரசாங்கம் அரசுக் கல்லூரிகளைத் தொடங்கியபோதே அரசின் உதவியுடன் தனியார் கல்லூரிகளைத் தொடங்கவும் அனுமதி வழங்கியது.
- 1871இல் சென்னை மாகாணத்தில் 4 அரசுக் கல்லூரிகளும் 7 அரசு உதவிபெறும் தனியார் கல்லூரிகளும் செயல்பட்டன.
- 1981 இல் தமிழகத்தில் செயல்பட்ட மொத்த கலை – அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 195. அவற்றில் 51 அரசுக் கல்லூரிகள்; அரசு உதவி பெறும் கல்லூரிகளின் எண்ணிக்கை 144 ஆக இருந்தது.

**வரலாற்றுப் பின்னணி**

- தமிழகத்தில் 1980–களின் தொடக்கம் வரை அரசு, அரசு உதவி பெறும் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே இருந்து வந்த நிலையில் 1981 இல் பாலிடெக்னிக் பிரிவிலும் 1984 இல் கலை – அறிவியல் பிரிவிலும் அரசு உதவி இல்லாமல் சுயநிதிக் கல்லூரிகளைத் தொடங்க தமிழக அரசு அனுமதி வழங்கியது.
- 1990–களில் அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் சுயநிதிப் படிப்புகளை வழங்கவும் அனுமதிக்கத் தொடங்கியது.
- தமிழகத்தில் மொத்தம் 908 கலை – அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இதில் 147 அரசுக் கல்லூரிகளாகவும் 140 அரசு உதவி பெறும் கல்லூரிகளாகவும் 600–க்கும் மேற்பட்டவை சுயநிதிக் கல்லூரிகளாகவும் செயல்படுகின்றன.

**வணிகமாகும் கல்வி**

- சுயநிதிப் பிரிவில் லாபம் அதிகம், அரசின் கட்டுப்பாடுகளும் குறைவு என்பதால், அரசு உதவி பெறும் பிரிவுகளை நிறுத்திவிட்டு, முழுமையாக சுயநிதிக் கல்லூரியாக இயங்கும் முயற்சிகளில் இறங்கியது கல்லூரி நிர்வாகம்.

## தமிழக வீராங்கனை பவானிதேவிக்கு தங்கம்

- காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழக வீராங்கனை பவானி தேவி தங்கப்பதக்கம் வென்றார்.
- சென்னையை சேர்ந்த 28 வயதான பவானி தேவி காமன்வெல்த் போட்டியில் தங்கப்பதக்கம் வெல்வது இது 2–வது முறையாகும்.
- ஏற்கனவே 2018–ம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் கான்பெர்ராவில் நடந்த காமன்வெல்த் போட்டியிலும் தங்கப்பதக்கத்தை கைப்பற்றி இருந்தார்.

## சர்வதேச பட்டம் விடும் விழா

- தமிழக அரசு – சுற்றுலாத்துறை சார்பில் 13ம் தேதி முதல் 15–ம் தேதி வரை வெளிநாட்டிலிருந்து 4 குழுக்கள் இந்தியாவிலிருந்து 6 குழுக்கள்.
- தமிழகத்தில் முதல்முறையாக செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் சர்வதேச பட்டம் விடும் திருவிழா தொடங்க உள்ளது.

## போதைப் பொருள்

- தமிழகத்தில் நாளுக்குநாள் போதை மருந்துகளின் பயன்பாடும், அதற்கு அடிமையாகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.
- போதை மருந்து நடமாட்டத்தை கட்டுப்படுத்தி, விற்பவர்களை கைது செய்வது ஒன்று.
- அடுத்தது, போதை மருந்துகளை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளை உணர்த்துவது
- முதல் வழி சட்ட வழி. அதை அரசும், காவல்துறையும் கவனிக்கும். இரண்டாவது வழியான விழிப்புணர்வு வழியில் பொதுமக்களும் இணைந்து செயல்பட்டால்தான் முடியும்.
- போதை மருந்து விற்பவர்களின் சொத்துகள் பறிமுதல், சைபர் செல் உருவாக்கம் என பல்வேறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
- போதை மருந்து விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு எந்தவித தயக்கமும் காட்டாது. போதைப் பொருளானது ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு போய்ச் சேரும் சங்கிலியை நாம் உடைக்க வேண்டும்.

- கொலை, கொள்ளை, பாலியல் தொல்லை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்கு போதை தான் தூண்டுகோலாக இருக்கிறது.
- போதைப் பொருட்களின் நடமாட்டத்தை தடுத்தல் என்பது மக்கள் இயக்கமாக செயல்பட வேண்டும்.
- போதைப்பொருள் விற்க மாட்டோம் என வியாபாரிகள், கடைக்காரர்கள் உறுதி எடுக்க வேண்டும்.
- பெற்றோர், ஆசிரியர்களின் பங்கு மிகமிக முக்கியமானது. பிள்ளைகளுடன் பெற்றோர் அதிக நேரத்தை செலவிட வேண்டும்.
- அவர்களிடம் மனம் விட்டு பேசுங்கள். இயல்பாக பழகுவதுடன், நண்பர்களாக அணுகுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைகளை கவனிக்காமல் விட்டுவிடாதீர்கள்.
- இதே கடமை ஆசிரியர்களுக்கும் உண்டு. நீங்கள் கண்டிப்புடன், அதே நேரம் கனிவுடன் இருக்க வேண்டும்.

## சிட்கோ தொழிற்பேட்டை

- வள்ளியூரில் கடந்த 1966ம் ஆண்டு அப்போதைய முதல்வர் பக்தவச்சலத்தால் டான்சி தொழிற்கூடம் சுமார் 3.62 ஏக்கர் நிலப்பரப்பில் திறக்கப்பட்டு செயல்பட்டு வந்தது.
- இதில், பொதுப்பணித்துறைக்கு தேவையான மதகு அடைப்புகள், தூத்துக்குடி துறைமுகத்திற்கு தேவையான பெரிய இரும்பு குழாய்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்பட்டன.
- 1993ம் ஆண்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா தமிழகத்தில் உள்ள 17 டான்சி தொழிற்கூடங்களை மூட உத்தரவிட்டார்.
- மூடப்பட்ட டான்சி நிலத்தில் உள்ள தொழிற்கூடங்களை சிட் கோவுடன் இணைத்து புதிய தொழில் பேட்டைகள் அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## தடுக்க முடியாது; தவிர்க்க முடியும்

- பஞ்சாயத்து தேர்தல்களில் வெற்றி பெற்ற பெண்களுக்கு பதிலாக அவர்களது கணவரோ, தந்தையோ, ஆண் உறவினரோ பதவியேற்றனர்.
- வெற்றி பெற்றவர்களுக்கு பதிலாக வேறு ஒருவர் பதவியேற்பதற்கு சட்டத்தில் இடமில்லாவிட்டாலும், பதவியேற்க பெண்கள் நேரில் வர தயக்கம் காட்டியதால்தான் இது போன்று நிகழ்ந்தது.
- மக்களவையிலும், அனைத்து சட்டப் பேரவைகளிலும் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு அளிக்க மசோதா, கருத்தொற்றுமையின்மையைக் காரணம் காட்டி 12 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது.
- இது நிறைவேற்றப்பட்டாலும், அரசியல் கட்சியினர் மாறாதவரை இப்போது உள்ளது போன்றே கட்சியினரின் குடும்பப் பெண்கள்தான் அந்தத் தேர்தல்களிலும் நிறுத்தப்படுவர்.

## 32-ஆவது யானைகள் காப்பகம்

- யானைகள் காப்பகங்களோடு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அகஸ்தியர்மலை 32-ஆவது காப்பகமாக சேர்க்கப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தெரிவித்தார்.
- யானைகள் காப்பகத்தில் இந்தியா தொடர்ந்து முன்னணியில் இருப்பதால், ஆசிய யானைகளில் 60 சதவீதத்துக்கும் அதிகமானவை இந்தியாவில் உள்ளன.
- தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி உள்ள அகஸ்தியர் மலையிலும், 1,197 சதுர கி.மீ. அளவில் யானைகள் காப்பகம் ஒன்று அர்ப்பணிக்கப்படுகிறது. இத்துடன் சேர்த்து நாட்டில் 32 யானை காப்பகங்கள் உள்ளன.

## பயங்கரவாதத்துக்கு எதிராக சர்வதேச சமூகம்

- 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியன் ஏர்லைன்ஸ் விமானக் கடத்தல், 2001-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தாக்குதல்.
- 2016-ஆம் ஆண்டு பஞ்சாபின் பதான்கோட்டில் உள்ள இந்திய விமானப்படைதளம் மீது நடைபெற்ற தாக்குதல் ஆகியவற்றை ஜெய்ஷ்-ஏ-முகமது (ஜேஇஎம்) பயங்கரவாத இயக்கம் திட்டம் தீட்டி செயல்படுத்தியது.
- இவரை சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்க அண்மையில் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவும் அமெரிக்காவும் முன்மொழிந்தன.

- ஆனால் அந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் கிடைப்பதில் சீனா முட்டுக்கட்டையை ஏற்படுத்தியது.

## வந்தே பாரத் ரயில்கள்

- சென்னை பெரம்பூரில் உள்ள இணைப்பு பெட்டி தொழிற்சாலையில் (ஐசிஎஃப்) முதல் முறையாக உள்நாட்டு தொழில்நுட்பத்தில் ரூ.97 கோடி செலவில் அதிநவீன விரைவு ரயில் தயாரிக்கப்பட்டு வருகிறது.
- மணிக்கு 160 கி.மீ வேகத்தில் செல்லக்கூடிய இந்த அதிவேக ரயிலுக்கு 'வந்தே பாரத்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- முதல் கட்டமாக, டெல்லி வாரணாசி இடையே இயக்கப்படும். முதல் கட்டமாக 75 ரயில்களை இயக்க ரயில்வே திட்டமிட்டுள்ளது.

## ஆர்டர்லி முறை

- காவல்துறை அதிகாரிகளின் வீடுகளில் பணிபுரியும் ஆர்டர்லிகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். உயரதிகாரிகளின் வாகனங்களில் உள்ள கருப்பு ஸ்டிக்கர்களை அகற்ற வேண்டும்.
- சொந்த வாகனங்களில் அரசு முத்திரைகளை பயன்படுத்தக்கூடாது என ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டது.

## அணைகட்டும் முயற்சி கைவிடல் - தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்

- சித்தூர் மாவட்டம் முக்கள கண்டிகை, கத்தபள்ளி ஆகிய கிராமங்களில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே 2 அணைகள் கட்ட ஆந்திர அரசு அனுமதி
- இந்த ஆற்றை குடிநீருக்கும், வேளாண் பாசனத்துக்கும் நம்பியுள்ள சென்னை, புறநகர் பகுதிகளில் (வடக்கு) வசிக்கும் மக்களை கோபத்துக்கு உள்ளாக்கியுள்ளது.
- கொசஸ்தலை ஆறும், அதன் வடிநிலப் பகுதிகளும் இரு மாநில எல்லைப் பகுதிகளில் இயற்கையாக அமைந்திருப்பதை அறிவீர்கள்.
- கொசஸ்தலை ஆற்றின் வடிநிலப் பகுதியின் மொத்த நிலப்பரப்பான 3,727 சதுர கி.மீ.ல், 877 சதுர கி.மீ மட்டுமே ஆந்திரப் பகுதியில் உள்ளது. எஞ்சிய 2,850 சதுர கி.மீ., தமிழகப் பகுதியில் அமைந்துள்ளது.
- கொசஸ்தலை ஆற்றின் குறுக்கேதான் பூண்டி நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும பகுதிகளில் குடிநீர் விநியோகத்தில் முக்கிய பங்காற்றுகிறது.
- மாநிலங்களுக்கு இடையே பாயும் கொசஸ்தலை ஆற்றின் மேல் பகுதியைக் கொண்ட மாநிலம், ஆற்றின் கீழ் பகுதியை கொண்ட மாநிலத்தின் அனுமதி இன்றி ஆற்றின் குறுக்கே புதிய அணைகள் கட்ட திட்டமிடவோ, ஒப்புதல் அளிக்கவோ, கட்டுமானங்கள் மேற்கொள்ளவோ முடியாது.
- ஆற்றின் குறுக்கே அணை கட்ட நடவடிக்கை மேற்கொண்டிருப்பது ஏமாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதுடன் தமிழகத்துக்கு குறிப்பாக சென்னை மற்றும் புறநகர் (வடக்கு) பகுதிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

## உள்ளாட்சிகளின் பெருமைமிகு பங்களிப்பு

- தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகள் செழித்தோங்கி வளர்ந்திருந்த உள்ளாட்சி முறை, ஒரு காலகட்டத்தில் முற்றிலுமாக மறைந்து போனதையும், ஆங்கிலேயர் காலத்தில் புதிய பரிமாணத்தில் உயிர்ப்பு பெற்றதையும் அறிவோம்.
- அனைத்து ஊர்களிலும் உள்ளாட்சிகள் ஏற்படுத்தப்படவில்லை, அமைக்கப்பட்ட ஊர்களிலும் அங்கு வாழ்ந்த அனைவருக்கும் வாக்குரிமை இல்லை, அரசு நிதியுதவி எதுவும் இல்லாமல் அந்தந்த உள்ளாட்சியின் சொந்த வருவாயிலிருந்து மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- சுருக்கமாக, உள்ளாட்சிகள் ஒரு மிகச்சிறிய வட்டத்திற்குள்ளேயே இயங்க வேண்டியிருந்ததால், அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் பெருமளவிலான தேக்கமும் இயலாமையும் நிலவியது என்பதே விடுதலை அடைந்த வேளையில் தமிழகத்தில் நிலவிய சூழல்.

## அடித்தளமிட்ட ஊராட்சிகள்

- ஊரக உள்ளாட்சிகளைப் பொறுத்தவரை, 1960, 70களில் கல்வி, சாலை, விவசாயம், கால்நடை, கூட்டுறவு, மகப்பேறு, பொது சுகாதாரம், மருத்துவம் செயல்பாடுகளும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் என்ற ஒரே குடையின்கீழ் மக்களுக்குக் கிடைத்தன.
- நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளிலும், கல்வி, மகப்பேறு, மருத்துவப் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டன.

- அதன் காரணமாக, தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டன, இணைப்புச் சாலைகளும் அணுகு சாலைகளும் பாலங்களும் உருவாகின, விவசாய உற்பத்தி பெருகியது, ஏராளமான கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின; பால் உற்பத்தி பெருகியது; ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோன்றின; மருத்துவம், நோய்த்தடுப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன; மகப்பேறு மையங்கள் உருவாகின, கால்நடைத் துணை மருத்துவமனைகள் தோன்றின. ஊரக உள்ளாட்சிப் பகுதிகளின் பொற்காலம் அது.

**இணைப்புப் பாலம்**

- மத்திய-மாநில அரசுகளின் பல்வேறு வளர்ச்சி - நலத்திட்டப் பணிகள் உள்ளாட்சிகளின் வாயிலாகவே செயல்படுத்தப்படுகின்றன.
- இவ்வாறு மத்திய-மாநில அரசுகளின் வளர்ச்சி - நலத்திட்டப் பணிகளை உள்ளூரில் செயல்படுத்தும் நிறுவனங்களாக உள்ளாட்சிகள் செயல்பட்டு, உள்ளூர் மக்களுக்கும் அரசுக்குமான இணைப்புப் பாலமாகத் திகழ்கின்றன.
- பெருமழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர்க் காலத்தில் மக்களுடன் களத்தில் நின்று, அனைத்து உதவிகளையும் நிவாரணப் பணிகளையும் உள்ளாட்சிகள் செய்து வருகின்றன.

## தவிர்க்க முடியாது

- இரண்டாவது விமான நிலையம் என்பது சென்னையின் நீண்டநாள் கனவு. அதிகரித்து வரும் பயணிகளின் எண்ணிக்கையும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து சென்னைக்கு வரும் விமானங்களின் எண்ணிக்கையும் பெருகிவரும் நிலையில் இனியும் மீனம்பாக்கம் விமான நிலையத்தை மட்டுமே சார்ந்திருக்க முடியாது.
- சென்னையிலிருந்து 70 கி.மீ. தொலைவில் ஸ்ரீபெரும்புதூர் அருகே இருக்கும் பரந்தூரை விமான நிலையம் அமைப்பதற்காக தமிழக அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது.
- இது குறித்த அறிவிப்பை மத்திய விமான போக்குவரத்துத் துறை இணையமைச்சர் வி.கே.சிங் மாநிலங்களவையில் அறிவித்தார்.
- செங்கல்பட்டு மாவட்டத்தில் செய்யூர், மாமண்டூர், திருவள்ளூர் மாவட்டத்தில் பன்னூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரந்தூர் ஆகிய இடங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக எல்லாவிதத்திலும் பரந்தூர் பொருத்தமாக இருக்கும் என்று தமிழக அரசு தெரிவித்திருப்பதாக அமைச்சர் கூறியிருந்தார்.
- பரந்தூரில் புதிய விமான நிலையம் முழுமையாக கட்டி முடிப்பதற்கு ஏழு ஆண்டுகள் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் இருந்து விமான நிலையத்தின் நுழைவுப் பாதை அமைக்கப்படவுள்ளது.
- சென்னையிலிருந்து ஸ்ரீபெரும்புதூர், பரந்தூர் மெட்ரோ ரயில் மூலம் இணைக்கப்படுவது குறித்தும் தீவிரமாக ஆலோசிக்கப்படுகிறது.
- புதிய விமான நிலையத்தில் ஒரே நேரத்தில் இரு விமானங்கள் தரையிறங்கும் வகையில் இரண்டு ஓடு பாதைகள் அமைக்கப்படவுள்ளன.
- இப்போதைய புள்ளிவிவரப்படி மீனம்பாக்கம் விமான நிலையம் தினந்தோறும் ஏறக்குறைய 400 விமானங்களைக் கையாள்கிறது.
- 35,000 முதல் 40,000 பயணிகள் நாள்தோறும் வந்து போகிறார்கள்.
- புதிய விமான நிலையம் ரூ.20,000 கோடி செலவில் திட்டமிடப்படுகிறது. 600 பேர் பயணிக்கும் மிகப் பெரிய விமானங்கள் தடையின்றி வந்து செல்லும் வகையில் இரண்டு பெரிய ஓடுபாதைகள் அமைய இருக்கின்றன.
- ஆண்டொன்றுக்கு இரண்டு கோடி பயணிகளைக் கையாளும் அளவில் புதிய விமான நிலையம் திட்டமிடப்படுகிறது.
- சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் 4,971 ஏக்கர் நிலப்பரப்பில் பரந்தூர் புதிய பசுமை விமான நிலையம் அமைவது அவ்வளவு எளிதாக இருக்கப் போவதில்லை.
- சுற்றிலும் விவசாய நிலங்கள் இருப்பதால், நிலம் கையகப்படுத்தல் மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கக்கூடும்.
- 3,000 ஏக்கர் விளைநிலங்களும், 1,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்படலாம்.
- ஏற்கனவே பரந்தூரைச் சுற்றியுள்ள ஐந்து கிராமத்தைச் சேர்ந்த மக்கள் விமான நிலையம் அமைவதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்கள்.
- அவர்களில் பெரும்பாலோர் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்பவர்கள் என்பதால், தங்களது வாழ்வாதாரம் குறித்த அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதில் நியாயம் இருக்கிறது.

- பரந்தூரில் உள்ள பம்பக் கால்வாயில் இருந்து 72 ஏரிகளுக்கு தண்ணீர் செல்வதால் அந்தக் கால்வாயை மூடக்கூடாது என்றும், ஏரிகளும், குளங்களும் அதிகமுள்ள அந்தப் பகுதிகளை அழித்து விடக்கூடாது என்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள்.
- சென்னையிலிருந்து 73 கி.மீதொலைவில் அமைய இருக்கும் புதிய விமான நிலையத்தை அடைய இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக பயணிக்க நேரும் என்பது எதிர்மறை விமர்சனங்களில் ஒன்று.
- எந்தவொரு வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படுவதாக இருந்தாலும், அதனால் சில பாதிப்புகள் ஏற்படாமல் இருக்காது.
- பொருளாதார வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் ஏற்பட வேண்டுமானால், தொழில்துறை வளர்ச்சி இன்றியமையாதது. விவசாயம் இன்று வருமானத்தையோ, வாழ்க்கைத் தரத்தையோ உயர்த்தும் வகையில் இல்லை என்பதும், வேலைவாய்ப்பு அதிகரிக்க உதவுவதில்லை என்பதும் நிதர்சன உண்மைகள்.

## ஸ்மார்ட் சிட்டி

- மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை வழங்கும் நகரங்களை உருவாக்கும் வகையில் மத்திய அரசு 2015-ல் 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தைத் தொடங்கியது.
- இதன்கீழ், நகர்ப்புற உள்ளாட்சிகள் வழங்கும் சேவைகளில் ஸ்மார்ட் தீர்வுகளைப் பயன்படுத்தவும், ஒரு குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுத்து, அதில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி, மாநகரின் பிறபகுதிகளில் பிரதிபலிக்கும் வகையிலும் திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசு அறிவுறுத்தி இருந்தது.
- தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை, சேலம், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து, இதர 10 மாநகராட்சிகளில் பணிகளை மேற்கொள்ள மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்காக தலா 50 சதவீதம் என, ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தலா ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

## ஏற்றம் காணும் பெண் கல்வி

**பெண்களுக்கான கல்வி நிலையங்கள்**

- சென்னையில் படித்த பெண்கள் குறித்த 1871 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் 620 பெண்களில் ஒருவர்தான் படித்தவராக இருந்தார் என ஆய்வு முடிவில் தெரியவந்தது.
- மற்றோர் ஆய்வில் 1901 இல் பெண்களின் கல்வி 0.6 சதவீதமாக இருந்துள்ளது.
- 1911 இல் 1.0 சதவீதமாகவும், 1951 இல் 8.86 சதவீதமாகவும், 1971 இல் 21.97 சதவீதமாகவும் 2001 இல் 53.67 சதவீதமாகவும் 2011 இல் 65.46 சதவீதமாகவும் உயர்ந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- சாவித்திரிபாய் பூலே 1848இல் பெண்களுக்கான தனிப் பள்ளியைத் தொடங்கிப் பெரும் சாதனை படைத்தார். ஒன்பது மாணவிகளோடு செயல்படத் தொடங்கிய அப்பள்ளியே பெண் கல்விக்கு முதல் விதை தூவியது.
- 1854இல் சார்லஸ் உட் என்பவர் பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்து அறிக்கை வெளியிட்டார்.
- 1879 இல் பெத்தூன் பெண்கள் கல்லூரி முதலாவதாக வங்கத்தில் தொடங்கப்பட்டது. 1849ல் இது பெண்கள் பள்ளியாக இருந்துள்ளது.
- பெண்களுக்கான தனிப் பல்கலைக் கழகம் 1916 இல் பம்பாயில் டாக்டர் தோந்தோ கர்வே என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- இந்தப் பெண்கள் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவுக்கு மகாத்மா காந்தி தலைமை தாங்கியதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

**மாற்றத்துக்கு வித்திட்ட கல்வி**

- பெண் கல்வி என்கிற தலைப்பில் பிரிவு 15(1) பாலின அடிப்படையில் எந்த ஒரு குடிமகனையோ குடிமகளையோ வேறுபடுத்தக்கூடாது என்கிறது நமது அரசமைப்புச் சட்டம்.
- 799 பல்கலைக் கழகங்களில் 14 பெண்களுக்குரியதாக இன்று விளங்குகின்றன. 1,751 பெண்கள் கல்லூரிகள் இயங்குகின்றன. 2016-ல் முனைவர் (ph.d.) ஆய்வுப் படிப்பை முடித்தவர்கள் 28,799 பேர். அவர்களில் பெண்கள் 12,505 பேர்.
- விண்வெளி ஆராய்ச்சி முதல் கடல்வாழ் உயிரினங்கள் ஆராய்ச்சிக் கல்வி வரை பெண்கள் பங்கேற்காத துறைகளே இல்லை.

- என்னதான் சட்டங்கள் இயற்றப்பட்டாலும் குழந்தைத் திருமணம், உடன்கட்டை ஏறுதல் என்னும் சதி, பெண் கரு அழிப்பு, தேவதாசி முறை போன்ற பழமையின் எச்சங்களை எதிர்த்துப் போராடும் வலிமையையும் விழிப்புணர்வையும் பெண்களுக்குக் கல்விதான் வழங்கியது.
- சமூக உற்பத்தியில் பெண்கள் பங்கேற்பதற்கான தகுதியையும் உழைப்பின் மதிப்பு குறித்த கேள்வி ஞானத்தையும் பெண்களிடம் கொண்டு வந்து சேர்த்தது கல்விதான்.
- பெண்ணை இரண்டாம் பாலினமாகக் கருதுவதுதான் பெண்கல்விக்கு முதல்தடை. அதை உடைத்தெறிந்துள்ளது நமது அரசமைப்புச் சட்டம்.
- ஏழ்மையும் வறுமையும் இன்னொரு தடை. ஆரம்பக் கல்வி நிலையங்களில் மதிய உணவு போன்ற மாநில அரசுகளின் திட்டங்களால் இந்தத் தடையையும் தகர்க்க முடிந்துள்ளது.
- டெல்லி நிர்பயா, கதுவா சிறுமி, கள்ளக்குறிச்சி மாணவி போன்ற எத்தனையோ பெண்களை இழந்தபோதும் பேராபத்துக்கள் நம்மைச் சூழ்ந்தபோதும் பெண்கல்வி ஒருநாளும் தன் பயணத்தை நிறுத்திக்கொள்ளாது.

## ஒண்டிவீரன்

- 1857இல் நடந்த ‘சிப்பாய்கலக’த்திற்கு 102 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ் மண்ணில் ஆங்கிலேயருக்கு எதிராக போரிட்ட பாளையத் தலைவன் ஒண்டிவீரன் எனும் போராளியின் வீரமணரத்தின் 250 ஆவது ஆண்டை நினைவுகூர்கிறோம்.

**நெற்கட்டான் செவ்வயல் பாளையம்**

- திருநெல்வேலிக்கு அருகில், சங்கரன்கோவிலிலிருந்து வடமேற்கில் பத்து கிலோமீட்டர் தொலைவிலும், வாசுதேவநல்லூரிலிருந்து கிழக்கில் ஐந்து கிலோமீட்டர் தொலைவிலும் உள்ள, நல்ல விளைச்சல் நிலங்களை மிகுதியாகக் கொண்ட செழிப்பான ஜமீன் நெற்கட்டும் செவ்வயல்.
- அந்த ஜமீன் பரம்பரையில் பொ.ஆ.(கி.பி.) 1710 ஆம் ஆண்டு பெத்த வீரன், வீரம்மா எனும் தம்பதியினருக்கு பிறந்தவர், ஒண்டிவீரன்.
- இவர் சிறு வயதிலேயே வாள் வீசவும், கம்பு சுத்தவும், குதிரை சவாரி செய்யவும், பறையடிக்கவும், பாட்டுப் பாடவும், ஒயிலாடவும் மற்றும் தோல் வேலைகளையும் கற்றுத் தேர்ந்தார்.
- ஜமீன்முறை மாறிப் பாளையமாக மாற்றம் பெற்றபோது, சமூக அரசியல் சூழல் காரணமாக பாளையப் பொறுப்பை பூலித்தேவன் ஏற்றுக்கொண்டார்.
- இருப்பினும், இருவரும் இணைந்தே பாளையத்தை ஆண்டு வந்தனர். ஒண்டிவீரன் படைத்தளபதியாக கூடுதல் பொறுப்பேற்றுக்கொண்டு, பகைவருக்கெதிரான போரை தலைமையேற்று நடத்தி வந்தார்.
- ஆங்கிலேயர் ஆற்காடு நவாப்பிற்கு ராணுவ உதவி செய்து, அதன் மூலம் பாளையங்களில் வரி வசூலிக்கும் பொறுப்பை ஏற்றனர்.
- 1755 ஆம் ஆண்டு பூலித்தேவனும் ஒண்டிவீரனும், ஆங்கிலேயருக்கு ஏன் வரி கொடுக்க வேண்டும் என்று எதிர்த்தனர்.
- நெல்லை கப்பமாக கட்ட மறுத்தனர். எனவேதான், நெற்கட்டும் செவ்வயல், நெற்கட்டான் செவ்வயல் என அழைக்கப்படலாயிற்று.

**முதல் விடுதலைப்போர்**

- ஆங்கிலேயர் நெற்கட்டான் செவ்வயல் பாளையத்தின் மீது போர் தொடுத்தனர். ஆற்காடு நவாபின் சகோதரர் மாபூஸ்கான் மற்றும் லார்ட் இன்னிங்ஸ் தலைமையிலான படையை நெற்கட்டான் செவ்வயல் பாளையத்தின் எல்லையிலேயே 1755 மே 22 ஆம் நாள் அன்று ஒண்டிவீரனும் பூலித்தேவனும் தோற்கடித்தனர்.
- மீண்டும் அதே ஆண்டு மாபூஸ்கான் மற்றும் ஆங்கிலேயப் படைத்தளபதி அலெக்சாண்டர் ஹெரான் தலைமையில் நெல்லை நோக்கி பெரும்படை புறப்பட்டது.
- வழியில் மணற்பாறையில் லட்சுமண நாயக்கர் அடிபணிந்தார். மதுரையும் ராமநாதபுரமும்கூட பணிந்தது.
- வீரபாண்டிய கட்டபொம்மனின் பாட்டனாரான பொல்லாப் பாண்டிய கட்டபொம்மன் (கெட்டி பொம்மு) கர்னல் ஹெரானிடம் கப்பம் கட்டிப் பணிந்துபோனார்.
- தொடர்ந்து ஆங்கிலேயப் படை தென்மலையில் முகாமிட்டனர். ஆனால், அவர்களின் 2000 வீரர்களுடன் கூடிய பெரும்படையை மீண்டும் வென்று வெற்றிவாகை சூடினார் ஒண்டிவீரன்.
- இதுவே ஆங்கிலேயருக்கு எதிரான நடந்த முதல் சுதந்திரப் போராகும்.

**தென்பாண்டிச் சீமையின் சிம்மசொப்பனம்**

- மீண்டும் 1756 மற்றும் 1757 ஆண்டுகளிலும் போர் தொடுத்த ஆங்கிலேயரை தோற்கடித்தவர் ஒண்டிவீரன்.
- எட்டயபுரம் உள்ளிட்ட சில தெலுங்கு பாளையங்கள் ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் பலியாகின. அவற்றின் மீது போர்தொடுத்து, ஆங்கிலேயருக்கு எதிராக மற்ற பாளையங்களை அணிசேர்த்தனர் ஒண்டிவீரனும் பூலித்தேவனும்.
- நாயக்கர் காலத்தில் 16 தமிழ் பாளையங்களும், 56 தெலுங்கு பாளையங்களும் இருந்தன.
- ஆழ்வார்குறிச்சி அழகப்பன் தோற்கடிக்கப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டார். அழகப்பனுக்கு ஆதரவாக மருதநாயகம் கான்சாகிப் யூசுப்கான் களமிறங்கினார்.
- 1759 ஜுலை 2 ஆம் நாள் அவர் ஊத்துமலை, சுரண்டை பாளையங்களைக் கைப்பற்றினார். நவம்பர் 6-ஆம் நாள் ஒண்டிவீரன் அவற்றை மீட்டெடுத்தார். கோபம் கொண்ட மருதநாயகம், தொண்டமான் படையுடன் இணைந்து வாசுதேவ நல்லூரைத் தாக்கினார்.
- இருபது நாள் நடந்த போரில் பூலித்தேவனும் ஒண்டிவீரனும் இருபடைகளாகப் பிரிந்து போரிட்டு வென்றனர். மீண்டும் கான்சாகிப் 1760 டிசம்பர் 20 அன்று நெற்கட்டான் செவ்வயலைத் தாக்கினார்.
- அப்போரில் ஒண்டிவீரனின் துணை தளபதி வெண்ணிக்காலாடி வீரமரணம் அடைந்தார்.

**இறுதிப் போர்கள்**

- 1767 மே 13 அன்று ஆங்கிலேயப் படைத்தளபதி டொனால்ட் காம்பெல் தலைமையில் நெற்கட்டான் செவ்வயலின் இராணுவ தளமாக இருந்த வாசுதேவ நல்லூர் கோட்டை தாக்கப்பட்டது.
- வீரம் செறிந்த தமிழ் மறவர்கள் பூலித்தேவன், ஒண்டிவீரன் தலைமையில் மிகக் கடுமையாக போரிட்டனர்.
- பலம் வாய்ந்த பீரங்கிகள், துப்பாக்கிகள் முன் நம்மவர்களின் வாட்கள், வேட்கள் தோற்றுப்போயின. அப்போது, சங்கரன்கோவில் ஆவுடை நாச்சியார் கோவிலுக்குள் சென்ற பூலித்தேவன் மீண்டும் திரும்பவில்லை.
- எனவே, ஒண்டிவீரன் மீண்டும் பாளையப் பொறுப்பை ஏற்று, பூலித்தேவனின் மூன்று பிள்ளைகளையும் நான்கு ஆண்டுகள் காத்து வந்தார்.
- மீண்டும் களக்காடு, கங்கை கொண்டான், திருவில்லிபுத்தூர், புதுக்கோட்டை போன்ற இடங்களில் ஆங்கிலேயரை எதிர்த்திருக்கிறார் என்பது தெரியவருகிறது.
- இறுதியாக 1771 ஆகஸ்ட் 20ந் தேதி நடைபெற்ற தென்மலைப்போரில் மாவீரன் ஒண்டிவீரன் வீரமரணமடைந்தார்.

## உதய் திட்டம் என்றால் என்ன?

- இத்திட்டத்தின்படி தமிழக மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமான டான்ஜெட்கோவின் விநியோகம் தொடர்பான கடனில் 25% கடன் ஒன்றிய அரசு ஏற்றுக் கொள்ளும்.
- ஆண்டுக்கு ஒரு முறை மின் கட்டணம் உயர்வு
- மின்வாரியத்தின் கடனை மாநில அரசு ஏற்பதால், மின் வாரியத்திற்கும் மாநில அரசுக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் ஒன்றிய அரசு ஊக்கத்தொகைகளை வழங்கும்.
- கூடுதல் நிலக்கரி ஒதுக்கீடு, ஒன்றிய மின் தொகுப்பிலிருந்து குறைந்த விலையில் மின்சாரம் போன்ற சலுகைகளும் வழங்கப்படும்.
- மின் இழப்பை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- இந்த திட்டத்தை அப்போதைய முதல்வர் ஜெயலலிதா கடுமையாக எதிர்த்தார். அவர் இறந்தபின், பாஜகவுடன் கூட்டணி வைத்து அதிமுக, இத்திட்டத்தில் இணைய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- உதய் திட்டத்தில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இணைந்தாலும் தொடர்ந்து இழப்பையே சந்தித்துள்ளது.
- இதுவரை ரூ.1.13 லட்சம் கோடி இழப்பை சந்தித்துள்ளது. [Ujjwal DISCOM Assurance Yojana] - உதய்

## வளரும் நாட்டின் குழந்தைகள்

- தமிழ்நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் கல்வியறிவைப் பெருக்கவும், பசியை ஒழிக்கவும் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி, அதில் முட்டைகளை வழங்கி ஒரு தலைமுறையையே ஆரோக்கியமான சமூகமாக ஆக்கின.
- ஆனால், இன்று உணவுரீதியிலான பாகுபாட்டைப் பல தனியார் பள்ளிகள் சிறு வயதிலேயே குழந்தைகளிடம் திணிப்பது வேதனையான ஒன்று.

- பல்வேறு கலாச்சாரம், மொழி, இனம், மதம் ஆகியவற்றைக் கொண்டது நமது இந்தியா. இவ்வாறான வேற்றுமைகளை மதித்து, ஒற்றுமையைப் பேணி, சகோதரத்துவத்தை வளரச் செய்வதைத்தான் பள்ளிகள் உறுதி செய்ய வேண்டும் ஒழிய, கலாச்சாரத் திணிப்பைச் செய்யக்கூடாது. சத்தான உணவு அனைவருக்கும் சென்று சேர்வதைத் தமிழக அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு வயது வரம்பு அதிகரிப்பு

- தமிழகத்தில் கடந்த 2010-11-ம் ஆண்டு முதல், குறு, சிறு, நடுத்தரத் தொழில்துறை சார்பில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான பணி உருவாக்கும் திட்டத்தின் கீழ், சுயவேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்த திட்டத்தின்படி, பயனாளிகள் பொதுப் பிரிவினராக இருந்தால் 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும்.எஸ்.சி., எஸ்.டி., எம்பிசி, பி.சி., சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் படை வீரர்கள், மாற்றுத் திறனாளிகள் 45 வயதுக்குள் இருக்க வேண்டும்.
- மேலும், பயனாளி 8-வது தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.5 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகள் மற்றும் மனநலப் பாதிப்புடைய மாற்றுத் திறனாளிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவிகளைப் பெறுவதற்கான அதிகபட்ச வயது வரம்பை 45-லிருந்து 56-ஆக உயர்த்தியுள்ளது. மேலும், கல்வித் தகுதியும் நீக்கப்படுகிறது.

## கிளாம்பாக்கம்

- அதிக நெரிசல்மிக்க பகுதியான பிராட்வேயில் இருந்துதான் 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை வெளியூர் பேருந்துகள் இயங்கி வந்தன.
- அங்கு நிலவிய போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே புறநகர் பேருந்து நிலையத்தை கோயம்பேட்டில் 37 ஏக்கர் பரப்பளவில் ரூ.103 கோடி செலவில் பேருந்து முனையம் கட்டப்பட்டது.
- தற்போது இங்கும் போக்குவரத்து நெரிசல் அதிகமானதால் வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் 67 ஏக்கர் பரப்பளவில் ரூ.314 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது.
- கோயம்பேட்டில் இருந்து தற்போது இயக்கப்பட்டு வரும் 50 சதவீத வெளியூர் பேருந்துகளை கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக திருச்சி மதுரை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கான அனைத்து பேருந்துகளும் கிளாம்பாக்கத்தில் இருந்தே இயக்கப்படும் எனத் தெரிகிறது.

## தமிழக உயர்கல்வி

- நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை பட்டியலை மத்திய கல்வி அமைச்சகத்தின் என்ஐஆர்எஃப் அமைப்பு கடந்த 2016 முதல் வெளியிட்டு வருகிறது.
- இந்த ஆண்டுக்கான தரவரிசை பட்டியல் கடந்த ஜூலை 15-ம் தேதி வெளியிடப்பட்டது. இதில், அதிகபட்சமாக தமிழகம் 163 கல்வி நிறுவனங்களுடன் முதலிடம் பிடித்தது.
- நாட்டிலேயே தமிழகத்தில்தான் உயர் கல்வி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 53 சதவீதமாக உள்ளது.
- உயர் கல்வியின் தரத்திலும் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.
- தேசிய அளவிலான 1,000 இடங்களில் 163 உயர்கல்வி நிறுவனங்கள் தமிழகத்தை சேர்ந்தவை.

## பயிர்காப்பீடு

- மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்களால் ஏற்படும் பயிர் இழப்புகளில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க தமிழக அரசு பயிர் காப்பீட்டுத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.
- பயிர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த, இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம், இப்கோ-டோக்கியோ, பஜாஜ் அலையன்ஸ், எச்டிஎஃப்சி எர்கோ மற்றும் ரிலையன்ஸ் போன்ற 5 காப்பீட்டு நிறுவனங்களை அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

## நெய்தல் உப்பு

- உப்பு உற்பத்தி இல்லாத மாதங்களில் உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.5 ஆயிரம் நிவாரணத் தொகை வழங்கும் திட்டம்
- உப்பளத் தொழில் பருவகால தொழில் என்பதால், உப்பளத் தொழிலாளர்களுக்கு ஓராண்டில் 9 மாதங்கள் மட்டுமே பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும்.
- மழைக்காலத்தில் போதிய மாற்றுப் பணிகள் கிடைக்க வாய்ப்பு இல்லாததால் பெரிதும் சிரமப்படுகின்றனர்.
- மக்கள் பயன்பெறும் வகையில், அயோடின் கலந்த கல் உப்பு, அயோடின் கலந்த சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு ஆகியவற்றை ‘நெய்தல் உப்பு’ என்ற புதிய வணிகப் பெயரில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் வெளிச்சந்தையில் விற்பனை செய்யும்.

## ரூ.97.56 கோடியில் மின்மாற்றிகள்

- செங்கல்பட்டு, சென்னை, கடலூர், திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருப்பூர், திருச்சி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் 51 துணை மின் நிலையங்களில் 602 எம்விஏ அளவுக்கு திறன் அதிகரித்து ரூ.97.56 கோடியில் நிறுவப்பட்டுள்ள 52 எண்ணிக்கையிலான மின் மாற்றிகளின் செயல்பாட்டையும் முதல்வர் தொடங்கி வைத்தார்.
- ரூ.258.94 கோடி மதிப்பிலான இத்திட்டங்கள் மூலம், அப்பகுதிகளில் வாழும் மக்கள்,தொழிற்சாலைகள், விவசாயிகளுக்கு தரமான தடையில்லா மின்சாரம் வழங்க வழிவகை.

